# நற்சிந்தனை

சிவதொண்டன் நிலையம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நற்சிந்தனை

## சிவதொண்டன் சபை

யாழ்ப்பாணம்

விஜயவருடம் - பங்குனி - ஆயிலியம்

10.04.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | - | 1959 |
| இரண்டாம் பதிப்பு | - | 1962 |
| மூன்றாம் பதிப்பு | - | 1974 |
| நான்காம் பதிப்பு | - | 1989 |
| ஐந்தாம் பதிப்பு | - | 1997 |
| ஆறாம் பதிப்பு | - | 2009 |
| ஏழாம் பதிப்பு | - | 2014 |

வெளியீடு: சிவதொண்டன் சபை
யாழ்ப்பாணம்

பதிப்புரிமை: சிவதொண்டன் சபை, © 2014

சிவதொண்டன் சபையின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தையோ அல்லது அதன் பக்கங்களையோ மீள்பதிப்பித்தல், நகல் எடுத்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளை மேற்கொள்ளலாகாது.

Copyright © 2014 by Sivathondan Society, Jaffna

All Rights Reserved.
No part of this publication may be reproduced, stored in retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without prior written permission from Sivathondan Society, Jaffna.

**ISBN : 978-955-0074-00-6**

**அச்சிடல் தயாரிப்பு : அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
**இல. 41, கண்டி வீதி, கைதடி.**
**இல. 320, செட்டியார் தெரு, கொழும்பு 11.**
**தொலைபேசி : 0094 (11) 2334004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பதிப்புரை

எங்கள் குருபரன் சிவயோகசுவாமிகள் அருளிய திருப்பாடல்களினதும் உரை நடையினதும் திருமுகங்களதும் தொகுப்பான நற்சிந்தனையின் ஐந்தாம் பதிப்பு 1997 ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்பதிப்பு யோக சுவாமிகளது வழியடியார்களால் பதிப்புத் தோறும் செம்மை செய்யப்பெற்ற பூரணமான செம்பதிப்பு. இப் பதிப்பினை உள்ளவாறே பேணி இவ்வாறாம் பதிப்பினை வெளியிடுகிறோம்.

தாளமேளமில்லாத சிவதொண்டர் ஒருவர் இந்நூற்பதிப்புச் செலவிற் பங்குகொள்ளத் தாமாக முன்வந்தார். குடிகுடி ஆட்செய்யும் அப்பழவடியாரைக் குருபரன் அறிந்தருள்வார்.

இத் திருநூலினை அச்சிடும் பணியைச் சிவதொண்டாகச் செய்த அஷ்டலக்ஷ்மி பதிப்பகத் தாருக்குக் குருவருள் பெருகுவதாக.

சிவயோக சுவாமிகள் திருவடி வாழ்க.

**வண்ணை,**
**யாழ்ப்பாணம்**
**05-04-2009**

இங்ஙனம்
**சிவதொண்டன்**
**சபையார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

[illegible]



தவத்திரு யோக சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சுவாமிகள்

மலர்மிசை யோனும் மாலும் காணா
அலகிலா ஆட லுடைய அப்பன்
மலர்தலை யுலகத்து மானிடன் போல
நலமிகு நல்லூரில் நாடியாட் கொண்டான.

- **நற்சிந்தனை** -

அலகிலா விளையாட்டுடைய இறைவனார், யோகநாதன் எனும் தன் சொந்தப் பெயருடன் இச்சிவபூமியாகிய எழில்சேரிலங்கையில் ஞானநாடகமளித்தனர். இந்த ஞான நாடகத்திலே ஞானவித்தையின் அம்சங்கள் யாவும் நன்கு பொருந்தியிருந்தன.

அவர் இளமையிலே முறையான நியமக்கல்வியும் அக்கல்வியாற் பெறும் அரசாங்க உத்தியோகமும் பெற்றிருந்தார். இவை அவர் போர்த்தியிருந்த மானிடப் போர்வைக்கு இயைந்தனவே. இவற்றுடன் போதிய ஞானநூற்பயிற்சியும் மெய்ப்பொருள் நாட்டமும் அவருக்கு வாய்த்தன. அவர் நான்மறை, தமிழ் மறை, இன்னும் மறைஞானச் செல்வர் பலரும் அருளிய அநுபூதிப் பாக்கள், விவிலிய வேதம், இஸ்லாமியத் திருமறை என்பவற்றை எல்லாம் கற்றிருந்தார். இதனாலே மறைகள் தள்ளுவ தள்ளிக் கொள்ளுவ கொண்ட மெய்ப்பொருள் நாட்டம் அவருக்கு ஏற்பட்டது. அவர் நல்லூர், செல்வச்சந்நிதி ஆகிய தலங்களுக்கு ஆராத காதலுடன் சென்று வழிபாடாற்றுபவராக இருந்தார். தந்தையாருடன் சிறிது காலம் தங்கியிருந்த மஸ்கேலியாவிலும் உத்தியோகம் புரிந்த கிளிநொச்சியிலும் ஏகாந்தமான இடங்களில் அமர்ந்து, அசலமாயிருக்கும் மலைகளிலும் ஓவாதசத்தத்தொலிகளிலும், இருந்தபடியே இருக்கும் நாதாந்த மோனத்தையும் ஓதவொண்ணாப் பிரமாதமான ஓங்காரத்தையும் சிந்தை செய்பவராக இருந்தார். இவ்வாறாக இளமைக் காலத்திலேயே 'முன்றற்று ஒரு பொருளைத் தேடும்' முறைமையை அவரளித்த ஞான நாடகத்தின் முதலங்கம் உணர்த்தியது. ஆன்மலாபம் சிறுகாலை வியாபாரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரளித்த ஞான நாடகத்தின் இரண்டாவது அங்கம் குரு சீட முறைமையின் நுட்பம் யாவும் செறிந்தது. ஈனப்பிறவி நீக்கும் எழிலறிந்த செல்லப்பதேசிகர் அவருக்குச் சற்குருவாயமைந்தனர். ஆரடா நீ, தேரடா உள், தீரடா பற்று, பாரடா வெளியில் என்ற வண்ணம் வாசகதீக்கையளித்தனர். பாவலர் நாவலர் தம்மையும் பதறச் செய்யும் இப் பரிபாசைகளின் பொருள் சீடருக்கு அற்புத சோபையுடன் தெட்டத் தெளிவாய் விளங்கியது. ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், முழுதும் உண்மை, நாமறியோம் என்னும் மகாவாக்கியங்களையும் இருந்துபார், ஏதுமொன்றறநில் ஆகிய நொடி போன்ற மொழிகளையும் அருளினர். திவ்வியபார்வையாலே சென்ம மலமெலல்லாம் தீர்த்தனர். நல்லூர் வீதியிலே தன்கரத்தாற்றொட்டு வெட்டவெளியில் விட்டனர். சதுர்வித உபாயத்தாலும் சீடரைத் தானாகச் செய்தனர். சீடரும் ஆசான் அருளால் ஆசானாயினர்.

ஆசானாய்ப் பரிணமித்த சிவயோகக் குருமணி கொழும்புத்துறைக் கொட்டிலிலுறைந்தும் கன்றுக்கிரங்கிய கறவை போன்று அன்பர்கள் இல்லந்தேடிச் சென்றும் யாழ்ப்பாண நகர வீதிகளில் காட்சிக்கெளியராய் நடமாடியும், இரையேந்திக்கொண்டு குஞ்சுகள் இருக்கும் கூட்டை நாடிப் பறந்து செல்லும் பறவைபோல ஞானப்புதல்வர்கள் தங்கியிருக்கும் அப்புத்தளை, தியத்தலாவை ஆகிய மலைநாட்டுப் பகுதிகளுக்குச் சென்றும் ஞான விளக்கம் செய்தனர்.

'அக்கக் காவடி அம்மம்மாவடி ஆன்மா நித்தியமாமடி' என்றவாறும்

'அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம் நாங்கள் அதையறிந்து வாழீர்'

என்றவாறும் எளிதாய் எவர்க்கும் இன்னுரை கூறித் திரிந்தனர். பவவருடத்துப் பன்னுமார்கழியிலே (1935) வினைப்பகை நீக்க விருது கட்டிய வித்தகச் சிவதொண்டன் ஏட்டைத் தொடங்கினர். சிவதொண்டனும் திங்கள் தோறும் அன்பர்களின் திருவகலாத இல்லங்களுக்குச் சென்று மங்களகரமான வாக்கியப் பிரசாதங்களை வழங்கினன். 1954ம் ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் மௌனமாயிருந்து இளைப்பாறவல்ல சிவதொண்டன் நிலையத்தை நிறுவினார். அவர் திருவடிக் கலப்புற்ற அதே திங்களில் மட்டக்களப்புச் செங்கலடியிலும் ஒரு சிவதொண்டன் நிலையம் கால்கோள் விழாக்கண்டது. அவர் திருவடிக் கலப்புறுவதற்கு முன்னரே நற்சிந்தனைத் திருநூல்வெளிவந்துவிட்டது. பின்னர் "எங்கள் ஆசான் அருள்மொழிகள்" என்ற பெயரில் வெளிவரவிருந்த நூலுக்கான அமுதமொழிகளை அணுக்கத் தொண்டர்களுக்கு அளித்திருந்தனர். வேதாகம சாரமான இவ்விரு நூல்களும் உலகெங்குமுள்ள ஞான நாட்டங் கொண்டோர் பயில்வதற்கு வாய்ப்பாக ஆங்கிலத்தில் வெளிவர வேண்டும் என்பதும் எங்கள் குருபரன் திருவுள்ளமேயாகும். தொண்டர்களும் பத்தர்களும் யோகியரும் ஞானியருமான திருக்குழாம் அவரைச் சூழ்ந்தமை அவர் பணி வாழையடி வாழையாய் என்றும் நின்று நிலவுவதற்கான ஓர் ஏற்பாடுபோலும்! எங்கள் குருபரனது திருக்குறிப்பை நிறைவேற்றும் ஆர்வத்தோடு அவரைக் கூடிநின்ற பெரும் திருப்படையைச் சிந்திக்கும்போது சுப்பிரமணிய சுவாமியோடு கூடி அவதரித்த வீரவாகு தேவர் போன்றோரே நினைவுக்கு வருவர். இவ்வண்ணம் ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலமாக ஞானத்தின் திருவுருவாய் நடமாடி ஞானவிளக்கம் செய்யும் பணியினைச் செம்மையாய்ச் செய்த பின்னர் தாம் திருவடிபூசை கொண்டாடி வந்த பங்குனி முதற்றிங்களில் (1964) திருவடிக் கலப்புற்றனர். அவர் அன்றும் இன்றும் என்றும் இருந்தபடியே இருக்கும் சீரை அறிவார் அறிவர்.

+ + +



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நுழைவாயில்

நற்சிந் தனையென்னும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசியினில் - விற்றூண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக்கு
என்றும்இன்பம் என்றே யிசை

-நற்சிந்தனை-

## 01. நற்சிந்தனை எனும் நல்லமுதம்

அருள்மேனி தாங்கி அவனியில் உலவிய எங்கள் குருநாதன், வாங்காதே குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள் போலவும் கடுப்பினாலே பால்பீற்றும் தாய்மார் போலவும் மங்களகரமான வாக்கியப் பிரசாதங்களைச் சுரந்து திரிந்தனர். இவ்வாக்கியப் பிரசாதங்கள் சத்திநிபாத உத்தமர்களான அன்பர்கள் முன்னிலையிலே உரையினாலும் பாவினாலும் இயன்ற திருமந்திரங்களாக உகுத்தன. பிறவிப் பிணி போக்கும் நன்மருந்தான இத்திருமந்திரங்கள் ஆர்வமாய்ப் பருகி வாய்மடுத்து சிந்தையிற் பதித்தற்கு வாய்ப்பாகச் சொற்சுவை, பொருட்சுவை தோய்ந்த அமுத வாசகங்களாய் அமைந்தன. இந்திருமந்திரங்களைப் பெற்ற புண்ணிய சீலர்களும் இவற்றைப் பெற்றமை பெறலரிய பேறென்றெண்ணிப் பக்குவமாகப் பேணி மனனஞ் செய்து, அந்தியும் நண்பகலும் மற்றும் பொருந்திய எந்தவேளையும் சிந்தித்துச் சிந்தித்து சீவலாபம் பெற்றனர். தமையுணர் அறிவு தலைப்பட்ட இப்பாக்கியவான்களே, எங்கள் குருபரனது திருவாய் மொழிகளின் அருள்மாட்சிக்குத் தக்க சாட்சியாளர் ஆவர். இவ்வண்ணம் சாதித்துச் சரிகண்ட நல்லமுதப் பாக்களதும் உரைநடைகளதும் தொகுப்பே நற்சிந்தனை என்னும் இத்திரு நூலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. நற்சிந்தனை – சொற்பொருள்

நற்சிந்தனை எனும் சொல்லமைதியை நோக்கும் எவரும் இதனை ஒரு தொன்மை சான்ற செம்மொழி எனவே எண்ணுவர். ஆயின் எங்கள் குருமணியின் திருவாய்ப் பிறந்த நவமொழியே நற்சிந்தனையாம். **'நல்'** எனும் அடைமொழிக்குப் பலபடித்தான பொருள்கொள்வது உலக வழக்கெனினும் உயர்படித்தான பொருள் கொள்வதே உயர்ந்தோர் வழக்காகும். திருவள்ளுவப் பெருந்தகை திருக்குறட் கடவுள் வாழ்த்திலே 'நற்றாள்' என்று ஓதியது இவ்வுயர்படித்தான பொருளிலேயாம். இதனைப் **"பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார்"** என்னும் பரிமேலழகரின் உரைப்பகுதியால் தெளியலாம். நற்சிந்தனையில் வரும் நல் எனும் மொழியும் உயர்வறவுயர்ந்த உயர் நலத்தையே சுட்டுவதாம். உயர்வறவுயர்ந்த உண்மையை உணர்த்தும் உறுதிமொழியாதல் பற்றியே குருநாதன் அருள் வாசகங்கள் நற்சிந்தனை எனும் நாமம் பெற்றன. முதன் முதலில் நற்சிந்தனை எனும் முடி சூடி வந்த குருநாதன் அருள்வாசகத்தின் ஒரு வாசகம் இதனை உறுதி செய்து நிற்கிறது.

**"இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மைக் குணங்களைப் போக்கி மேலான தெய்வதத்துவத்தை அடைவோமாக".**

எனும் இவ் வாசகத்தாலே மேலான தெய்வதத்துவத்தை அடைதற்கு உறுதுணையான உண்மையுரையே நற்சிந்தனை என்பது துணியப்படும்.

## 03. நற்சிந்தனை – செம்பொருள்

"உயர்வறவுயர்ந்த செம்மை நலத்தைச் சாதித்தும் போதித்தும் இருத்தலே நற்சிந்தனை என்பதன் செம்பொருளாகும்." நற்சிந்தனையிலுள்ள நலம் உயர்வறவுயர்ந்த செம்மை நலத்தைக் குறித்தது. செம்மை நலத்தை அடைதற் பொருட்டு சிந்தித்துச் சிந்தித்து இருத்தல் சாதித்தலான சிந்தனை. இவ்வாறு சாதித்துச் சாதித்துச் செம்பொருளைச் சேர்ந்து அச்செம்பொருளில் நினைப்பற நினைந்திருத்தல் போதித்தலான சிந்தனை. திருவருளானது இத்திருநூலின் நுழைவாயிற் சுலோகம் போலப் பொறித்திருக்கும் குருபரனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்திலான திருமுகத்திலே இம்மூன்று அம்சங்களும் நுட்பமாக அமைந்து கிடக்கின்றன.

**"நீ உடம்பன்று; மனமன்று; புத்தியன்று; சித்தமன்று;**
**நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது.**
**இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம்.**
**இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாயப் பதியக்கடவது"**

என்னும் இத்திருமுகப்பகுதியிலே உள்ள "இந்த உண்மை" எனச் சுட்டப்படுவது உயர்வறவுயர்ந்த உண்மை நலமாம். 'உள்ளத்தில் பதியக் கடவது' என்னும் ஆணை மொழி சாதித்தல், போதித்தல் என்னும் இரு திறச் சிந்தனைகளையும் குறித்து நின்றது. நற்சிந்தனைப் பாயிரம் போன்றமைந்திருக்கும் திருமுகத்திற் பிழிவாக உள்ள இம்மூன்று அம்சங்களும் நூல் முழுதும் பரந்து செறிந்து கிடக்கின்றன.

## 04. உயர்வறவுயர்ந்த செம்மை நலம்

திருமுகத்திலே 'நீ ஆன்மா' எனச் சொல்லப் பெற்றிருக்கும் உண்மை 'அடுத்தடுத்துச் சொல்வதால் ஆம்பயனில்லை' எனக் கூறும் வண்ணமாய்ப் போதுமளவு சொல்லப் பெற்றிருக்கிறது. இவ்வுண்மை **'அது நாம்'** எனும் மந்திர மொழிவாயிலாகவும் நூற்றுக் கணக்கான இடங்களில் ஓதப்பெற்றிருக்கிறது. **"நாம் சிவம்", "நாம் சிவனடியார்"** எனும் மங்கள மொழிகளாற் கூறப்பெற்றிருப்பதும் இவ்வுண்மையே. சொற் சிலம்பாடும் தத்துவவாதியர் இம்மெய்ம் மொழிகளிடையே வேறுபாடு காணுதல் கூடும். ஆயினும் தத்துவாதீதமான உண்மை வாதியராற் காணவொண்ணாதது. சாதனை செய்யும் சத்துக்களால் நுண்ணிதின் நோக்கி உணர்தற்குரியது.

நாம் ஆன்மா, நாம் அது, நாம் சிவம், நாம் சிவனடியார் எனும் மந்திர மொழிகளால் உணர்த்தப் பெறும் உண்மையின் அறிதற்குரியதும் அரியதுமான செம்மை நலமும் அறிந்தாங்கு கூறப் பெற்றுள்ளது. நாம் அங்கும் இங்கும் எங்கும் செறிவொழியாது நிற்கும் வியாபகர்; நாம் அன்றும், இன்றும் என்றுமுள்ள நித்தியர்; நமக்குச் சாதலும் பிறப்பும் இல்லை; நாம் என்றும் இருந்தபடியே இருக்கும் பொருள்; நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடப்பொருளல்லர்; நிறைதரு சித்து; வெற்றி நம் பிறப்புரிமை; தவறுதல்கள் சடசம்பந்தமானவை; வீடு நம் சொந்தம்; மாறிலா மகிழ்ச்சியே நமது இயல்பு; நாம் நாமாகவே இருக்கிறோம்; நம்மில் எவ்வித மாறுதலும் இல்லை என்ற வண்ணம் இச் செம்மை நலம் கூறப் பெற்றிருக்கின்றது.

செல்லப்பதேசிகர் அருளிச் செய்த மகாவாக்கியங்களூடாக உண்மை விளக்கம் செய்வதே 'நற்சிந்தனை'யின் தனிச்சிறப்பாகும். **'ஒருபொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், முழுதும் உண்மை'** என்னும் நான்கு மகா வாக்கியங்களினதும் மாசிலோசை நற்சிந்தனை எனும் நறுமலர்களில் எங்கும் முரல்கின்றது. செல்லப்பதேசிகர் இம்மகாவாக்கியங்களை எப்போதும் தம்முள் ஓதிக்கொண்டிருந்தது போல நற்சிந்தனையும் போதுமளவு ஓதுகிறது. நற்சிந்தனைத் திருநூல் மகாவாக்கியங்களைக் கொண்டாடும் மாண்பினையும், மகாவாக்கியப் பொருள் விரிக்கும் நுட்பத்தினையும் நோக்குமிடத்து இதனை 'மகாவாக்கிய மாபாடியம்' எனப் போற்றுதல் பொருத்தமுடைத்தே. பயிலுந்தமிழிலமைந்த இப் பெரும்பெயர் மந்திரங்கள் மூலம் உண்மை விளக்கம் செய்ததன் விளைவு யாதெனில் இப் பெரும்பெயர் மந்திரங்களின் வியத்தகு எளிமை நற்சிந்தனை விரிக்கும் உண்மை விளக்கத்துக்கும் அமைந்தமையாகும். அறிதற்கரிய உண்மை நற்சிந்தனையிலே உணர்தற்கெளிதாய் உள்ளதன் நுட்பம் இதுவெனவே தோன்றுகின்றது. 'முழுதும் உண்மையெனில் நானென நீயென வேறுளதோ? நானும் அதுதான், நீயும் அதுதான்; பிறப்பிறப்பென்பது பிராந்தி; இருவினை என்பதும் பேச்சே.' என்ற வண்ணம் கூறிய மொழிகள் எத்துணை எளிமையும், தெளிவும் ஆற்றலும் பொருந்த, மூடியமாயவிருள் போக்கி 'சீவன் சிவன்' எனக் காணச் செய்கின்றன!

எங்கள் குருநாதன் நம்மை நாம் அறிந்து கொள்ளற்பொருட்டுத் தம்மைத் தாம் அறிந்திருக்கும் சுவானுபவத்தை வெளிப்படுத்திக் காட்டும் பகுதிகள் சிலவும் நற்சிந்தனையில் உள. தாம் பரமரகசியமாகப் பேணிய அநுபூதிச் செல்வத்தை நம்பொருட்டு மறையாமல் எடுத்துரைத்த அப்பகுதிகள் நம்மைத் தேனுண்ட வண்டுபோல் களிக்கச் செய்வன. மாதவரும் காணா மகத்தானாகிய எங்கள் குருபரன்

**'அங்கும் இங்கும் எங்கும் நான்**
**அதையறியும் விசரன் நான்.'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போன்ற மொழிகளால் தம் செறிவொழியாது நிற்கும் சீரையும்,

**'அண்ட சராசரமெல்லாம் - சிவ சிவ**
**அகத்திலே கண்டு தரிசித்துக்கொண்டேன்**
**முண்டக மலர்பதங் கண்டேன்**
**மூவரும் தேவரும் முளைத்ததும் கண்டேன்'**

என்பன போன்ற பகுதிகளால் அண்டபிண்ட மெல்லாம் அடக்கிய ஒரு வடிவாய் நிற்கும் திறத்துடன் தேவர்க்கும், மூவர்க்கும் முதலாய் நிற்கும் முதன்மையையும்,

**'ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்**
**ஒன்றையுங் காணேனடி – குதம்பாய்**
**ஒன்றையுங் காணேனடி**

**தூங்காமல் தூங்கும் சுகம் வந்து வாய்த்தது**
**சும்மா விருந்தேனடி – குதம்பாய்**
**சும்மா விருந்தேனடி'**

என்பன போன்ற பாடல்களால் நாதாந்த வெளியிலே நன்மோன நிறைவாயிருக்கும் தமது சுத்தநிலையையும் வெளிப்படுத்தி நமது உண்மைச் சுபாவமும் இதுவே என உணர்த்துகிறார். இவ்வண்ணம் சுவாநுபூதி மூலமாக உண்மை விளக்கம் செய்யும் பகுதிகள் சத்தியதாகங்கொண்ட சாதகர்களை நிறைமதி நாளிற் பொங்கும் கடல் போல உள்ளகம் ததும்பச் செய்வனவாக உள்ளன.

## 05. நலம் தரும் சிந்தனை

நமது உண்மைநிலை உயர்வறவுயர்ந்த செம்மை நலமெனின் அச்செம்மை நலம் நமக்கு அனுபவமாகாதிருப்பதன் மருமமென்ன? நாம் ஏன் பிறப்பிறப்பாகிய சமுத்திரத்திற் கிடந்து திக்குமுக்குப்படுகிறோம்? இவ்வினாக்களுக்கு நற்சிந்தனை தரும் விடை 'மறதி' என்பதாகும். அதாவது 'ஆன்மாவே நாமெனும் அறிவை மறந்துவிட்டோம். அதனால் வீண்பாவனைகளை மெய்யென்றெண்ணி மயங்குகிறோம். இ∴து இந்த உடலையும், உலகையும் மெய்யென்றெண்ணிப் பழகிய பழக்க வாசனையால் ஏற்பட்டது. ஆகவே நாம் தேகமே மெய்யென்றெண்ணிப் பழகிய பழக்கங்களைவிட்டு, ஆன்மாவே நாமென்றெண்ணும் பழக்கங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக வேண்டும். 'பழக்கம் தவிரப் பழகுதல்' *(திருவுந்தியார்-2)* எனச் சித்தாந்த சாத்திரம் கூறும் இச்சாதனையை,

**'ஆன்மாவே நாமென்று அடிக்கடி நீ படி**
**துடிதுடிப்பாய் நடி'**

என நற்சிந்தனை விளக்குகிறது. மறந்துபோன ஒன்றை மீட்டும் சிந்தித்திருத்தற்கு உரிய நேரிய வழி, அதனை ஞாபகப்படுத்திப் பார்த்தலே. ஆதலால் நமது உண்மை நிலை பற்றி எடுத்துரைத்திருக்கும் உண்மையுணர்ந்தோரின் உறுதிமொழிகளை மந்திரங்களென மதித்துச் சிந்தனை செய்தல் வேண்டும். இச்சிந்தனை நிற்கும்போதும் நடக்கும்போதும் எப்போதும் உயிர்ப்புடன் சிந்திப்பதாயிருத்தல் வேண்டும். நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் நிறையுமாறு நினைதலாயிருத்தல் வேண்டும். நினைதல் ஓர் அகமுகமாகிய செயற்பாடாதலால் உள்ளே உள்ளுதல் வேண்டும். இவ்வண்ணம் **உள்ள உள்ள உண்மை மெல்ல மெல்ல வெளியாகும்.** தானானதன்மை வந்து தலையெடுக்கும். **'எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான்'** என்றோர் உறுதிமொழியுள்ளதன்றோ! நற்சிந்தனையும்

**'சிந்தி, சிந்தி சிந்தி சிவகதி'**

என முழங்குகிறது. சிந்தித்திருத்தற்குத் துணையான தியான சுலோகங்களாகவே நற்சிந்தனைத் திருவாய் மொழிகள் பல அருளப்பட்டன. இத்திருநூலின் நடுநாயகமாக உள்ள் எண்பத்தெட்டுப் பாடல்களைக் கொண்ட 'ஓதுக அது நாம் ஓம் தத்சத் ஓம்' எனும் மந்திர மாலை அது நாம் எனும் அகலாத்தியானத்தைக் கைவல்யமாக்கும் திருமந்திரமேயாம்.

## 06. நலம் சேர் சிந்தனை

நமது செம்மை நலத்தை அடைதற்பொருட்டுச் சாதித்திருக்கும் சிந்தனை ஓர் பாவனையே. பாவனையான இச்சிந்தனை இடையறாது நிகழ்தலும் இயலாது. ஆனால் இவ்வாறு சிந்தித்திருக்கும்போது உள்ளே உள்ள உண்மையான தான் எனும் தன்மை தலையெடுக்கும். அத் தான் எனும் தன்மையே தன்னை அறியும். அது இடையறாத விழிப்புணர்வேயாம். இவ்விழிப்புணர்வே போதமாகிய சிந்தனையாம். இச்சிந்தனையில் மறதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுவதில்லை. 'நினை' என்ற ஏவலுக்கும் இடமில்லை. இ∴து நினைப்பு மறப்பற்ற நினைவாகும். இ∴தே நமது உண்மைநிலை, உண்மையே நமது நினைவுக்கு வித்தாயிருப்பதால் நாம் ஒருபோதும் அதனை மறந்திருத்தல் இயலாது. எண்ணுவார் எண்ணம் தோன்றும் இடமெனப் பெரியோர் சொல்லும் அம்மெய்ப்பொருளினின்றும் எண்ணம் எவ்வாறு வேறுபடும்? செம்மை நலத்தைச் சேர்ந்து நினைப்பற நினைந்திருக்கும் இச் சிவசிந்தனையே பெரியோரால் **"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்"** எனக்கூறப்பெற்றது. **"அடிசேர் ஞானம்"** என்பதும் இம்மறதியற்ற நினைதலேயாம்.

**"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்"**

எனும் திருக்குறளிலே உள்ள 'சேர்தல்' என்னும் நிறைமொழிக்கு **'இடைவிடாது நினைதல்'** எனவே பரிமேலழகரும் பெருள் விரித்தனர். இந்நலம் சேர் சிந்தனை நற்சிந்தனைத் திருநூலிலே.

**"சித்திரகாரன் தீட்டிய தீபம் போல்**
**நித்திய வஸ்துவில் நினைப்பு மறப்பற**
**முத்தியி லிருக்கு முறை"**

என்றவாறும்.

**"உள்ளத்தினுள்ளே உலாவும் ஒருவனை**
**எள்ளத்தனையும் மறவா தேத்தி"**

என்றவாறும்.

**"எண்ணாமல் எண்ணி"**

என்றவாறும் கூறப்பெற்றிருக்கிறது.

## 07. இறைபக்தி

உயர்வறவுயர்ந்த உண்மை நலத்தை குறிக்கொள்ளுதல், இவ்வுண்மை நலத்தை அடைதற்பொருட்டுச் சிந்தித்திருத்தல், இச்செம்மை நலத்தைச் சேர்ந்து இடையறாது போதித்திருத்தல் என்னும் இப்பாக்கியமெல்லாம் நம்வலத்தால் ஆவனவல்ல. உயர்வறவுயர்ந்த உயர்நலமுடையவனெவனோ அவன் மயர்வறு மதிநலம் அருள்வதாலேயே நற்சிந்தனை அமையும். நெஞ்சுள்ளே நின்று நினைப்பிக்கும் நீதி நினைப்பித்தாலொழிய நற்சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு சாத்தியமாகும்? நாம் நினைத்தாலும் மறந்தாலும் நம்மை மறவாதிருக்கும் பெருமானே நற்சிந்தனையையருளவல்லவன். ஆதலால் அப்பெருமானது 'துயரறு சுடரடி' தொழுதெழலே நற்சிந்தனைக்கு வழியாம். '**சிவபக்தி மாததிரமே ஒருவனை பாக்கியவானாக்கும**'. ஆகவே அருளையே தாரகமாகக் கொண்டு அடிதொழற்கேற்ற தோத்திரப்பாக்கள் பல நற்சிந்தனைத் திருநூலில் உள. இத்தோத்திரங்களுட் சில பண்ணமைதியிலும் மந்திரசக்தியிலும் மூவர் முதலிகள் அருளிச் செய்த தேவாரங்களை நிகர்ப்பன. மணிவாசக சுவாமிகளது திருவாசகத்துக்கு இணையான குருவாசகங்கள் சிலவும் உள. சாமகானப்பிரியரான பெருமானைப்பாடி மகிழ்தற்கேற்ற கீர்த்தனங்களும் சில உள. யாழ்ப்பாணத்து மக்களின் குலதெய்வமாகி விட்ட நல்லூர் முருகப்பெருமான் மீது பாடிய திருப் பாடல்களும் ஒரு பூங்கொத்து போன்று இந்நூலில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. (இப்பாக்களை "முருகன் திருப்பாடற்றிரட்டு" என்னும் தனிநூலாக அமைத்து நாள்வாய்ப் பாராயணப் பனுவலாக அடியார் ஓதிவருகின்றனர்.)

## 08. குருபக்தி

கருணையே வடிவான கடவுளின் கணக்கற்ற கருணைகள் யாவினும் முதற்றரமான கருணையொன்றுள்ளது. 'தலையளி' எனப்படும் அக்கருண்ணை யாதெனின், கடவுள் மனிதரை ஆட்கொள்ளும் பொருட்டு மானிடச் சட்டை சாத்திக் குருபரனென்றோர் பெயர் கொண்டு மண்மேல் மலரடி வைத்துத் திரிதலாம். சிவபெருமானே செல்லப்பமூர்த்தமாய் நல்லூர் தேர்முட்டிப் படியிலிருந்து அளித்த அருளாடலையெல்லாம் எங்கள் குருநாதன் நன்கு அனுபவித்தவர். '**குருபக்தியே பெரும்பேறு**' எனக் கொண்டவர். குருநெறியே எங்கள் குருபரன் உணர்த்திய நெறி. குருமணியைக் காதலாற் கசிந்துருகிப் பாடிய தோத்திரங்கள் பல இத்திருநூலில் உள்ளன. இத்திருநூலில் எங்கள் குருபரனது வீரசாந்தமே எடுப்பாகத் தெரிகின்றதெனினும் குருதோத்திரப் பாடல்களிலே இருவிழியும் நீரிறைப்ப இரவு பகலேத்தியிருக்கும் பத்திமையின் பரிசே விளங்கித் தோன்றுகிறது. இக்குரு தோத்திரப் பாடல்களிலே செல்லப்பன் மாணாக்கனான எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதன் 'ஆறாக விழி பெருக அலமந்து வாடி' குருபரனது திருவடியே தஞ்சமென்று கிடக்கும் ஓர் ஏழைத்தொழும்பனாகத் தோன்றுகிறார். (இப்பாக்களையும் அன்பர்கள் 'குருதோத்திர மாலை' எனத் தொகுத்திருக்கின்றனர். தம் குருபரனைப் போற்றிப் பாடிய இப்பாடல்களாலேயே எங்கள் குருபரனையும் போற்றுதல் சிவதொண்டர் மரபாகிவிட்டது. நற்சிந்தனை எனும் நல்லமுதம் அருந்த நாடுவோர் முதலில் இக்குரு தோத்திரங்களைச் சுவைத்தல் முறைமையாகும்.)

## 09. தரும நெறி

கருணையே வடிவான கடவுளைத் தொழுது, அக்கடவுளார் கொண்ட அருள்மேனியான சற்குருவைப் போற்றி, செம்மை நலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, அந்நலத்தை அடைதற்பொருட்டு நலந்தரும் சிந்தனை செய்து, ஈற்றில் அச்செம்மை நலத்தைச் சேர்ந்து நினைப்பு மறப்பற்ற நீங்கா நினைவுடனிருக்கும் முறைமையே நற்சிந்தனைத் திருநூல் புகட்டும் உண்மைநெறி. இவ்வுண்மை நெறியிற் புகுதற்குரிய உபாயம் தருமநெறியே. ஆதலால் இத்திருநூலிலே தருமநெறி அழுத்தி உரைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் நுழைவாயிற் சுலோகம் என உள்ள திருமுகத்திலே 'இவ்வுண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது' என்ற உண்மையுரையை தொடர்ந்து "ஆனால் நீ கவனிக்க வேண்டிய தொன்றுண்டு" என்ற பீடிகையுடன் '**அதாவது தருமநெறியிற் பிசகாதே**' என அழுத்தம் திருத்தமாக உரைக்கப்பெற்றுள்ளது. நூலின் ஈற்றயலாக உள்ள திருமுகத்திலும்,

"**நான் உங்களுக்குச் சொல்லக் கூடியது ஒன்றுண்டு. உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள்.**"

என்ற வாசகம் உளது. இடையிடையே, ''அறமே யாற்றுதும் தினமே யாற்றுதும்'', ''ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே'' என்ற வண்ணம் அற ஒழுக்கம் உரைக்கப்பெற்றுள்ளது. அறம் என்பது மனத்துக்கண் மாசிலனாதலே. மாசுடைய மனத்திலே உண்மை எவ்வாறு பிரகாசிக்கும்? ஆகவே உண்மை நாட்டங் கொண்டோர் தூயமனத்தினராதற் பொருட்டு ஒழுக்கத்தால் வைரித்த வாழ்வினராதல் வேண்டும். '**கருத்திற் கடவுள;**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடமையிற் கை'** இதுவே நற்சிந்தனை வேதம். **"நாம் சிவனடியார்; சிவதொண்டு செய்வதற்காகவே பூமியில் வாழ்கின்றோம். நமக்கென்றமைந்த கடமையைச் சிவபூசையாகவே செய்வோம்; நமது வேலையில் வணக்கம் மணத்தல் வேண்டும்"** என்பது நற்சிந்தனை மந்திரம்.

## 10. மறைமொழி

> **"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திர மென்ப"**

எனும் இலக்கண முறைமைக்கேற்ற மந்திரமாலிகையே நற்சிந்தனை. நிறைமொழி மாந்தரான எங்கள் குருபரன் திருவருள் ஆணை வழி நின்று மறையாகியிருந்த இம்மந்திரப் பாக்களைக் கண்டறிந்து கூறினார். காதலித்தோதுவோரைக் காப்பாற்றும் ஆற்றல் இம்மந்திரப் பாக்களுக்கு உள்ளன. மந்திரப் பாக்களைத் தாடனம் செய்து, உயிரை எழுப்பி, உருவேறச் செபித்தலே முறைமையாம். இவ்வண்ணம் மனனஞ் செய்து செபித்தற்கு வாய்ப்பாகவே நற்சிந்தனைப் பாக்கள் பல அகர முதலிகளாகவும் அந்தாதியாகவும் பண்கனிந்தனவாகவும் அமுதச்சுவையுடையனவாகவும் அமைந்துள்ளன. நற்சிந்தனை என்பது நன்மொழி அன்று. அது சிந்தையின் செயற்பாடாகும் பொழுதே நற்சிந்தனை ஆகும். ஆகவே நற்சிந்தனைத் திருநூலிலுள்ள நன்மொழிகளைத் துணைக்கொண்டு அம்மொழிகள் சுட்டும் உயர் பொருளைச் சிந்தித்திருப்பதே முறைமை. அவ்வாறு சூட்சத்தைத் தொட்டு நிற்போரே நற்சிந்தனை எனும் நல்லமுதருந்துவர். அஃதாவது, நற்சிந்தனையைத் தொல்பொருட் காட்சிச் சாலையிலுள்ள சிலை ஒன்றைத் தொல்பொருள் ஆய்வாளன் நோக்குவது போல் நோக்குதலியலாது. அது அபிடேக ஆராதனைக்குரியதாய், திருக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் நிலையிலே, ஆசார அநுட்டானங்களுடன் வரும் ஆராக் காதல் அடியவன் ஒருவனால் கண்பனிப்ப நோக்குவதைப் போன்று நோக்கப்பட வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஏட்டில் எழுதவொண்ணாதது

இவ்வாறெல்லாம் எழுதும் உரை நற்சிந்தனையை நன்கு முகம் செய்ததெனக் கூறலியலாது. எங்கள் குருநாதனைப் போன்றே இவர் திருவாய்ப் பிறந்த நற்சிந்தனையும் ஏட்டில் எழுதிக் காட்டவொண்ணாதது. இத்தகைய அச்சம் காரணமாகவே முதல் நான்கு பதிப்புகளும் பாயிரப்பகுதி இன்றிப் பதிப்பிக்கப்பெற்றன. ஆவலுடன் படிப்பதில் ஈடுபடுவோருக்கு இம்முயற்சி ஓரளவுக்குத் துணையாகும் என்பதனாலேயே இதனை யாத்துள்ளோம். நற்சிந்தனை ஒரு கற்பக மரத்தோட்டம். இத்தோட்ட நுழைவாயிலில் நின்று பல படச் சொல்வதனால் பயன் யாது? உள் நுழைந்து ஒரு கற்பக தருவின் நீழலிலமர்ந்து வேண்டினால் வேண்டியதெல்லாம் கிடைக்குமே.

**"சச்சிதா னந்தத்தைச் சார்சீவ ரெய்தவே**
**நற்சிந் தனைவேதம் நல்கியவெம் - சற்குருவே**
**உன்தன் மலர்ப்பாதம் ஓயா துணர்வார்தம்**
**சிந்தை வதியும் சிவம்."**

- சிவசிந்தனை -

✦ ✦ ✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன். 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன். 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவரும றியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழிதோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன். 7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன். 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் நாங்களே

இராகம் – மாயாமாளவகௌளை                    தாளம் – திஸ்ர ஏகம்

**பல்லவி**

தொண்டர் நாங்களே – சிவ
தொண்டர் நாங்களே

**அநுபல்லவி**

அண்டத்திற் பிண்டத்தில்
ஆண்டவனைக் காணும்                    (தொண்)

**சரணங்கள்**

மண்டு பிணியால் வருந்த மாட்டோம்
மாதாக் கருப்பையின் மீண்டு வாராத்                    (தொண்)

பண்டுசெய் வினையெல்லாம் பறந்து போச்சு
பாரி லனைத்தும் உறவே யாச்சு                    (தொண்)

கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்கு
என்று மாளாகி எப்போதும் வாழும்                    (தொண்)

வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணோம்
வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள                    (தொண்)

சிவசிவ வென்றெந்த வேளையுஞ் சொல்லிச்
சீவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும்                    (தொண்)

இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம்
பொருந்திய வண்ணம் பூமியில் வாழும்                    (தொண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு

தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு
உய்யும் மார்க்கம் உணர்ந்தோர்க் குண்டு
பொய்யும் பொறாமையும் புன்மையோர்க் குண்டு
ஐயன் அடியிணை அன்பர்க் குண்டே 1

கல்லா தார்பாற் கபட முண்டு
எல்லா ரிடத்து மீச னுண்டு
வில்லா ரிடத்தில் வீத்தொழில் உண்டு
எல்லாச் சக்தியும் இறைபால் உண்டே 2

தேடுவார் மாட்டுச் செல்வம் உண்டு
தேடுவார் மாட்டுத் தெய்வம் உண்டு
நாடுவார் மாட்டு நன்மை உண்டு
பாடுவார் மாட்டுப் பரமன் உண்டே 3

சீவன் சிவனெனல் தேறினார்க் குண்டு
ஆவதும் அழிவதும் அசடர்க் குண்டு
ஈவது விலக்கார்க் கெல்லா முண்டு
தேவ தேவன் திருவடி உண்டே 4

அன்பு சிவமெனல் அறிஞர்க் குண்டு
பொன்புரை மேனி புனிதர்க் குண்டு
தன்போற் பிறரெனல் தக்கோர்க் குண்டு
விண்போல் விரிவு மேலோர்க் குண்டே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்குருபர புங்கவ சிங்கமே

*கட்டளைக் கலிப்பா*

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானா யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னாசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என்கு ருபர! புங்கவ சிங்கமே! 1

கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடிதொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே! 2

மூன்று மொன்றாய் முடிந்திட வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிர்க்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர!
என்னை யாண்டவ! இங்கித சிங்கமே! 3

இருளை நீக்கி இருந்திட வேண்டுமே
எங்குந் தெய்வத்தைக் கண்டிட வேண்டுமே
பொருளை றிந்தினிப் போற்றிட வேண்டுமே
பொய்ய முக்கா றகற்றிட வேண்டுமே
மருளைத் தந்து மயக்கும் பொருள்களை
மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே
பெருமை யிற்பிறர் பேசுங் குருபர!
பெத்த னென்னையும் பேணிய சிங்கமே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆண வத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையி லிராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே!
நஞ்சு கண்டத்திற் கொண்டவ! நம்பனே!
நம்மை யாளுவான் நண்ணும் முதல்வனே!
பஞ்சின் மெல்லடிப் பரம குருபர!
பாவி யேனையு மாட்கொண்ட சிங்கமே! 5

---

## சர்வம் பிரம மயம்

இராகம் – கமாசு தாளம் – ஆதி

**பல்லவி**

சாந்தம் உபசாந்தம்
சர்வம் பிரம மயம் (சாந்)

**சரணங்கள்**

சாந்த னையும் மாந்த ரன்பு
கூர்ந் திதனைக் கூறு வீர் (சாந்)

சார்ந்த இட மெங்குஞ் சிவசிவ
தங்கும் பரிமளம் பொங்குஞ் சிவ (சாந்)

தாம் திமிதிமி தரிகிட கிடசெம்
நாம் அதுவென அறிவது கவசம் (சாந்)

தொதிந்தத் தாதாதா தரிகிட
ஏனிந்தப் பாடெங்குஞ் சிவசிவ (சாந்)

அண்ட பிண்டமெங்கும் அதுவெனக்
கண்டுதொண்டு செய்வது தகுதி (சாந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏத்துக பொன்னடி

*நிலைமண்டில ஆசிரியப்பா*

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்,
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை அறிந்தால் தவம்வேறில்லை

தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே 1

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லைத்
தன்னை யன்றிச் சகம்வே றில்லைத்
தன்னை யறிந்தவர் தத்துவா தீதரே 2

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லைச் சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே 3

நன்மையுந் தீமையும் நங்கட் கில்லைத்
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையுந் தந்தையும் ஆன்மாவுக் கில்லைச்
சொன்ன சுருதியின் துணிபிது வாமே 4

காலமு மில்லைக் கட்டு மில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லைச்
சால அறிந்த தவத்தி னோர்க்கே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் முப்பது

வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே
மாதம் மும்மழை பெய்திடல் இன்பமே
மாத ராசையை நீக்கிடல் இன்பமே
நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே
நாம்சி வமென நாடுதல் இன்பமே
பேதம் யாவையும் நீங்கு பெரியவ!
பெருமை சேர்குரு புங்கவ சிங்கமே! 1

எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே
ஏதி லார்பால் இரங்குதல் இன்பமே
பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே
புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே
தங்கும் யோகத் தமருதல் இன்பமே
தானே தானாய்த் தழைத்திடல் இன்பமே
இங்கெ னக்கின்பம் எளிதில் விளக்கிய
என்கு ருபர புங்கவ சிங்கமே! 2

அஞ்செ ழுத்தினை யோதுதல் இன்பமே
அறிவால் அஞ்சையும் வென்றிடல் இன்பமே
நெஞ்சில் வஞ்சகம் நீக்குதல் இன்பமே
நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே
தஞ்ச மென்றடி சாருதல் இன்பமே
தன்னைப் போற்பிறர் பாலன்பில் இன்பமே
அஞ்சல் அஞ்சலென் றருளிய ஐயனே!
ஆண்மை சேர்குரு புங்கவ சிங்கமே! 3

ஒன்றி லொன்றி யிருந்திடல் இன்பமே
ஓம்சி வாய நமவெனல் இன்பமே
என்றும் வாழக் கருதுதல் இன்பமே
எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே
நன்று தீதை யகற்றுதல் இன்பமே
நல்லோர் பாதத்தை நண்ணுதல் இன்பமே
ஒன்றும் நீயலை யென்றெனக் கோதிய
உண்மை சேர்குரு புங்கவ சிங்கமே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிமு னைக்குள் ஒடுங்குதல் இன்பமே
சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே
பழியும் பாவமும் நீக்குதல் இன்பமே
பதியி லேயிளைப் பாறுதல் இன்பமே
வெளியி லேயொளி காணுதல் இன்பமே
விண்ணைப் போல விளங்குதல் இன்பமே
ஒழிக உன்பவம் என்ன உரைத்திட்ட
ஒருமை சேர்குரு புங்கவ சிங்கமே! 5

---

## இன்ப துன்பம் இவையே மாயை

*நேரிசை ஆசிரியப்பா*

இன்ப துன்பம் இவையே மாயை
அன்புசேர் ஆன்மா அறிவே வடிவம்
ஆதலால் நின்னை அவையோ தீண்டா
கானல்நீ ரானிலங் கரைவது முண்டுகொல்
ஞான சற்குரு நற்றிருப் பாதம்
ஆன மட்டும் அகங்குழைந் துருகிப்
போன காரியம் புந்தியில் நினையா
திடைவி டாதுநின் றேத்திப் போற்றி
மடையினீர் பெருகி வழிவது போல
இடையறா தினிய ஏகாந்த னாகிச்
சங்கற்ப விகற்பந் தவிர்ந்திடு சமாதியிற்
பொங்கிடும் அமிழ்த போனக மருந்தி
இருந்தாங் கினிதே இருந்து
திருந்திய விதேக முத்திசேர் குவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே

*கலி விருத்தம்*

சிவத்தை கண்டிடர் தீர்வது வீரமே
பவத்தை நீக்கிப் பணிவது வீரமே
தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே
உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே 1

பொறுமை யைப்புறங் காப்பது வீரமே
வறுமை வந்தால் மகிழ்வது வீரமே
சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே
மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே 2

ஐம்பொ றியைய டக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே 3

கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே 4

ஓதி யோதி யுணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்வது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயலே கிளியே

*கண்ணிகள்*

சொல்லால்வருங் குற்றமெல்லாம்
நல்லோர் பொறுத்திடுவார்
எல்லாம் அவன்செயலே – கிளியே!
ஏத்திப் பணிவோமே 1

எல்லாஞ் சிவன்செயலே
எப்படியா யிருந்தாலும்
நல்ல மலரெடுத்துக் – கிளியே!
நாமேத்திப் பணிவோமே 2

போக்குவர வில்லாத
பொன்னடியை யெப்பொழுதும்
வாக்காலும் மனத்தாலுங் – கிளியே!
வாழ்த்தி வணங்குவோமே 3

காயம் அழிந்துவிடும்
காண்பனவும் ஒழிந்துவிடும்
மாயமான வாழ்வைவிட்டுக் – கிளியே!
மலரடியைப் பணிவோமே 4

ஆன்மா அழியாப்பொருள்
அப்பொருளை அறிந்துவிட்டால்
வீண்பாவ னையெல்லாம் – கிளியே!
வெந்துநீ றாய்விடுமே 5

பொறிவழியே போயலையும்
பொல்லாம னத்தைவென்றால்
அறிவறி யாமைவிட்டுக் – கிளியே!
அரன்பதம் சேர்ந்திடலாம் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே

*கலி விருத்தம்*

அந்தமும் ஆதியும் இல்லான் அடியரை
எந்த நேரமும் நீங்கா இறையவன்
கந்த மாமலர்ப் பாதத்தைக் கைதொழ
வந்த வல்வினை மாளுஞ் சிவாயவே 1

ஆடு பாம்பணிந் தம்பலத் தாடுவான்
பாடு வார்பவந் தீர்க்கும் பராபரன்
தேடு வார்தங்கள் சித்தத் திருந்திடும்
பாடு நீங்கிடும் பற்று சிவாயவே 2

இளமை மூப்பிலான் எம்மிறை எம்பிரான்
களவு செய்யுங் கருமிகள் தங்கட்கும்
அளவி லாவரு ளீயு மளியினான்
உளம்பொ ருந்தி யிருக்குஞ் சிவாயவே 3

ஈர வார்சடை எந்தை யெமக்கெலாம்
பேர ருள்செயும் பெற்றியன் பேயுடன்
ஆர வாரமாய் ஆடுவன் காட்டினில்
நேர தாயென்மு னிற்குஞ் சிவாயவே 4

உலகம் யாவையுந் தந்திடு முத்தமன்
அலகி லாவிளை யாட்டயர் தத்துவன்
பலக லையெலாம் பாலிக்கும் வித்தகன்
சிலக ணமேனும் பிரியான் சிவாயவே 5

ஊன்பொ திந்த உடலு முயிரவன்
நான்ப டும்பாடு நன்றா யறிபவன்
மான்ப டுங்கையன் மாமலர்ச் சோதியான்
தான்வ திந்தானென் சித்தஞ் சிவாயவே 6

எள்ளு மெண்ணெயும் போன்ற இறையவன்
கள்ளு லாவுங் கடிமலர்க் கொன்றையான்
உள்ளு வார்தங்கள் உள்ளத்தி லுள்ளவன்
நள்ளு வார்தமை நாடுஞ் சிவாயவே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை பங்கன் எருதில் வருபவன்
தாளை நம்பித் தவஞ்செய்யுந் தாபதர்
நாளை இன்றென நாடி நலிகிலர்
ஏழை யேனெனை யாளுஞ் சிவாயவே 8

ஐய மில்லா அருந்தவர் நெஞ்சில்வாழ்
தெய்வ மென்னுடைச் சித்தத்தி லும்முளன்
உய்வ முய்வ மொருகுறை யும்மிலை
வைய மெங்கும் வணங்குஞ் சிவாயவே 9

ஒருவ னாலே உலகம் உதித்ததே
ஒருவ னாலே உலகம் நிலைத்ததே
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவ னேயென் னுறுதி சிவாயவே 10

ஓங்கா ரத்தி லுதித்த துலகெலாம்
ஓங்கா ரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்கா ரத்தி லொடுங்கு முலகெலாம்
ஓங்கா ரத்தி லுறுதி சிவாயவே 11

## வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே

*கட்டளைக் கலிப்பா*

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாத வமனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம்சி வாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே! 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணி னாசை மறந்திட வேண்டுமே
மதியி லேரவி சேர்ந்திட வேண்டுமே
விண்ணி னோசை விளங்கிட வேண்டுமே
வேறொன் றின்றித் துலங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடி யாடிப் பணிந்திட வேண்டுமே
என்னு ளேயருள் காட்டிய அண்ணலே
என்கு ருபர புங்கவ சிங்கமே! 2

நரியை நற்பரி யாக்கிட வேண்டுமே
நானும் நீயுமொன் றாகிட வேண்டுமே
திரிபு ரத்தை யெரித்திட வேண்டுமே
தேவ தேவனைக் கண்டிட வேண்டுமே
பெரியர் தம்பணி பேணிட வேண்டுமே
பிறவி யின்பயன் பெற்றிட வேண்டுமே
வறிய னேனையும் வாழ்வித்த அண்ணலே
வாழ்கு ருபர புங்கவ சிங்கமே! 3

வெளியி லேயொளி கண்டிட வேண்டுமே
வீணர் தங்களை விட்டிட வேண்டுமே
சுழியி லேயிருந் தாறிட வேண்டுமே
துரிய வீட்டி லிருந்திட வேண்டுமே
களிகொள் யானையைக் கட்டிட வேண்டுமே
கார ணத்தை யறிந்திட வேண்டுமே
தெளிய வேயருள் காட்டிய தெய்வமே
தேவர் போற்றுங் குருபர சிங்கமே! 4

காலைக் கட்டித் தவஞ்செய்ய வேண்டுமே
காமன் றன்னை யெரித்திட வேண்டுமே
மேலை வாசல் திறந்திட வேண்டுமே
வெளியி லேநடங் கண்டிட வேண்டுமே
மூல மந்திர மோதிட வேண்டுமே
முத்தி சேர விரும்பிட வேண்டுமே
ஞால மெங்கும் புகழ்ந்திடு தெய்வமே
நற்கு ருபர புங்கவ சிங்கமே! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே

ஓதி யோதி யுணர்வதுந் தன்னையே
நீதி பேசி நினைவதுந் தன்னையே
சாதி பேசிச் சலிப்பதுந் தன்னையே
ஆதி யாதியென் றாய்வதுந் தன்னையே 1

ஆறி யாறி அறிவதுந் தன்னையே
தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே
மாறி மாறி நினைவதுந் தன்னையே
கூறிக் கூறிக் குறிப்பதுந் தன்னையே 2

சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி யறிவதுந் தன்னையே
உவத்தல் காய்த லொழிப்பதுந் தன்னையே 3

வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காத மோடியுங் காண்பதுந் தன்னையே
பூத மைந்தனுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நவில்வதுந் தன்னையே 4

ஓடி யோடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொல்லா லுளந்தூய்மை யாச்சே

ஆனந்தக் களிப்பு

தானா தனா தந்தனான – தனதன
தானா தனா தந்தனான தந்தனான

ஒருசொல்லா லுளந்தூய்மை யாச்சே – சிவசிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே
இருவினை என்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே 1

எல்லாமென் கைவச மாச்சே – சிவசிவ
எடுத்த பிறப்பின் பயன்சித்தி யாச்சே
உல்லாச மாய்த்திரிவ தாச்சே
உலகெலா மெனக்குற வாகிப் போச்சே 2

சொல்லாலே வாய்த்த சுகத்தை – சிவசிவ
சுகிப்பதே அல்லாமற் சொல்லவொண் ணாதே
கல்லாதே யாவுங்கற் றேனே
காயத்தையும் என்றன் கைக்குள்வைத் தேனே 3

அண்ட சராசர மெல்லாம் – சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
முண்டக மலர்ப்பாதங் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததுங் கண்டேன் 4

உருகி உருகி உணர்ந்தேன் – சிவசிவ
ஒன்றையுங் காணாம லேங்கிநான் நின்றேன்
மரும மிதுபெரும் மருமம்
மகத்துக்க ளாலும் சொல்லொணா மருமம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தியானம் செய்திடுவோம்

அன்னைபி தாக்குருவாய்
ஐயனெனை யாண்டுகொண்டான்
என்னைய றிந்தேனெடி – கிளியே
இச்சையெல்லாம் போச்சுதெடி
இளங்குயிலே நடந்துவாடி
எல்லாஞ்சிவ ரூபமெடி
அளந்தறிய முடியாதெடி
தளர்ந்திடாமல் தொடர்ந்துவாடி
தானதாம் தானதாம்
தானதாம் தானதாம் 1

பொன்னாசை பெண்ணாசை
மண்ணாசையால் மனிதரெல்லாம்
சின்னாபின்ன மானாரெடி – கிளியே
சிவத்தியானம் செய்திடுவோம்
சிங்காரமான பூங்குயிலே
அங்குமிங்கு மலையாதே
கங்குல்பக லற்றகாட்சி
காட்டிவைப்பேன் கண்ணேவாராய்
எங்குமவனெடி எங்குமவனெடி
எல்லாமவனெடி எல்லாமவனெடி 2

விண்ணாணம் பேசியன்றோ
வீண்காலம் போக்குகின்றோம்
பொன்னான மேனியரைக் – கிளியே
பூவெடுத்துப் பூசைசெய்வோம்
பூவையேநீ புகலக்கேளாய்
சேவைசெய்தவர் சீவன்முத்தர்
நாவைநீ காத்துக்கொள்ளெடி
நானெனுமாணவம் நீக்கிக்கொள்ளெடி
நாமதுவெடி நாமதுவெடி
நாமதுவெடி நாமதுவெடி 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபதத்தை கும்பிடுவோம்

காலை யெழுந்திருந்து கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்துக் – கிளியே!
குருபதத்தைக் கும்பிடுவோம்
கோபக்ரோத மோகமாகிய கூடாதகூட்டங் கூடாதே
நாடாதேயென்றுந் தேடாதே
நாமதுவெடி நாமதுவெடி 1

பொறிவழியே போயலையும் பொல்லாம னத்தைவென்றால்
அறிவறி யாமையெல்லாம் – கிளியே!
அப்பொழுதே மாய்ந்துவிடும்
அஞ்சாதேநீ கெஞ்சாதே அங்குமிங்கு மோடாதே
எங்கும்நாமெடி எங்கும்நாமெடி
எல்லாம்நாமெடி எல்லாம்நாமெடி 2

தன்னை யறிந்துவிட்டால் தானந் தவமதுவே
தனக்குவமை யில்லையெடி – கிளியே!
தாளிரண்டும் பூட்டிவிடு
தங்கமேநீ இங்கேவா எங்குமவன் சங்கையிலை
தானதாம் தானதாம்
தனதாம் தனதாம் 3

---

## நல்லைக் குருமணியே போற்றி

*அறுசீரடியாசிரிய விருத்தம்*

அன்பு நெறியு மருணெறியு மறியாதேனை நயந்து வந்தே
இன்ப நெறியிற் புகுத்திவிட்ட எந்தாய் நல்லைப் பதிக்கரசே
துன்ப மறியேன் சுகமறியேன் தொல்லை வினையும்
யானறியேன்
முன்பு மறியேன் பின்பறியேன் முழுதுமுண்மை யெனுமுனியே. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனியே! முனிவர் முழுமுதலே! மூர்க்கனேனை ஆண்டு
கொண்ட
தனியே! தன்னொப்பா ரில்லாத் தலைவா! சகமீ ரேழுக்கும்
இனியாய்! என்னை நீங்கா இறைவா! நல்லைக் குருமணியே!
புனிதா போற்றி! புண்ணியர்கள் நண்ணும் பொருளே போற்றி! 2

*எண்சீரடியாசிரிய விருத்தம்*

போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியு முண்டோ 3

உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னாவாய்நீ என்னை யுன்னை
எவர்பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோ கலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே. 4

ஆயுநான் மறைதேடி யறியா வுன்னை
யாரறிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம்பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வளநாடு

அன்பர் பணிந் தேத்திநிற்கும் நாடெங்கள் நாடே
அரனுறைதற் கிடமான நாடெங்கள் நாடே
துன்பக்களை போக்கிநிற்கும் நாடெங்கள் நாடே
தூயவருள் மழைபொழியும் நாடெங்கள் நாடே
இன்பப்பயிர் ஓங்கிவளர் நாடெங்கள் நாடே
இந்திரியக் கள்வரற்ற நாடெங்கள் நாடே
என்புநனி நெக்குருக என்னைவலிந் தாண்ட
என்குரவன் காட்டிவைத்த தெங்கள்வள நாடே 1

ஆதியந்த மில்லாத நாடெங்கள் நாடே
அம்பரம்போ லேநிறைந்த நாடெங்கள் நாடே
தீதிலருட் கடல்சூழ்ந்த நாடெங்கள் நாடே
திக்கெட்டும் பெருகிவளர் நாடெங்கள் நாடே
சோதிமய மானவுயர் நாடெங்கள் நாடே
சுருதியெல்லாம் ஓலமிடும் நாடெங்கள் நாடே
ஓதாம லோதுவித்த உயிர்க்குயிராம் நாதன்
ஒண்கழல்கள் காட்டிவைத்த தெங்கள்வள நாடே 2

கட்டுநமன் கிட்டரிய நாடெங்கள் நாடே
கன்றுமன வெப்பொழிக்கும் நாடெங்கள் நாடே
வெட்டவெளி யாறோடும் நாடெங்கள் நாடே
மீதான வெற்புடைய நாடெங்கள் நாடே
பட்டப்பகல் போலொளிரும் நாடெங்கள் நாடே
பகலிரவு தோன்றாத நாடெங்கள் நாடே
மட்டுப்படா மயக்கமெலாந் தீரவெனை ஆண்டான்
மலர்ப்பாதங் காட்டிவைத்த தெங்கள்வள நாடே 3

வெய்யபுவிப் பார்வையொழி நாடெங்கள் நாடே
மேலான பூரணமாம் நாடெங்கள் நாடே
துய்யவறி துயில்புரியு நாடெங்கள் நாடே
தூயசுக வாரிதிதோய் நாடெங்கள் நாடே
செய்யநடங் கண்டுகளி நாடெங்கள் நாடே
சிந்தைதெளிந் திட்டதனி நாடெங்கள் நாடே
ஐயனடி யேனறியாப் பருவத்தே வந்து
ஆட்கொண்டு காட்டிவைத்த தெங்கள்வள நாடே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சுபிறப் பிறப்பறுக்கும் நாடெங்கள் நாடே
மெய்யிற்சிவம் பிறக்கவைக்கும் நாடெங்கள் நாடே
செஞ்சரண நிலவுவிரி நாடெங்கள் நாடே
திரையற்ற நீர்போன்ற நாடெங்கள் நாடே
அஞ்சிமிக வழியறியா தயர்ந்துமனந் துடித்து
ஆறாக விழிபெருக அலமந்து வாடித்
தஞ்சமென்ற எளியனெனை அஞ்சலென்று காத்த
தவஞானக் குருவடிவம் காட்டிவைத்த நாடே 5

---

# நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்

*நிலைமண்டில ஆசிரியப்பா*

சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உஞற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்,
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்று முடலைப் போற்றுத லொழிமின்
நன்றுதீ தென்னும் நாட்டம் விடுமின்
அன்று மின்றும் என்று மான்மா
இருந்த படியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமச்சி வாயவென நாம் வாழ்குவமே

*நேரிசை ஆசிரியப்பா*

அன்பே சிவமென ஆன்றோ ரிசைத்த
இன்பந் ததும்பும் இனியவா சகத்தை
இன்னு மறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்
காக்க வேண்டும் கடைக்கண் ணாலே
நோக்க வேண்டும் நூல்வல் லோனே
சேர்க்க வேண்டும் திருவடி யதனில்
ஆர்க்கு முணர அரியபெம் மானே
ஐயனே! அரசே! ஆருயிர்க் குயிரே!
வையக நடனஞ் செய்யுமா தவனே!
பொய்யுங் கொலையும் புலையுந் தவிரவும்
சைவ மோங்கவுஞ் சத்தியந் தழைக்கவும்
தெய்வமுண் டென்னுஞ் சித்தந் திகழவும்
கைவினை செய்து கழலடி போற்றவும்
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்யவும்
மெய்யடி யார்கள் மேன்மேற் கிளைக்கவும்
தையலார் தம்மைத் தாயெனப் பேணவும்
நைந்துநைந் துருகி நைந்து
நமச்சி வாயவென நாம்வாழ் குவமே.

---

## அணிகலம்

கண்ணுக்கு அணிகலம் குருநாதன் பாதம்
விண்ணுக்கு அணிகலம் சந்திரன் விளம்பு
மனத்திற்கு அணிகலம் மாசற்றார் கேண்மை
தனத்திற்கு அணிகலம் தண்ணருள் தானம்
வனத்திற்கு அணிகலம் மயிலுங் குயிலும்
தினத்திற்கு அணிகலம் தினகரன் சேவடி
பணத்திற்கு அணிகலம் பசித்தோர்க் குணவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மாவிருக்குஞ் சுகமறிய வேண்டும்

திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும் – வேல் வேல்
சீவனே சிவனென்று தெரிந்துகொள்ள வேண்டும் – வேல் வேல்

உருவேற வேசெபிக்க வேண்டும் – வேல் வேல்
ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாமை வேண்டும் – வேல் வேல்

கருவூரில் வாராமை வேண்டும் – வேல் வேல்
கண்கவரும் மின்னாரை எண்ணாமை வேண்டும் – வேல் வேல்

குருபாதம் மறவாமை வேண்டும் – வேல் வேல்
குறையொன்று மின்றி நாம்வாழ வேண்டும் – வேல் வேல்

கொல்லாமை கள்ளாமை வேண்டும் – வேல் வேல்
கோபம் பொறாமை கொள்ளாமை வேண்டும் – வேல் வேல்

எல்லார்க்கு மன்புசெய்ய வேண்டும் – வேல் வேல்
எனதுயா னென்பதை விட்டுவிட வேண்டும் – வேல் வேல்

நல்லோ ரிணக்கமே வேண்டும் – வேல் வேல்
நடுநிலைமை மாறா திருக்க வேண்டும் – வேல் வேல்

சொல்போலே சொல்லுறுதி வேண்டும் – வேல் வேல்
சும்மா விருக்குஞ் சுகமறிய வேண்டும் – வேல் வேல்

---

# சங்கு

எல்லாருள் ளத்திலும் இருந்தூதுஞ் சங்கு
ஏத்துவார் தங்களுக் கருள் கொடுக்குஞ் சங்கு
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுஞ் சங்கு
கண்ணன்றன் திருக்கரத்தில் விளங்குகின்ற சங்கு
இல்லாத பேர்களும் கேட்டுவக்குஞ் சங்கு
எல்லாரும் எப்போதும் விளிக்கின்ற சங்கு
செல்லாரு மிலங்கையிலே மலிகின்ற சங்கு
செருவிலே முழங்குகின்ற செவிமடுக்குஞ் சங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியர்

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக்கும் பிடுவர்
தேடுவர் செய்வதொன் றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர்தம் அடியரே 1

அச்சமும் கோபமும் அறிகிலர் பிரிவிலர்
பிச்சையே நச்சுவார் பிணங்குவார் இணங்குவார்
நிச்சமும் நோயிலர் நேயமே உருவினர்
நச்செழில் மிடறுடை நம்பர்தம் அடியரே 2

நீறணி நின்மலா நெற்றியங் கண்ணனே
ஆறணி சடையனே அம்பிகை பாகனே
சீறர வணிதரு செல்வமே எனப்பல
கூறியே குரைகழல் கூடுவர் அடியரே 3

அந்தமும் ஆதியும் அறியொணா ஒருவனே
எந்தையே ஈசனே எனப்பல சொல்லியே
கந்தமா மலர்கொடு காலையும் மாலையும்
வந்திப்பர் மலரடி வரங்கிளர் அடியரே 4

சந்திரன் தவழ்தரும் சடையனே விடையனே
இந்திரன் முதலியோர் இறைஞ்சிடும் இறைவனே
சுந்தரர்க் காகமுன் தூதுசெல் சோதியே
எந்தையே எனச்சொல்லி ஏத்துவார் அடியரே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகில் பேரருள் ஆரறி வாரே

அண்ட சராசரம் அவன்திரு மேனி
அண்ட சராசரம் அவன்திரு ஆடல்
அண்ட சராசரம் அவனே யாகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம்

அஞ்செழுத் தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத் தாலே அனைத்தும் உதித்தன
அஞ்செழுத் தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத் ததிசயம் ஆரறி வாரே

அன்பே கடவுள் அன்பே யுலகம்
அன்பே உயிர்கள் அன்பே யனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதிசயம் ஆரறி வாரே

ஆதியும் அந்தமும் இல்லா ஒருவன்
ஆதியும் அந்தமு மாய்வரு காரணம்
ஆதிதன் அருள்கொண் டறிவதே யன்றி
ஓதி யறிந்தவர் ஒருவரும் இலரே

அலகில் உயிர்களை ஆக்குவா னவனே
அலகில் உயிரென நிற்கும் அதிசயம்
அலகில் வானவர் தானவ ரறியார்
அலகில் பேரருள் ஆரறி வாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனடிக்கன்புசெய் அனைத்துஞ் சிவமே

சிவனடிக் கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக் கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக் கன்பு சிறப்பினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சீவன் முத்தியே.

சிவனடிக் கன்பு தீவினை யொழிக்கும்
சிவனடிக் கன்பு தெளிவினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சித்தங் களிக்கும்
சிவனடிக் கன்பு சின்மய மாக்குமே

சிவனடிக் கன்பு செய்பவம் போக்கும்
சிவனடிக் கன்பு திருவரு ளாக்கும்
சிவனடிக் கன்பு சிவகதி யாக்கும்
சிவனடிக் கன்பு செப்புந் தகைத்தோ

சிவனடிக் கன்பே சிவயோக மாகும்
சிவனடிக் கன்பே சிவஞான மாகும்
சிவனடிக் கன்பே சிவபோக மாகும்
சிவனடிக் கன்பே சிவமய மாமே

சிவனடிக் கன்புசெய் தேகம் பொன்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சின்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் நம்வயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சிவமயம்

சிவனடிக் கன்பு திரிகால மறியும்
சிவனடிக் கன்பு திரிலோக மறியும்
சிவனடிக் கன்பு திரிமூர்த்தி யறியும்
சிவனடிக் கன்பு திரிதோஷ மிறக்குமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடிக் கன்புசெய் திருசிய மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திருக்குப் பிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திரிகுண மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் சித்தந்தித் திக்குமே.

சிவனடிக் கன்புசெய் தேவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சீவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சித்தரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் அனைத்துஞ் சிவமே.

---

## முத்திக்கு வழி

*ஆசிரியப்பா*

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல், தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல்; வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமிது தானே

அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னாலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னைவினை யெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே 1

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே 2

நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்குந் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா யமர்ந்திருக்குந் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வமிது தானே 3

இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனா யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல விளங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம் புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர்தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்ற தெய்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்ற நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனாய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே 5

---

## மாலை

வந்திப்பார் எப்பொழுதுந் தொடுக்கின்ற மாலை
வாசமொரு நாளுமே அருகாத மாலை
சிந்திப்பார் கையிலே இருக்குஞ்செப மாலை
தேவர்களும் மூவர்களும் அணிகின்ற மாலை
அந்திநிற மான அழகான மாலை
ஆரணமுந் தேடியின்னு மறியாத மாலை
கொந்தாருங் குழலுமையாள் சூடுகின்ற மாலை
கொள்ளமுடி யாத மாலையிதே மாலை 1

இடையிடையே பலபூக்கள் வைத்திசைத்த மாலை
எளிதாக எல்லார்க்குங் கிடைக்கின்ற மாலை
படைமன்னர் முதலானோர் சூடுகின்ற மாலை
பத்திநெறி நின்றோர்கள் கட்டிவைத்த மாலை
தடையின்றி நறுநாற்றந் தருகின்ற மாலை
சச்சிதா னந்தமெனும் பேருடைய மாலை
இடையீ டின்றியெங்கும் விளங்குகின்ற மாலை
இம்மாலை அணிவோர்க் கில்லை ஒருநாளும் மாலை 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தன் சேவடி அடைய இன்பமே

வாச மலரடி பேச வினியது
ஆசை விடுவிடு ஆரு மிணையிலர் 1

ஈச னிணையடி ஏத்து மடியவர்
நாச மடைகிலர் நாடு திடமுடன் 2

எந்த நேரமும் இறைவ னிணையடி
சிந்தை செய்பவர் சீவன் முத்தரே 3

ஏறு வாம்பரி யேறுவா னெந்தை
கூறுவார் வினை கோடி தீருமே 4

நீறு பூசிய நிமல னடியிணை
கூறு வார்தமைக் கூடி டாவினை 5

ஆறு சூடிய அழகன் சேவடிப்
பேறு பெற்றவர் பிறப்ப தில்லையே 6

சிறப்புஞ் செல்வமுந் தந்த சேவடி
மறப்பி லாதவர் மாள்வ தில்லையே 7

வீடு சேர்வதில் விருப்ப முள்ளவர்
பாடு வார்தினம் பரமன் பாதமே 8

வேண்டு வார்வினை நீக்கு மாண்டவன்
நீண்ட சேவடி நினைக்க முத்தியே 9

மாண்டு போனவர் என்பு மார்பினில்
பூண்ட அன்பனைப் போற்ற இன்பமே 10

பித்த னென்றவர் பிறவி நீக்கிய
அத்தன் சேவடி அடைய இன்பமே 11

## வேறு

பொழில்வாழும் பூங்குயிலே பொன்னொடுமா மணிமுத்தும்
ஒழியாமற் கரைசேர்க்கும் ஓங்குகடல் சூழிலங்கை
அளியாளன் எனையாளும் ஆண்டவன்றன் திருநாமம்
தெளிவாக நீயெனக்குத் தீங்குரலால் கூவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் போலவே பாரில் வாழ்வரே

மத்த மாமலர் வைத்த வள்ளலை
நித்தம் போற்றுவார் நீடு வாழ்வரே 1

மனத்தில் வஞ்சகம் வைத்த பாவிகள்
இனத்தைச் சேர்ந்திடில் ஈனம் ஈனமே 2

இளமை இன்பத்தில் இச்சை வைத்திடில்
எழுமை யுந்துன்பம் எய்து மெய்துமே 3

சூல பாணியைத் துதிக்கு மன்பரைக்
காலன் கண்டிடிற் கலங்கி யோடுமே 4

அம்மை யப்பனை ஆர்வ மாய்த்தொழ
இம்மை நற்பயன் எய்துந் திண்ணமே 5

வேள்ப டச்செய்த விமல னைத்தொழ
ஊழ்வி னைப்பயன் ஒன்று மில்லையே 6

கொச்சை மக்களைக் கூடும் மூடர்கள்
அச்சத் தால்மனம் அலைவர் திண்ணமே 7

தனக்குத் தானிக ரான சங்கரன்
துணைப்ப தத்தினைத் துதிக்க இன்பமே 8

நீல கண்டனை நினையு மன்பர்கள்
ஞாலம் மெச்சவே நாளும் வாழ்வரே 9

கோல மாமலர் கொண்டு போற்றுவார்
பாலர் போலவே பாரில் வாழ்வரே 10

---

## உய்ய வழி காட்டுவாய்

தெய்வமே யானெனதெ னுஞ்செருக் கால்மனது
    தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
    திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாதுதுணை
    யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
    மயிலேறு தம்பிரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றி போற்றி சிவசிவ போற்றி

*நிலைமண்டில ஆசிரியப்பா*

அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக
செந்தண்மை பூண்ட செல்வன் வருக
பந்தமும் வீடும் படைப்போன் வருக
எந்தமை யாளும் இறைவன் வருக
கற்பனை கடந்த கடவுள் வருக
சொற்பதங் கடந்த தொல்லோன் வருக
பாரொடு விண்ணாய்ப் பரந்தோன் வருக
சீரொடு பொலியுஞ் சிவனவன் வருக
சிந்தா மணியென் தேவன் வருக
நந்தா விளக்கே நலஞ்சுடர் வருக
நீற்றொடு பொலியும் நிமலன் வருக
ஆற்றொடு தோற்றும் அமலன் வருக
அற்புதன் வருக அநேகன் வருக
பொற்புட னடஞ்செய் புனிதன் வருக
விற்பொலி நுதலாள் விமலன் வருக
சொற்றுணை வேதியன்
பொற்றா ளிணைகள் பொலிந்து வாழ்க
கற்றோ ரேத்துங் கழலடி வாழ்க
மற்றோ ரறியா மலர்ப்பதம் வாழ்க
அற்றோர்க் குதவும் அருட்பதம் வாழ்க
தன்னே ரில்லாத் தாளிணை வாழ்க
என்போல் வந்த இணையடி வாழ்க
கண்போற் காக்குங் கழலடி வாழ்க
விண்போல் விளங்கும் மெய்யடி வாழ்க
பெண்பா லுகந்த பித்தன் வாழ்க
மண்மேல் மலரடி வைத்தோன் வாழ்க
தற்பரன் வாழ்க சதாசிவன் வாழ்க
சிற்பரன் வாழ்க சின்மயன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதுமாய் நின்ற முதல்வன் போற்றி
தொழுமடி யார்கள் துணைவா போற்றி
என்றுமெ னுளத்தில் இருப்பாய் போற்றி
மன்று ளாடும் மணியே போற்றி
பொன்று முடலைப் பொறுக்கேன் போற்றி
சென்றடை யாத செல்வா போற்றி
ஆதி போற்றி அரனே போற்றி
சோதி போற்றி சுடரே போற்றி
நீதி போற்றி நிறைவே போற்றி
மாதொரு பாக மலர்ப்பதம் போற்றி
ஏதொரு பற்றிங் கில்லைப் போற்றி
போற்றி போற்றி பொன்னடி யென்றும்
போற்றி போற்றி சிவசிவ போற்றி

---

## அரியதிலரியது ஆன்மா

அரியதி லரியது ஆன்மா வதுதான்
பெரியதிற் பெரியது பேத மற்றது
கருமைசெம்மை வெண்மையைக் கலந்து நிற்பது
பிரிவறி யாதது பின்முன் அற்றது
பொறிவழி போகாப் புண்ணியர்க் குரியது
நெறியெலாங் கடந்து நிற்கும் நெறியது
அறிவுக் கறிவாய் ஆனந்தந் தருவது
குறிகுண மற்றது கூத்தாட வல்லது
துரியா தீதத்தில் தூய்மையா யுள்ளது
மரித்துப் பிறவா மாண்பை யுடையது
திரிபுர மெரித்தது தேவர்சிறை மீட்டது
நரியைக் குதிரை யாக்கி நயந்தது
விருப்பும் வெறுப்பும் அற்றவர் பாலது
கருப்போ காதென்னைக் காத்து நிற்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பின் வா மனமே

அன்பு சிவமென் றருளாளர் சொன்னமொழி
என்புருகச் செய்யுமன்றோ என்பின்னே வாமனமே 1

மண்புகுந்த மாலும் மலரோனுங் காணரிய
எண்குணத்தான் பொன்னடியை ஏத்தஎன்பின் வாமனமே! 2

கண்ணிறைந்த செல்வத்தைக் கங்குல்பகல் காணாமல்
உண்ணிறைந்த பேரன்பால் ஓதவென்பின் வாமனமே! 3

பொன்போலும் மேனியனைப் பூரணனைப் புண்ணியனை
என்போல நின்றானை ஏத்தவென்பின் வாமனமே! 4

தன்னொப்பா ரில்லாத தத்துவனைத் தண்ணருளைச்
சுண்ணவெண் ணீற்றானைத் தொழவென்பின் வாமனமே! 5

ஒன்றாய் இரண்டாய் ஒருமூன்றாய் நின்றானை
என்றாயாய் நின்றானை ஏத்தவென்பின் வாமனமே! 6

உணர்ந்தார்க் குணர்வரிய ஓங்கார மெய்ப்பொருளைக்
கணந்தான் மறவாமல் கைதொழவா என்மனமே! 7

சித்தத்துள் தித்திக்குந் தெள்ளமுதைத் தெய்வத்தை
எத்திக்கும் போற்றுதற்கு என்பின்னே வாமனமே! 8

முத்திக்கு வித்தான மூவா முழுமுதலைப்
பத்திக்க என்பின்னே பறந்துவா என்மனமே! 9

சத்தி சிவமாகித் தன்னிலையிற் பிரியாத
வித்தகனைப் போற்றுதற்கு விரைந்தென்பின் வாமனமே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில் 1

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமலம் நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல்கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள் 2

சிவதொண்டு செய்து திருமா லுலகாண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரன் சிவமானான்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல்முன்னாள்
சிவதொண்டு செய்வார்க்கு முண்டோ குறைசொல்வாய் 3

சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் காரமில்லை
சிவதொண்டு செய்வார்க் கிரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழியூ னுணவுமில்லை 4

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார் 5



oundation.
am.org

# நல்வரவு சொல்லு சிறு பல்லி

எல்லாஞ்செய வல்லபிரான் இங்குவரு மாகில்
ஏத்துவார் மனம்வாழும் ஈசன்வரு மாகில்
கல்லார்க்கும் அருள்புரியுங் கடவுள்வரு மாகில்
களிப்புடனே நல்வரவு சொல்லுசிறு பல்லி 1

காமாதி குணமெல்லாங் கட்டவிழு மாகில்
கருணையே வடிவான கடவுள்வரு மாகில்
தாமாக எழுந்தருளும் தாணுவரு மாகில்
சடுதியாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி 2

தத்துவம் ஆறாறும் வெந்துவிடு மாகில்
தானான தன்மைவந்து தலையெடுக்கு மாகில்
பத்தர்களை நீங்காத பரமன்வரு மாகில்
பக்குவமாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி 3

ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற ஒருவன்வரு மாகில்
உண்மைநிலை என்மனத்தில் மெல்லவரு மாகில்
வழியடிமை கொள்கின்ற வள்ளல்வரு மாகில்
வருத்தமின்றி நல்வரவு சொல்லுசிறு பல்லி 4

சொல்லமுடி யாதபொருள் சொல்லவரு மாகில்
சும்மா விருக்கின்ற சுகங்கிடைக்கு மாகில்
எல்லாருங் காணவெனைப் பித்தேற்று மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி 5

தேனுந்து கொன்றையணி செல்வன்வரு மாகில்
சிவகாமி பங்கிலுறை தெய்வம்வரு மாகில்
நானும்நீயும் ஒன்றாகி நிற்கவரு மாகில்
நல்லகுரல் நல்வரவு சொல்லுசிறு பல்லி 6

வேதமறி யாதபொருள் விரைந்துவரு மாகில்
மேவுமிட மெங்குமறி வாகிவரு மாகில்
நாதமுடி மேல்நடனம் நாங்காணு மாகில்
நல்லகுரல் நல்லதிசை சொல்லுசிறு பல்லி 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொந்தோமென் றாடுந்திருப் பாதம்வரு மாகில்
சுரிகுழலாள் பாகனார் இங்குவரு மாகில்
வந்தோம்வந் தோமென்னும் அடிகள்வரு மாகில்
வளப்பமுடன் நல்லகுரல் சொல்லுசிறு பல்லி! 8

வெள்விடைமேல் உவந்தேறும் விமலன்வரு மாகில்
வேதத்தி னுட்பொருள் விளங்கவரு மாகில்
எல்லவர்க்கும் பொதுவில்நடம் நாங்காணு மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி! 9

பூதங்கள் ஐந்தான புனிதன்வரு மாகில்
புன்னெறியிற் செல்லாத சிந்தைவரு மாகில்
தாதவிழும் சடையப்பன் இங்குவரு மாகில்
தண்மையுடன் நல்வரவு சொல்லுசிறு பல்லி! 10

பாடல்பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் எல்லாம்
பங்கமின்றி வாழ்ந்துபின் பரமனரு ளாலே
வீடகத்தே புகுந்திடுவர் மெய்மையிது வாகும்
விட்டுவிட்டு நல்லகுரல் சொல்லுசிறு பல்லி! 11

---

# ஸ்ரீ நடராஜன்

இராகம் – சுருட்டி தாளம் – ஆதி

**பல்லவி**

இராஜாதிராஜன் ஸ்ரீ நடராஜன்

**அநுபல்லவி**

ஆசாபா சமகற்றும் அன்பு விலாசன் (இராஜா)

**சரணங்கள்**

மாசில்லா மாதவர்தம் மனத்திற் பிரகாசன்
மறுமைக்கும் இம்மைக்கும் இவனென் சிநேகன். (இராஜா)

தேசம் புகழுந்திரு வண்ணையில் வாசன்
சிவகாமி யம்மை சேவிக்கும் நேசன். (இராஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலம் அடைக்கலம்

இராகம் – ஆரபி தாளம் – ஆதி

**பல்லவி**

பாரையனே – கடைக்கண்ணால் – பாரையனே

**சரணங்கள்**

பாரைய னேமனம் பதையாம லடியேனைச்
சேரைய னேயுன் செழுங்கழற் கடைக்கலம் 1

ஆரைய னேதுணை அடியேற் குனையல்லால்
தீரைய னேமிடி திருவடிக் கடைக்கலம் 2

ஊருந் துணையில்லை உற்றார் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியே னடைக்கலம் 3

சீருந் துணையில்லைச் செல்வந் துணையில்லை
சீரார் திருவடிக் கடியே னடைக்கலம் 4

சிந்தையி லன்பு பொருந்த வடியேற்குத்
தந்திடு நின்னருள் தாளிணைக் கடைக்கலம் 5

எந்தையே எம்பெரு மானேயென் றடியார்கள்
வந்தனை செய்யும் மலரடிக் கடைக்கலம் 6

கொத்தார் குழலுமை கொண்டாடு மையனே
செத்தா ரெலும்பணி செல்வநிற் கடைக்கலம் 7

வித்தார விடையேறி வெளியில் நடம்புரி
அத்தாவுன் பொன்னடிக் கடியே னடைக்கலம் 8

தத்தாதித் தோம்திமி தாந்தோமென் றாடிடும்
கத்தாவே யுன்னுடைக் கழலடிக் கடைக்கலம் 9

நெடியமா லயன்தேடிக் காணாமல் நின்றிடும்
நிமலனே நின்னடிக் கடைக்கல மடைக்கலம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநாமஞ் சொல்லுவோம்

இராகம் – நாட்டை　　　　　　　　　　தாளம் – ரூபகம்

**பல்லவி**

நாமஞ் சொல்லுவோம் – சிவ
நாமஞ் சொல்லுவோம்.

**சரணங்கள்**

நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம் (நா) 1

சோம சுந்தரன் பாதங் காணுவோம்
சும்மா விருக்கின்ற சூட்சம் பேணுவோம் (நா) 2

சினத்தைக் கொல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்து மவனென்று அகத்தி லெண்ணுவோம் (நா) 3

கையில் மலர்கொண்டு காலை மாலையும்
செய்ய மேனியன் அடியில் வீழுவோம் (நா) 4

என்பு பூண்டவன் என்னை யாண்டவன்
இவன்ன வேண்டினால் என்று மின்பமே (நா) 5

சிரித்து முப்புர மெரித்த தேவனை
சிந்தை செய்குவோர் தேவ ராவரே (நா) 6

கமல நான்முகன் கண்ணன் காண்கிலான்
எமது நாயகன் என்பர் பெரியரே (நா) 7

வழிகள் இரண்டையு மடைக்க வல்லவர்
ஒழியா இன்பத்தி லுற்று வாழ்வரே (நா) 8

தேனும் பாலினு மினிய தெய்வத்தை
நானும் நீயுமாய் நாளும் போற்றுவோம் (நா) 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மானை

*தரவுகொச்சகம்*

அம்மையு மப்பனுமாய் நின்றாரா ரம்மானை
இம்மை மறுமைக் கிறைவர்கா ணம்மானை

இம்மை மறுமைக் கிவரிறைவ ரானாக்கால்
தம்மையறிந் தார்தலை யாவரோ அம்மானை

செம்மைமன முண்டானாற் சேர்வர் தலையிடத்தில்
உம்மையங்கே காண முடியாதா மம்மானை

இந்திரசா லங்கனவென்று முன்னோரிவ் வுலகைத்
தந்திரமாய்ச் சொன்ன சார்பென்ன வம்மானை

சார்புகெட ஒழுகும் தன்மையருக் கல்லால்
ஆருமறி யார்களந்த ரகசியத்தை அம்மானை

---

## சொல்லாய் எனக்கேற்ற சொல்

*நேரிசை வெண்பா (அந்தாதித் தொடை)*

எந்தையே! எந்தையே! என்றேத்து மெய்யடியார்
சிந்தை குடிகொண்ட தெய்வமே! – முந்துங்
கருணைத் திருவுருவே! கண்ணிறைந்த இன்பே!
தருணமிஃ தாளாய்நீ தான் 1

தானந் தவமிரண்டுஞ் சற்றுமிலாப் பாவியேன்
ஞான முளேன்போல் நடிக்கின்றேன் – வானில்
வளர்பிறையைச் செஞ்சடையில் வைத்த பிரானே!
தளரவிடா தாளாய்நீ தான் 2

தானான தன்மை தனையறிந்த மாதவர்கள்
வானாதி மாயையினால் வாடுவரோ – தேனாரும்
கொன்றைச் சடைமுடியாய்! கோலவேற் றூர்தியாய்
என்றுமெனை யாளாய்நீ யிங்கு 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளான அன்பர் அகநிறைந்த பாக்கியமே!
சூளா மணியே துரந்தரனே! – மீளா
அடிமைநா னன்றோ அறியார்போல் விட்டுப்
படர்தல் முறையோ பகர் 4

பகருவார் நெஞ்சம் பதைக்குமோ பாரில்
நிகரில் இறைவநெடி தெய்த்தேன் – பகருற்றேன்
உண்டோ வுலகத் துறுதெய்வம் நீயல்லால்
உண்டோ துணைவேறிங் கோது 5

ஓதுவார் நெஞ்சில் உதிக்கும் பரஞ்சுடரே!
மாதுசேர் பாகா! மறைநான்கும் – ஓதுகிலா
உன்புகழை ஓதினே னுன்னடியான் யானன்றோ
என்பிழையுட் கொள்ளே லினி 6

இனியவனே! யெவ்வுயிர்க்கு மீசனே! ஆளும்
பனிமொழியாள் பாகனே! மாயோன் – நனிவருந்த
நீண்ட சுடராகி நின்றாய் நினைவேனை
ஆண்டருள வேண்டும் அறி 7

அறிவுக் கறிவாகி நின்றாய்! அறிஞர்
பிறிவறவுன் னுள்நிற்பர் பெம்மான் – நெறியறியேன்
பொல்லாப் புலைநாயேன் போற்றும் வகையறியேன்
சொல்லாய் எனக்கேற்ற சொல். 8

சொல்லிற் கலந்த சுவையறியாப் பாவியேன்
அல்லும் பகலும் அரற்றுகின்றேன் – தொல்லுலகில்
வாராயோ என்முன்னே வந்து வறுமைபிணி
தீராயோ வாய்திறந்து செப்பு 9

செப்புந் தரமோ சிவனேநின் சீரடியார்
அப்பிலுப் பொப்பான ஆக்கத்தை – இப்புவியில்
என்னையு மவ்வா றினிநீ கலப்பாயேல்
உன்னைத் தடுப்பவரா ரோது 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயனே சற்குருநாதா

இராகம் – சஹானா　　　　　　　　　　　　　　　　தாளம் – ஆதி

**பல்லவி**

ஐயனே சற்குரு நாதா – உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா – உனைத்
தோத்திரஞ் செய்தேன்பொற் பாதா　　　　　(ஐய)

**சரணங்கள்**

ஈயாத புல்லரைக் கூடி – நானும்
இடர்ப்பட் டேன்வெகு கோடி
ஓயாம லுன்புகழ் பாடி – நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி　　　　　(ஐய)

ஆதார மாறையுந் தாண்டி – அருள்
அம்பலத் தேநின்று வேண்டி
சூதான மனந்தினந் தூண்டி – நானுந்
தொடர்ந்துவந் தேனினைந் தாண்டி　　　　　(ஐய)

# அன்னைப் பத்து

மண்ணையும் விண்ணையும் மற்றுள யாவையும்
எண்ணுமுன் னேயாக்கும் அன்னே யென்னும்
எண்ணுமுன் னேயாக்கும் என்போல வந்தவ.'.
தென்ன அதிசயம் அன்னே யென்னும்　　　　　1

கஞ்சனும் மாயனும் காணாக் கடவுளர்
சஞ்சலந் தீர்ப்பரால் அன்னே யென்னும்
சஞ்சலந் தீர்த்தென்னைத் தானாகச் செய்தனர்
வஞ்சகந் தீர்ந்தது அன்னே யென்னும்　　　　　2

எட்டு மிரண்டு மறியா வெனக்கொரு
பட்ட மளித்தனர் அன்னே யென்னும்
பட்ட மளித்திந்தப் பாரொடு விண்ணும்
இட்ட முளதென்றார் அன்னே யென்னும்　　　　　3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாய நமவென்று சிந்திக்கச் சொல்லியென்
அபாய மறுத்தனர் அன்னே யென்னும்
அபாய மறுத்தென்னை யாண்டுகொண் டாரவர்
உபாயத்தாற் காணொணார் அன்னே யென்னும் 4

விருப்பு வெறுப்பினை விட்டிட வேசொல்லிக்
கருப்புகா மற்காத்தார் அன்னே யென்னும்
கருப்புகா மற்காத்துக் கங்குல் பகலற்ற
இருப்பை யளித்தவர் அன்னே யென்னும் 5

நாமறி யோமெனும் நல்ல திருமொழி
நாமறி யச்செய்தார் அன்னே யென்னும்
நாமறி யச்செய்து நாமே நீயென்று
சேம மளித்தன ரன்னே யென்னும் 6

ஆரறி வாரென அன்றுசொன் னமொழி
ஆரறி யவல்லார் அன்னே யென்னும்
ஆரறி யவல்லா ராயினு மன்பர்கள்
சீரறி வார்திண்ணம் அன்னே யென்னும் 7

என்னை யறிவித் தெனக்கருள் செய்தவன்
என்னிலும் வேறலன் அன்னே யென்னும்
என்னிலும் வேறலன் எல்லாம் வல்லவன்
மண்ணினில் வந்தனன் அன்னே யென்னும் 8

வாக்கால் மனத்தால் தொடர்வரி தானவன்
வாக்கால் திடம்பெற்றேன் அன்னே யென்னும்
வாக்கால் திடம்பெற்றேன் வாணா ளாசையைத்
தீக்கிரை யாக்கினன் அன்னே யென்னும் 9

எல்லாஞ் சிவன்செயல் எல்லாஞ் சிவன்வடிவு
எல்லா மவனன்றோ அன்னே யென்னும்
எல்லா மவன்வடி வெங்கு மவனென்றால்
பொல்லாப்பிங் கேதடி அன்னே யென்னும் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் நல்லைவாசன்

இராகம் – இந்தோளம் தாளம் – ஆதி

### பல்லவி

எங்கள் குருநாதன் எழில்நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன்

### அநுபல்லவி

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாறாத மௌன தியானப்ர வேசன் (எங்)

### சரணங்கள்

அன்பர்ச காயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலும்நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலுமென்றன் மனத்தினில் தாண்டவன் (எங்)

வஞ்சம் பொறாமைகோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்ச மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர் தம்போனெஞ்சிற் பண்புட னினிப்பவன் (எங்)

---

# ஞானகுரவன்

*கலிவிருத்தம்*

ஆர கத்தினுஞ் சென்றவ ருண்கிலர்
ஏர கத்தம ரேந்தலை யொப்பவர்
தார கப்பொருள் தந்த தலைவனார்
நீர கத்தினர் நெஞ்சங் குடிகொண்டார் 1

சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்த னர்பவ மினியெனக் கில்லையே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூண்ட வல்வினை முற்றுந் துறந்தவர்
ஆண்ட வர்க்கன்பு பூண்ட வகத்தினர்
தூண்டு சோதிச் சுடர்விடு தூய்மையர்
ஆண்டு கொண்டன ரன்றெனை நல்லையில் 3

பாதிச் சாமத்தின் பின்பள்ளி கொள்பவர்
வீதி யிற்செல்லும் வீணர்கள் தங்களைப்
பேதிக் கும்படி வேண்டியே பேசுவார்
சோதித் தேயெனைச் சும்மா விருத்தினார் 4

எந்த வேளையு மென்னவோ மெத்தெனச்
சிந்தை தன்னிலே செப்பிக்கொண் டேயவர்
வந்த பேருக்கு வாழ்வை யளிப்பவர்
என்தன் சிந்தையைக் கோயிலாக் கொண்டவர் 5

கோல மொன்றும் விரும்பிலன் கும்பிடச்
சால வன்புடன் தான்வரும் பத்தரைக்
கால னென்னக் கறுத்துடன் சீறுவான்
சாலஞ் செய்தெனைத் தன்வய மாக்கினான் 6

ஆக்கி னானெனை அண்மையிற் சென்றிடின்
தாக்கு வானெனைத் தாக்கற மில்லென
நோக்கு வானெனை நோக்கிப் பலசொல்வான்
நோக்க மொன்றற நோக்கிய நோக்கமே 7

பாவனை யொன்று பண்ணவும் விட்டிலன்
சேவனை யொன்று செய்யவும் விட்டிலன்
ஆவ தொன்று மறியவும் விட்டிலன்
தேவன் செய்திட்ட சித்திர மிட்டமே 8

இட்ட மிட்ட மிவன்பணி விட்டிலன்
இட்ட மென்ன அறியவும் விட்டிலன்
இட்ட சித்திக ளெய்தவும் விட்டிலன்
இட்ட மாக்கின னென்ன வியப்பிதே 9

வியக்க வொன்று மிலையென விட்டனன்
வியக்கும் மாந்தரைச் சேரவும் விட்டிலன்
தயக்க விட்டனன் தன்னடி யார்களை
ஞயக்க விட்டனன் ஞான குரவனே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமையான தெய்வம்

அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம்நாங்கள் அதையறிந்து வாழீர் 1

இன்னதன்மை என்றுநம்மை எடுத்துச்சொல்வா ருண்டோ
என்னபய மெங்களுக்கு எல்லாஞ்சிவ மன்றோ 2

அவனன்றி யோரணுவு மசையாதெனப் பெரியோர்
அன்றுசொன்ன நிறைமொழியை மறப்பதுவுஞ் சரியோ 3

அங்கிங்கெ னாதபடி யெங்குஞ்சிவ மென்று
அறிந்தடங்கி யகிலத்திலே வாழ்வதுவே நன்று 4

காணுங்கண்ணிற் கலந்தகண்ணே என்னுஞ்சிவ தொண்டர்
கருத்தைக்கண்டு வருத்தமற்று வாழ்தல்சிவ தொண்டு 5

அனைத்துமொன்றா யிருக்குதென வறிந்தபெரி யோர்கள்
அடியிணையை முடிதனிலே அணிந்துகொண்டேன் சிறியேன் 6

---

## சற்குரு தாள்கள் வாழ்க

அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனாக்குஞ் சற்குரு தாள்கள்வாழ்க 1

ஆக்கைநீ யல்லைநீயோ ஆன்மாவென் றெனக்குச்சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் றிருத்தாள்வாழ்க 2

இருந்துபா ரென்றெனக்கோர் இனியநல் வாக்குத்தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன் தாள்கள்வாழ்க 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயாத புல்லர்தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள்வாழ்க 4

உன்மத்தன் போலேவந்தென் னுடல்பொரு ளாவிமூன்றும்
தன்னத்தம் வாங்கிக்கொண்ட சற்குரு தாள்கள்வாழ்க 5

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள்வாழ்க 6

எண்ணிய வண்ணம்வாழ எனக்குநல் லருளைத்தந்த
கண்ணிய முடையசெல்வன் கழலடி யென்றும்வாழ்க 7

ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு மயங்காவண்ணம்
தாடலை தன்னில்வைத்த சற்குரு தாள்கள்வாழ்க 8

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம்வாழ்க 9

ஒருமொழி யதனாலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள்வாழ்க 10

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக்காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் றிருத்தாள்வாழ்க 11

ஔவன நல்லைதன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்விதி னாண்டுகொண்ட செல்வன்றன் தாள்கள்வாழ்க 12

அஃகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்தநல்ல நாதன்றாள் வாழ்க! வாழ்க! 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடி வாழ்க

*குறள் வெண் செந்துறை*

அகரமாம் எழுத்துப்போல அனைத்தினுங் கலந்துநின்றே
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க. 1

ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்
காணவே என்முன்வந்த கழலடி யென்றும் வாழ்க. 2

இருவினை நீக்கியெம்மை இன்பமாம் நிலத்தில் வைக்கத்
திருவுருத் தாங்கிவந்த செல்வநின் திருத்தாள் வாழ்க. 3

ஈன்றிடு தந்தைதாயோ டெய்திய சுற்றமாகித்
தோன்றிய குருவுமான துணைவநின் திருத்தாள் வாழ்க. 4

உணர்ந்தார்க்கு முணரவொண்ணா ஒருவனே என்போல் வந்து
குணங்காட்டி ஆண்டுகொண்ட குருவின்சீர்ப் பாதம் வாழ்க. 5

ஊசிமே னுனியினின்றே உக்கிர தவத்தையாற்றும்
மாசில்மா தவருங்காணா மலர்ப்பதம் மனத்தில் வாழ்க. 6

என்னைநீ வேறாயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குரு தாள்கள் வாழ்க. 7

ஏதுமொன் றறநில்லென்றே யெனக்குநல் லருளைத்தந்த
தீதிலாத் தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் என்ன செய்யவேண்டும்

சிவநாம மைந்தெழுத்துஞ் சிந்தித்திட வேண்டும்
— சிந்தித்திட வேண்டும்
சிவதொண்டன் தொண்டுசெய்ய முந்திவிட வேண்டும்
தவநெறியில் வழுவாமல் தான்வளர வேண்டும்
— தான் வளர வேண்டும்
தந்தைதாய் சுற்றத்தைத் தழுவிக் கொள்ளவேண்டும் 1

ஐந்தாண்டு விழாவதனைக் கொண்டாட வேண்டும்
— கொண்டாட வேண்டும்
அவரவரின் விருப்பப்படி பொருளுதவ வேண்டும்
மந்தார மல்லிகையால் மாலை கட்ட வேண்டும்
— மாலை கட்ட வேண்டும்
வந்தசிவ தொண்டனுக்கு வாழ்த்திவிட வேண்டும் 2

கொஞ்சங்கொஞ்ச மாய்மனத்தை யடக்கிக்கொள்ள வேண்டும்
— அடக்கிக்கொள்ள வேண்டும்
குருநாதன் திருவடியைக் கும்பிட்டிட வேண்டும்
அஞ்சி யஞ்சிப் பாவத்தை யகற்றி விடவேண்டும்
— அகற்றிவிட வேண்டும்
ஆர்மீதும் அன்பாக இருந்துவிட வேண்டும் 3

அளவுக்குப் போசனத்தை யருந்திவிட வேண்டும்
— அருந்திவிட வேண்டும்
அறிவுடைய எப்பொழுதும் வருந்திவிட வேண்டும்
இளமையிலே வித்தைதனைக் கற்று விடவேண்டும்
— கற்று விடவேண்டும்
ஈயாத மனிதர்பற்றை யகற்றிவிட வேண்டும் 4

குடிப்பிறந்தா ரோடுறவு கொண்டு விடவேண்டும்
— கொண்டு விடவேண்டும்
குறைவில்லை யென்றுசொல்லிக் குதூகலிக்க வேண்டும்
உடன்பிறந்தார் சுற்றத்தாரை ஓம்பிவிட வேண்டும்
— ஓம்பிவிட வேண்டும்
உள்ளும்பு றம்புமொன்றாய் வாழ்ந்து விடவேண்டும் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை மறந்தருளில் தான்நிலைக்க வேண்டும்
 – தான்நிலைக்க வேண்டும்
சந்தேகம் வாராமல் தான்தொலைக்க வேண்டும்
பின்னையாசான் பெருமைதன்னைப் பேசிவிட வேண்டும்
 – பேசிவிட வேண்டும்
பித்தனென்ற பிறர்வசையை வீசிவிட வேண்டும் 6

---

## எங்களை யாள் குருநாதா

இராகம் – சஹானா தாளம் – ஆதி

**பல்லவி**

எங்களை யாள்குரு நாதா – நின்
இணையடிபணிந் திடவரந் தாதா

**சரணங்கள்**

செந்நெலும் கன்னலும் செறியும்நல் லூராய்
செல்லப்ப னென்னுந் திருப்பெயர்க் குரியாய்
அன்னைபி தாக்குரு தெய்வமு மானாய்
அண்டிவந் தேனெனை யனுதினங் காப்பாய் (எங்)

உல்லாச மான நடையுடை யோனே
உன்போ லொருவர் உலகினிற் கிடையார்
எல்லாம் வல்லவர் செயலையா ரறிவார்
ஏத்தி யேத்தித் தொழவெனைக் குறியாய் (எங்)

பித்த னென்றுபலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறரா லறியொணாத் தரத்தாய்
அத்தனே யுனக்கே யபய மபயம்
ஆருக்கு மினிமே லெனக்கென் னபயம் (எங்)

ஒருபொல் லாப்பும் இல்லையென் றுரைத்தோய்
உண்மை முழுதும் என்றெனக் குரைத்தோய்
கருத்தினுட் கருத்தாய் விளங்குங்கண் மணியே
காமக் குரோதம் அற்றவர்க் கணியே (எங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானைப் பார்த்துநின் றாடுமயிலே

இராகம் – ஆனந்தபைரவி

ஆடுமயிலே பணிந் தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே

வீடுநமக் கெப்போதும் சொந்த மென்றே
வீணாசைப் படுவதெல்லாம் பந்த மென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக் கொண்டே
குழைந்து குழைந்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே) 1

பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமல்ல வென்றே
ஆனந்தமாய்ப் பணிந்தெழுந் தாடுமயிலே (ஆடுமயிலே) 2

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக்கொண்டே
இரந்திரந் தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஔவியம்பொ றாமைகோபம் அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே (ஆடுமயிலே) 3

ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கேட்டே
ஓம்சிவாய நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக்க ளித்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே) 4

தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போலமனம் சிறந்து கொண்டே
பேசவுமறி யாமற்பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்துநின் றாடுமயிலே (ஆடுமயிலே) 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ

இராகம் – செஞ்சுருட்டி　　　　　　　　　　　　　　தாளம் – ஆதி

**பல்லவி**

சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ
திருவடி கண்டு களியோமோ　　　　　　　　　(சிவ)

உவமை கடந்தவின்பம் எமக்குள்ளே யுண்டு
ஓகோ வுணர்ந்து செய்சிவ தொண்டு　　　　　　(சிவ) 1

தத்துவம் யாவுஞ் சடமென அறிவோம்
சத்தியம் ஆன்மா நித்தியம் உய்வோம்　　　　　(சிவ) 2

அறிவறி யாமை யிரண்டும்நீ யல்லை
அரிய தத்துவம் தெரிவது தொல்லை　　　　　　(சிவ) 3

பொறிவழி மனத்தைப் போகாமற் கொல்வோம்
பூரண மான நிட்டையிற் செல்வோம்　　　　　　(சிவ) 4

விருப்பும் வெறுப்பும் வீணெனக் குறிப்போம்
வேதாந்த சித்தாந்தஞ் சமமெனத் தெரிப்போம்　　(சிவ) 5

நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நாடெங்குஞ் சென்று சிவதொண்டு செய்வோம்　　(சிவ) 6

உத்தம நட்பை ஒருநாளும் பிரியோம்
ஓம்சி வாய நமவென் றுரைப்போம்　　　　　　(சிவ) 7

அனைத்துஞ் சிவன்செய லென்னநா மெண்ணுவோம்
ஆன்மாக்க ளிடத்தில் அன்புநாம் பண்ணுவோம்　(சிவ) 8

குருவடி யொருபோதுங் கும்பிட மறவோம்
கூடாத கூட்டத்திற் கூடயாம் அறியோம்　　　　(சிவ) 9

இன்பமே யல்லாமற் றுன்பம் நமக்கில்லை
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை　　　　　(சிவ) 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமவன் செயலே

*வெண்பா*

எல்லா மவனேயா மெல்லா மவன்செயலே
கல்லாய் மனிதா கவலையேன் – நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி 1

மதிக்கு மதியீ மதிசூடு வானை
மதிக்கு முனக்கு மரணம் – உதிக்குமோ
மார்க்கண்ட னுக்காய் மறலிபட்ட பாட்டினைப்
பார்க்கிலுனக் கென்ன பயம் 2

பயமுண்டோ பஞ்சப் பொறிவழிபோ கார்க்கு
நயமுண்டோ நட்டமுண்டோ நாடில் – அயலுண்டோ
என்ன குறைதானுண் டெங்கெழிலென் ஞாயிறுதான்
சொன்னே னதுவே சுகம் 3

சுகதுக்கம் ஒன்றுமுனக் கில்லைநீ தூயோன்
அகநெகவே யாண்டவனை யந்தி – மிகுசந்தி
ஏத்தித் துதித்துநீ எல்லார்க்கும் நன்மைசெய்
போற்றிப் புகழ்ந்து புறம் 4

புறத்தி லலையாதே போனவற்றை யெண்ணி
அறத்தை மறவாதே யாண்டான் – திறத்தையே
சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனா தீதனாய்
அந்தி பகலறியா தாழ் 5

# குருலிங்கம்

சுந்தரற்குப் பெண்கொடுத்த சோதிலிங்கம்
துரைசுவாமி தனையீன்ற சொக்கலிங்கம்
கந்தரத்தில் கடுநஞ்சை வைத்தலிங்கம்
கருதுவார் தங்கருத்தில் வாழும்லிங்கம்
அந்தரத்தில் மால்விடைமேல் வந்தலிங்கம்
அழுதபிள்ளை தனக்குப்பால் அளித்தலிங்கம்
இந்தவளஞ் சேரிலங்கை வந்தலிங்கம்
எனையாண்ட குருலிங்கம் என்றுங்காப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி நின் திருவடியே

இராகம் – உசேனி                                        தாளம் – ஆதி

**பல்லவி**

தேடிநின் திருவடியே செல்வமென நாடிவந்தேன்
திருவருள் தந்தாளும் தேவா – சற்குருநாதா

**அநுபல்லவி**

பாடி மகிழுஞ்சிவ பாக்யம்பா ரினில்தேட
மூடிய மாயவிருள் ஓட அருள் குருவே (தேடி)

**சரணம்**

அடியேனைக் கைவிடுதல் ஆகுமோ இது தகுமோ
அன்பிலா திருப்பது அடிகளுக் கழகாமோ
அரசேநல் லூரில்வாசா ஆரறிவா ரென்றுசொன்ன
அருந்தவனே ஒப்பில்லானே அப்பனே செல்லப்பனே (தேடி)

---

# சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே 1

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டிம னத்தையாளச் சொல்லு சிவமே 3

## இறைவா உனக்கபயம்

என்னையெனக் கென்னாலே காட்டிவைத்த இறைவா
எல்லாஞ்செய வல்லவனே என்றன் பெருமானே
அன்னையினும் அப்பனினும் அன்புமிக்க அரனே
ஆன்மாவுக் கான்மாவே யாதியந்தம் இல்லானே
தென்னைபனை சேரிலங்கைத் திருவேயென் செல்வமே
தேவாதி தேவனே சிறியே னுனக்கபயம்.

## ஏன்றுகொள் ஏழையேனை

விரும்புவார் விரும்புமுன்னம் விரைந்துவந் தருள்செய் வானைக்
குரும்பைநேர் கொங்கை யாடன் கூறனைக் கூற்றைக் காய்ந்து
பெரும்பயன் விளையா நின்ற பெம்மானைப் பிறப்பில் லானை
அரும்புமா மலர்கொய் தேத்தி யடியிணை பணிவர் வாழ்வார் 1

பணிபவர் நெஞ்சி னானே பலபல கோலத் தானே
அணிக்கணி யாகி நிற்கு மாதியே யமரர் கோவே
மணியணி கண்டத் தானே மாற்றறி யாத பொன்னே
இனியுனை மறந்துய் வேனோ ஏன்றுகொள் ஏழை யேனை 2

பொன்னொத்த மேனி யானே பூங்குழல் பாகத் தானே
அன்னத்தா னரிகா ணானே ஆவியோ டாக்கை யெல்லாம்
வண்ணத்த திருவ டிக்கீழ் வைத்தனன் வருந்தா வண்ணம்
எண்ணத்தா ளிணைகள் தந்தே யேன்றுகொள் ஏழை யேனை 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியதிற் பெரியது ஆன்மா

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரியதில் அரியது ஆன்மா அதுதான்
ஒன்றென இரண்டென ஓதவொண் ணாதது
நன்றெனத் தீதென நாடவொண் ணாதது
என்று மிருந்த படியே யிருப்பது
என்று மெம்மை விட்டுப் பிரியாதது
இன்பம் படைப்பது துன்பந் துடைப்பது
முன்னிலைச் சுட்டு முளையா திருப்பது
ஆவது மழிவதும் அற்ற மெய்ப்பொருள்
தேவரும் முனிவருந் தேடியுங் காண்கிலர்
அப்படி யுள்ளது அடியேன் மனத்திலும்
செப்படி வித்தை செய்து நிற்குமே

---

## சிவதொண்டன் வாழ்த்து

*வெண்பா*

சிவதொண்ட னென்னுந் திருநாமம் பூண்டே
சிவதொண்ட நுங்கடிரு முன்றிற் – சிவதொண்டு
செய்ய வருஞ்சிறுவன் சிந்தை களிகூரச்
செய்தல் கடமை தெரி

*நேரிசை யாசிரியப்பா*

சிவனடி யாரைச் சிவனென வணங்கும்
சிவதொண்ட னென்னுஞ் செல்வச் சிறுவன்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
எவரும் மகிழ இந்நிலம் போந்தான்
இவனோ
சிறுபிள்ளை யாயினுஞ் செய்தவப் பயனால்
அறிவு மிகுந்த ஆண்டகை யாவான்
தினைத்துணை நன்றி செய்யினு மதனைப்
பனைத்துணை யாக்கொள்ளும் பயனைத் தெரிபவன்
அனைத்துஞ் சிவன்செய லாமென அறிபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினத்தைச் செற்ற திருவினை யுடையான்
சத்தியம் பொறுமை சாந்தம் நிறைந்தவன்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணன்
அத்துவா மார்க்கம் ஆறையு மகற்றித்
தத்துவா தீதத் தன்மையை யுணர்ந்தோன்
வறுமையைிற் கலங்கான் செல்வத்தின் மகிழான்
பொறுமை மிக்குடைப் புண்ணிய புருடன்
தருமநன் னெறியிற் சற்றும் வழுவான்
கருமத்திற் கையுங் கடவுளிற் கருத்துமா
யிருநிலம் மதிக்க வாழு மியல்பினன்
குருபரன் கூறிய நெறியே செல்பவன்
திங்க டோறும் திருவக லாத
உங்கள் மனைக்கே யுவப்புடன் போந்து
நற்சிந் தனையும் நல்ல சமயமும்
அற்புத மான போற்றித்திரு வகவலும்
விற்பன மாக விளங்கு யோகமும்
சொற்பொருட் சுவைசேர் சூடாலை சரிதமும்
இன்னும் பற்பல வினியகட் டுரைகளும்
கொண்டுடன் மகிழ்ந்து கும்பிடு மிவனை
வாரி யெடுமின் மடிமீது வைம்மின்
சீரிய வாயாற் செந்தமிழ் பாடுமின்
பாலுந் தேனும் பாகும் பருப்பும்
நாலுங் கலந்து நன்றா யூட்டுமின்
பட்டாடை சுற்றுமின் பலபணி புனைமின்
மட்டார் நறுமலர் மாலை சூட்டுமின்
எட்டாப் பேரின்ப மெய்தி
இட்டார் பெரியோர் எனவாழ் வீரே

### *கட்டளைக் கலித்துறை*

பாவலர் நாவலர் உள்ளங் களிக்கப் பவவருடம்[1]
தேவரு மெச்சச் சிவனருள் மார்கழி சேர்ந்துதித்தான்
சீவன் சிவனென் றறிந்துதொண்டாற்றச் சிவதொண்டனும்
காவல் நமக்கிவன் கட்டுரை யல்லாற் கதியிலையே

---

[1] 1935 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன் வாழ்த்து

*வெண்பா*

செல்வச் சிவதொண்டன் சீரடி யார்தங்கள்
நல்லமனக் கோயில்கொள் நாளிதுவால் – எல்லவரும்
தீரத்தங்க ளாடித் திரிகரணம் தூய்மைசெய்மின்
பார்த்தவிட மெங்கும் பரம்

*அகவல்*

ஓமெனுந் தாரகம் ஒண்முடி சுமந்து
நாமெலாஞ் சிவனடி யாரென நவின்று
ஆரறி வாரென வாசான் தந்த
சீரிய மந்திரஞ் சிந்தையிற் செபித்துச்
சிவநெறி வழுவாச் சிவதொண்ட னென்பவன்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
எவரு முவப்ப யாழ்ப்பா ணத்தில்
வண்ணை மாநகர் வைத்திய நாதன்
தண்ணரு ளாலே தானவ தரித்தான்
இன்னவன்
வயதிற் சிறியன் மதியிற் பெரியன்
நியதி மார்க்க நிலையைக் கடவான்
சாந்தம் பொறுமை தயவுதன் னடக்கம்
வாய்ந்தவ னன்ப ரிதயமா மலரில்
ஏய்ந்தவன் போடு மினிது வளர்ந்தவன்
ஐந்தா மாண்டகன் றாறாம் பருவம்
சுந்தர நடையுடன் துலங்கு முங்கள்
மங்களம் பொலியும் மாளிகை தனக்குத்
திங்கள் தோறுஞ் சிறப்புடன் வருவான்
அங்கவன் றன்னை யார்வமோ டணைத்துத்
துங்கநீ றணிந்து சொர்ணத்தா லாய
பூம்பட் டாடை பொலிவுறப் புனைந்துடுத்து
ஆம்பொருள் வழங்கி யகமகிழ் வித்து
நாம் சிவமென்று
நாத கீத வாத்தியம் முழங்கக்
காத லாற்கசிந் தாடல்நங் கடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலிவிருத்தம்*

தார கத்தனி மந்திர மோதியே
பார கத்திற் பணிசெய் சிவதொண்டன்
ஏர கத்தடி யாரக மேகுவான்
நீர கத்துட னேர்பெறு திங்களில்.

---

## சிவதொண்டன் சீர்

*வெண்பா*

நாற்றிசை யுஞ்சென்று நல்ல சிவதொண்டன்
ஏற்றிவரு மீச னிணையடியைப் – போற்றிச்
சிவனடியார் நாமென்று திங்கடொறுஞ் சொல்லு
மவனை மறவா தகம் 1

அகந்தூய்மை வேண்டுமுய ரைந்தெழுத்தை நெஞ்சி
லுகந்துரைக்க வேண்டுமொழி யாமற் – சகந்தனிலே
வேள்வியும் வேண்டுமோ வேறாய்க் கடவுளுண்டோ
தாழ்வுண்டோ தொண்டர் தமக்கு 2

தானான சற்குருவைத் தான்போற் றிடுஞ்செல்வக்
கோனாஞ் சிவதொண்டன் கொண்டுவருந் – தேனார்ந்த
கட்டுரையைக் கண்டு களிக்குஞ் சிவனடியார்
நட்பே நலனளிக்கும் நாடு 3

நாடுவார் நாட்டிலே நல்ல மழைபெய்யுந்
தேடுவார் சிந்தையிலே தித்திக்கும் – பாடுவார்
பாவமெல்லாம் போக்கும் பரஞான மாக்குமே
சீவன்சிவ மென்று தெளி 4

தெளியவழி காட்டுஞ் சிவதொண்ட னன்பாற்
பொழியுங் கவிமாரி போதம் – வெளியாக்கி
வேதாந்தஞ் சித்தாந்தம் வேறல்ல வென்றுலகில்
நாதாந்தங் காட்டும் நமக்கு 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன் சீர் தெரிமின்

*நிலைமண்டிலவாசிரியப்பா*

அன்பே சிவமெனு மான்றோர் வாக்கை
யென்பே யுருக வெடுத்தெடுத் தோதும்
சிவதொண்ட னென்னுஞ் சின்னக் குழந்தை
சிவபெரு மான்றன் திருவரு ளாலே
எவரு முவப்ப யாழ்ப்பா ணத்திற்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
அவதரித் தானவன் றனையனை வோருங்
கவனமாய்க் கண்ணை இமைகாப் பதுபோல்
வளர்த்து வந்தார் வருடமா றளவுந்
தளர்ச்சி யென்பது தானறி யாதே
பலன்கரு தாது பணியாற் றுதலே
நலந்தரு கரும யோகமென் றடியார்
அறிந்தே யாற்றின ராத லாலே
அடியே னவர்தம் அழகிய பொன்னடி
முடிமிசைச் சூடினன் முழுது முண்மையே.

---

# சிவதொண்டனைத் தொழுமின்

*வெண்பா*

பவவருடம் மார்கழியிற் பார்தனிலே யெங்கள்
சிவனருளால் வந்தசிவ தொண்டன் – இவனையுடன்
ஏந்தி யெடுத்தணைத்தா ரின்போ டடியார்கள்
சாந்திழும் சாந்திதத் சத் 1

கண்ணையிமை காப்பதுபோற் காத்த வடியவர்க்கு
வண்ணைவா ழீசன் வரந்தருவான் – திண்ணமிது
சேருங்க ளொன்றாய்ச் சிவசிவா வென்றுகளி
கூருங்க ளெல்லாங் கொடுத்து 2

கொடுத்தார்க்கு முண்டோ குறைதா னவரை
யடுத்தார்க்கு முண்டோ வடுக்கல் – எடுத்தான்
தலைபத்துந் தத்தளிக்கச் செய்த சிவனைத்
தலையால் வணங்குந் தமர்க்கு 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு வருடமவ னன்புடனே செய்ததொண்டு
கூறுந் தரமோ குவலயத்திற் - றேறீர்
எழுமின் விழிமினெல்லா மீசன் செயலாய்த்
தொழுமி னதுவே சுகம் 4

---

# சிவதொண்டர்க்கு விடுத்த வேண்டுகோள்

*அகவல்*

இளம்பிறை சூடிய எந்தை பெருமான்
வரம்பெறுந் திருவடி வாழ்த்தி வணங்கி
அன்னை தந்தை யாசா னடியார்
என்னு மிவர்களை யிணையடி பணிந்தே
ஒருபொல் லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் திருவடி கும்பிட்டுக் கொண்டிங்
கறஞ்செய விரும்பென ஔவைப் பிராட்டி
சிறந்த மொழியை நினைந்து சிந்தையிற்
சிவதொண்டன் பணிக்குத் துணைசெயுந் தொண்டர்
எவர்க்கும் யாமீண் டியம்புதுங் கேண்மோ!
அடியார் பலரிவ் வாண்டே மளவும்
மிடியறக் காசு மிகவு மனுப்பினர்
அந்தநா ளடியார் தொகையோ குறைவாய்
வந்ததா லடியோம் வாளா விருந்தனம்
இனிமே லெவரும்
வருடந் தொறுமூன்று ரூபா வழங்கிற்
கருமங் கடைப்பிடித் தாற்றுதுங் காண்க

*வெண்பா*

போது மளவும் பொருளீந்த மெய்யடியீர்
ஏதுங் குறைவே யிலைநீங்கள் - ஓதுமென்
சிந்தைகளி கூரச் சிவதொண்டு செய்வதற்குத்
தந்திடுவீர் மூன்றுரூபா தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைமின் மாந்தர்காள்

நினைமின் மாந்தர்காள் நினைமின் மாந்தர்காள்
நீடூழி சிவதொண்டன் வாழ்க (நினைமின்) 1

அனைவரு மொன்றாய்க் கூடி யவனை
ஆதரித் தன்பு பாராட்டிப்
புனைந்து பூமாலை சூட்டிப் புகழ்ந்து (நினைமின்) 2

தினைத்துணைப் போதும் மறவாது சிந்தித்துத்
தேவாரம் திருவாசக மோதி (நினைமின்) 3

முனைத்து வரும்பெருங் கூற்றை யுதைத்த
முதல்வனைத் திங்கள் தோறும் நும்மனம் (நினைமின்) 4

அணைந்து வந்து ஆசான் செப்பிய
அரிய வாசகந் தருஞ்சிவ தொண்டனை (நினைமின்) 5

கனைக்குங் கடல்சூழ் இலங்கைத் தீவில்
கதிரொளி போலொளி பரப்புந் தொண்டனை (நினைமின்) 6

வினைப்பகை வெல்ல விருது கட்டிய
வேத மோதும் வித்தகத் தொண்டனை (நினைமின்) 7

சுனைக்கும் நல்லூர் தூயசற் குருவின்
துணையடிமற வாத தொண்டனை (நினைமின்) 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க சிவனடி

வாழ்க சிவனடி வாழ்க சிவனடி
வாழ்க சிவதொண்டன் 1

பல்வினை போக்கி நல்லருள் ஆக்கிப்
பல்குக சிவதொண்டன் 2

பாழ்செயும் மாயா காரியம் அகலப்
பணிசெய் சிவதொண்டன் 3

பக்தர்கள் எல்லாம் பாட ஆடப்
பரவுஞ் சிவதொண்டன் 4

ஊழ்வினை போக உள்ளொளி ஓங்க
உயர்க சிவதொண்டன் 5

உண்மை முழுவதும் என்றுரை செய்யும்
ஒருவன் கழல்வாழ்க 6

---

## உறுதி மொழியிதனை அறிவீரே

சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்
மவுனமாய் இருந்திளைப் பாறீர்
மந்திர மிதுவெனக் குறியீர் 1

அவனிவ னாரென அறியீரோ
ஆன்மா நித்தியம் தெரியீரோ
உவமை கடந்தவின்பம் உள்ளீரோ
உண்மை முழுதுமெனக் கொள்ளீரோ 2

ஐம்பொறி வழியினிற் செல்லாதீர்
ஐம்புலன் தன்னை வெல்வீரே
வெம்பகை தன்னை விடுவீரே
வேதாந்த சித்தாந்தந் தொடுவீரே 3

ஒருபொல்லாப்பு மில்லை யுணர்வீரே
ஓம்சிவாய நமவெனத் தொழுவீரே
உருகியுருகி இன்பம் பெறுவீரே
உறுதி மொழியிதனை அறிவீரே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் வீதியில்

இராகம் – பிலகரி

தாளம் – ரூபகம்

**பல்லவி**

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

**அநுபல்லவி**

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

**சரணங்கள்**

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே (எந்நாளும்) 1

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே (எந்நாளும்) 2

---

# பரவ வரமருள்

மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ருருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்து போவோம்

இராகம் – பைரவி தாளம் – ரூபகம்

**பல்லவி**

நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

**அநுபல்லவி**

அல்லற்றுயர் தருமூழ் மெல்ல
அகன்று போம் நீ வா (நல்லை)

கல்லொத்திடு மனங்கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா (நல்லை)

நில்லன் பொடுநினைந்து நினைந்து
நீநான் அறநின்று மகிழ்ந்து (நல்லை)

**சரணம்**

செல்லப் பனைத்தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக் குற்றவன்
தில்லையம் பலம்சே விக்கும்பொற் பாதன்
தித்தித் தகுதகு கிடதோம்
தளங்கு தரிகிட கிடதோம்
தித்தித்தா திமிதிமி யென
நிர்த்தஞ் செய் மயி லேறிய
சத்திதான் தரு மைந்தன் வாழ் (நல்லை)

---

# வேறு

அன்பே சிவமென வறிவா ரவல மவனியி லடையார்
தன்போ லெவரையும் நினைவார் சாந்தம் பொறுமை யுடையார்
துன்பே கவலை பிணிகள் தொடரா திவர்களை நாளும்
பொன்போ லிலங்கையில் யோகன் பொற்பத மென்றுந் துணையே



oundation.
am.org

# வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம் - கரஹரப்பிரியா தாளம் - ரூபகம்

**பல்லவி**

வீர மாமயில் ஏறும் வேலவ - விளங்குங்
கௌரி பாலகா வா

**அநுபல்லவி**

கானக் குறத்தி மகிழும் பாதா
காக்கும் கடவுள் துதிக்கும் நாதா (வீர)

**சரணம்**

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா (வீர)

---

# எனக் கின்பமே வா

இராகம் - தோடி தாளம் - திஸ்ரம்

**பல்லவி**

எனக்கின்பமே - வா

**அநுபல்லவி**

ஏரகம் பழனிப்பதி இலங்குங் கந்தசுவாமி நாதா (எனக்கின்பமே)

**சரணம்**

இரவும் பகலும் ஏத்தித் தொழும்
ஏழை யடியார்க் கிரங்கு வாய்நீ
எழிலார் நல்லூர் வாழும் வாசனே
ஏத்தும் யோக சுவாமி நேசனே (எனக்கின்பமே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே
இரவுபகல் காணேனெடி 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி – கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி – கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி 6

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி – கிளியே!
சீரார்நல்லூ ராசானெடி 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி – கிளியே!
விளங்குநல்லூர் வாசனெடி 8

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி – கிளியே!
கலங்காத வீரனெடி 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி – கிளியே!
பொல்லாங்கு தீருமெடி 10

---

## வருக முருக

இராகம் – கீர்வாணி    தாளம் – திஸ்ரம்

**பல்லவி**

வருக முருக பரம குருவே
வரதா குகனே

**அநுபல்லவி**

அரி மருகா தருணமிதே
தாரும் உமது சரணபாதம் (வருக)

**சரணம்**

பரவுவார்க் கருளுவாய் நீ
பரமசுகந் தரு பானு
சசியோகவதி தரு புதல்விதனை
மணந்த குமாரசுவாமி
மனமுவந்து மயிலேறிவா
சிவ யோகசுவாமி நீடு வாழ்க! வாழ்க! வையம் வாழ்க (வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் வாசனே

இராகம் – பியாகடை தாளம் – ஆதி

**பல்லவி**

நல்லூர் வாசனே நம வேலவா
நாராயணன் மருகா வரஸ்ரீ முருகா

**அநுபல்லவி**

வேதோப தேசநீ விபுவேதிய
வித்தியாதர விமலா கந்தாகுமர (நல்லூர்)

**சரணம்**

சித்திர மயிலேறு சந்த்ரா சத்தி தருமன்
தந்த்ரா முலே நோகல காரெனு
அந்தமில்லா ஸ்வர ஞானமு நீதரு
யோகசுவாமி வந்தனாசுலோக முவந்தருள் (நல்லூர்)

---

## வறுமைப் பிணிக்கு மருந்து

இராகம் – சங்கராபரணம் தாளம் – ரூபகம்

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே 1

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார் 2

வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடித்
துதிப்பதைப் பார்த்திடுவோம் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகன்

இராகம் - தோடி　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் - ஆதி

**பல்லவி**

நல்லையில்வாசா-ஞானப்பிரகாசா

**அநுபல்லவி**

நல்லதெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் பணி ஞானபண்டி தாபரா　　　　　　　　(நல்லை)

**சரணம்**

நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேனுந்து வேங்கையாய்த் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா　　　　　　　　(நல்லை)

---

# வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வம்

இராகம் - எதுகுலகாம்போதி　　　　　　　　　　　　　　　　தாளம் - மிசிரம்

**பல்லவி**

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே
என் வினைப்பகைதீர் தெய்வமே

**அநுபல்லவி**

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன்　　　　　　　　(வேலை)

**சரணம்**

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா　　　　　　　　(வேலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலனைக் கொண்டாடுவோம்

இராகம் – கானடா                    தாளம் – ஏகம்

**பல்லவி**

வேலனைக் கொண்டாடுவோம்
வேறு தெய்வம் நாடிடோம்

**அநுபல்லவி**

காலனைக் காலா லுதைத்தோன்
பாலனுக்கே நாமடியோம் (வேலனை)

**சரணங்கள்**

கோலா கல மயிலின் ஏறும்
குழந்தை வேலன் பாலர் நாங்களே (வேலனை)

ஞாலமுள்ள நாளும் யோகநாதன் சொன்ன
சொல்லைக் கொண்டு

காலையிலும் மாலையிலும் கழலடியே போற்றிடுவோம்
(வேலனை)

---

# நல்லூரன் கிருபை வேண்டும்

**I**

நல்லூரான் கிருபை வேண்டும் – வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யானென நம்பிட வேண்டும் (நல்லூரான்)

எல்லா ரிடத்தும்அவன் இருப்பதைக் காணவேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும் (நல்லூரான்)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும் (நல்லூரான்)

உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓம்சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும் (நல்லூரான்)

பல்லோர்புகழ் நல்லூர்ச் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய்க் கும்பிட்டுப் பாடிட வேண்டும் (நல்லூரான்)

சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும் (நல்லூரான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

இராகம் – சுருட்டி　　　　　　　　　　　　தாளம் – ஆதி

**பல்லவி**

நல்லூரான் கிருபை வேண்டும் – நாம் எந்நாளும்
பாடவேண்டும் – வேறென்ன வேண்டும்

**அநுபல்லவி**

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
தூய குருவின்பாதம் துணையாகக் கொள்ளவேண்டும் (நல்லூ)

**சரணங்கள்**

அல்லும் பகலுஞ்சிவ நாமத்தைச் சொல்லவேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்லவேண்டும்
கண்டு கண்டுமனங் குளிர்ந்திட வேண்டும்
காமக் குரோத மோகத்தைத் தீர்க்கவேண்டும் (நல்லூ) 1

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிட்டையும் வேண்டும்
எல்லா ரிடத்துமன்பு செலுத்தவேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும் (நல்லூ) 2

---

## சரவணபவ குக

**பல்லவி**

யோககுருநாதன் திருமலர்ப் பாதன்
தெரிசனம் நினைமனமே தினமே

**அநுபல்லவி**

தவநிலை யோர்கள் பணியும் பொற்பாதன்
சரவண பவகுக சண்முக நாதன் (யோக)

**சரணம்**

அன்பர்க ளிடர்தம்மை அகற்றுஞ் சுசீலன்
அம்மை வள்ளிதெய் வானைமகிழ் லோலன்
என்பிழை யாவும் பொறுத்தருள் சீலன்
இன்பமெந் நாளுந்தரு சுந்தரப் பாலன் (யோக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவற் கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர்

*வெண்பா*

பாவம்போம் பொல்லாப் பழிபோகும் பாருலகிற்
சேவற் கொடியோன் றிருவடியைச் – சாமளவுஞ்
சிந்திப்பீர் செல்வஞ் செறியிலங்கை நன்னாட்டீர்
வந்திப்பீ ரென்றும் மகிழ்ந்து 1

காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமந் தருந்திவ்ய பாதத்தை – ஆமளவும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டீர்
மாற்றிப் பிறக்க மருந்து 2

புன்னுனிமேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை
என்னினிநீர் எண்ணி வருந்துவீர் – மண்ணுலகில்
ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்
கூறு மதுவே குணம் 3

இளமை நிலையா தெனவறிந்து வேலன்
பழமை தருமடியைப் பற்றும் – எழுமையும்
இன்பந் தருமே யிலங்கைமா நன்னாட்டீர்
அன்பிற் பணிவீ ரறிந்து 4

அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருத்தாள் – நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா லிலங்கையீர்
வெற்றிதரு மென்றும் விளைவு 5

விளையுமிச்சை யெல்லாம் வெறுத்தேயெஞ் ஞான்றும்
இளையோன் றிருப்பாத மேத்த – மழைபோற்
கருணை வருமே கருதிலங்கை நாட்டீர்
தருண மிதுகண்டீர் தான் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரைக் கும்பிடு

இராகம் – ஜோகினி தாளம் – ஆதி

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு-அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

**அநுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்தநாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு (நல்லூ)

**சரணம்**

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும்–குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும்–செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்டஇடம் கலங்கிநீ திரியாதே (நல்லூ)

# முருகா நீ வா

முருகா நீவா-முத்திக்கும் பத்திக்கும் சித்திக்கும் முழு வல்லவனே
உருகா மனமேன் தந்தாய்-திருமால்மருகா
உவந்துவந்து சிவந்ததாளிணை
உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)

அறுமா முகனே யரனார் மகனே
குறுமாமுனிக்குப தேசஞ்சொன்ன
குருவே வருவாய் விரைவா யருள்வாய் (முருகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை வேலன்

**பல்லவி**

குழந்தைவேலா குமரகுருபர அரகர சிவசிவ

**சரணங்கள்**

குன்றுங் குன்றுஞ்சென் றெங்கும் அடிபட நடமிடு
(குழந்தை)

தொழுந் தெய்வமும்நீ சுற்றம்நீ துணைநீ
துன்பஇன்பமும்நீ (குழந்தை)

கொன்றுங் கொன்றுங் கொன்றும் விதிமுறை
நின்றும் நின்றும் நின்றும் வெருவுறச்
சென்றுஞ் சென்றுந் திசைதிசை வலம்வரு
(குழந்தை)

எழுந்து என்னிடம் விரைந்துவந்து இடர்களைந்து
காத்திடவருவாய் (குழந்தை)

கண்டுங் கண்டுங் கண்டுங் கனமுறை
வென்றும் வென்றும் வென்றும் விபுதர்கள்
பொன்றும் பொன்றும் படிவலமிடம் நடமிடு
(குழந்தை)

அளந்து யாவரும் அறிந்திட அரியநின்
செழுந் திருப்பத மலரடி தந்திடு (குழந்தை)

அஞ்சும் அஞ்சும் அஞ்சும்படி
நெஞ்சும் நெஞ்சும் கெஞ்சக் கிரிபடத்
துஞ்சும் துஞ்சும் அசுரர்கள் துகள்படத்
தஞ்சம் தஞ்சம் எனநடமிடு (குழந்தை)

பழந்தமிழர்கள் பரிந்து செந்தமிழ்
அறைந்துசிந்தை நொந்து உருகவந்திடு (குழந்தை)

வளைந்த சூரர்கள் தளங்கெடக்கிரி உடைந்து போகவே
சிவந்தவேல்விடு (குழந்தை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குஞ் சங்குமுழங்கச் சிந்துகலங்கப் பூதர்நடுங்கத்
தேவர்கள் பரிவோடு அரகரசிவசிவ எனும்கடல்
ஒலிபோல் நீலக்கோல மாமயில் மீது
நிறுநிறு எனநெஞ்சம் அஞ்ச வஞ்சகர்கெஞ்ச
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் எனவரு (குழந்தை)

---

## முத்தனென வாழ முயல்

*நேரிசை வெண்பா (அந்தாதித் தொடை)*

உருக்கு மொழியால் உளங்கொள்ளை கொண்டு
கருக்குழியிற் சேராமற் காத்தான்–திருக்குழாம்
காலையும் மாலையுங் கைதொழுது போற்றுநல்ல
வேலோன் பதியில் விரைந்து 1

விரைமலரைத் தூவியே மெய்விதிர்த்துத் தொண்டர்
நிரையாய் நினைப்பறவே நின்று–கரையில்லா
ஆனந்தங் கொண்டே அவனேநான் என்றுநிதம்
ஞானத்தாற் சொன்னார் நயந்து 2

நயப்பார் மிகவியப்பார் நாமறியோம் என்றே
பயப்பா டுடன்பாதம் வீழ்ந்து–சுயபுத்தி
அற்றவராய்ச் சோர்வுமிக அப்பனே யென்றழுவார்
மற்றொன் றறியார் மனத்து 3

மனத்துயரம் மாற்ற மருந்துண்டோ விங்கு
முனைத்துவருஞ் சூரர் முடியத்–தனித்தவேல்
உண்டே துணையென்றோர்ந் தும்பர்சிறை மீட்டவனைக்
கண்டே களிக்கக் கருது 4

கருத்தி லிருக்குங் கதிர்காமத் தோனை
வருத்தமுற் றேன்தேடு கின்றாய்–திருத்தியுன்
சித்தமிசை நித்தம் திகழொளியைக் கண்டுருகி
முத்தனென வாழ முயல் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மலர்

*நேரிசை வெண்பா (அந்தாதித் தொடை)*

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால்-நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி 1

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர்-ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது 2

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றாள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப்-பெருத்த
மயிலில்வரும் வேலா விமலா வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம் 3

பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை-சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமு மடங்குமே தேர் 4

தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை-நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம் 5

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவி! பணிவோர்-நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தெரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார் 6

பாராயோ வென்னைநீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா-வாராயோ
மாமயி லேறி மகிழ்ந்து வரந்தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும
மறக்குறத்தி வள்ளி மணாள–நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர்வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ 8

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும்–நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று 9

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் னகவிருளைத் தீர்ப்பதற்குக்–குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான் 10

---

# நல்ல மருந்து

இராகம் – மோகனம் தாளம் – ரூபகம்

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே (நல்ல)

எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து (நல்ல)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்துங் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து (நல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழமை வணக்கம்

தாயினு மன்பு தழைத்த குருவே தயாபரனே
தீயினு மிக்க திருமேனி யும்நின் திருவடியும்
நாயினு மிக்க கடையேனை ஆள நலமுடனே
ஞாயிறு தோறும் வருவாய்நல் லூரில்வாழ் நாயகமே. 1

அங்கையிற் போதுகொண் டெப்போதும் போற்றும் அடியவர்கள்
தங்குறை தீர்க்கும் தயாநிதி யேசத்தி வேல்முருகா
பங்கய னைக்குட்டி முன்சிறை வைத்திட்ட பாலகனே
திங்கட் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் தேசிகனே. 2

ஒவ்வா தனசொல்லி ஊரூர்கள் தோறும் உலைந்தலையும்
இவ்வீணற் காக்க இனிவரு வாயிள வேல்முருகா
தெய்வானை வள்ளி தினமும் அணிசெய்யுஞ் சேவகனே
செவ்வாய்க் கிழமை வருவாய்நல் லூரினிற் றேசிகனே. 3

பதமலர் போற்று மடியவர் தம்மைப் பரிவுடனே
இதமுடன் காக்குங் குருமணி யேயெழில் சேர்முருகா
சதமுனை யன்றி ஒருவரு மில்லையித் தாரணியிற்
புதனெனும் வாரம் வருவாய்நல் லூரில்வாழ் புண்ணியனே. 4

தயாநிதி யேயென்று தாள்போற்றும் அன்பர் தமக்குவரும்
வியாதி வறுமை விலக்கு மருந்தே விழுப்பொருளே
தியான நிலையி லுனைக்கண்டு தேறித் தெளிவதற்கு
வியாழக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் வேலவனே. 5

புள்ளிக் கலாப மயிலேறும் வேலவ புண்ணியனே
தெள்ளித் தெளிந்தவர் சித்தத்தி லூறும் தெளியமுதே
வள்ளிக் குகந்தவ னேமுரு காமற வாமலெனை
வெள்ளிக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் வேலவனே. 6

இனியே தெனக்குன் னருள்வரு மோவென வேங்கிமனம்
தனியே யிருந்து வருந்து தையோசத்தி வேல்முருகா
கனியே கனியி ரசமே அடியனேன் கண்களிக்கச்
சனிவாரம் தன்னில் வருவாய்நல் லூரில்வாழ்சண்முகனே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிக்கண்ணி

ஆன்மா ஒருபோதும் – கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி – கிளியே
விளங்குநல்லூர் தெரியுதடி 1

காண்பானும் காட்சியும்போய்க் – கிளியே
கண்டபல பொருளும்விட்டு
மாண்பாகச் சிந்தையிலே – கிளியே
வடிவேலைப் போற்றிடடி 2

ஊண்பொருளும் ஒழியுமடி – கிளியே
உலகமெலாம் அழியுமடி
சேண்பொலியுந் திருவடியைக் – கிளியே
சிந்தையிலே போற்றிடடி 3

சங்கோசை கேட்குதடி – கிளியே
தாளமேள முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி – கிளியே
ஏந்திழாய் நடந்துவாடி 4

சண்பக மரத்தடியிற் – கிளியே
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே – கிளியே
மனிதரெல்லாங் கூடிக்கொண்டார் 5

மாறிப் பொறிவழிபோய்க் – கிளியே
மாறாட்டம் கொள்ளாதே
ஆறி நடந்துவாடி – கிளியே
அதிசயங்கள் மெத்தவடி 6

தேர்முட்டிப் படிமேலே – கிளியே
செல்லப்ப னென்றசீமான்
ஆர்வமுடன் இருக்கிறாண்டி – கிளியே
அங்குபோவோம் வந்திடடி 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்ட நெருங்கையிலே – கிளியே
கிடுகிடென்று நடுங்குதடி
முட்டாளைப் போலேயவன் – கிளியே
முகமும் விளங்குதடி 8

பித்தனெனப் பலபேரும் – கிளியே
பேசிப்பேசி இகழ்வார்கள்
எத்தினாலும் அவன்மனமோ – கிளியே
எள்ளளவுங் கலங்காதே 9

பத்தியுடன் வந்திடடி – கிளியே
பார்த்தவுடன் அஞ்சாதே
வித்தகஞ்சேர் திருவடியில் – கிளியே
விழுந்துநீ கும்பிடடி 10

நாமறியோ மென்றுசொல்லிக் – கிளியே
நகைசெய்வான் நாணாதே
தாமதம் பண்ணாதே – கிளியே
சடுதியாய்க் கும்பிடடி 11

கோணாத சிந்தையுடன் – கிளியே
கும்பிட்டு நின்றிடடி
வீணான ஆசையெல்லாம் – கிளியே
விட்டோடும் வெற்றியடி 12

ஆரறிவா ரென்றுசொல்லிக் – கிளியே
அதட்டுவான் அஞ்சாதே
பாரறிந்த பித்தனடி – கிளியே
பட்சமுடன் பணிந்துநட 13

கண்டார் நகைப்பரெனக் – கிளியே
கண்மணிநீ அஞ்சாதே
பண்டார வேடமடி – கிளியே
பாடிப் பணிந்திடடி 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டொடியே வந்திடடி – கிளியே
உள்வீதிக்கும் போவமடி
வண்டி வண்டி யாயிளநீர் – கிளியே
வந்து குவியுதடி 15

வகைவகையாய்ப் பச்சரிசி – கிளியே
வாழைக்குலை தேங்காய்கள்
உவகையுடன் கொண்டுவந்து – கிளியே
உதவுகிறார் பார்த்திடடி 16

கர்ப்பூரப் பெட்டிகளும் – கிளியே
கட்டுக்கட்டாய்க் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும் – கிளியே
பொலியுதடி வீதியெல்லாம் 17

கண்டாயோ கார்மயிலே – கிளியே
கந்தன்விளை யாட்டுக்களை
மண்டலங்கள் நடுங்குமடி – கிளியே
மணியோசை கேட்குதடி 18

பந்திபந்தி யாயிருந்து – கிளியே
பார்ப்பார்க ளெல்லாரும்
விந்தைசேர் மந்திரத்தைக் – கிளியே
விளம்புகின்றார் கேட்டிடடி 19

பச்சைப் பசுங்கிளியே – கிளியே
பார்த்தாயோ கத்வுகளை
அச்சமின்றி மூடிவிட்டார் – கிளியே
அபிடேகம் ஆகுதடி 20

ஏக மனதாகிக் – கிளியே
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக் – கிளியே
வேதியர்கள் திறந்துவிட்டார் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சடுக்குத் தீபமுதல் – கிளியே
அடுக்கடுக்காய்த் தீபமெல்லாம்
அந்தணர்கள் காட்டுகிறார் – கிளியே
அன்புடனே கும்பிடடி 22

அங்கையிலே பூவெடுத்துக் – கிளியே
அந்தணர்கள் ஆசீர்வாதம்
சங்கையின்றிச் சொல்லுகிறார் – கிளியே
சண்முகனை வேண்டிடடி 23

திருநீறுஞ் சந்தனமும் – கிளியே
தீர்த்தம்பரி மாறுகிறார்
செங்கமல மடமாதே – கிளியே
சேவித்துநீ வேண்டியணி 24

அத்தசாமப் பூசைக்குநாம் – கிளியே
ஆரணங்கே நிற்பமென்றால்
மெத்தநேர மாகுமடி – கிளியே
வீட்டிலேயா ளில்லையடி 25

விரைவாய் நடந்துவாடி – கிளியே
வீணர்தங் கூட்டமடி
மாரிக்கால மானதனால் – கிளியே
மாகவன மாய்நடடி 26

ஓடாதே வழுக்குமடி – கிளியே
உரைத்திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டுவாசல் – கிளியே
வந்தோமே திறந்திடடி 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆன்மா நித்தியம்

இராகம் – நடபைரவி தாளம் – ஆதி

**பல்லவி**

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய

**அநுபல்லவி**

இந்த ஆன்மா நித்திய மென்ற (அந்த)

**சரணங்கள்**

மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன (அந்த)

தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன (அந்த)

கௌரிம னோகரி ஆனந் தாச்சி
கமல ஆச்சிசெல் லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடு முத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே (அந்த)

---

# குரு மருந்து

அரும ருந்தொரு குரும ருந்து
அடியார் கண்டு களிக்கும் மருந்து (அரு)

இருவி னையைப் போக்கும் மருந்து
இன்ப நிலையில் நிறுத்தும் மருந்து (அரு)

ஒருபொல் லாப்புமில்லை என்ற மருந்து
இம்மைம றுமைக்கும் ஏற்ற மருந்து (அரு)

திருவார் நல்லூரில் வாழும் மருந்து
தேவாதி தேவருங் காணா மருந்து (அரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமின் தெளிமின்

உவமா னங்கடந்த கடவுள் – கேண்மின்
உள்ளத் திருக்க ஊரெல்லாம் ஓடி 1

அவமானப் படுவதில் கண்ட – லாபம்
அகிலத்தி லுண்டோ அறிமின் தெளிமின் 2

தவஞ்செய்து தன்னைத்தன் னாலே – கேளும்
தானா யறியும் சலாக்கியம் உண்டே 3

அவனிவ னென்றதை நீக்கி – யாவும்
அவனா யிருப்பதைத் தேக்கி 4

சிவனடி யாருடன் கூடி – உங்கள்
சித்தந் தெளிந்திட நாடி 5

சிவசிவ என்றுதினம் பாடி – உங்கள்
சித்தந் தெளிந்திடத் தேடி 6

கவனமாய்க் கருமத்தை ஆற்றி – கேளும்
காலையும் மாலையும் போற்றி 7

நவநவ மாய்வருஞ் சேதி – நாங்காண
நல்லூர்க்குப் போவோம்போம் வியாதி 8

---

# ஈசனே நல்லூர் வாசனே

இராகம் – கமாஸ் தாளம் – ஆதி

**பல்லவி**

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா

**சரணங்கள்**

பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும்வண்ணம் வாவா (ஈசனே)

தாசனான யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா (ஈசனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்மீதி லென்ன பயம்

தையலார் மையலிற் றான்மயங்கும் மாந்தர்காள்
வையமெல்லா மாள மருந்துண்டே – ஐயன்றாள்
காலையொடு மாலை கடல்சூ ழிலங்கையீர்
சாலவே போற்றுவீர் தான் 1

செல்வச் செருக்கினாற் றீவினையை யாற்றுவீர்
அல்லற் கடற்குள்ளே ஆழ்ந்திடுவீர் – வல்லபரன்
தந்தமுரு கன்றாளைப் பற்றீ ரிலங்கையீர்
அந்தமிலா வானந்த மாம் 2

நில்லாத செல்வத்தை நேராகப் பெற்றக்கால்
இல்லாத வர்க்கீந்தே யீசன்றாள் – நல்லாய்த்
தொழுவார்க்குண் டோகுறைதான் தொல்லிலங்கை நாட்டீர்
எழுபிறப்பு மேமாப்போம் யாம் 3

பொல்லாப் புழுமலியும் புன்குரம்பை யாமுடலை
நல்லோர் நயப்பரோ நாடோறும் – கொல்லாமற்
கூர்வேலன் பாதங் குறிப்பீ ரிலங்கையீர்
பார்மீதி லென்ன பயம் 4

---

## வேறு

ஒன்பது வாசலா லாயவோர் உறுப்பில்
அன்பு வைத்துநீ அலையாதே வீணில்
அன்பர் பணிசெய் வதுஅற மென்றறி
இன்பவீ டளிக்கும் எல்லாக் கதியும்வரும்
என்பதை மறவாதே இதுவுனக் குறவாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் முருகா மால் மருகா

இராகம் — கமாஸ் | தாளம் — ஆதி

**பல்லவி**

மாமயில் ஏறிவா — வா

**அநுபல்லவி**

வேல் முருகா மால் மருகா (மாமயி)

**சரணங்கள்**

கோமானே குழந்தை வேலா
சீமானே திருவடி தஞ்சம்
காமாந்த காரம் அகலவும்
நாமெந்த நேரமும் புகழவும் (மாமயி)

ஏகாந்த சித்தம் பெறவும்
யோகாந்த மார்க்கம் உறவும்
தேகாந்த காலந் தன்னில்
நீபோந்து காத்திடல் வேண்டும் (மாமயி)

---

# நல்லைப் பதிக்கரசே

நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா 1

கல்லை நிகர்த்தமனங் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா 2

ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள்தாடா 3

மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா 5

எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லா ரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா 6

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா 7

என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா 8

---

## செழுமலர்த் திருவடி

இராகம் – காம்போதி தாளம் – ஆதி

**பல்லவி**

செழுமலர்த் திருவடி தரிசிக்கலாம்
வாராய் தீய மனமே

**அநுபல்லவி**

தொழுமடியார் பழவினைகள் கழுவித்தள்ளி
துரியநிலை அருளவல்ல நல்லை நாதன் (செழுமலர்)

**சரணங்கள்**

முழுது முண்மையென முனிமுன் சொன்னமொழி
மோகந் தீர்க்குமதை முற்றிலும் நம்பி
அடுத்து வந்தவெனை ஆதரித் தாண்டுகொள்
அம்புவி மீது நம்பினேனே (செழுமலர்)

அடியவர் குடியா ஆளும் அரனே
அரகர சிவசிவ சங்கர சம்போ
அழுதுந் தொழுதுமடி பாடி யரற்றி
அதிவேக மாயோடி வாராய் (செழுமலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓலாட்டு

அன்பே யுருவா யமர்ந்த வடியவருக்
கின்பந் தருமுதல்வ! இறைவநீ கண்வளராய் 1

ஆருயிர்கள் தோறும் அதுவதுவாய்த் தோன்றிநிற்கும்
பேருருவே! இன்பப் பெருக்கேநீ கண்வளராய் 2

இல்லையென்று சொல்லுவார் இல்லத்திற் செல்லாமல்
நல்ல வருள்தந்த நல்லூரா! கண்வளராய் 3

இனிய வருள்சொரிந் திடர்நீக்கி யாண்டருளுந்
தனிமுதலே! எங்கள் தயாபரனே! கண்வளராய் 4

ஈன்றாளு மாயெமக் கெந்தையுமாய்க் குருபரனாய்ச்
சான்றார் நெறிகாட்டுந் தற்பரனே! கண்வளராய் 5

உன்னை மறப்பேனோ உயிர்நான் தரிப்பேனோ
என்னை மறப்பாயோ ஈசனே! கண்வளராய் 6

ஊனாய் உயிராய் உளத்திற் சுவையளிக்குந்
தேனாய்த் தெவிட்டாத தெள்ளமுதே! கண்வளராய் 7

எல்லாமா யல்லவுமா யிருக்கும் பராபரனே
நல்லூரில் வாழ்வே நாயகமே கண்வளராய் 8

ஏக னநேக னிறைவனடி வாழ்கவெனும்
ஆகமத்தி னுட்பொருளே ஐயனே கண்வளராய் 9

ஐயமே னென்றுரைத்த வாசான் திருவாக்கை
வையமுய்யத் தந்தருளும் வாழ்வேநீ கண்வளராய் 10

ஒருமொழியா லென்ற னுள்ள முவக்கவைத்த
திருவேயென் செல்வமே தெய்வமே கண்வளராய் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்நமசி வாயவென வுருவேற வேசெபிப்பார்
வீம்பிடம்பம் மேவுவரோ மெய்ப்பொருளே கண்வளராய் 12

ஔவியம் பேசி யழியாமல் வையகத்திற்
றெய்வம்போல் வாழச் செய்வாய்நீ கண்வளராய் 13

---

## வேல் வேல்

அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு – வேல் வேல்
ஆசா னடிக்கீழ் அமர்ந்துநீ நில்லு
கொஞ்சங்கொஞ்ச மாய்மனதை வெல்லு – வேல் வேல்
கூடாத கூட்டத்தை விட்டுநீ செல்லு 1

வஞ்சியர் ஆசையைத் தள்ளு – வேல் வேல்
வாணாள் ஆசையைப் பேணாமல் கொள்ளு
சஞ்சலம் வந்தால் வரட்டும் – வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு 2

அஞ்சுபூதமும் நீயல்ல நம்பு – வேல் வேல்
ஐம்பொறி ஐம்புலனும் நீயல்ல நம்பு
வெஞ்சினம்நெஞ்சில் வாராமல் காப்பாய் – வேல் வேல்
வேறு பொருளில்லா நிட்டையில் சேர்ப்பாய் 3

பஞ்சம் படைவந்த போது – வேல் வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப்போல் பிறன்பொருள் எண்ணு – வேல் வேல்
நாங்கள் சிவமென நாளும்நீ நண்ணு 4

கஞ்ச மலர்ப்பதம் வாழ்க – வேல் வேல்
கருணைநிறைந்த பெரியோர்கள் வாழ்க
இந்திரன் முதலியோர் வாழ்க – வேல் வேல்
இவ்வுலகி லுள்ளோர் யாவரும் வாழ்க 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குந் திருக்கூத்து

அங்குமிங்கும் எங்குந்திருக் கூத்து – அடடா
அதையறிதல் பத்தரைப்பொன் மாற்று 1

பொங்கிவருங் காமமே கூற்று – அடடா
புலன்வழியில் போகாமல் தேற்று 2

இடைபிங்க லையிரண்டும் சேர்த்து – அடடா
எழிலான சுழுமுனைக்குள் ஏற்று 3

மடைதிறந்தாற் போலவரும் ஊற்று – அடடா
மாமாயை சாராதெனச் சாற்று 4

பொங்கிவரும் அமிர்தத்தை யுண்டு – அடடா
பூரண நிட்டையிற்சேர் நன்று 5

மங்கள கரமாக வாழ்த்து – அடடா
மௌன நிலையிலே ஆழ்த்து 6

சங்கரன் திருப்பாதம் போற்று – அடடா
சாயுச்சியப் பதவியில் ஏற்று 7

நல்லூரான் திருப்பாதம் காப்பு – அடடா
நமக்குக்குறை வில்லைநல்ல வாக்கு 8

சொல்ல முடியாத தீர்ப்பு – அடடா
சுவாமி கிருபையுனக் காப்பு 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமனை எங்கும் பார்

பார்பார் பரமனை எங்கும்
பதையாதேசுகம் இதயத்தில் தங்கும்
ஆர்தான் உனக்குநிகர் ஆவார்
ஐயப்படாதேதெய்வம் உன்னிடம் உண்டு 1

ஒருபொல்லாப்பு மில்லையென்ற வாக்கு
உணர்ந்துணர்ந் தின்பத்தில் தேக்கு
கருமத்தில் கையைநீ வைத்துக்
கடமையைப் பயமின்றி ஆக்கு 2

உண்மை முழுதுமென்று சாற்று
உனக்கொரு குறைவில்லை ஏற்று
கண்ணை இமைகாக்கு மதுபோல்
காப்பதுவேயுன் கடமை இனிமேல் 3

வீம்பிடும்பை ஆங்காரம் விட்டு
வேதாந்த நெறியினைக் கட்டு
ஓம்சிவாயநம என்று செபிப்பாய்
உள்ளத்திற் கள்ளத்தை அவிப்பாய் 4

நல்லூரான் திருவடியைப் பாடு
நாமேநாம் என்றுசொல்லி நாடு
கல்லுங் கரையக்கவி சொல்லு
காமக் குரோதத்தை வெல்லு 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் தேரடியில் நான் கண்டேன்

*நேரிசை வெண்பா*

பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார் — அளவிலா
மங்கையரு மாடவரு மல்குநல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது 1

காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியரெலாஞ் — சீராகச்
சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது 2

இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட் சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொலி — நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம் 3

காலன் வலிதொலையக் காலெடுத்தான் தந்தருளும்
பாலன்வாழ் நல்லைப் பழம்பதியிற் — கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென் றறிவா யடா 4

உவமை கடந்தவின்ப மெல்லார்க்கு முண்டு
தவஞ்செய்வார் தாமறிவர் தப்பார் — சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசனே நல்லை வாசனே

**பல்லவி**

ஈசனே நல்லை வாசனே, கதிரேசனே முருகேசனே

**அநுபல்லவி**

நேசமாய் உன்திரு வாச மலரடி
நித்தம் மனச் சுத்தத்தொடு
பத்திசெய்து பாடிப் பணிந்தோம் (ஈசனே)

**சரணம்**

குமரேசனே சர்வேசனே
கோடி சூர்யப் பிரகாசனே
குஞ்சரி தெய்வானை வந்தடிதொழு குகனே
நற்றவர் அகனே சற்குருவே நீதஞ்சம்
ஓடியெம் மனம் உழலுதே
உமைபாலனே தண்டைக் காலனே
ஒருநொடியில் வந்திடர் களைந்திடாய்
உத்தமர்தஞ் சித்தத்தில் தித்திக்குந் தெள்ளமுதே (ஈசனே)

---

## வேறு

அரியதி லரியது ஆன்மா வதுதான்
பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
பிரிவறி யாதது பேதாபேத மற்றது
குறியுங் குணமு முள்ள தற்றது
நெறிவழி வழாதது நிரஞ்சன மானது
துரியா தீதத்தில் தூங்காமல் தூங்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவு குயிலே

கூவுகுயி லேபறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே 1

நம்பிக்கை யாய்ப்பறந்து கூவுகுயிலே
நாங்கள்சிவ மென்றுசொல்லிக் கூவுகுயிலே 2

ஆதியந்தம் இல்லையென்று கூவுகுயிலே
அளந்தறியா ஒண்ணாதென்று கூவுகுயிலே 3

நீதிநெறி யைச்சென்று கூவுகுயிலே
நித்தியம்நாம் என்றுசொல்லிக் கூவுகுயிலே 4

ஊரும்பேரும் இல்லையென்று கூவுகுயிலே
ஒருபொல்லாப்பு மில்லையென்று கூவுகுயிலே 5

ஆருமறி யாரென்று கூவுகுயிலே
அகம்புறமும் இல்லையென்று கூவுகுயிலே 6

ஐம்பூதம்நா மல்லவென்று கூவுகுயிலே
ஐம்பொறிநா மல்லவென்று கூவுகுயிலே 7

ஆன்மாவே நாமென்று கூவுகுயிலே
அங்குமிங் கும்பறந்து கூவுகுயிலே 8

மாண்புட னேபறந்து கூவுகுயிலே
மரணம்பிறப் பில்லையென்று கூவுகுயிலே 9

நாமேநா மென்றுசொல்லிக் கூவுகுயிலே
நமக்குக்குறை வில்லையென்று கூவுகுயிலே 10

போமேபோம் வினையென்று கூவுகுயிலே
புண்ணியம்போல் பாவமென்று கூவுகுயிலே 11

நல்லூரான் வீதியிற்போய்க் கூவுகுயிலே
நல்லதொண்டர் நாமென்று கூவுகுயிலே 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவு குயிலே

கூவுகுயிலே பறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே 1

நாவுக் கினியவனை நல்லகுயிலே
நம்பனை யிங்குவரக் கூவுகுயிலே 2

சீவன்சிவ னென்றுசொல்லுஞ் சித்தர்குழாம்
தேடும் பொருளைவரக் கூவுகுயிலே 3

நாவலரும் பாவலரும் பணிந்தேத்தும்
நல்லசிவ னிங்குவரக் கூவுகுயிலே 4

தேன்சொரியுஞ் சோலையில்வாழ் தெய்வக்குயிலே
தேவாதி தேவன்வரக் கூவுகுயிலே 5

நான்படும் பாடனைத்தும் நயந்துசொல்லி
நாதனை இங்குவரக் கூவுகுயிலே 6

இளமையு மூப்புமில்லா எம்பிரானை
இங்கேயெனைத் தேடிவரக் கூவுகுயிலே 7

இளம்பிறை அணிந்தபிரா னிங்கேவர
எழிலுடன் பறந்துபோய்க் கூவுகுயிலே 8

ஓயாமல் உள்குவார்தம் உள்ளத்தானை
உத்தமனை இங்கேவரக் கூவுகுயிலே 9

வாயாரப் பாடுவார்தம் மனத்தானை
வள்ளலை யிங்குவரக் கூவுகுயிலே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூவாய் குயிலே

காட்டகத்தே வாழுங் கருங்குயிலே! கேளாய்
பாட்டகத்தே நின்றுருக்கும் பரமன் கருணையினால்
நாட்டகத்தே நம்போல நல்லூரில் வந்தானெம்
ஏட்டகத்தே எழுந்தருளும் வண்ணம்வரக் கூவாயே 1

அஞ்சுகங்காள் நாகணவாய் அழகான மயிற்குலங்காள்
மிஞ்சும் விரிபொழில்வாழ் வித்தாரப் பூங்குயிலே!
பஞ்சின் அடிமடவாள் பாகர் பகர்நல்லூர்
வந்தா னவனை வரும்வண்ணங் கூவாயே 2

பூப்பொலியுங் கொம்பரில்வாழ் பூங்குயிலே! நீகேளாய்
காப்பொலிகள் ஓவாக் களிதூங்கும் நல்லூரில்
நாப்பொலிவு தோன்ற வந்தாண்டான் நீயவனை
வாய்ப்பொலிவு தோன்ற வரும்வண்ணங் கூவாயே 3

தேனுந்து சோலைத் திருமனையில் வாழ்குயிலே!
மானும் மழுவும் மறைத்துவந்து நல்லூரில்
நானும் அடியவரும் நன்கு களிசிறக்கப்
பேணும் குருபரனைப் பிரியமுடன் வரக்கூவாய் 4

காதலாற் பாடிக் கசிந்துருகும் பூங்குயிலே
தீதெலாம் நீக்கச் சிவபெருமான் என்போலப்
பூதலத்தில் நல்லூரிற் போந்தான் அவனையிங்கு
நீதேடி எங்கும் நினைத்துவரக் கூவாயே 5

---

## முனி சொன்மொழி

*கலிவிருத்தம்*

ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தவன்
திருவ டிதனைச் சிந்தை மறக்குமோ?
ஒருவடி வன்றி யுள்ள முவக்குமோ?
கருவ ழியினிற் சென்று கலங்குமோ? 1

நாம றியோமெ னச்சொலு நன்மொழி
தாம றிந்தவர் சஞ்சலங் கொள்வரோ?
சாம ளவுமத் தண்ணருள் வாசகம்
சேம நன்னிதி செப்புந் தகையதோ? 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர றிபவ ரென்ன வடிக்கடி
வீர மாக நகைத்து விளம்புவார்
ஈர கத்தொடு நின்று வணங்கினும்
வார மற்றவர் போல இகழ்வரே 3

எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச்
செப்பு வாரவர் சிந்தை தெளிந்திட
ஒப்பில் லாதபல் வார்த்தைக ளோதுவார்
அப்பில் உப்பென வானதென் சீவனே 4

முழுது முண்மை யெனமுனி சொன்மொழி
எழுதிக் காட்டிட என்னா லிசையுமோ?
அழுது வாழ்த்தியு மேத்தியு மன்பர்காள்
தொழுது கொள்வதல் லாலென்ன சொல்லுகேன் 5

---

## இணையடி வாழ்க

*நிலைமண்டில ஆசிரியப்பா*

திங்களுங் கங்கையும் சென்னியிற் றாங்கிய
எங்கள் பெருமான் இணையடி வாழ்க
ஒருபொல் லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் குஞ்சித பாதம் வாழ்க
நாமறி யோமெனும் நல்ல திருமொழி
தாமறி வோனிச் சகத்தினில் வாழ்க
எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச்
செப்பிய வாசகம் சிறப்புடன் வாழ்க
ஆரறி வாரெனும் அருமைத் திருமொழி
தாரணி தன்னிற் சந்ததம் வாழ்க
முழுதுமுண் மையென முனிவன் சொன்மொழி
தொழுது வாழ்த்துஞ் சுதந்திரம் வாழ்க
இன்ன தன்மைய னிவனென ஏவரும்
என்று மறியா இணையடி வாழ்க
முந்திய பொருட்கெலா முதலா யுள்ளோன்
சிந்தையிற் பூத்த சிவபிரான் வாழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

*குறள் வெண்பா*

அருவா யுருவா யருவுருவாய் நிற்கும் 1
ஒருவனே தெய்வ முணர்

அந்தமு மாதியு மில்லா வொருவனே 2
சிந்தையிலும் நிற்குந் தெரி

ஆருயிர் தோறு மதுவதுவாய் நின்றருளுஞ் 3
சீருடையா னேயெங்கள் தேவு

இருப்பு நெருப்புப்போ லெவ்வுயிரி னுள்ளும் 4
இருக்கு மிறைவன் இயம்பு

இல்லையுண் டென்னு மியல்புடையான் காணவனே 5
தொல்லையுளா னென்று துணி

இம்மை மறுமைக் கிறைவ னொருவனெனத் 6
தம்மையுணர்ந் தார்சொன்னார் தாம்

கல்லார்கற் றார்க்குங் கடவுளொன் றுண்டென்று 7
நல்லா ருரைத்தார் நடு

பிறப்பிறப் பில்லாப் பெருமானே யெங்கள் 8
சிறப்புடைத் தெய்வமெனத் தேர்

அறிவுக் கறிவாகி யங்குமிங்கு மெங்கும் 9
செறியுமொன் றேயெமக்குத் தேவு

பெருமை சிறுமையில்லாப் பெம்மானே எங்கள் 10
அருமை யுடையதெய்வ மாம்



oundation.
am.org

# வான் சிறப்பு

*குறள் வெண்பா*

மண்ணொடு விண்ணு மறிகடலு மாயுமே
நண்ணுந்தண் ணீரின்றே னாடு 1

அறத்தோடு பூசை அழிந்தொழிந்து போமே
புறத்துமழை பெய்யா வெனின் 2

வான மருளை வழங்காது விட்டக்கால்
தானந் தவமிரண்டும் தாழ்ம் 3

தண்ணீர்க் கடவுளித் தாரணியைக் காய்ந்திட்டால்
என்னீர்மைத் தாமுலக மி.்.து 4

மழையென்னு மன்னவன் மன்னுயிர்கா வாக்கால்
விளையும் பசிநோய் விரைந்து 5

மாரி யுலகை மறந்துபோ யிற்றென்றாற்
காரியமு முண்டோ கழறு 6

ஆறு குளமேரி யழகுபெறு மோமாரி
மாறுபடு மாயின் மதி 7

விரிந்த வறிவுடைய வேதியரென் செய்வார்
சொரிந்துவிடா தாயின்வான் சொல் 8

பொன்னும் பொருளு மிருந்தாவ தென்னோசொல்
மன்னு மழைகுறைந்தால் மற்று 9

மன்னுதவ மாமகமு மாயுமே வையகத்திற்
துன்னுமழை பொய்ப்பிற் றுணி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை

*குறள் வெண்பா*

அகலிகைகல் லானா ளருமுனிசா பத்தால்
மகபதியுந் துன்புற்றான் மான்று 1

அஞ்சு மடக்கு மறிஞரே யிவ்வுலகிற்
சஞ்சலத்தை வென்றுயர்வார் தாம் 2

அறவோ ரெனப்படுவா ராரென்றால் வையத்
துறவோரே யாமென்று சொல் 3

தண்ணீர் குளிருமோ தழலுஞ் சுடுமோதான்
மண்ணிற் றுறந்தோர்க்கு மற்று 4

மாசற்ற நெஞ்சுடைய மாதவர்தா மண்ணகத்தே
ஆசற்ற நற்றுறவோ ராம் 5

வேண்டுதல் வேண்டாமை யில்லா விழுமியோர்
மாண்ட துறவோர் மதி 6

எண்ணமெலாம் விட்டுவிட் டேகாந்த மோனநிலை
நண்ணுமவ ரேதுறந்தோர் நாடு 7

இரவுபக லற்றதனி யேகாந்தக் காட்சி
விரவுமவ ரேபெரியோர் மேவு 8

தத்துவ மெல்லாஞ் சடமென்று தாங்கண்ட
வித்தகரே சித்தர் விரும்பு 9

காமமுத லாறுங் களைந்த பெரியோரே
சேமமுடன் வாழ்வார் சிறந்து 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்க்கை

*குறள் வெண்பா*

இல்லாளுந் தானு மிசைந்தொன்றாய் வாழ்வதே
நல்லாறென் பார்பெரியார் நாடு 1

ஏனைய வறங்களினு மேமாப் புடையதே
யீனமில் லாவில் லறம் 2

தானந் தவமிரண்டுந் தானாற்ற வல்லது
ஞானவற மென்னலாம் நன்கு 3

அரனு முமையு மறநெறி நின்றார்
பெறலரிய தொன்றிதெனப் பேசு 4

பேசரிய சீர்ச்சனக னேனைப் பெரியோர்கள்
நேசமுட னிவ்விலைநின் றார் 5

இல்லறத்தில் நின்றொளிரும் ஏந்திழை நல்லாளொருத்தி
நில்லென்றாள் சூரியனை நேர் 6

இல்லற மென்பது யார்க்கும் துணையதனால்
நல்லற மென்னலாம் நாம் 7

கொல்லார்பொய் சொல்லார் குறிப்பறியு மில்லறத்தார்
எல்லார்க்கு மேலென் றிசை 8

இன்சொற் றவறா ரிழுக்குரையா வில்லறத்தார்
பொன்பெற் றுயர்வார் புகழ் 9

பொறிவென்றார் தாமும் பொருவரோ நல்ல
நெறியில் லறத்தாரை நேர் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித்தெளி

*குறள் வெண்பா*

அறிவுடைய ரெல்லா முடைய ரெனவே
செறிவுபெறச் சொன்னார் தெரி 1

அலையு மனத்தை யடக்கிய பெரியோர்
தொலையாப் பிறவிதொலைத் தார் 2

ஆவ தழிவதுதா னான்மாவுக் கில்லையெனச்
சேவடி போற்றித் தெளி 3

இல்லையென் னாமலே யிட்டிங்கு வாழ்பவர்க்
கெல்லையில்பே ரின்ப மெழும் 4

ஈசனை யெல்லையில் லாத விறைவனை
வாச மலர்தூய் வணங்கு 5

உலகு முயிருமா யொன்றி நிறையுங்
குலதெய்வத் தைக்கும் பிடு 6

ஊட்டி வளர்க்க வொருவ னிருக்கவே
வாட்டமுனக் கேனோ மகிழ் 7

எழுதவே யொண்ணா விறைவ னடியைத்
தொழுவார் மனந்தூ யவர் 8

ஏக னநேகனா யுற்றவெம் மீசனைத்
தேகம்போ முன்னர்த் தொழு 9

ஐயப் படாத வகத்தின ரெல்லார்க்குந்
தெய்வத்தா லெய்துந் திடம் 10

ஒன்பதுவாய்த் தோற்பை யுடைவதற்கு முன்னரே
அன்பா லவனை யணை 11

ஓடும் புளியம் பழமும்போ லிங்குநீ
பீடுடனே வாழ்க பிழைத்து 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளவியஞ் செல்வ மனைத்து மழிக்குமே
கவ்வியரன் பாதங் கருது 13

அக்கினறு மாலை யணியுமெந் தேவனைப்
பக்குவத்தி னோடு பணி 14

கங்கையொடு திங்கள் புனைந்த கடவுளை
மங்கைபங் காளனை வாழ்த்து 15

அங்கிங் கெனாம லகண்டமாய் நின்றவப்
புங்கவன் பாதமலர் போற்று 16

சங்கரன் தாளிணை தாம்பணி வாரெய்தும்
இன்பமும் வீடு மெளிது 17

எமன்வரும் முன்னரே யெம்மான்றன் பாதம்
தமவெனக் கொள்வாரஞ் சார் 18

இடபந் தனிலேறு மீசனைத் தேவர்
தொடரவொண் ணானைத் தொழு 19

இணங்கிவாழ் மாந்தர்க ளின்பவீ டாள்வார்
பணம்பொரு ளெல்லாம் படைத்து 20

தத்து பரிநரி யாகச் சமைத்தானை
நித்தமு மேத்துக நேர்ந்து 21

நன்மையுந் தீமையும் நாடாத நாதனைச்
சொன்னவர் தாமேதூ யோர் 22

பந்தஞ்செய் பாசமே பாறிடும் வண்ணநீ
அந்தமில் லாதவற் போற்று 23

மன்றுள்ளே யாடுமெம் மாமணி தன்னைநீ
என்றும் மனத்து ளிருத்து 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கர் முனிவர்க ளேத்து மவனை
வியக்கவாழ்த் திற்பெறுவர் விண் 25

அரவுசேர் மேனியெம் மண்ண லடியை
பரவுவார் சேர்வர் பரம் 26

அலகிலாச் சோதியை யன்போடு பாடின்
உலகிற் பெறுவ ருயர்வு 27

வண்டார்க்குங் கொன்றையம் வார்சடை யோனடித்
தண்டா மரையே சரண் 28

அழகாரு மம்புலியுங் கொன்றையு மங்கை
அழலும் புனைவோ னரண் 29

அளவில் மதந்தோறு மாங்காங்கே நின்று
விளைவோ னெமக்குத் துணை 30

அறம்பொரு ளின்பமும் வீடு மளிக்கும்
பரனை நினைந்தென்றும் பாடு 31

அன்னத்தோ டாடை யளிக்கு மொருவனை
இன்னோ னெனவுணர்ந்தோர் யார் 32

---

## நானுமவனே நீயுமவனே

ஊனு மவனே உயிரு மவனே
நானு மவனே நீயு மவனே
கோனு மவனே குருவு மவனே
மானும் வார்த்தை பிறிதறி யேனே 1

அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொருளும்
குறியுங் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்வருக்கக் குறள்

அன்புடை யோர்பா லறமெல்லா முண்டாகு
மின்பமவர்க் கென்றென் றிசை 1

ஆராய்ந்து நற்கருமம் ஆற்று மியல்பினார்
ஊரார்க்கு நல்ல உறவு 2

இட்டுண்டு வாழ்வார் இருக்கு மிடந்தோறும்
அட்டுண்ணார் மற்றையவ ராம் 3

ஈவாரே எல்லாம் உடையார.். தில்லாதார்
போவார் நரகம் புகுந்து 4

உள்ளமே கோயில் உயிரே சிவலிங்கம்
வள்ளலுக் கென்றே வழுத்து 5

ஊரார் சிறக்க உவப்பவரை எஞ்ஞான்றும்
பாரார் புகழ்வார் பணிந்து 6

எள்ளப் படாரறிஞர் எப்பொழுதும் நல்லறமே
கொள்ளப் படுவார் குறித்து 7

ஏவாது செய்பவரை இம்மை மறுமைக்கும்
மூவா மருந்தா மொழி 8

ஐயம் புகாஅ ரறத்தைக் கடைப்பிடிப்பார்
தெய்வமொன் றென்பார் தெரிந்து 9

ஒன்பது வாயில் உடையவிக் கோவிலிலே
அன்புடனே நிற்பா னரன் 10

ஓதும் பொருளும் உடலும் உயிருமெலாம்
மாதொருபா கற்கே வழங்கு 11

ஔவை உறுவை அரியதிரு வள்ளுவரைத்
தெய்வமெனப் போற்றுதலே சீர் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுந்தியார் ~ I

அருவாகி நின்றவன் ஆசானாய் நல்லூரில்
திருவருள் செய்தானென் றுந்தீபற
சீவன் சிவனென் றுந்தீபற 1

ஆசைநி களத்தினை வேரோ டறுத்தவன்
பேசப் பெரியானென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற 2

இல்லையுண் டென்று இயம்பவொண் ணாதவன்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நானே யவனென் றுந்தீபற 3

ஈர்த்தென்னை யாண்டவன் எழிலாரும் நல்லூரிற்
காத்தெமை யாண்டானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற 4

உளவறிந் தெல்லாம் உன்செய லென்பார்க்கு
அளவில்லா ஆனந்தனென் றுந்தீபற
ஆசை ஒழிந்ததென் றுந்தீபற 5

ஊரும் பேரும் இல்லான் உவந்தெனைத்
தானாய்வந் தாண்டானென் றுந்தீபற
சஞ்சலந் தீர்ந்ததென் றுந்தீபற 6

எல்லா வுலகமு மான பரம்பொருள்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நாமறி யோமென்றான் உந்தீபற 7

ஏட்டி லெழுதிக் காட்டவொண் ணாதவன்
நாட்டிற் குருவானான் உந்தீபற
நமக்குக்குறை வில்லையென் றுந்தீபற 8

ஐம்புல னனைத்தையும் ஆட்கொள்ள வல்லவன்
அன்பன்நல் லூரானென் றுந்தீபற
ஐயமொன் றில்லையென் றுந்தீபற 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புயர் வற்றவன் எப்போது மினியவன்
அப்பன்நல் லூரானென் றுந்தீபற
ஆட்சேபம் இல்லையென் றுந்தீபற 10

ஓங்கா ரத்தின் உட்பொரு ளானவன்
ஆங்காரம் தீர்த்தானென் றுந்தீபற
அழிந்தது மாயையென் றுந்தீபற 11

ஔவிய நெஞ்சத்தால் அறியவொண் ணாதவன்
செவ்வியருள் தந்தானென் றுந்தீபற
செல்லப்ப தேசிகனென் றுந்தீபற 12

---

## திருவுந்தியார் ~ 2

சிவனடி யார்கள் சீராய் வளர்க்கும்
சிவதொண்டன் வந்தானென் றுந்தீபற
சிவமே நாமென் றுந்தீபற 1

பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி
சிவதொண்டன் வந்தானென் றுந்தீபற
தீவினை யில்லையென் றுந்தீபற 2

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றான் வந்தானென் றுந்தீபற
நித்தியா னந்தனென் றுந்தீபற 3

மனத்துக்கண் மாசிலா மாதவத் தோர்தம்
இனத்தவன் வந்தானென் றுந்தீபற
ஈடேறி னோமென் றுந்தீபற 4

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்த தொண்டன்
பிறவா னிறவானென் றுந்தீபற
பிரமமே நாமென் றுந்தீபற 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுந்தியார் - 3

உண்டில்லை யென்று சொல்லவொண் ணாதவன்
எங்கள்பெரு மானென் றுந்தீபற
எல்லா மவனென் றுந்தீபற 1

காண்பான் காட்சி காட்சிப் பொருளுமாய்த்
தோன்றாத் துணையா முந்தீபற
சுரிகுழல் பங்கனென் றுந்தீபற 2

புன்னகை யாலே புரமூன் றெரித்தவன்
என்னைவந் தாண்டானென் றுந்தீபற
எனக்கொரு குறைவில்லை யுந்தீபற 3

எல்லை யிலாக்கருணை யுடைய எம்பிரான்
நல்லை நகரானென் றுந்தீபற
நாமறியோ மென்றா னுந்தீபற 4

மாமது ரைத்தெரு வளையல்கொண்டு வந்தான்
சோமசுந் தரனென் றுந்தீபற
சுன்னாகத் தானென் றுந்தீபற 5

குருந்த மரத்தடியில் குருவாக வந்தவன்
இருந்தபடி இருந்தானென் றுந்தீபற
இமையோர்கள் தேவனென் றுந்தீபற 6

மாமனாய் வந்து வழக்குரைத் தானெங்கள்
சோமசுந் தரனென் றுந்தீபற
சோதி சொரூபனென் றுந்தீபற 7

வாணிச்சிக் காக மண்சுமந் தடிபட்டான்
பாணினிக் கருள்செய்தான் உந்தீபற
பரம்பொரு ளாமென் றுந்தீபற 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கன் வேள்வி தகர்த்தவன் கூடற்
சொக்க நாதனென் றுந்தீபற
சுகமே சொரூபமென் றுந்தீபற 9

சுந்தரற் குத்தூது பரவைபாற் சென்றவன்
கந்தனைத் தந்தானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற 10

---

## திருவுந்தியார் ~ 4

ஆதியு மந்தமு மில்லா வொருவன்
ஆதியு மந்தமு மானானென் றுந்தீபற
அவனென் குருவென் றுந்தீபற 1

ஓருரு வானான் ஈருரு வானவன்
ஆருரு வானானென் றுந்தீபற
ஆரறி வாரென் றுந்தீபற 2

ஐஞ்சு பூதமும் படைத்த வொருவன்
ஐஞ்சுபூதமு மானானென் றுந்தீபற
அஞ்சுவதுயாது மில்லையென் றுந்தீபற 3

ஐஞ்சு மாறு மான பராபரன்
ஐஞ்சு மாறு மானானென் றுந்தீபற
ஐய மில்லையென் றுந்தீபற 4

நீள நினையு மடியார் நெஞ்சில்
வாழ விரும்புவனென் றுந்தீபற
வரம்பு கடந்தானென் றுந்தீபற 5

மாற்றறி யாத பசும்பொன் மேனியன்
தோற்றம்யாவு மானானென் றுந்தீபற
துடியிடை பங்கனென் றுந்தீபற 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவுந்தியார் ~ 5

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தவன்
உள்ளத்தைக்கொள்ளை கொண்டானென் றுந்தீபற
ஒருபொல்லாப்பு மில்லையென் றுந்தீபற 1

ஒன்றிரண் டென்று ஓதவொண் ணாதவன்
ஒன்றிரண்டாய் வந்தானென் றுந்தீபற
உணர்வுக் கெட்டானென் றுந்தீபற 2

அஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென்
நெஞ்சம் புகுந்தானென் றுந்தீபற
நித்தியா னந்தனென் றுந்தீபற 3

கண்ணுக்குக் கண்ணா யிருக்கும் பராபரன்
எண்ணுக் கடங்கானென் றுந்தீபற
எல்லா மவனென் றுந்தீபற 4

வேறா யுடனாய் விளங்கும் பராபரன்
ஆறுதல் தந்தானென் றுந்தீபற
அம்மை யப்பனென் றுந்தீபற 5

மறவாமல் போற்றும் மாதவர்கள் மண்ணில்
பிறவா ரிறவாரென் றுந்தீபற
பேயோ டாடியென் றுந்தீபற 6

## திருவுந்தியார் ~ 6

மானும் மழுவுங் கரந்து மண்மிசைக்
காணும்படி வந்தானென் றுந்தீபற
கவலை ஒழிந்ததென் றுந்தீபற 1

சிந்தையில் வெந்துயர் தீர வெனக்கொரு
மந்திரந் தந்தானென் றுந்தீபற
மாயை அழிந்ததென் றுந்தீபற 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவ னாகி மதுரையை ஆண்டவன்
பொன்னம் பலவனென் றுந்தீபற
பூரண னானேனென் றுந்தீபற 3

திக்குத் திகாந்தமுங் கைவச மாய்வரப்
பக்குவ மானேனென் றுந்தீபற
பரமான்மா நானென் றுந்தீபற 4

அஞ்செழுத் துள்ளே அனைத்தையுங் காட்டியென்
நெஞ்சத்துள் நின்றானென் றுந்தீபற
நீயேநா னானேனென் றுந்தீபற 5

திங்களுங் கங்கையுஞ் சென்னியில் வைத்தவன்
மங்கை மாணாளனென் றுந்தீபற
மறுபிறப் பில்லையென் றுந்தீபற 6

தத்துவம் யாவுஞ் சடமென்று காட்டியென்
சித்தத்துள் நின்றானென் றுந்தீபற
தேவாதி தேவனென் றுந்தீபற 7

ஆதாரத் தாலே நிராதாரஞ் சென்றபின்
பாதார விந்தமென் றுந்தீபற
பலித்தது பூசையென் றுந்தீபற 8

அல்லும் பகலும் அறிவாகி நிற்கவோர்
சொல்லைத்தந் தானென் றுந்தீபற
தோன்றாத் துணைவனென் றுந்தீபற 9

சீவன் சிவனென்று தேறித் தெளிந்தார்க்கு
அபாய மில்லையென் றுந்தீபற
அன்பே சிவமென் றுந்தீபற 10

பத்துப் பாட்டும் படிப்பவர் கேட்பவர்
வித்தக ராவாரென் றுந்தீபற
வீடு நமக்கென் றுந்தீபற 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதம்பாய் – I

ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி – குதம்பாய்
ஒன்றையுங் காணேனடி 1

தூங்காமல் தூங்குஞ் சுகம்வந்து வாய்த்தது
சும்மா விருந்தேனடி – குதம்பாய்
சும்மா விருந்தேனடி 2

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனேநா னானேனடி – குதம்பாய்
அவனேநா னானேனடி 3

நீங்காத நின்மல நிட்டை பலித்தது
நீநா னில்லையடி – குதம்பாய்
நீநா னில்லையடி 4

ஒன்றென இரண்டென ஓதமு டியாமல்
ஓவிய மானேனடி – குதம்பாய்
ஓவிய மானேனடி 5

நன்றெனத் தீதென நவில முடியாத
நாதன்றாள் சேர்ந்தேனடி – குதம்பாய்
நாதன்றாள் சேர்ந்தேனடி 6

கண்ணுக்குக் கண்ணா யிருக்கின்ற கர்த்தனைக்
கண்டு களித்தேனடி – குதம்பாய்
கண்டு களித்தேனடி 7

அண்டமும் பிண்டமும் ஒன்றோ இரண்டோவென்
றறியா திருந்தேனடி – குதம்பாய்
அறியா திருந்தேனடி 8

ஆதார மாறும் அவத்தையோ ரைந்தும்
அடியோடு போச்சுதடி – குதம்பாய்
அடியோடு போச்சுதடி 9

பாதார விந்தத்தைக் காணாமற் கண்டு
பணியாமற் பணிந்தேனடி – குதம்பாய்
பணியாமற் பணிந்தேனடி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதம்பாய் ~ 2

அன்பே சிவமாகக் கண்ட பெரியோர்க்குத்
துன்பங்க ளேதுமுண்டோ — குதம்பாய்
துன்பங்க ளேதுமுண்டோ 1

ஆதி யந்த மான்மாவுக் கில்லையென்ற
சேதி தெரிந்ததடி — குதம்பாய்
சேதி தெரிந்ததடி 2

இல்லை யுண்டென்று சொல்லவொண் ணாதவன்
எல்லார்க்கு மீசனடி — குதம்பாய்
எல்லார்க்கு மீசனடி 3

ஈசன் ஒருவ னெண்ணிப் பணிவார்க்குப்
பாசந்தா னுண்டோடி — குதம்பாய்
பாசந்தா னுண்டோடி 4

உண்மை முழுதுமென் றேத்திப் பணிவோர்க்கு
விண்ணாணம் ஏதுக்கடி — குதம்பாய்
விண்ணாணம் ஏதுக்கடி 5

ஊரும் பேரு மில்லா ஒருவருக்குச்
சீருஞ் சிறப்புமென்ன — குதம்பாய்
சீருஞ் சிறப்புமென்ன 6

எங்களை விட்டுப் பிரியாத இறைவற்குப்
பொங்கல் புழுக்கலென்ன — குதம்பாய்
பொங்கல் புழுக்கலென்ன 7

ஏதும் அவன்செய லென்று துதிப்பவர்க்குப்
போதுதா னேதுக்கடி — குதம்பாய்
போதுதா னேதுக்கடி 8

ஐம்புலன் தன்னை வென்ற பெரியோர்க்கு
நம்பிக்கை வேண்டுமோடி — குதம்பாய்
நம்பிக்கை வேண்டுமோடி 9

ஒன்றாகக் கண்ட வுணர்வுடை யோருக்கு
மன்றாட்ட மேதுக்கடி — குதம்பாய்
மன்றாட்ட மேதுக்கடி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்சி வாய நமவென்று சொல்லுவோர்
தாம்சிவ மாவரடி – குதம்பாய்
தாம்சிவ மாவரடி 11

ஔவிய மில்லா அறிவை யுடையவர்
தெய்வம்போல் வாழ்வரடி – குதம்பாய்
தெய்வம்போல் வாழ்வரடி 12

அஃகமும் காசுந் தேடிடில் ஞானிகள்
நஃகுதல் செய்வாரடி – குதம்பாய்
நஃகுதல் செய்வாரடி 13

---

## குதம்பாய் – 3

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கு மிருப்பவன்
எங்க ளிறைவனடி – குதம்பாய்
எங்க ளிறைவனடி 1

உள்ளவுள்ள மெல்ல மெல்ல வெளியாகும்
உறுதி யாயிரடி – குதம்பாய்
உறுதி யாயிரடி 2

வெள்ளம் பள்ளத்தை நாடுமது போல
விமலனு மாவனடி – குதம்பாய்
விமலனு மாவனடி 3

துள்ளித் திரியும் மனத்தை யடக்கினால்
துரிய மடைந்திடலாம் – குதம்பாய்
துரிய மடைந்திடலாம் 4

எங்கெங்கு சென்றாலு மங்கங்கு மீசன்
இருப்பதைக் கண்டிடடி – குதம்பாய்
இருப்பதைக் கண்டிடடி 5

தேங்காயி லிளநீர் சேர்ந்திடுந் தன்மைபோல்
தெய்வ மிருக்குதடி – குதம்பாய்
தெய்வ மிருக்குதடி 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குதம்பாய் - 4

அனைத்துஞ் சிவன்செயலென் றறிந்த பெரியோர்க்கு
மனத்துயர் வந்திடுமோ - குதம்பாய்
மனத்துயர் வந்திடுமோ 1

ஆன்மாவே நாமென்னும் அறிவை மறந்ததனால்
வீண்பாவ மாச்சுதடி - குதம்பாய்
வீண்பாவ மாச்சுதடி 2

இரவும் பகலுமற்ற இன்பநிட்டை பொருந்தினவர்
பரமபதம் பெற்றாரடி - குதம்பாய்
பரமபதம் பெற்றாரடி 3

ஈசன்மேல் நேசமாய் இருக்கின்ற தாசருக்கு
பாசபந்தம் வந்திடுமோ - குதம்பாய்
பாசபந்தம் வந்திடுமோ 4

உண்மை முழுதுமென்ற ஒருமொழியால் இவ்வுலகில்
என்னை மறந்தேனடி - குதம்பாய்
இரவுபக லற்றதடி 5

ஊரும் பேருமில்லா ஒருபொருளைக் கண்டவர்கள்
ஆருக்கு மஞ்சுவரோ - குதம்பாய்
ஆருக்கு மஞ்சுவரோ 6

எனக்குந் தனக்கும்பிரி வில்லையென்ற என்னாசான்
தனக்குவமை சொல்வதுண்டோ - குதம்பாய்
தனக்குவமை சொல்வதுண்டோ 7

ஏதும் சிவன்செயலென் றெண்ணும் பெரியோர்க்குத்
தீதுதான் ஆவதுண்டோ - குதம்பாய்
தீதுதான் ஆவதுண்டோ 8

ஐயமெல்லாம் நீக்கியென்னை அன்புசெய்ய வைத்தவனை
வையகத்தில் மறப்பேனோ - குதம்பாய்
வையகத்தில் மறப்பேனோ 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனே தெய்வமெனும் உண்மைதனைச் சொல்லிவைத்த
குருபரனை மறப்பேனோ – குதம்பாய் 10
குருபரனை மறப்பேனோ

ஓங்கா ரத்தினுள்ளே ஒளிருஞ் சிவனடியை
நீங்கும் நெறியுண்டோ – குதம்பாய் 11
நீங்கும் நெறியுண்டோ

ஔவிய மில்லா வறிவுடைய பெரியோர்கள்
திவ்விய பார்வையாலே – குதம்பாய் 12
சென்மமெல்லாந் தீர்ந்ததடி

---

## குதம்பாய் ~ 5

கங்கைச் சடையுடைய கடவுளைக் கும்பிட்டாற்
பங்கந்தான் வந்திடுமோ – குதம்பாய் 1
பங்கந்தான் வந்திடுமோ

எங்குஞ் சிவனடியைக் கண்டிறைஞ்சும் மாதவர்க்குக்
கங்குல் பகலுண்டோ – குதம்பாய் 2
கங்குல் பகலுண்டோ

சத்திசிவ மொன்றான தன்மையைக் கண்டுவிட்டால்
நித்தியவாழ் வாகுமடி – குதம்பாய் 3
நித்தியவாழ் வாகுமடி

நமனு மணுகுவனோ நாதனை நாம்பணிந்தால்
சமனாக நின்றிடடி – குதம்பாய் 4
சமனாக நின்றிடடி

விடத்தை மிடற்றில்வைத்த விமலன ருளைப்பெற்றால்
சடத்தின்மேல் ஆசையுண்டோ – குதம்பாய் 5
சடத்தின்மேல் ஆசையுண்டோ

இணக்கமா யிருந்துபார்த்தால் எல்லாம் சிவன்செயலாம்
பிணக்கைநீ விட்டிடடி – குதம்பாய் 6
பிணக்கைநீ விட்டிடடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை யறிந்தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில்
பினனையினிப் பேசுவதென் — குதம்பாய்
பின்னையினிப் பேசுவதென் 7

நாமும் நாமாகி நமக்குள்ளும் நாமானால்
போமுன் வினையனைத்தும் — குதம்பாய்
போமுன் வினையனைத்தும் 8

பண்டுமின்று மென்றும் ஒருபடித்தாய் நிற்பவனைக்
கண்டுதொண்டு நாம்செய்வோம் — குதம்பாய்
கண்டுதொண்டு நாம்செய்வோம் 9

மங்கையொரு பாகமாய் மருவும் பெருமானே
எங்கள்குல தெய்வமடி — குதம்பாய்
எங்கள்குல தெய்வமடி 10

அயனு மரியு மறியாமல் நின்றவன்றன்
தயவு நமக்குண்டடி — குதம்பாய்
தயவு நமக்குண்டடி 11

அரகர வென்றுதினம் அரற்றுஞ்சிவ னடியவர்க்கு
மரணம்பிறப் பில்லையடி — குதம்பாய்
மரணம்பிறப் பில்லையடி 12

---

## சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா

நல்லூர் ஆட்டக்காரா நீசெய்யடா ஓர்மாயம்
அல்லும் பகலுமற்று அதுவும் இதுவுமற்றுச்
சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருத்தடா
எல்லையில்லா இன்பம் என்னை விழுங்கவேண்டும்
சொல்லை அமுதமாக்கி உல்லாச மாய்த்திரிய
வில்லை முறியடித்து வெற்றிமுரசு கொட்டடா
கல்லை ஒத்தமனம் கரைய அருள்தாடா
இல்லையென்ற சொல்லை இல்லாமல் ஆக்கடா
முழுதும் உண்மையென்று முனிவன் சொன்னவாக்கு
எழுத முடியுமோ என்னைக்காப் பாயடா
பத்துவரியும் படிப்போர் கேட்போ ரெல்லாம்
முத்தர் ஆகுவார் முழுதும் உண்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வக் குருநாதா!

செல்வக் குருநாதா! செல்வக் குருநாதா!
சிந்தைதடு மாறுதெடா! திருவருளைத் தந்திடெடா 1

அல்லலெல்லாம் நீக்கி யாளாக்க வேண்டுமெடா
எல்லையில்லா வின்பத்திலே யெனையிருத்தி வைத்திடெடா 2

கல்லை நிகர்த்தமனங் கரையவரந் தந்திடெடா
தொல்லைவினை நீக்கிச் சுகமெனக்கே யீந்திடெடா 3

நீயேநா னென்னும் நிச்சயத்தைக் காட்டிடெடா
பேயேபோல் நானிருந்து பிரமைகொள்ள வைத்திடெடா 4

அங்குமிங்கு மோடி யலைந்து திரிகிறேண்டா
எங்குமுனைக் காண வெனக்குவரந் தந்திடெடா 5

வலைப்பட்ட மான்போல் மயக்கமிக வாகுதெடா
சிலைப்பட்ட பாண்டம்போற் சித்தஞ் சிதறுதெடா 6

எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டிடெடா
உனக்குள்ளே நானிருக்கு முண்மையிலே மாட்டிடெடா 7

பேசாத மந்திரத்தின் பெருமைநீ தந்திடெடா
ஆசா பிசாசை யகற்றவழி காட்டிடெடா 8

என்னோ டுடன்பிறந்தா ரெல்லோரும் மாண்டார்கள்
உன்னுறவே யல்லாம லோருறவு மில்லையெடா 9

*வெண்பா*

ஒருநேரம் நெல்லரிசி யூணை அருந்தின்
வருமோ வறுமைபிணி மாந்தீர் – கருதுவீர்
காயத்தைத் தேற்றிக் கடவுள் திருவடியில்
நேயத்தை வைப்பீர் நிறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் நினைவல்லால் இல்லை

இராகம் — காபி

தாளம் — ஆதி

**பல்லவி**

உன்நினை வல்லால் இல்லை
உயிர்த்துணை வோனே — உம்பர் கோனே

**அநுபல்லவி**

அன்னைபிதாக் குருநீயே
அண்டினேன் வன்மமேனோ — வினைதானோ (உன்நினை)

**சரணங்கள்**

பொன்னம் பலவாணனே
புலவர்தம் பெருமானே
கன்னலே கட்டித்தேனே
கனிரசமே யெம்மானே (உன்நினை) 1

என்னகச் சோதியே
இனியுன் பணிகதியே
இன்பசா கரமோன
மெனும்வடிவே யென்கோனே (உன்நினை) 2

புன்னெறி செல்லும்பொல்லாப்
புந்தியை வென்றுமேலாம்
நன்னெறி செல்லவைத்து
நமக்கருள்தா எங்கோனே (உன்நினை) 3

உரையற்ற வூமர்போலாய்
உள்ளமு வந்துமேலாம்
தரைதனில் யோகசுவாமி
தான்கடைத் தேற, ஈடேற (உன்நினை) 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ட பத்து

*நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா*

பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே 1

தந்தைதாய் மைந்தர் தமர்தார மென்றடியேன்
பந்தத்துட் பட்டுப் பாழாகப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானை யிலங்குநல்லை கண்டேனே 2

தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை
நாக மலர்சொரியும் நல்லைநகர்க் கண்டேனே 3

இருவினையான் மதிமயங்கி யிடர்ப்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினா லாண்டுகொள்ளக் கடவுடிரு வுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி யவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே 4

காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுதலோன்
நாட்டிலே ஞான குருவாய் நயந்துவந்து
மீட்டா னவன்றன் விரையார் மலரடியை
மாட்சிமைசேர் நல்லைத்தேர் மாணடியிற் கண்டேனே 5

மாலயனுந் தேடி யறியா மலரடிகள்
கோல வருட்குருவாய்க் குவலயத்தி லேபோந்து
சாலப் பெரும்பகையைத் தானீக்கி யாண்டானை
ஞாலம் புகழுநல்லைத் தேரடியிற் கண்டேனே 6

நானாரென் னுள்ளமா ரெனநாடு மெய்யடியார்
தானாக நின்றருள்செய் சங்கரனே தாரணியிற்
கோனாக வந்தாண்டான் குளிரார் திருவடியைத்
தேனார் பொழில்நல்லைத் தேரடியிற் கண்டேனே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு மிரண்டு மறியா வெனக்குநல்ல
பட்ட மளிக்கப் பரிந்துவந்த மெய்ப்பொருளை
வட்டஞ்சூழ்ந் தடிபரவும் மங்கைமார் கொண்டாடுஞ்
சிட்டர்வாழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே 8

என்னையன்றி வேறொன்று மில்லை யெனச்சொன்ன
அன்னையினு மன்புடைய வாசா னவனிதன்னிற்
கன்னலொடு செந்நெல் கமுகு கதலிபலா
மன்னுநல்லை மாநகரிற் றேரடியிற் கண்டேனே 9

இரவுபக லற்ற ஏகாந்த வீட்டிலெனைப்
பரவிப் பணியவைத்த பரமன் குருவாகிச்
சரண கமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர்குறையாக் குளிர்நல்லை கண்டேனே 10

## உனைக்கூறும் வகையென்னே

பொன்னானாய் மணியானாய் பொருளானாய் பிறவானாய்
என்னானா யென்னானா யிறையானா யெனப்பலவாய்ச்
சொன்னாரன் றியின்னான் எனச்சொன்னா ரிலையுலகில்
அன்னாயுன் னையன்றி யினிப்பின்னார் துணைபேசே 1

நீரானாய் நிலனானாய் வளியானாய் விசும்பானாய்
காரானாய் கடலானாய் மதியானாய் கதிரானாய்
ஊரானா யுடலானாய் உலகானாய் பலவானாய்
பேராயி ரம்மானாய் எனப்பேசார் பிறர்தானே 2

பெரிதானாய் சிறிதானாய் பிழையானாய் பித்தானாய்
அரியானாய் அயனானாய் அருளானாய் மருளானாய்
எரியானாய் இரவானாய் பகலானாய் எல்லாமாய்த்
தெரியாதே நின்றாயே யுனைக்கூறும் வகையென்னே 3

மண்ணானாய் விண்ணானாய் மதியானாய் ரவியானாய்
கண்ணானாய் ஒளியானாய் காட்சியெல்லாம் நீயானாய்
பெண்ணானாய் ஆணானாய் பேதமென்றும் நீயானாய்
என்னானாய் என்னானாய் என்பதல்லால் என்சொல்கேன் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னடியைப் போற்றுதுமே

*தரவு கொச்சகக் கலிப்பா*

இன்றாகி நாளையா யிருப்பானை யெப்பொழுதும்
நன்றாக நினைவார்கள் நாடார்கள் பிறபொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்த பெருமானைப்
பொன்றாத மலர்தூவிப் பொன்னடியைப் போற்றுதுமே 1

என்னரசை யாரமுதை யெந்தையெம் பெருமானை
முன்னரசை மூவர்களும் வணங்கிநின்ற மூர்த்திதனைத்
தன்னரசைத் தானான தத்துவனைத் தயாபரனைச்
சொன்னவர்க ளினிவந்து தோன்றார்க ளிதுதிண்ணம் 2

பூதங்க ளைந்தாகிப் போக்குவர வில்லானை
நாதமெலாங் கடந்துநின்ற நம்பனை நாடோறும்
வேதமுறை தவறாம லர்ச்சிப்பார் வியனுலகில்
பாதமலர் காண்பார்கள் பணிவார்கள் பிறவாரே 3

என்பிழைகள் பொறுப்பானை யெங்குமா யிருப்பானை
அன்பிலரை யடையானை அஞ்செழுத்துப் பொருளானை
நன்மலர்கொண் டெந்நாளும் நாட்கழித்தல் நலமென்றே
சொன்னவர்தந் திருப்பாதம் தொழுவேனே எந்நாளும் 4

மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்றுணையாய் எல்லாமா யல்லவுமாய்ச்
சந்திரனாய்ச் சூரியனாய்ச் சரமசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை கண்டார்கள் பிறவாரே 5

பிறவார்கள் இறவார்கள் பிறிதொன்றா லயரார்கள்
கரவார்கள் உழலார்கள் கண்டதிலே மனம்வையார்
அறநெறியில் வழுவார்கள் அன்பர்பணி மறவார்கள்
பிறவொன்று மறியார்கள் பிரியாத சிந்தையரே 6

ஈரவார் சடையானை இளமதியை யணிந்தானை
மாரனைக் காய்ந்தானை மங்கையிடம் வைத்தானைத்
தாரமரும் மார்பானைச் சங்கரனைத் தாணுவை
ஆர்வமொடு துதிப்பார்கள் ஆனந்தம் பெறுவாரே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுயிருக் குயிரானை யெரியேந்து மியல்பானை
மன்னுயிர்க ளெல்லாமாய் மருவிநின்ற திறலானைப்
பொன்னொடு மெய்ப்பொருளானைப் போக்குவர வில்லானை
உன்னுபவ ருலகத்தி லினிப்பிறப்ப தொழிந்தாரே 8

மருவாருந் தாரானை வானவர்கள் பெருமானைத்
திருவாரும் மார்பானைச் சிவக்கொழுந்தைச் சின்மயனை
அருவானை யுருவானை அங்குமிங்கு முள்ளானைக்
குருவாய்க்கோ னானானைக் கண்டுள்ளம் குளிர்ந்தேனே 9

இப்பிறவி தீர்ப்பானை இனிப்பிறவா தருள்வானை
எப்பிறப்பும் என்னோடே யுடனாக இருந்தானை
ஒப்பில்லா ஒருவனாய் ஊழியெல்லாம் நின்றானைச்
செப்புமவ ரினிப்பிறப்போ டிறப்பினையே சேராரே 10

---

# உண்மை முழுதும்

*வெண்பா*

உண்மை முழுதுமென ஓது மொருமொழியால்
என்னை மறந்தேன் இடரகன்றேன் - பின்னையிங்
காச்ச ரியங்காணேன் அண்டபிண்ட மெல்லாமே
போச்சுதொன் றாகப் புகல் 1

ஆறுங் குளனும் அருவரையுஞ் சோலைகளுஞ்
சேரு மிலங்கைச் சிவனடியீர் - கூறுஞ்
சிவதொண் டனைக்காக்கச் சிநதைவேண் டாவோ
அவற்குத் துணையா ரறை 2

கன்னலொடு செந்நெல் கதலி கமுகுபலா
மன்னு மிலங்கைவாழ் மாந்தர்காள் - இன்னுஞ்
சிவதொண்டன் தொண்டிலுளஞ் செல்லா திருந்தால்
அவனையோம்பு வாரா ரறை 3

செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்கலென
நல்லௌவை முன்னாள் நவின்றனளாற் - செல்வச்
சிவனடியீர் தொண்டதனைச் செய்யத் தவறீர்
கவனஞ் செலுத்துவீர் காப்பு 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவம்மானை – I

*ஐயடித்தரவு கொச்சகக் கலிப்பா*

அரியயனுந் தேடி யறியாத் திருப்பாதம்
பெரியபுவ னத்திடையே பேயேனை யாண்ட
உரிமை நினைந்துருகி யுள்ளத் துவகைபொங்க
இருவிழியும் நீரிறைப்ப விரவுபக லேத்தி
அரியதிருப் புகழையே அறையுதுங்கா ணம்மானாய் 1

ஆட வெடுத்த அடித்தா மரைபரவி
வேடம் பொலிய விரைந்துவந்த மெய்யடியார்
தாடலைமேற் கொண்டு சற்குருவைப் போற்றி
நாடறிய வென்னை நல்லதொண்டு செய்யவைத்த
கேடறியாத் திருவடியே கிளத்துதுங்கா ணம்மானாய் 2

பாதிமதி சூடிப் பவளம்போன் மேனியிலே
பூதி யணிந்து புதுக்கொன்றைப் பூச்சூடிப்
பாதியுரு பெண்ணாகிப் பல்கோடி பூதகணம்
வீதியிலே சூழ விளையாடும் மெய்ப்பொருளை
ஆதி பகவனையே யன்புசெய்வோ மம்மானாய் 3

விடைறேு மெய்ப்பொருளை விண்ணோர் பெருமானைக்
கடையேனை யாண்டுகொண்ட கருணைத் திருவுருவைத்
தடையேது மில்லாத தத்துவனைத் தானாக
அடியேனி னைம்புலனு மறியாத வித்தகனைப்
படிமீதிற் பாடிப் பணியுதுங்கா ணம்மானாய் 4

வேதம் வகுத்தானை வேதத்தி னுட்பொருளைப்
பாதந் தொழுவார்கள் பாக்கியத்தைப் பச்சைமால்
பேதந் தவிர்த்தாண்ட பிஞ்ஞகனைப் பிறப்பிலியை
மாதவி புன்னைமௌவல் வளர்ந்தோங்கு நல்லூரில்
பாதம் பரவிநாம் பாடுதுங்கா ணம்மானாய் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக் குயிராகி யுள்குவா ருள்ளத்தே
பயிலுந் திருவுருவைப் பற்றற்றார்க் குறுதுணையைக்
கயிலைப் பதியானைக் காளகண்டங் கொண்டவனை
மயிலைப் பொருவுமையாள் மருவுதிருப் பாதியனைத்
துயிலை யறநீக்கித் தோத்திரிப்போ மம்மானாய் 6

---

## திருவம்மானை – 2

அங்குமிங்கு மாக வலைந்து திரிவேனைத்
தங்குங் கருணையினாற் றானாண்டு கொண்டான்
எங்கள் குருநாதன் எழிலார் திருவடியை
இங்குநாம் பாடி யின்புறுவோ மம்மானாய் 1

ஆருமறி யாம லந்தரங்க மாயருளைச்
சேரும் படிசெய்த செல்வக் குருநாதன்
ஊரும்பே ருமறியா வொருவன் கழல்பாடி
நீரும்பூவுங் கொண்டுநிதம் போற்றுதுங்கா ணம்மானாய் 2

இருவினையின் கட்டழித்து எல்லாஞ் சிவன்செயலாய்க்
கருதும் படிவைத்த கருணைநிறை ஆசான்றன்
திருவடியைப் பாடிநாம் சிந்தித்துச் சிந்தித்து
உருகி யுருகி யுணருவோ மம்மானாய் 3

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை குருநாதன்
கூர்த்த திருநயனக் கொள்கையிற் பாவமெல்லாம்
தீர்த்தா னவன்றன் திருவடியை நாம்பாடித்
தோத்திரித் தென்றும் புகழ்பெறுவோ மம்மானாய் 4

உன்மத் தங்கொண் டொருவனைப் போற்றோன்றிச்
சின்னத் தனமான வார்த்தைகளைச் செப்பியென்றன்
கன்மனசை முற்றாய்க் கரைத்த குருநாதன்
என்னத்த னிணையடியை ஏத்துவோ மம்மானாய் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபயப் பத்து

*தரவு கொச்சகக் கலிப்பா*

அப்பனே ஆருயிரே யன்பேயென் னாதரவே
ஒப்பிலா வொன்றே ஊழியெலா மானவனே
வைப்பிலா வாழ்வே மவுனமணிப் பெட்டகமே
இப்புவியெ லாம்புகழு மிலங்கைநக ரீச்சரனே 1

ஆறுபிறை கொன்றைதும்பை யரவு சடையாட
நீறுபொலி மேனி நின்றெழிலைக் காட்டிவிட
மாறுபடு மரக்கன் மலரடியின் கீழ்க்கிடக்க
ஆறுபொலி யிலங்கை யாண்டவனே நினக்கபயம் 2

இருநிலனாய்த் தீயா யிரவி மதியாகி
வருபுனலாய் மாருதமாய் மறிகடலாய் மன்னுயிராய்க்
குருவாகிச் சீடனாய்க் கூறவொண் ணாச்சுடராய்
மருவிநிற் கும்மிலங்கை மணியே யுனக்கபயம் 3

ஈரவார் செஞ்சடையாய் எழிலார் மழுப்படையாய்
பாரமார் கொம்மைமுலைப் பாவை யிடமுடையாய்
கோரமார் கொல்புலியைக் கொன்றுடுத்த கொற்றவனே
ஆரமுதே நல்லிலங்கை யாண்டவனே யுனக்கபயம் 4

உயிரெல்லா மாகியு மாகாத வுன்பெருமை
பயிலப் படும்விதமோ பாரளந்தோன் காணரிய
உயிருண் சுடர்மணியே உம்பர்பணி மெய்ப்பொருளே
மயில்குயில் பயிலிலங்கை மாமணியே யானபயம் 5

ஊருமில்லாய் பேருமில்லாய் உற்றார்பெற் றோருமில்லாய்
சீருஞ் சிறப்புமுள்ளாய் செக்கர்வான் மேனியனே
ஆரும் புகலரிய ஆற்றல்விடை யேறுமையா
காருந் தொழுமிலங்கைக் கடவுளே யுனக்கபயம் 6

எல்லாஞ் செயவல்ல விறைவனே யென்குருவே
நல்லார் தொழுதேத்தும் ஞானமணிப் பூடணமே
கொல்லா நெறிநின்ற குரவர்தொழும் மெய்ப்பொருளே
எல்லா வளமுஞ்சே ரிலங்கைமன்னே யுனக்கபயம் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக னனேகனென்று மிமயமலை வாசனென்றும்
மோகமார் தக்கனைமுன் முடித்த முதல்வனென்றும்
போகமார் பூண்முலையாள் பொருந்திய பாகனென்றும்
யோகநாதன் பணியிலங்கை நாதா வுனக்கபயம் 8

ஐயம் புகுந்துமுனிவர் ஆணவத்தை முன்னழித்தாய்
தையல் தனக்குந்தன் பாதி யுடல்கொடுத்தாய்
வெய்ய மதனாகம் வெந்துவிழ நீவிழித்தாய்
தெய்வமே யிலங்கைநகர்ச் சிவனே யுனக்கபயம் 9

ஒன்பதுவாய்த் தோற்பைக்கா யிரவு பகலுழலும்
என்மதிக் கின்னு மிரங்காமல் நீயிருந்தால்
என்செய்வே னென்குருவே யெவர்க்குநா னெடுத்துரைப்பேன்
சொன்னம் பயிலிலங்கைச் சோதீ யுனக்கபயம் 10

---

## நீயென்னை ஆளாயோ!

சோதிப் பிழம்பே சுரிகுழலாள் தன்கணவா
ஆதிப் பொருளே யறியாமை யால்மிகவும்
பாதிக்கப் பட்டேன் பரனே யினியுனது
நீதிக் கழல்காட்டி நீயென்னை யாளாயோ 1

ஆளான மெய்யடியா ரகங்கோயில் கொண்டவனே
கேளாயோ வின்னுங் கிருபையுனக் கில்லையோ?
பாழாகப் போகாமற் காப்பதுன்றன் பாரமையா
வாளா விருந்தாற் பழியுனக்கு வந்திடுமே 2

வந்துன் னடியடைந்த மெய்யடியார் வருத்தமெல்லாம்
வெந்துபோம் வண்ணம் மிகுகருணை நீயளித்தி
அந்தமொழி கேட்டு அடியேனு முன்னடிக்கீழ்
வந்தேன் கருணை வழங்காய்நீ வான்பொருளே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபயமைந்து

அருந்தவர் நெஞ்சில் ருசிக்குங் கரும்பே யருளே பெருவாழ்வே
பொருந்திய பூரண சந்த்ரோ தயமே புண்ணியர் புகழ்கோவே
அருந்துயர் தீர்க்கும் மருந்தே அந்தண ராகுதி வெகுமழலே
திருந்திய விலங்கை பொருந்திய திருவே சிவமே யுனக்கபயம் 1

மதிதவழ் சடையாய் மழவிடை யுடையாய் மாசில் லாமணியே
கதியென அடைவர் எதிர்வரு படைகள் காணா தேயோட்டும்
அதிபுக ழுடையாய் அம்பிகை யாளை யிடமா யுடையவனே
நதியுட னடவி தடவிய விலங்கை நம்பா வுனக்கபயம் 2

பொன்னா ருடலிற் பொடியைப் பூசிப் பொலியும் புங்கவனே
என்னா ருயிரே யெல்லாம் வல்ல இறைவா எனக்கூவி
முன்னாள் முறைசெய் முனிவன் தன்னை யோம்பிய முழுமுதலே
விண்ணாட் டாரும் விரும்பிய இலங்கை விமலா வுனக்கபயம் 3

சூலப் படையாய் சுண்ணப் பொடியாய் துடிக்கை யுடையானே
காலக் கடையாய் கோலக் கொடியாய் கங்கைச் சடையானே
நீலக் கொடிபோல் மடவா ளுமையாள் நேசிக் கும்பொருளே
கோலக் குவடு சூழு மிலங்கைக் குழகா வுனக்கபயம் 4

பூக்கை கொண்டு போற்று மடியார் புறத்தே யலையாதே
காக்கும் பொருளே கதிசேர் விடத்தாய் கண்ணன் கமலத்தான்
ஏக்க மொழிப்பீர் எழில்சேர் சுடராய்ப் படர்ந்த பரஞ்சோதி
பூக்கும் பொழில்சே ரிலங்கை வாழும் புனிதா வுனக்கபயம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூதன மொன்றுமில்லை

*ஆசிரிய விருத்தம்*

ஆவதோ ஒன்றும் இல்லை அழிவதோ ஒன்று மில்லை
நோவதேன் பிறர்தம் மாட்டு நூதனம் ஒன்று மில்லை
தேவனை வேண்டி நின்றால் சீவனே சிவனாய்த் தோன்றும்
பூவலந் தன்னில் மீண்டும் பிறப்பரோ புகலு வாயே 1

புகல்வதற் கொன்று மில்லை புண்ணிய பாவ மில்லை
இகல்செயும் மனத்தை வென்றே யீசனை வேண்டி நின்றால்
நிகருனக் கியாரு மில்லை நீயிதை யறிந்து மண்ணில்
இகலுடன் வாழு வாயே இதுதிட மறிகு வாயே 2

அறிகுதி யறிவி னாலே யறிகுதி தன்னை யென்றான்
பிறிவற நின்று பார்த்தாற் பிரமமே நீயும் நானும்
குறிகுண மொன்று மின்று கூடுதல் பிரித லின்று
செறிதரு முயிர்க ளென்று செப்புதற் கொன்று மின்றே 3

இன்றென நாளை யென்றே எண்ணுதற் கிடனோ வில்லை
அன்றுசெய் வினையி னாலே அவனியிற் பிறந்தோ மென்று
கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறு கின்றோம்
மன்றினின் றாடு மீசன் மலரடி வழுத்து வோமே 4

வழுத்துதற் கொன்று மில்லை மாரனை நெற்றிக் கண்ணாற்
கொளுத்திய குழகன் றன்னைக் கும்பிட்டுக் கூற்றை முன்னர்
விழுத்திய பரிசு கண்டே வேறொரு நினைப்பு மின்றி
வழுத்தியைந் தெழுத்தை நெஞ்சில் வஞ்சக மற்று வாழ்வீர் 5

*வெண்பா*

அச்சம் ஒழியும் அவமிருத்துத் தானொழியும்
இச்சை யொழியும் இடுக்கணொடு – பச்சை மலை
உச்சியினின் றாறொழுகு மோங்கிலங்கை நன்னாட்டீர்
நித்தியரா மென்றுணர்வீர் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே

ஒழுக்கம் விழுப்பந்தருந் தம்பிமாரே
ஓமென்று சிந்தைசெய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்குந் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலுந் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டுந் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள்காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதந் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமந் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே

---

# மலர்

மரத்திலே மலராத வாசமலர்
வாசவனும் வைத்து வளர்த்தமலர்
சிரத்திலே எப்போதுஞ் சேரும்மலர்
தீயமனம் வாராமல் காக்கும்மலர்
கரத்திலே நாமெடுத்துக் காணும்மலர்
கதிக்குவழி யிதுவென்னக் காட்டும்மலர்
வரமென்னுங் கொடியிலே பூத்தமலர்
வாணாளெல்லாம் வாடாத மாமலரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்றன் அடைக்கலமே

*அறுசீராசிரிய விருத்தம்*

தித்திக்கும் அமுதே தேனே பாலே
தீங்கரும்பின் சுவையே
பத்திக்கும் அடியார்க் கருள்புரி பரனே
பண்ணார்மொழி பங்கா
அத்திக் கருளிய ஆடகத் தரசே
அன்பே யருளாளா
முத்திக்கு வித்தே மூவர் முதல்வா
முன்னிற்பா யடைக்கலமே 1

சீரார் மேனி யுடையாய் விடையாய்
தில்லைப் பதிக்கரசே
பாரார் விண்ணோர் பரவும் பரனே
பஞ்சாட் சரப்பொருளே
காரார் குழலாள் உமையின் கணவா
கறைசேர் கண்டத்தாய்
நீரா யுருகி நிற்க வருள்வாய்
நிமலாவுன்றன் அடைக்கலமே 2

நீறார் மேனி யுடையாய் சடையாய்
நெற்றிக்கண்ணா நின்மலனே
ஆறார் சுவையே அமுதே தேனே
அன்பே யருளாளா
மாறாக் காத லுடைய அடியார்
மனத்தாய் மகாதேவா
தேறாச் சிந்தை தெளியச் செய்வாய்
சிவனேயுன்றன் அடைக்கலமே 3

---

## வேறு

சிவத்தியானஞ் செய் செய் செய்
சிவமேயாமெனல் மெய் மெய் மெய்
அவனியனைத்தும் பொய் பொய் பொய்
அதனையறிந்துநீ உய் உய் உய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை யிந்த ஊரிடை ஓங்குக

பண் – கௌசிகம் இராகம் – பைரவி

திங்கள் தங்கிய சென்னியர் தீமிளிர்
அங்கை யாளரெம் ஆருயி ரானவர்
எங்கு மானவர் எம்மிடர் தீர்ப்பவர்
மங்குல் வாழுமி லங்கைவாழ் வானதே

எள்ளும் எண்ணெயும் போலவி சைந்துள்ளான்
தெள்ளும் மாமறை தந்த திருவினான்
கொள்ளு மன்பருளங் கோயிலாய்க் கொண்டுளன்
புள்ளு லாவுமி லங்கையிற் போந்ததே

வேத கீதத்தன் விண்ணவர் தம்பிரான்
சாத லோடு பிறத்தலுஞ் சார்கிலான்
காத லாற்றொழு வார்தங் கருத்துளான்
தாது போலுமி லங்கைத் தலைவனே

மாதம் மும்முறை மாரிவி ளங்குக
மாத வர்மனம் நாளும் மகிழுக
பாத கம்பழி பாவம் தொலைகுக
தீத கல்சிவ நாமஞ் சிறக்கவே

ஒற்றுமை யிந்த ஊரிடை யோங்குக
மற்றும் நற்குணம் முற்றும் ஆகுக
கற்றுங் கேட்டுங் கழலடி போற்றுக
நற்றவம் இந்த நாட்டில் விளங்குக

யோக நாதன் உரைத்த விசைத்தமிழ்
தாக மாகவே தான்புகல் வார்தமக்(கு)
ஆக வேண்டிய யாவுமாம் அந்தியில்
யோக நாதன் அடிமலர் உய்வரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயப் பதிகம்

பச்சைமாமயி லோடுபூங்குயில் பாட்டறாவின வண்டுகள்
மொச்சுபூம்பொழில் முளரிசேர்பொய்கை மோதியாறுகள பாய்ந்திட
வைச்சமாநிதி யிருமருங்கும் வயங்கிலங்கை வளநகர்
அச்சனேயுனை நான்மறக்கினும் அறையுநா நமச்சிவாயவே 1

இச்சையானவை செய்துபூமியில் இடர்க்கடலுள்
அழுந்திநான்
பச்சைமேனியன் பரவுபூங்கழல் பாடியாட மறந்திட்டேன்
கொச்சைமக்களைக் கூடியேபல கொடுமையானவை
செய்திட்டேன்
நச்சைவாவுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே 2

காலைவேளை எழுந்திடேன்நல்ல கடிகொள்மாமலர்
பறித்திடேன்
ஆலயந்தொழு தேத்திடேன்நல்ல அடியார்தங்களைப்
போற்றிடேன்
மூலமந்திர மோதிடேன்நல்ல முத்திபெற்றிட நச்சிடேன்
ஆலவாவுனை நான்மறக்கினும் அரற்றுநா நமச்சிவாயவே 3

அஞ்செழுத்தை வழுத்திடேன்கெட்ட அவாவழுக்கா றறுத்திடேன்
கொஞ்சமேனுமென் நெஞ்சிலன்பு கொள்கிலேனஞ்சை
வெல்கிலேன்
துஞ்சவேவந்து தோன்றினேனொரு துணையுங்காண்கிலேன்
தெய்வமே
வஞ்சனேனுனை நான்மறக்கினும் வழுத்துநா நமச்சிவாயவே 4

பொய்யைமெய்யென நம்புவேன் புறங்கூறுவேன்
புலாலுண்ணுவேன்
நையமற்றவர் பேசுவேன்நல்ல வார்த்தையொன்று முரைத்திடேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யவேவழி ஒன்றுங்காண்கிலேன் உதவிதந்தெனை யாளுவாய்
தெய்வமேயுனை நான்மறக்கினுஞ் செப்புநா நமச்சிவாயவே 5

மெய்யரும்பி விதிர்விதிர்க்கிலேன் மேல்விளைவ தறிகிலேன்
கைதொழுதுநின் பாதபங்கயம் கசிந்துநான்தினம்
தொழுகிலேன்
பொய்யனேன்மலக் கூடுகாத்துப் புலம்பியேதிரி கின்றனன்
ஐயனேயுனை நான்மறக்கினும் அறையுநா நமச்சிவாயவே 6

ஆறுதல்பெற அடியர்பாற்சென் றவர்பணிவிடை ஆற்றிலேன்
மாறுகொள்புலன் வழியிற்சென்று மயங்கினேன்
மயங்காமலே
தேறுதல்தர என்னிடம்வரச் சித்தமில்லையோ தெய்வமே
கூறனேயுமை நான்மறக்கினுங் கூறுநா நமச்சிவாயவே 7

அப்பர் சுந்தரர் மாணிக்கர்தமக் கருளருளிய அத்தனே
முப்புரமெரி செய்தமூர்த்தியே மூவர்போற்றும்
முதல்வனே
ஒப்பிலாதவொ ருவனேயுமை பாகனேயுறு துணைவனே
அப்பனேயுனை நான்மறக்கினு மரற்றுநா நமச்சிவாயவே 8

ஓடுகங்கை யுடன்மதிகொன்றை யுரகம் வைத்த சடையனே
பாடுவார்பசி நோய்வறுமை பகைத்திடாவண்ணம்
அருள்செய்வாய்
தேடுவார்தங்கள் இதயமாமலர் தினமும்வாழ்ந்திடு தெய்வமே
நாடினேனுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே 9

பாலன்மார்க்கண்டன் பரிந்துவேண்டிடப்பாய்ந்து வந்திட்ட
கூற்றன்தன்
காலனேகொடுங் காமன்மேனி தழலெழச் செய்த கர்த்தனே
மாலயன் முன்னர் மாப்பெருஞ்சோதி வடிவமாய்நின்ற
மறையவா
ஞாலனேயுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்பேனோ குருநாதன் தன்னை

*நேரிசை வெண்பா*

இல்லையென் னாமல் இரப்போர்க்கொன் றீவரேல்
தொல்வினை யெல்லாந் தொலைந்துபோம் – நல்லைக்
குருநாதன் கூறினான் பொல்லாப்பிங் கில்லை
உருகாதோ நெஞ்ச முவந்து 1

உண்மை முழுதுமென் றோதுங் குருநாதன்
தன்னை மறப்பேனோ தாரணியில் – பின்னையினித்
துஞ்சல் பிறப்புண்டோ சோர்வச்சந் தாமுண்டோ
கஞ்சமலர்த் தாளென்றுங் காப்பு 2

காக்குந் திருவடிகள் எந்நாளு மென்மனத்தில்
பூக்கும் பொறிவழியே போகாமல் – நோக்குமென்றும்
தேக்குஞ் சிவானந்தத் தேனமுதை யுண்டுமனம்
நீக்கமின்றி நிற்கும் நினை 3

நினைக்கு மடியாரை நீயேநா னென்றே
அணைக்குந் திருக்கரந்தா னன்னே – கனைக்குங்
கடல்சூழ் கவினிலங்கைக் கார்சூழ்நல் லூரான்
தொடுக்கும்வல் வேலைத் துதி 4

துதிக்க மதிதந்த தூயோன்றன் பாதம்
துதிக்க வினைகள் துகளாம் – மதிக்கருளும்
ஐயன் திருமதலை ஆறுமுகன் வீதியிலே
தெய்வமென நின்றான் தெளி 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயப் பத்து

அடியவர் மனத்தைநீங்கா அப்பனே கருணைவாழ்வே
வடிவுடை மழுமானேந்தும் வள்ளலே நமச்சிவாய 1

ஆக்கையே கோயிலாக வகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும்நிற்கும் நிமலனே நமச்சிவாய 2

இணையடி பணிவார்தம்மை யின்பவீ டடையச்செய்யுந்
துணைவனே சோதிவெற்பே தூயனே நமச்சிவாய 3

ஈசனே யெம்மைநீங்கா இறைவனே யிமையோர்போற்றும்
வாசமார் கமலபாதா வள்ளலே நமச்சிவாய 4

உள்குவா ருள்ளத்தெல்லாம் உடனிருந் தறியுந்தேவே
கள்ளுலாங் குழலாள்பாகா கடவுளே நமச்சிவாய 5

ஊமைபோ லிருந்தேயுண்மை யுணருவார் தங்கட்கெல்லாம்
தாயைப்போ லருளைச்செய்யுஞ் சங்கரா நமச்சிவாய 6

எண்ணுவா ரெண்ணந்தோன்று மிடமெனப் பெரியோருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே நமச்சிவாய 7

ஏகம்ப மேவியந்த ஏந்திழை கலக்கந்தீர்த்த
ஏகனே யெல்லாம்வல்ல எந்தையே நமச்சிவாய 8

ஐயந்தீர்த் தடியேன்றன்னை யன்றுநல் லூரிலாண்ட
துய்யனே துரியவெற்பே சுந்தரா நமச்சிவாய 9

ஒன்பதுவாய்த் தோற்பைதன்னில் உயிரடங்கி நிற்கநல்ல
அன்புசெய் தெய்வமேயென் அமுதமே நமச்சிவாய 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாய மாலை

சிவநெறிச் செல்வர்தங்கள் சிந்தையே கோயில்கொண்ட
உவமையில் லாதவொன்றே உமைபங்கா நமச்சிவாய 1

தேகம்நீ யல்லவென்ற திடமெனக் கருளிப்பொல்லா
மோகத்தை முனிந்தாட்கொண்ட முதல்வனே நமச்சிவாய 2

தத்துவந் தொண்ணூற்றாறுஞ் சடமெனக் காட்டி யென்னைத்
தத்துவா தீதனாக்குந் தாணுவே நமச்சிவாய 3

புலன்வழிச் செல்லும்பொல்லாப் புந்தியை நீக்கியாண்ட
விமலனே விண்ணோர்போற்றும் வித்தகா நமச்சிவாய 4

ஆதார மாறுந்தாண்டி யப்பாலே சென்றபேர்க்குப்
பாதார விந்தமீந்த பரமனே நமச்சிவாய 5

சூதான வெளியிலென்னைச் சுகம்பெற நிறுத்திவைத்த
வேதனே விண்ணோர்போற்றும் வேந்தனே நமச்சிவாய 6

தேடிநான் காணும்வண்ணந் திருக்கோலங் காட்டியென்னைக்
கூடியே யடிமைகொண்ட கொற்றவா நமச்சிவாய 7

நாடியோ ரிரண்டினாலும் நடந்திடும் வாசிதன்னை
நீடிய சுழுமுனைக்குள் நிறுவினாய் நமச்சிவாய 8

காலைநீ தூக்கியாடுங் காட்சியைக் கண்டபேர்கள்
வேலைசூழ் நிலத்தில்வந்து வீழ்வரோ நமச்சிவாய 9

காயமே கோயிலாகக் கண்டிடும் மாந்தருக்குத்
தாயகம் நீயேயன்றோ சங்கரா நமச்சிவாய 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தாண்டகம் ~ I

தேனுந்து முக்கனித்தீஞ் சுவையர் போலும்
சிவகாமி யம்மையிடப் பாகர் போலும்
வானுந் திசையெட்டு மானார் போலும்
மறிகடலு மதிகதிரு மானார் போலும்
தானும்நானு மொன்றா யிருப்பார் போலும்
சாதலொடு பிறத்தலுந் தவிர்ந்தார் போலும்
மானும் மழுவுந் தரித்தார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றாரே 1

ஆயிரந் திருநாம முடையார் போலும்
அஞ்செழுத்து மெட்டெழுத்து மானார் போலும்
தீயினும் மேனி சிறந்தார் போலும்
சென்னிமிசைக் கங்கையினைச் செறித்தார் போலும்
தாயினும் நனிமிக்க வினியார் போலும்
சாமகா னப்பிரிய முடையார் போலும்
நாயினுங் கடையேனை யாண்டார் போலும்
நன்மையொடு தீமையொன்று மில்லார் தாமே 2

எல்லாஞ் செயவல்ல சித்தர் போலும்
ஏக மனேகமாய் நின்றார் போலும்
கல்லார்க்குங் கற்றார்க்கு மருள்வார் போலும்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
சொல்லாலே சும்மாவிருக்க வைத்தார் போலும்
சுருதிமுத லாகமங்கள் காணார் போலும்
எல்லாமா யல்லவுமா யிருந்தார் போலும்
என்னிதயம் நீங்காத விறைவர் தாமே 3

சிரித்துப் புரமூன்றுஞ் செற்றார் போலும்
திருவெல்லா மொருங்கே திரண்டார் போலும்
அரிக்கு மயனுக்கு மெட்டார் போலும்
ஆவ தழிவ தில்லார் போலும்
கரிக்குரு விக்கரு ளீந்தார் போலும்
காட்டானைத் தோலுரித்து மகிழ்ந்தார் போலும்
மரித்தல் பிறத்த லில்லார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றாரே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்தீகால் வானமெலா மானார் போலும்
மாசில்லாச் சோதியாய் நின்றார் போலும்
கண்முதலா மிந்திரிய மானார் போலும்
காண்பவனுங் காட்சியு மானார் போலும்
எண்ணில் சமயங்க ளானார் போலும்
என்னையென்னா லறிவித்த இறைவர் போலும்
மண்ணிலினிப் பிறவாமற் காத்தார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றாரே 5

மந்திரமுந் தந்திரமும் ஆனார் போலும்
மறைநான்குஞ் சிவாகமமும் ஆனார் போலும்
சந்திரனுஞ் சூரியனும் ஆனார் போலும்
தந்தைதாய் தமர்மைந்தர் ஆனார் போலும்
இந்திரனுந் தேவர்களும் ஆனார் போலும்
இருடிகணஞ் சிவகுழாம் ஆனார் போலும்
வெந்திறலும் விளையாட்டும் ஆனார் போலும்
விரிபொழில்சூழ் யாழ்ப்பாணங் கோயி லாரே 6

பொன்போலுந் திருமேனி யுடையார் போலும்
பூதகணஞ் சூழ வருவார் போலும்
மின்போலும் இடையுமையாள் பாகர் போலும்
விடையேறிப் பலிகொள்ளும் விகிர்தர் போலும்
என்போலும் அடியார்மேல் அன்பர் போலும்
எப்பொருளுந் தாமாய் இருப்பர் போலும்
அன்பில்லார் தம்மை யடையார் போலும்
அணிபொழில்சூழ் இலங்கைநகர் அத்த னாரே 7

## திருத்தாண்டகம் ~ 2

இருநிலனோ டிரவிமதி யாயி னான்காண்
என்னிதயம் நீங்காத இறைய வன்காண்
அரும்பொன்காண் அம்மைகாண் அப்பன் றான்காண்
அன்றுமின்று மென்றுமப் படியுள் ளான்காண்
தருமமே யுருவாகச் சமைந்த வன்காண்
தன்னொப்பா ரில்லாத தத்து வன்காண்
அருவன்கா ணுருவன்கா ணருவுருவ மாய
அன்பன்கா ணவனுயிருக் குயிரா னானே 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான்காண் பிறப்பிறப்பில் லாத வன்காண்
பேச்சிறந்த பெரியான்காண் பெருமுடியு மடியுங்
கருமாலும் நான்முகனு மறியா தான்காண்
கங்கைமதி யணிந்தான்காண் கசிந்து போற்றும்
திருவாளர் சித்தத்துட் டித்திப் பான்காண்
திருவரையை யெடுத்ததிற லரக்கன் றன்னைப்
பெருவிரலா லடர்த்தபின் னருள்செய் தான்காண்
பிஞ்ஞகன்காண் பிரியாதென் னுள்ளத் தானே 2

நம்பன்காண் நரியெல்லாம் பரிசெய் தான்காண்
ஞாலமுதற் றத்துவங்க ளாயி னான்காண்
செம்பொனம் பலத்திலே யாடு வான்காண்
திகழ்சூலப் படையன்காண் திருநீற் றான்காண்
உம்பரெல்லாம் போற்றவிடை யூரு வான்காண்
ஒருவன்காண் உள்ளத்தி னுள்ளே நின்ற
இம்பருளார் காதலிக்கு மெளியார்க் கென்று
மெளியான்கா ணவனென்ற னிதயத் தானே 3

பண்ணவன்கா ணிசையவன்காண் பரவு வார்கள்
கண்ணவன்காண் கங்காள வேடத் தான்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் எங்கு மான
விண்ணவன்காண் விளங்குமதிச் சென்னி யன்காண்
பெண்ணவன்காண் ஆணவன்காண் பெருமான் தான்காண்
மண்ணவன்காண் மாருதம்வா னாயி னான்காண்
அண்மையன்காண் சேய்மையன்காண் அன்று மின்றும்
உண்மையன்காண் என்னுயிருக் குயிரா னானே 4

வடிவுசேர் மழுவேந்தி யாடு வான்காண்
மாணிக்க வாசகனுக் கருள்செய் தான்காண்
கடிகமழுங் கொன்றையங் கண்ணி யன்காண்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டி னான்காண்
படிபுகழும் பாசுபத வேடத் தான்காண்
பகலோ டிராவறியாப் பண்பி னான்காண்
நெடியமா லயன்றேட நீண்டு நின்ற
நிறைசோதிப் பிழம்பன்காண் நெஞ்சுள் ளானே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தாண்டகம் ~ 3

நீறணிந்த திருமேனி பொலிந்து தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் மதியந் தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றும் அம்மை தோன்றும்
அரைக்கசைத்த புலியாடை அசைந்து தோன்றும்
ஏறமர்ந்த எழில்தோன்றும் இசையுந் தோன்றும்
எடுத்ததிருப் பதந்தோன்றும் மழுமான் தோன்றும்
பேறளிக்குந் திருக்கரத்தின் பெருமை தோன்றும்
பிரியாமல் என்னையாள் பெருமா னார்க்கே 1

கறுத்திருண்ட கண்டத்தின் பெருமை தோன்றும்
கதிகாட்டுங் கண்ணிணைகள் கலந்து தோன்றும்
செறுத்தவர்தம் புரமட்ட சிரிப்புத் தோன்றும்
தேவர்கணம் சூழ்ந்திருக்கும் சிறப்புத் தோன்றும்
ஒறுத்தவர்த மென்பெல்லா முடம்பிற் றோன்றும்
ஒளிதோன்றும் ஓங்கார வாசி தோன்றும்
சிறுத்தவிடை யுமையாளோர் பாகந் தோன்றும்
சிவசிவா சீவன்சிவ னெனக்கண் டேனே 2

## திருத்தாண்டகம் ~ 4

பாரொடு விண்ணாய்ப் பரந்தான் கண்டாய்
பாவிப்பார் பாவம் அறுப்பான் கண்டாய்
நீரொடு மதிசூடி நின்றான் கண்டாய்
நேரிழையாள் ஒருபாகங் கொண்டான் கண்டாய்
காரொடு நேர்பொருவும் கண்டன் கண்டாய்
கருதுவார் கருத்தினி லிருப்பான் கண்டாய்
சீரொடுசேர் திரையிலங்கை வாழ்வான் கண்டாய்
சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே 1

பத்திசெய்யும் உத்தமர்தம் மனத்தான் கண்டாய்
பண்டுகடல் நஞ்சுண்ட கண்டன் கண்டாய்
நித்தியனாய் நின்மலனாய் நிற்பான் கண்டாய்
நினைந்துருகும் அடியவரை யாள்வான் கண்டாய்
தித்திக்கும் தேனொடுபா லானான் கண்டாய்
செழுவரையை வில்லாக வளைத்தான் கண்டாய்
எத்திசையும் புகழிலங்கை வாழ்வான் கண்டாய்
என்னையென்றும் பிரியாத செல்வன் றானே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லானை கன்னலுண்ணச் செய்தான் கண்டாய்
கயிலாயம் எடுத்தவனை நெரித்தான் கண்டாய்
எல்லாமா யல்லவுமா யிருப்பான் கண்டாய்
என்னையொரு கணமேனும் பிரியான் கண்டாய்
சொல்லாலே துதிப்பவர்தந் துணைவன் கண்டாய்
தொல்லைநாட் செழுஞ்சுடராய் நின்றான் கண்டாய்
செல்லாரு மிலங்கையிலே வாழ்வான் கண்டாய்
சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே 3

## திருத்தாண்டகம் – 5

நிற்பனவும் நடப்பனவு மானாய் நீயே
நீங்காதென் னுயிருக்கோ ருயிரும் நீயே
பற்பலவாஞ் சமயமெலா மானாய் நீயே
பழவடியா ரடிக்குடியாய் நின்றாய் நீயே
கற்பனைக ளெல்லாமா யல்லாய் நீயே
கங்குல்பக லறியாத கடவுள் நீயே
அற்புதமே யற்புதமே யென்னி னல்லால்
அடியேன்யா னென்சொல்லி யேத்து கேனே 1

கண்ணுக்குக் கண்ணாகி நின்றாய் நீயே
காமனையுங் கண்ணழலா லெரித்தாய் நீயே
விண்ணுக்கும் விளங்கொளியாய் நின்றாய் நீயே
வேதாந்தத் துட்பொருளு மானாய் நீயே
பண்ணுக்கோ ரிசையாகி நின்றாய் நீயே
பற்றற்றார் பரவுகின்ற பொருளும் நீயே
எண்ணெழுத்துச் சொல்லாகி நிற்பாய் நீயே
என்னரசே யென்சொல்லி யேத்து கேனே 2

## திருத்தாண்டகம் – 6

ஆறணிந்த திருச்சடையா யமரர் கோவே
அங்குமிங்கு மெங்குநீ அரசே ஐயா
நீறணிந்த திருக்கோல முடையாய் நின்னை
நேரிழையாள் பாகமாய்க் காணப் பெற்றால்
தாரணியிற் பிறவியென்னுந் தளைகள் போமே
சாயுச்சிய பதவியுந்தான் தப்பா தெய்தும்
ஆரறிய வல்லாருன் பெருமை தன்னை
அப்பனே ஆருயிரே ஆளு வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் நீயே

அப்பனும் அம்மையும் நீயே அரிய சகோதரர் நீயே
ஒப்பில் மனைவியும் நீயே ஓதரும் மைந்தரும் நீயே
செப்பில் அரசரும் நீயே தேவாதி தேவரும் நீயே
இப்புவி யெல்லாம் நீயே என்னை யாண்டதும் நீயே 1

ஆறு வைத்ததும் நீயே அம்பிகை பாகனும் நீயே
கூறும் வேதமும் நீயே குற்றங் குணமெல்லாம் நீயே
நீறு பூசினோன் நீயே நெற்றிமேற் கண்ணனும் நீயே
பேறு பெற்றவன் நீயே பின்னென்னை யாண்டதும் நீயே 2

இந்திர னாதியோர் நீயே இருடி கணங்களும் நீயே
சந்திரன் சூரியன் நீயே தாணுவாய் நின்றதும் நீயே
மந்திர தந்திரம் நீயே மறுமையும் இம்மையும் நீயே
சுந்தர மாவதும் நீயே துணையா யிருப்பதும் நீயே 3

ஈறில் லாதவன் நீயே எந்தை பெருமானும் நீயே
மாறில் லாதவன் நீயே மனத்திலி ருப்பதும் நீயே
கூறில் லாதவன் நீயே கொள்கைக ளெல்லாம் நீயே
தேறித் தெரிவதும் நீயே திருத்த மாவதும் நீயே 4

உண்மையும் இன்மையும் நீயே ஊனும் உயிர்களும் நீயே
அண்மையும் சேய்மையும் நீயே அன்பா யிருப்பதும் நீயே
பண்ணு மிசையும் நீயே பாட்டிற் பொலிவதும் நீயே
எண்ணு மெழுத்தும் நீயே என்துணை யாவதும் நீயே 5

ஊதிய மாவதும் நீயே உயிருக் குறுதுணை நீயே
நீதி யதிபதி நீயே நேற்றின் றாவதும் நீயே
ஓதி யுணர்வதும் நீயே உத்தமர் சித்தமும் நீயே
சாதி சமயமும் நீயே தானென்னை யாண்டதும் நீயே 6

எல்லாப் பொருள்களும் நீயே ஏந்திழை பங்கனும் நீயே
வல்லமை யுள்ளதும் நீயே வாழ்நாட்க ளாவதும் நீயே
பல்லோர் புகழ்வதும் நீயே பரிமேல் வந்ததும் நீயே
நல்லோர் உள்ளமும் நீயே நானா யிருப்பதும் நீயே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றில் வருவதும் நீயே என்புக லாவதும் நீயே
கூற்றை யுதைத்ததும் நீயே குருவாய் வருவதும் நீயே
சாற்ற வரியதும் நீயே தானா யிருப்பதும் நீயே
போற்ற வரியதும் நீயே புத்தியி லுள்ளதும் நீயே 8

ஐயங் கொடுப்பதும் நீயே ஐயம் ஏற்பதும் நீயே
வையக மெல்லாம் நீயே வாணுதல் கணவனும் நீயே
பையர வணிவதும் நீயே பரவ வினியதும் நீயே
செய்ய மேனியன் நீயே சித்தத்தி லுள்ளதும் நீயே 9

ஒன்றா யிருப்பதும் நீயே ஊர்பேரில் லாததும் நீயே
நன்றா யிருப்பதும் நீயே நாளை யாவதும் நீயே
குன்றுங் கடலும் நீயே குவலய மெல்லாம் நீயே
மன்றுள் நிற்பதும் நீயே மாசில் லாததும் நீயே 10

ஓமெனும் ஒண்பொருள் நீயே உருவ மற்றதும் நீயே
ஆமென நிற்பதும் நீயே அல்ல வென்பதும் நீயே
தாமத மற்றதும் நீயே சத்திய முள்ளதும் நீயே
சேம முள்ளதும் நீயே சீவர்க ளெல்லாம் நீயே 11

ஔவிய மற்றதும் நீயே ஐந்தெழுத் தானதும் நீயே
நவ்வி யுடையதும் நீயே நானாய் நிற்பதும் நீயே
செவ்விய மனமெலாம் நீயே சிந்தையில் நிற்பதும் நீயே
திவ்விய மாவதும் நீயே சீடனுங் குருவும் நீயே 12

---

## அன்பில்லேன்

அன்பில்லேன் பொறுமையில்லேன் அடியார்தம் உறவுமில்லேன்
என்புருகப் பாடுகில்லேன் என்னையுமோர் பொருட்படுத்தி
மண்ணுலகில் மானிடனாய் மறைந்துவந்து வழிகாட்டி
இன்னல்தவிர்த் தாண்டுகொண்டான் எழிலாரு மிலங்கையிலே 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமில்லா மூர்க்கரொடுங் கூடியே திரிகின்ற
மணமில்லா முருக்கமலர் அனையேனை மகிழ்ந்துவந்து
தினையளவு போதினிலே சிவமாக்கி யாண்டுகொண்ட
இணையில்லா இறையவனை இலங்கைநகர் கண்டேனே 2

என்னையெனக் கென்னாலே அறிவித்த வெம்பெருமான்
அன்னையினும் மிகவினிய னாருயிருக் குறுதுணைவன்
பொன்னைநிகர் மேனியான் பூங்கமலத் திருத்தாளான்
தென்னைபனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே 3

நஞ்சைவென்ற கண்டத்தான் நால்வேதம் நவில்வாயான்
பஞ்சைவென்ற மெல்லடியாள் பாவையுமை பாகத்தான்
அஞ்சைவென்ற வடியார்கள் அகங்கோயில் கொண்டபிரான்
மஞ்சைவென்ற மலைபொலியும் இலங்கைநகர் கண்டேனே 4

ஆவதொன்று மறிகில்லேன் அந்திசந்தி தொழுகில்லேன்
சாவதையுங் கருதுகிலேன் சஞ்சலமே மிகவுள்ளேன்
போவதுவும் வருவதுவும் இல்லாத புண்ணியனே
தேவர்குழு(உத்) தொழுதேத்துஞ் சீரிலங்கை கண்டேனே 5

இடுவதுவோ சிறிதுமிலேன் எவர்மாட்டு மன்புமிலேன்
சுடுவதுபோற் சொல்லவல்லேன் தூயோரைப் பணிகில்லேன்
கெடுவதுவோ மிகவுள்ளேன் கேவலமாய்க் கிடக்கின்றேன்
நடுவிகவா நாயகனே நம்மையாள் வதுகடனே 6

அன்பிலேன் இரக்கமில்லேன் அடியார்பால் உறவுமில்லேன்
என்பெலா முருகநின்றிங் கேத்திடேன் பாடேனந்தோ
துன்பமே மிகவுமுள்ளேன் சோதியே யமரரேறே
இன்பமே இலங்கைவாழும் இறைவனே யெனையாள்வாய் 7

ஆறணி சடையினானே அழகுசேர் மேனியானே
நீறணி நிமலாநெற்றிக் கண்ணனே நேரிலானே
ஏறமர் செல்வாவுன்னை ஏத்தியான் பாடமாட்டேன்
ஈறிலா வளங்கள்சேரும் இலங்கைமா நகருளானே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராயிர முடையான்

பேராயிர முடையான்பிறை சேருந்திருச் சடையான்
காரார்குழ லுமையாள்திருக் கணவன்கறைக் கண்டன்
ஆராகிலும் நினைவார்தமக் கருள்செய்கின்ற அப்பன்
சீராரிலங் கைமேவிய சிவனாரிவ ராமே 1

மண்ணாகிய பூத்மைந்தும் வகுத்தான்மறை தொகுத்தான்
எண்ணாதவர் புரமூன்றினை எரித்தான்கரி யுரித்தான்
பெண்ணாகிய உமையம்மையைப் பிரியானெனக் குரியான்
விண்ணோர்தொழு மிலங்காநகர் விமலரிவ ராமே 2

வண்டுமது வுண்டுகளி கொண்டுதுயில் கின்ற
கொண்டல்தவழ் மண்டுபொழில் குன்றமெங்குங் கொழிக்கும்
தண்டரள மோடுமணி எண்டிசையுந் தயங்க
அண்டர்தொழு மிலங்கைநகர் அண்ணலிவ ராமே 3

---

## திருப்பள்ளியெழுச்சி

அன்னை தந்தையர் மைந்தர்கள் ஒருபால்
அருமைசேர் சோதரர் உறவினர் ஒருபால்
பொன்னணி சிறுமியர் சிறுவர்கள் ஒருபால்
புகழ்பவர் இகழ்பவர் போபவர் ஒருபால்
சென்னியி லஞ்சலி கூப்பினர் ஒருபால்
தேசத்தில் திரிந்து இரப்பவர் ஒருபால்
கண்ணிணை கண்டு களிக்கச்செய் பரனே
கடவுளே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமந் திரஞ்சொல்லும் வேதியர் ஒருபால்
வேள்விகள் செய்ய விழைபவர் ஒருபால்
பூதபெள திகங்களை ஆய்பவர் ஒருபால்
புகைவண்டி யமைக்கும் பொற்பினர் ஒருபால்
கீதத்தைப் பரவச்செய் யாழினர் ஒருபால்
கேட்டு மகிழ்ந்திருக்கும் கிழவர்கள் ஒருபால்
ஈதனைத்துஞ் செய்துஞ் செய்யாம லிருக்கும்
இறைவனே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே

---

## அஞ்சுவதும் இல்லை அஞ்சவருவதும் இல்லை

அஞ்செழுத்துப் பொருளானும் அன்பர்கடம் அகத்தானும்
கொஞ்சும்பெண் பாகத்தினானும் கூன்பிறைச் சென்னியினானும்
சஞ்சலந்தீர்க்க வல்லானும் தாமேயெல்லா மாயினானும்
அஞ்சலென் றென்னையாண்டானே யதியற்புதமற்புதந்தானே
அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்சவருவது மில்லை 1

நீறணி மேனியினானும் நெற்றிமேற் கண்ணுடையானும்
ஆறணி செஞ்சடையானும் அம்பல நாடகத்தானும்
ஏறமர்ந் தேறவல்லானும் ஏந்திழை பாகத்தினானும்
கூறருங் கோலத்தினானுங் கொண்டானெனைத் தொண்டனாக
அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்சவருவது மில்லை 2

பாரொடு பூதங்களாகிப் பரிதிமதி யிவையாகிக்
காரொடு மலைகடலாகிக் கண்ணுக்குக்கண் ணுந்தாமாகி
ஏர்பொலி யேறதொன்றேறி ஏந்திழைபாகத் தனையான்
நீர்பொலி பூக்கொடுபோற்றி நினைந்தேன் பிறவி தீர்ந்தேனே
அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்சவருவது மில்லை 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகநெறி

இராகம் – மாண்டு                                   ஏகதாளம்

இடைபிங் கலையென்னும் இருவாச லடைத்துவிட்டுக்
கடையிற் சுழுமுனையைக் கபாலந் திறந்துகொண்டு – தங்கமே
காசிதேசம் போவோம் வாராய் 1

நாசி நுனியிலே நாட்டத்தை வைத்துவிட்டு
வாசிக் குதிரையேறித் – தங்கமே
மாறிமாறிச் சிமிட்டாக்கொடு 2

ஆசுகவி மதுரகவி அழகான சித்ரகவி
பேசுந்திறம் உண்டாகும் – தங்கமே
பிராணாயாமம் செய்திடெடி 3

எட்டுத்தர முச்சுவாசித்து எண்ணெட்டுத் தரம்நிறுத்தி
எண்ணிரண்டு நிச்சுவாசஞ்செய் – தங்கமே
இ·தோர்வகைப் பிராணாயாமம் 4

பாலும் பழமுந்தின்று பகல்நித்தி ரையைத்தள்ளு
பாலனைப்போல் தேசுண்டாகும் – தங்கமே
பரமனைநீ பத்திசெய்வாய் 5

இரவுபக லில்லாத ஏகாந்த வீட்டினிலே
பரவிப் பணிந்திடெடி – தங்கமே
பாரும்விண்ணும் உன்கைவசம் 6

பன்னிரண்டு காற்புரவி பக்குவமாய் நீயேறி
உன்னிரண்டு கால்கீழே – தங்கமே
உறுதியாய் அடக்கிவிடு 7

ஆறு படிதாண்டு அப்பாலே வெள்ளிப்படி
அதுவும்நீ தாண்டிவிட்டால் – தங்கமே
ஆருனக்கு நிகராவார் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவருமுன் ஏவல்செய்வார் தெய்வமுன்னை விரும்பிவிடும்
கைவல்ய முத்தியெடி – தங்கமே
கண்ணைத் திறந்துவிடு 9

கூறும்நாவே முதலாகக் கூறுங் கரணமெல்லாம்
கோமானுக் கொப்புக்கொடு – தங்கமே
குறைவொன்றும் வாராதெடி 10

சீமானைப் போலிருந்து செகத்தினிலே வாழ்ந்திடலாம்
ஓம்ஆம்ஊ மென்றுசொல்லி – தங்கமே
உருவேற்றி நின்றிடெடி 11

உருவேற வேசெபித்து ஓங்காரக் கம்பத்திலே
திருவேற நின்றிடெடி – தங்கமே
சீவன்சிவன் ஆச்சுதெடி 12

ஆச்சுதென்று நீசொல்லி அசட்டைசெய் யாதேயெடி
போச்சுதெடி யோகசித்தி – தங்கமே
பூசைசெய்ய மறவாதே 13

மறந்தாலும் பிறந்தாலும் மாண்டாலும் இருந்தாலும்
மறவாத தெய்வமெடி – தங்கமே
மற்றொன்றுமஞ் சாதேயெடி 14

நாமுமே நாமாக நமக்குள்ளும் நாமாகத்
தாமுமே தாமாகத் – தங்கமே
தனித்திருந்து பார்த்திடெடி 15

தேவர்கடம் இருப்பிடமும் திக்குத் திகாந்தமெல்லாம்
இச்சபையில் உள்ளதெடி – தங்கமே
இருந்திளைப் பாறிடெடி 16

ஒன்றா யிரண்டாகி ஒருமூன்றாய் நான்கைந்தாய்
நின்ற பராபரத்தைத் – தங்கமே
நீயென்று உணர்ந்திடெடி 17

கண்டுசர்க் கரைதேனும் கனிரசமும் சேர்த்தொன்றாய்
நின்றசுவை தெவிட்டுமெடி – தங்கமே
நிறைந்தசிவந் தெவிட்டாதெடி 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலங்கள் மூன்றினிலும் மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டவர்கள் சொல்லாரெடி – தங்கமே
காட்சியெல்லாங் கடந்ததெடி 19

ஆறத்து வாக்களுக்கும் அப்பாலாய் இப்பாலாய்
மாறாமல் இருக்குதெடி – தங்கமே
மதிரவியை யொன்றாக்கெடி 20

முழுதுமுண்மை ஆச்சுதெடி மூச்சுப்பேச்சுப் போச்சுதெடி
பழுதின்றி வாய்ச்சுதெடி – தங்கமே
பாராமற் பார்த்திடெடி 21

ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியும் நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை – தங்கமே
ஆன்மாநீ அறிந்திடெடி 22

என்னையுடை யானவன் தன்னையுடை யேனடியேன்
பின்னைப் பிறப்பிறப்பும் – தங்கமே
பேய்த்தேர்கனா வன்றோவெடி 23

முன்னை வினைவந்து மூண்டுதே யென்பார்கள்
தன்னை யறியாதார் – தங்கமே
சஞ்சலத்தை நீக்கிவிடு 24

சஞ்சலத்தை நீக்கிவிடு தாமரைத்தாட் கபயம்புகு
நெஞ்சில்வஞ்சம் வையாதே – தங்கமே
நித்தியமுன் வீடாமறி 25

பொன்னின் குடத்துக்கெவர் பொட்டிட்டுப் பார்த்திடுவர்
உன்னை மறவாதே – தங்கமே
ஊரூராய்த் திரியாதே 26

ஊருமிலான் பேருமிலான் உடன்பிறந்தார் சுற்றமிலான்
ஆருமி லானவனைத் – தங்கமே
ஆர்தா னறிவாரெடி 27

விண்ணும் மண்ணுந் தண்ணீரும் விளங்கொளியும் மாருதமும்
கண்ணுதலின் வடிவமெடி – தங்கமே
காண்பாரார் காட்டாவிட்டால் 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமே! எல்லாஞ் சிவ மயமே

எட்டாத கொப்புக்கு ஏணிவைத்துப் பூப்பறித்து
முட்டாத பூசைசெய்தேன் – தங்கமே
முன்னுமில்லைப் பின்னுமில்லை 1

அட்டாங்க யோகம்விட்டேன் ஆதாரம் ஆறும்விட்டேன்
மட்டாருங் குழலாளே – தங்கமே
மருமமெல்லாங் கண்டேனடி 2

கட்டாத மனத்தைக்கட்டி காலாலே கனல்வீசி
நிட்டையிலே நானிருந்தேன் – தங்கமே
நீநானங்கு இல்லையடி 3

தட்டா னிடத்துச்சென்று தங்கத்தாலே தாலிசெய்து
கட்டாமல் கட்டினேன்டி – தங்கமே
காரணத்தைக் கண்டேனடி 4

நட்டார் ஒருவரில்லா நாதாந்த மேடையேறிச்
சிட்டாய சிட்டனுக்கே – தங்கமே
திருவிருந் தானேனடி 5

பட்டால்பா வாடைசெய்து பதிபசு பாசமென்னும்
மொட்டாக்கைப் போட்டுக்கொண்டேன் – தங்கமே
முழுவதும் உண்மையடி 6

இட்டார் இடாரென்னும் இகழ்புகழைத் தள்ளிவிட்டு
முட்டாத பூசைசெய்தேன் – தங்கமே
மூன்றுமொன் றாச்சுதடி 7

எட்டாத பேரின்பம் என்னைவி ழுங்கிற்றடி
கிட்டாது முட்டாதடி – தங்கமே
கேட்டு மகிழ்ந்திரடி 8

சுட்டாமல் சுட்டிடடி சோதிசிவ ரூபமடி
கிட்டாத பொருளென்று – தங்கமே
கீழ்நோக்கிப் பாராதே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாத கொப்பினிலே இருக்குதடி தேனமிர்தம்
தட்டாமல் சாப்பிடடி – தங்கமே
சமனாவார் ஒருவரில்லை 10

பத்தும் படிப்போர்க்குப் பாக்கியமுஞ் சிலாக்கியமும்
இத்தரையி லுண்டாமடி – தங்கமே
எல்லாஞ் சிவமயமே 11

## தியானமாலை

*கலிவிருத்தம்*

அகரத்தி லுகர மகர மமரும்
உகரத்தி லகரம் மகர முறையும்
மகரத்தி லகர வுகரம் மயங்கும்
சிகரத்தில் கண்டு தெளிந்தவன் சித்தனே 1

ஆதார வாதேய முழுது மானவன்
மாதா நாதனாய் மன்னி நின்றவன்
பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன்
பாதார விந்தம் பரவிக்கண் டேனே 2

இன்றுளோர் நாளை யில்லாமை கண்டும்
பொன்று முடலைப் பொன்போற் போற்றி
நன்றுதீ தென்று நாட்டங் கொண்டோர்
என்று காண்பரோ ஈச னிணையடி 3

ஈயாத மாந்தர் இருந்தென் னிறந்தென்
ஓயாக் கவலையி லுடலஞ் சலித்து
மாயா விகார மனைமக்க ளுறவெனும்
பேயாற் பிடிபட்டுப் பிதற்றிமாண் டாரே 4

உம்பர் தலைவனை யூழி முதல்வனை
வெம்பந்தம் நீக்கும் வேதாந்த விளக்கைச்
சம்பந்த மாக்குந் தத்துவா தீதனை
நம்பந்தம் நீக்கி நாங்கள்கண் டோமே 5

ஊரும் பேரு மில்லா ஒருவனை
ஆரு மறியா அறிவுக் கறிவை
நீருந் தீயுங் காலுமா னவனைச்
சாருந் தீருஞ் சஞ்சலம் முற்றுமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னு ளொளியை ஏந்திழை பங்கனை
மின்னுஞ் சடைமுடி விகிர்தனைச் சிவனைக்
கண்முன் றுடைய கடவுளைக் கங்கை
தன்னைவைத் தவனைச் சாருந் தவமதே 7

ஏகநா யகனை எல்லாஞ்செய் சித்தனை
போகநா யகனைப் புணர்முலை பங்கனை
மோகமார் புரத்தை முனிந்த முதல்வனைத்
தேகம் விழுமுன் சிந்தைசெய் வோமே 8

ஐவர்செய் வினையில் அயர்ந்து விடாமல்
பொய்வினை நீக்கிப் புண்ணியந் தேக்கிக்
கையும் மெய்யுங் கலந்து வணங்கி
நையு மன்பில் நான்தொழு தேனே 9

ஒன்பது வாயிலும் ஒக்க வடைத்துநின்
றென்ப துருகி இளகிக் கசிவுற்
றின்ப துன்ப மெல்லாங் கடந்தால்
பொன்பொதி செஞ்சடைப் புனிதன் வருமே 10

ஓங்காரக் கம்பத்தி னுன்னத மேடையில்
பாங்கான வீட்டின் பள்ளி யறையைத்
தூங்காத் திறவுகோல் கொண்டு திறந்தால்
நீங்காச் சிவகதி நிச்சய மாமே 11

ஔவிய நெஞ்சை அறவே யொழித்து
நௌவியு மழுவு மேந்தும் நம்பனைச்
செவ்விதின் வணங்கிற் சித்தி முத்திகள்
எவ்வம தின்றி யெய்திட லாமே 12

அ.ஃ.கா மனத்தா லறிவை யெழுப்பி
வெ.ஃ.காக் குருபதம் மென்மேலும் போற்றி
எ.ஃ.கு போல இளகிக் குழைந்தால்
இ.ஃ.தேபே ரின்பம் இடரிலை யென்றுமே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குல் பகலற்ற காட்சியிற் பிரியார்
எங்குஞ் சிவமென் றறிவா ரிவரே
தங்கும் பிறவியிற் சாராத் தவத்தினார்
எங்குங் கண்ணுற் றிறைஞ்ச லினிதே 14

நமச்சி வாயவே நான்மறை யாகமம்
நமச்சி வாயவே மந்திர தந்திரம்
நமச்சி வாயவே நம்முட லுயிர்பொருள்
நமச்சி வாயவே நற்றுணை யாகுமே 15

நாத னிருப்பது நற்றவர் நெஞ்சிலே
நாத னுரையது நான்மறை யாகமம்
நாதனை நாடினர் ஞான மெய்துவர்
நாதனை நாடி நாமறிந் தோமே 16

நினையும் நினைவும் நீயன்றி வேறில்லை
அனையுஞ் சுற்றமும் அப்பனு மாகிய
தனையறி வார்கள் தற்பர மாவர்
பினையொன்றும் பேச விடமில்லைக் காணே 17

நீயும் நானும் அவனும் அதுவும்
காயுந் தீயும் காலும் வானும்
பேயும் பூதமும் பிரானும் பிறவும்
ஆயும் பொழுதில் அவனாய் விளங்குமே 18

நுண்ணிடை யவளொடு நுடங்கும் பித்தனை
விண்ணிடை விடைமேல் விளங்கு மொருவனைக்
கண்ணிடைக் கண்டு களித்த மானிடர்
மண்ணிடை வராரென வோதும் மறையே 19

நூதன விவேகியர் நுழைந்துங் காண்கிலர்
சீதள கமலச் செல்வனுங் காண்கிலர்
வேத வாகமம் தாமும் விளம்பில
சாதனை யுள்ள சத்துக்கள் காண்பரே 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றி நாட்டத்தர் நிமிர்புன் சடையர்
பெற்றமொன் றேறுவர் பேயுட னாடுவர்
கற்றைவார் குழலுமை காட்சிக் கெளியர்
விற்றூண் ஒன்றில்லா விமல ரிவரே 21

நேச யோகத்தர் நெறியில் லாதவர்
பாச மியல்பாய்ப் பற்றாத பான்மையர்
பேச வொண்ணாப் பெருமையர் பேரிலர்
தாசன் யோகன் தலைவன் இவரே 22

நையும் மனிதர்தம் நானெனு மகந்தையைக்
கொய்யுஞ் சூலப் படையை யுடைய
கையு முடையவன் காலற்குக் காலன்
தெய்வ மிவனென்று சேர்குது மிவன்பதம் 23

நொந்தவர் தம்மை நொடியினிற் காக்கும்
பைந்தொடி உமையாள் பங்கன் துங்கன்
கந்துக மதகரிப் போர்வையன் கறைசேர்
கண்டனண் டத்தவர் காணாக் கடவுளே 24

அந்தியுஞ் சந்தியும் அன்பினி லவனைச்
சிந்தையி னினையச் சிறப்புடை யவராய்ப்
பந்தம் யாவும் பற்றாது ஒழித்து
நந்தா வின்ப நாடடை வாரே 25

## வேறு

இடுக்கண்கள் பலப்பல எய்தியக் காலும்
நடுக்கப் படார்நல் லடியார் ஆதலின்
அடைக்கல மாகவுன் திருவடி அடைந்தேன்
விடைக்கு கந்தவனே இலங்கைநல் வேந்தே 1

அடிக்கடி மிடியால் அயர்வெய்தி னாலும்
பிடித்த மலர்ப்பதம் பேசுவ தல்லால்
அடித்தலம் பெயர்க்கிலேன் அடியவர் மனைதிருப்
பொடிப்புனை இலங்கையெம் பொன்னக ரானே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசல் கண்டு சிறந்திருந் தேனே

இருவாசல் தாளிட்டு இன்பந் தந்த
குருவா சகத்தைக் குறிப்பாய்க் கொண்டு
கருவாசல் காட்டுங் கட்டெலாம் வெட்டித்
திருவாசல் கண்டு சிறந்திருந் தேனே 1

காலணை கோலிக் கருத்தினில் ஈசனை
மேலணை வீட்டில் வெளியாய்க் கண்டேன்
மாலணை யாத மாட்சியைப் பெற்றேன்
காலனை யுதைத்த காரண மிதுவே 2

மூல நிலத்தின் மூட்டிய வங்கியால்
மேலை நிலத்தில் வெண்ணை யுருகிற்று
மூல மலத்தின் முதன்மை கெட்டது
சீல மனைத்துந் தெரிந்துகொண் டேனே 3

பொன்போல் மேனியீர் புரிபுன் சடையீர்
என்போல் எவரும் எளியர் இலரே
துன்பே கவலை தொடரா வண்ணம்
அன்பே வந்திங் கெனையாள் வாயே 4

# எல்லாஞ் சிவன்செயல்

சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெய்யி லெறிப்பது யாராலே
கண்ணிணை காண்பது யாராலே காற்று மடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்க ணடப்பது யாராலே கைக ளெடுப்பது யாராலே
எண்ணிப் பார்நீ யறிவாயே எல்லாஞ் சிவன்செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே சுவாமி வாக்கிது தெரிவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாய்மொழி

*குறள்வெண்பா*

செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்
பொல்லாப் பிலையென்றான் போற்று 1

முழுதுமுண்மை யென்று முனிவனவன் சொன்னான்
எழுத முடியா திதை 2

நாமறியோ மென்னும் நறிய திருவாக்குச்
சேமமுறச் சொன்னான் தெரி 3

முடிந்த முடிபென்று முன்னாளிற் சொன்னான்
அடியார்கள் முன்ன ரவன் 4

இடமகன்ற ஞாலத்தே எத்தனையோ அன்பர்
திடந்தந்து போனார் தெரி 5

தன்னை யறிந்தார் தலையாவர் தாரணியில்
பின்னையவர்க் கில்லைப் பிறப்பு 6

மூன்றுமொன் றான முறைமை யறிந்தவரே
ஆன்றோர்; அவரை யறி 7

அறிவுக் கறிவாகி அப்பாற்கப் பாலாய்க்
குறிகுணம் அற்றோன் குரு 8

கும்பிடுவார் தம்மனத்தைக் கோயிலாய்க் கொண்டுள்ள
தம்பிரான் தானே தலை 9

தலையி லிரந்துண்ணுந் தம்பிரான் றன்னை
அலையா மனத்தா லறி 10

எல்லா ரகத்து மிருந்துநான் நானென்று
சொல்வானைக் கண்டு சுகி 11

கட்டுப்பா டில்லாதார் கானகத்தில் வாழுகின்ற
துட்டவிலங் கொப்பரெனச் சொல் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரையை நீக்கி நினைவாக நிற்பவர்க்குக்
கர்த்தனருள் மேவுமெனக் காண் 13

தத்துவங்க ளாறாறும் தாமல்ல வென்றுகண்டார்
பத்தர்க்குப் பத்தரவர் பார் 14

அண்டபிண்ட மெல்லா மனைத்துஞ் சிவரூபம்
கண்டுதொண்டு செய்வாய் கதி 15

மண்டலம் மூன்றும் மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டு களிப்பாரைக் காண் 16

காணுகின்ற கண்ணிற் கலந்த பெருமானே
நான்நீ அவனென் றறி 17

முத்திக்கு வித்தை முனையிலிட்டுச் சீராட்டும்
பத்தர்களைக் கண்டு பணி 18

சென்றன வாணாட்கள் என்றுநீ தேம்பாதே
என்றென்று முள்ளா யிணங்கு 19

பாலகற்குப் பாற்கடலைப் பாரி லழைத்தபிரான்
கோலமே யாவுங் குறி 20

காலனைக்கா லாலுதைத்தான் காமனையுந் தானெரித்தான்
ஆலமுண்ட கண்ட னறி 21

எல்லாமாய் அன்றி இயங்கா தியங்குகின்ற
வல்லபத்தை யாரறிவார் மன் 22

எங்கேநாம் அங்கே யிறைவன் எனவுணர்ந்தார்
சங்கையின்றிச் சொல்லுவார் தாம் 23

மந்திரமுந் தந்திரமும் வேண்டா மகத்துக்கள்
சுந்தரத் தாளே துணை 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தரேயாவார் பணி

*குறள்வெண்பா*

ஒருபொல்லாப் பும்இல்லை யென்றே யுரைத்தான்
திருவாளன் செல்லப்பன் தேர் 1

முழுவதும் உண்மை எனமொழிந்தான் முன்னாள்
வழுவில்செல் லப்பன் மதி 2

நாமறி யோமென்னும் நல்வாக்கு நல்கினான்
சேமநிதி செல்லப்பன் தேர் 3

ஆரறிவா ரென்ன வுரைத்தவென் னாசானாம்
பாரறியாச் செல்லப்பன் பார் 4

அப்படியே யுள்ளதென் றோதிய நல்லாசான்
ஒப்பிலாச் செல்வன் உணர் 5

ஒருமொழி யாலே யுணர்தற்கு வைத்தான்
கருவழியை மீறினோன் காண் 6

காணுகின்ற கண்ணிற் கலந்துள்ள நல்லாசான்
பேணு மவர்க்குப் பிதா 7

நற்சிந்தை யென்னும் நறுமலர்சேர் நன்மரமே
கற்பக தாருவெனக் காண் 8

உண்ணவே யுண்ணத் தெவிட்டாத நல்லுணவு
அண்ணல்செல் லப்பன் அறி 9

விண்ணவர் தாமும் அறியாத வேதியன்
நன்னலநல் லூரான் நவில் 10

பத்துப்பாட் டாமிவற்றைக் கேட்போர் படிப்போர்கள்
பத்தரே யாவார் பணி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறவாதே

மறவாதே யென்றென்றும் செல்வன் மலர்த்தாள்
பிறவாய்நீ யென்றும் பிரிந்து 1

கன்னலுடன் செந்நெல் கலந்தோங்கும் நல்லூரில்
என்னைவந் தாண்டான் இனிது 2

மண்ணாசை பெண்ணாசை மற்றுமுள வாசையெலாம்
எண்ணாமற் செய்தா னிவன் 3

ஆசையாம் பேய்பிடித்த அன்பனெனை நல்லூரில்
நேசமுட னாண்டான் நினை 4

நினைக்க நினைக்கவின்பம் ஓங்கும் நல்லூர்
தினைத்துணையுஞ் சோர்வின்றிச் சேர் 5

சேர்ந்தவர்க்குத் துன்பமுண்டோ சீரான நல்லூரைச்
சாந்தனையுஞ் சிந்தித்துத் தாழ் 6

சார்ந்தவர்க்குச் சாவா வரங்கொடுக்கும் நல்லூரை
வீழ்ந்தெழுந்து கும்பிடுவாய் மேல் 7

## இனியபொருள்

அங்கிங் கெனாம லெங்கு மானபொருள்
அறிவுடை யோர்தேடி யறியும் பொருள்
கங்குல் பகலில் லாமற் காணும்பொருள்
கைகுவிப்பார்க் குய்யவழி காட்டும் பொருள்
பங்கிலே பாதிபெண்ணாய்த் தோன்றும் பொருள்
படர்சடைமேற் கங்கைதிங்கள் வைத்த பொருள்
எங்கும்நாம் சென்றின்னுந் தேடும் பொருள்
இலங்கையிலே பொலிந்திருக்கு மினிய பொருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தி நல்குமே

*குறள்வெண்செந்துறை*

தான தருமங்கள் தவமும் புரியுங்கள்
ஞான வீடு நமக்கெளி தாமே 1

பூவின் மணம்போற் பொருந்திய புருடனை
நாவினால் நமச்சி வாயவென் றுரைமின்! 2

ஆவிக்கு ளாவி யாகிய வமலனைச்
சேவிக்க வல்லார் சிவகதி பெறுவார் 3

பாவிக ளறியார் பரம்பொருள் பதமலர்
கூவி யழைமின் கூற்றுவன் வருமுன் 4

உன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்தால்
அன்னையைப் போலே யாதரிப் பாரே 5

பெரியவன் சிறியவ னென்பது பேதைமை
யரிதினு மரிதே யதனை யறிதல் 6

பொறிவழிச் செல்லும் பொல்லா மனத்தை
யறிவா லடக்கி லானந்த மாமே 7

அஃதை யறிவோ ரதுவே யாவர்
இஃதஃ தென்போ ரிழிந்தோ ராவார் 8

எல்லாஞ் சிவன்செய லென்பர் பெரியோர்
மல்லாகத் தானை மறவாது வாழுக 9

சொல்லாமற் சொன்ன சொல்லி னுறுதி
நல்லோ ரறிந்து நாடுவர் முத்தியே 10

வானவர் தானவர் வணங்கினு மறியார்
ஞான முடையோர் நம்மை யறிவார் 11

போனநாட் கிரங்கும் புந்தியை நீக்கி
மோன நிலையில் நிற்றலே முறைமை 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானகம் மண்ணகம் வந்துதாழ்ந் திடினுந்
தானவ னானோன் சஞ்சல மடையான் 13

வெய்ய காமம் வெகுளி குரோதம்
வையார் மனத்திடை மாசில் லாரே 14

வெறும்வீண னெத்தனை வித்தைகற் றாலும்
தறுகுறும் பானவை தான்தீ ரானே 15

பொறுமையு மடக்கமும் பூரண சாந்தியும்
மறுமை யின்பம் பயக்குமா நிலத்தே 16

பலபல வாக விரியும்பாழ் மனத்தை
மெலமெல வாக வெற்றிகொள் வாயே 17

அகல நீளங் காண வரியது
பகலு மிரவு மற்ற பரம்பொருள் 18

இனியதி லினியது ஈசன்மே லன்பு
முனிய வினியது மோகமுங் கோபமும் 19

பிறப்பிறப் பற்ற பெருமான் பாதம்
மறப்பில் லாதார் மையல்தீர் வாரே 20

அளவுக்கா காரம் அறிந்துண் ணாதான்
பிளவள வேனும் பேரின்ப மெய்தான் 21

உயிரெலாந் தன்னுயிர் போல வுணர்ந்தோன்
பயிலு மிடமது பரகதி யாமே 22

ஒடுங்கு மனத்தி லுண்மை புலப்படும்
படும்பய னதுவே பற்றற் றோர்க்கே 23

தமஞ்சம மிரண்டின் தன்மையை யறிந்தோன்
அமரர்நா டாளு மாணை நமதே 24

எவரேனு மீசனை யிடைவிடா தெண்ணில்
அவரே நமக்குநல் லன்பராங் கண்டீர் 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலமிட மோடும் வாசியை யறிவோர்
அலகிலா வாண்மை யடைவர் சத்தியம் 26

குலநல முணராக் கூசாச் சிந்தையர்
மலரடி பெறுவர் மாநில மீதே 27

உலகத்தோ டொட்ட வொழுக வறியார்
பலகற் றாலும் பயன்பெற மாட்டார் 28

அட்டாங்க யோக மறிந்து மாவதென்
இட்டனீச னெனவறி யார்க்கே 29

ஆவது மழிவது மறியாப் பொருளை
நோவதால் வருபயன் உண்டோ நுவலுமின் 30

சாவதும் பிறப்பதுந் தவிர்த்தெனை யாண்டான்
போவதும் வருவது மிலாப்புங் கவனே 31

சித்தத்தி னுள்ளே தித்திக்குந் தேனைப்
பித்தர் அறிவரோ பேசுமின் பேசுமின் 32

நாளுக்கு நாளாக நாட்கள் கழிந்தன
பாழுக் குழைத்துப் பயனற் றேனே 33

ஐந்தெழுத் துள்ளே யனைத்தையுங் கண்டேன்
சஞ்சலந் தீர்ந்தேன் தனிமைபெற் றேனே 34

நஞ்சணி கண்டனை நான்முகன் மாலிவர்
அஞ்சலி செய்து மறிந்தில ராமே 35

நெஞ்சகம் நின்று நினைக்கும் பொருளைப்
பஞ்சமா பாதகர் பாரினி லறிந்திலர் 36

அதுநா னென்னு மகலாத் தியானத்தால்
மதுவுண் வண்டுபோ லாயினர் பலரே 37

பேதங்க ளெல்லா மாயினும் பேதங்கள்
பேதியா வொன்றைப் பிரியவொண் ணாதே 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமோ டாகம மறியா விமலனை
நாதனா மம்நமசி வாயவென் போமே 39

காணுங் கண்ணிற் கலந்த கண்ணது
ஆணும் பெண்ணு மலியு மானதே 40

ஆதார வாதேய மானவப் பொருளின்
பாதார விந்தம் பணிதல் பயனே 41

சூதான தற்ற வெளியிற் சுகமாய்
நீதா னிருத்தல் நிச்சய மாமே 42

தேகம் விழுமுன் செல்வத்துட் செல்வத்தை
ஆகத்துட் காண்ட லறிவென் பாரே 43

போக போக்கியம் எல்லாம் வீணென
யோக சமாதியி லிருந்துணர் வாயே 44

ஏக மாகிய ஒன்றே யெல்லாமாய்த்
தியாக மானது சிந்தித் தறிநீ 45

முற்று முணர்ந்தவ ரில்லை முழுதும்
பெற்றோ மென்று பெருமை கொள்ளலை 46

சிற்றம் பலவன் திருந்து சேவடி
பெற்றவர் உலகிற் பிறந்த தில்லை 47

சற்றுஞ் சந்தேகங் கொள்ளலை சாட்சிநீ
முற்று மதன்விளை யாட்டென முன்னுதி 48

என்செயல் யாதொன்று மில்லை யாவும்
உன்செய லென்றே யுணர்ந்தேன் யானே 49

முன்செய்த தீவினை முற்றும் வெந்தன
பின்செயும் தீவினை பிறவா வெனக்கே 50

தருமமு மில்லைத் தானமு மில்லைக்
கருமமு மில்லைக் கண்டுகொண் டேனே 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டல முழுவதும் மன்னிய பொருளைக்
கண்டுகொண் டேனே கவலைதீர்ந் தேனே 52

அண்டமும் பிண்டமு மடங்கலு மதுவே
தொண்டர்கள் கண்டு துயர்தீர்ந் தாரே 53

முண்டக மலர்த்தாள் முடிமிசைக் கொண்டேன்
அண்டரு மறியா ரதிசய மதிசயம் 54

பண்டுசெய் வினையெல்லாம் பறந்தன பறந்தன
தண்டையம் மலர்த்தாள் தான்பணிந் தேனே 55

காலை யெழுந்து கைகால் சுத்திசெய்
தாலயம் மேவி யரனடி பணியே 56

சீலமு மதுவேசெய் விரதமு மதுவே
ஞாலமுள் ளளவும் நன்மையுண் டாமே 57

காலனு மணுகான் கருமமு மணுகா
ஆல முண்ட கண்ட னாணையே 58

தூல சூக்கும காரண மறிந்தால்
ஏலமர் குழலி யெழிலருள் வருமே 59

நூலறி வாளரும் நுணுகியு மறியார்
மாலய னொடுமறு தேவரு மறியார் 60

பிறப்பிறப் பில்லாப் பெருமா னேநீ
மறப்பில் லாமல் மனனஞ்செய் நாளும் 61

சிறப்பு மிதுவே செல்வமு மிதுவே
அறனு மிதுவே அருளு மிதுவே 62

உறவு மிதுவே உண்மையு மிதுவே
திறனு மிதுவே சித்தியு மிதுவே 63

சிந்தி சிந்தி சிந்தி சிவகதி
மந்திர மிதுவே மனத்திடை மதியே 64

யோக நாதன் உரைத்த மொழியே
மோகந் தீர்த்து முத்தி நல்குமே 65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்

அன்பே சிவமென் றறைந்தன ரான்றோர்
துன்பமே! இன்பமே! தூரத் தேநில்
என்பே யுருகவெம் மனமே பாடுக
உன்போ லொருவ ருளரோ வெமக்கே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 1

அளவிலா மதந்தொறு மதனதன் பொருளாய்
விளங்குங் கடவுளை வேறாயெண் ணாமல்
உளந்தனில் வைத்துநா முவந்து போற்றிப்
பழவினை பாற்றுதும் பண்புடை யோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 2

அவனவ ளதுவெனு மவையொரு மூன்றுஞ்
சிவனார் விளையாட் டென்னத் தேர்ந்து
மவுன நிலையில் மனத்தை நிறுத்தித்
தவத்தை யாற்றி முத்திசா ருவமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 3

அறமே யாற்றுதும் தினமே யாற்றுதும்
புறங்கூறு கில்லேம் பயனில புகல்கிலேம்
மறவினை புரிகிலேம் மாதரை நினைக்கிலேம்
திறமே யுடையேம் சிவமேநா மென்றும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 4

அவனன்றி யணுவும் அசையா தென்ற
சிவனடி யாரின் திவ்விய வாக்கை
எவர்க ளேனு மிதயத் திருத்தினால்
புவனத் தாசை புகார்பொறி கலங்கார்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 5

ஆமை போல வைந்து மடக்கி
ஊமை போலிருந் துறங்கிச் சித்திரப்
பாவை போலப் பராபர வஸ்துவைச்
சேவை செய்து தீர்க்குதும் பவமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறும் பிறையுஞ் சூடிய வையன்
நீறு பூசிய மேனியன் நின்மலன்
கூறு மடியார் கொடிய வினையைப்
பாறும் வண்ணம் பரிந்தருள் புரியுமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 7

ஆரா ரென்ன வறைந்த போதினும்
நீராயுள் ளுருகி நினையு மடியேம்
பாராதி யெல்லாம் பரனே யென்ன
நேரா யுணர்ந்து நிற்குதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 8

ஆக்கை நிலையில்லை யென்றே யறிந்து
வாக்கான் மனத்தான் வழுத்தொணா முதலைப்
பூக்கை கொண்டு பொன்னடி போற்றி
ஏக்கமற் றென்று மிறைஞ்சு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 9

ஆராய்ந்து பார்த்தா லறிவே யன்றி
வேறா யொன்றும் விளங்க வில்லைப்
பேரா யிரமுடைப் பெம்மான் றானே
பாராதி யெல்லா மென்று பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 10

இன்ன தன்மைய னிவனென வெவரும்
இன்னு மிசைக்க வியலா வியல்பினன்
மன்னர்க்கு மன்னன் மறைமுடி பானவன்
அன்னோன் மலரடி பணிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 11

இம்மை மறுமை யிரண்டின் பயனைச்
செம்மை மனத்தவர் தேடும் பொருளை
மும்மை யுலகிற்கு மூர்த்தியா னவனை
அம்மே யப்பா வென்று பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த படியே யிருக்கும் பொருளை
அருந்த வர்கண் டர்ச்சித் தேத்தினர்
வருந்த வேண்டாம் மவுன நிலையினில்
தருஞ்சிவ யோகஞ் சச்சிதா னந்தமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 13

இருப்பார் பொருப்பி லிறைவி யோடு
நெருப்பான மேனி நின்மல வென்று
அருப்பார் மலர்கொண் டன்புட னேநாம்
விருப்பா லேத்தி விண்புகு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 14

இருவினை யானா மிடுக்கணெய் தாமல்
குருபரன் றன்னைக் கும்பிட் டேற்றி
வருவினை யெல்லா மாற்றி மகிழ்ந்து
திருவா ரடிமலர் சேர்குதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 15

ஈசனை யெல்லா வுயிர்க்கு முயிரைத்
தேசனைச் செம்பொ னம்பல வாணனை
வாச மலர்கொடு வணங்கி நாடொறும்
பாச வினையின் பற்றறுப் போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 16

ஈயு மெறும்பு மெரியு முண்ணும்
மாயு முடலை மதியாது மறைகள்
ஆயும் பொருளை யந்தியுஞ் சந்தியும்
நீயும் நானும்நின் றிறைஞ்சு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 17

ஈயா தார்க்கில்லை யிம்மை மறுமை
ஆயா தார்க்கில்லை யறிவு மொழுக்கமும்
வாயார வாழ்த்தி வணங்கித் தினந்தினம்
தாயான தத்து வனைநாம் பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவோ ரிரக்கவு மிரப்போ ரீயவும்
தாய்சே யாகவுஞ் சேய்தா யாகவும்
பேய்நா மாகவும் நாம்பே யாகவும்
மாய்வதைக் கண்டேம் மறவோந் திருவடி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 19

ஈன்றாளு மாயென் தந்தை யாகியும்
ஆன்றோ ராகியு மடியா ராகியும்
மூன்றா யொன்றாய் முளைத்த முதலை
நான்றா னிரண்டற நாடு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 20

உம்பர் தலைவனை யூழி முதல்வனைச்
செம்பொ னம்பலத் தாடிய செல்வனை
வம்பவிழ் மலர்கொடு வணங்கி நாளும்
தம்பதம் சென்னியில் சாத்துதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 21

உண்ணா துறங்கா திருந்த வொருவனை
பண்ணா ரிசைபோல் பரிந்துநின் றானை
அண்ணா மலையானை அம்புலி சூடியை
எண்ணாம லெண்ணி யெம்வினை தீர்ப்போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 22

உள்ளத்தி னுள்ளே யுலாவு மொருவனை
எள்ளத் தனையும் மறவா தேத்தினால்
பள்ளத்தில் வீழ்ந்து பரிதவி யோமே
உள்ளத்தைச் சொன்னோ முயிர்த்துணை யிதுவே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 23

உற்றார் பெற்றா ருடன்பிறந் தாரினும்
நற்றவத் தோரே நந்துணை யாகுங்
குற்றங் கடிந்து குணத்தை மேற்கொண்டு
செத்தவர் போலத் திரிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியுண் டாகு முண்மையொன் றுளது
சிறுமதி சூடிய சிவபெரு மானை
இறுதியுள் ளளவும் மறவா தேத்திப்
பொறுதியா யிருந்து பூரண மாகுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 25

ஊனா யுணர்வா யுயிருக் குயிராய்
நானாய் நீயாய் நன்மையாய்த் தீமையாய்
வானாய் மதியாய் வாயுவாய்த் தேயுவாய்த்
தானாய் நின்றான் சச்சிதா னந்தனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 26

ஊழிக் காலத்து மொருவா வொருவனை
வாழி வாழியென் றேத்தி வணங்கி
ஆழிசூ ழுலகி லாசை யெலாம்போய்
தாளி ரண்டுஞ் சரணெனச் சாருதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 27

ஊமத்தை கொன்றை யுவந்த பிரானைப்
பாவத்தை நீக்கும் பராபர வஸ்துவைச்
சேமத் தைத்தருந் திறமெனக் கொண்டு
ஓமத்தை யாற்றி யொருவழிப் படுவோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 28

ஊரும் பேரு மில்லா னுள்ளான்
நீரும் நிலனு மாகி நின்றான்
ஆரு மறியா வாற்ற லுடையான்
சீருஞ் சிறப்பு முடைய சிவனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 29

ஊசி முனையி லிருந்தோம்பு வோர்கள்
பேசி யறியார் பிறரை யுலகில்
நாசி வழியில் நடக்கும் பிராணனைத்
தேசி போலச் செலுத்த வல்லாரே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கணமும் பிரியா விறைவன்
அன்னை போல வன்பு சான்றவன்
பொன்னைப் பொருளைப் போகத்தைத் தள்ளி
உன்னு வோர்க ளுறுவர் பரகதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 31

எங்குந் திருவிழி யெங்குந் திருச்செவி
எங்குந் திருக்கர மெங்குந் திருக்கழல்
எங்குந் திருவடி வெங்கு மிவனே
எங்கு மிவனென் றேத்து வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 32

என்செய லாவ தில்லைச் சிவனார்
தன்செய லென்னல் தகுமென வெண்ணி
முன்செய் வினையெலாம் முழுதும் போக்கிப்
பின்செய் வினையிலை பிறப்பிறப் பிலையே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 33

எட்டாத கொப்பி லிருக்குந் தேனுக்குக்
கொட்டாவி கொண்ட முடவன் கொள்கைபோல்
அட்டாங்க யோக மறியா நாங்கள்
நட்டோ மென்று நவிறல் நகையே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 34

எல்லாம் நீயே யென்றிருந்த மாதவர்
சொல்லாலே சொல்லப் புகார்நீ சும்மா
நில்லா யென்ன நிறுத்துவ ரதனை
நல்லோ ரறிவார் நயந்து போற்றுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 35

ஏக னநேக னெல்லார்க்கு மீசன்
மோகமார் தக்கன் வேள்வி முனிந்தவன்
வேகமா கரியை யுரித்துப் போர்த்தவன்
தாகமா நாடினோர்க் கருடரு வானே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனை யழகனை யன்பர் சகாயனைத்
தையல் பாகனைத் தத்துவா தீதனை
வையகம் வானகம் வணங்கும்பொற் பாதனை
மையல் தீர வந்திப்போம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 37

ஒன்றா யிரண்டாய் மூன்றாயோ ரைந்தாய்
நின்றாய் நின்னை நினையவல் லார்கள்
பொன்றாத் துணையும் போகமும் பொருந்துவர்
என்றார் பெரியோ ரிறைஞ்சுதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 38

ஓங்காரத் துட்பொரு ளானவுத் தமனை
நீங்கா தெங்கும் நிறைந்த வஸ்துவைப்
பாங்கார் பஞ்சாட் சரப்ப ரமனைத்
தூங்காது நாளுந் தோத்திரிப் போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 39

ஔவிய மனத்தின ரறியா வறிவைச்
சௌபாக் கியமுடைத் தற்பர வஸ்துவை
நௌவியு மழுவு மேந்து நம்பனைக்
கௌரவத் துடனே கழறுதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 40

கறங்கு போலக் கலங்கு மனத்தைத்
திறங்கொள் யோக சித்தியால் நிறுத்தி
உறங்கி யுறங்கா திருந்து நோக்கிற்
பிறப்பிறப் பென்பது பிராந்தியா கும்மே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 41

கங்குலும் பகலு மில்லாக் காட்சியன்
சங்கரன் தாணு சம்பு சதாசிவன்
பொங்கர வணிந்த பூத நாதன்
மங்கையோர் பாகன் மான்மழுக் கரனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியுஞ் சிவமும் தானாய் நின்றவன்
பத்திசெ யடியரைப் பரகதி சேர்ப்பவன்
எத்திக்கு மாகி யிருக்கு மிறைவன்
சித்தத் துள்ளே தித்தித் திருக்குமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 43

அஞ்ஞான விருளை யகற்று மாதவன்
மெய்ஞ்ஞானி கட்கு வீட்டைத் தருபவன்
செஞ்ஞா யிற்றை யொத்த சிவனார்
எஞ்ஞான்று மென்ற னுள்ளத் துளனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 44

இடம்வல மோடி யியங்கும் பிராணனைத்
திடம்பெறச் சுழுமுனை தன்னிற் சேர்த்தால்
திடம்பெறுங் காயஞ் சித்திக ளெய்தும்
மடம்பெறு வஞ்சக மனம்மா யும்மே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 45

வணக்கி னான்மா மேரு மலையினைக்
கணக்கிலா வசுர கணங்கள் மாய்ந்தன
பணாமுடி யாதி சேடனும் பயந்தான்
கணாதி பர்கள் கண்ணுற்று மகிழ்ந்தனர்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 46

தன்னை யறியத் தவத்தை யாற்றிப்
பின்னமற் றெல்லாம் பிரமமே யென்ன
அன்னை போல அன்பு கூர்ந்து
இன்னல் தீர வென்றுமேத் துதுமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 47

நமச்சி வாயவே நாம்சொல்லும் மந்திரம்
எமக்கி னிக்குறை யொன்றுமே யில்லை
தமர்பிற ரென்னுந் தளையுந் தீர்ந்தோம்
சமமா யுயிரெல்லாந் தாம்நினை வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றற் றார்பற்றும் பரம்பொரு டன்னைச்
செற்றம் நீக்கிச் செய்வன செய்து
நற்றவர் தங்க ளுறவினை நாடிப்
பற்றுது மதுவே பாக்கிய மாகும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 49

மத்தர் பேயர் மதலைய ரெனவே
அத்த னருள்பெற்ற வன்ப ரிருப்பர்
சித்தரு மவரே தேவரு மவரே
முத்தி வேண்டி முறைமையான் வணங்குதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 50

இயமன் வருணன் குபேரன் இந்திரன்
வியக்கத் தகுந்த வேறுபல் தெய்வமும்
வியனடி வேண்டி யாற்றினர் வெகுதவம்
முயலுதும் நாமும் முதன்மை யடைகுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 51

அரவரைக் கசைத்த விசைசால் பரமன்
குரவு வார்கழல் கும்பிடும் பாக்கியம்
தரைமிசை பெற்றோர் தமக்குச் சமமாய்
எவரையுங் காண்கிலம் இறைஞ்சுதும் மவரடி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 52

இலங்கை வேந்தன் இராவண னென்பான்
நலங்கொள் கயிலையை நாடி யெடுத்துக்
கலங்கின காரணங் கண்டு மடியேம்
நிலந்தனிற் றாழ்ந்துநீ ளகந்தை யகற்றுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 53

வடியார் சூலம் வலக்கர மேந்தி
இடியார் பேரொலி யெங்கு மார்ப்ப
அடியார் காணவன் றாடிய கூத்தை
அடியேங் காண வாசைகொள் வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழல்சேர் கையு மருவிபாய் சென்னியும்
கழற்கீழ் முயலகன் கலங்கும் வன்மையும்
இளநிலா வெறிப்பும் எடுத்தபொற் பாதமும்
பழவினை நீக்கும் பார்வையும் காணுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 55

இளமையு மூப்பு முள்ளா னில்லான்
களவிலா நெஞ்சினர் காட்சிக் கெளியன்
மழவிடை யூர்தியன் மாசி லாமணி
யளவு கடந்தவ னவனடி சூடுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 56

அறம்புரி வோர்கள் திறம்பா வாற்றலர்
உறங்கி யுறங்கா திருக்கு முத்தமர்
கறங்குபோல் மனத்தைக் கடந்த சித்தர்
இறந்தும் பிறந்து மிடுக்கணெய் தாதவர்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 57

சனகர் சனந்தன ராதியாந் தவத்தினர்
இனந்தனி லெம்மை யிருத்தி வைத்துச்
சினந்தனை நீக்கிச் சிவானந்த மென்னும்
வனந்தனில் வைக்க வள்ளலைப் பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 58

கற்பனை கடந்த வற்புதன் கமலப்
பொற்றுணை மலரடி போற்றி யுலகில்
நிற்பதும் நடப்பது மாய வுயிரெலாம்
சிக்கன வாழ்வுறச் சிந்தைசெய் வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 59

காரா ராணவக் காட்டைத் திருத்திப்
பாரார் விண்ணோர் பரவுஞ் சிவமெனும்
பேரார் வித்தை யிட்டுப்பே ரின்பமாம்
சீரார் தெவிட்டாக் கனியருந் துவமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிஞ்சுக வாயுமை கேள்வனை யமரர்
சஞ்சலந் தீர்த்த சற்குரு நாதனை
நெஞ்சக மலரிடை நினைந்து நாடொறும்
வஞ்சனை கோபம் பொறாமைமாய்ப் போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 61

கீரன் சொன்ன வாசகங் கேட்டுப்
பேரன் புற்றுப் பிணியை நீக்கி
மாரனைக் காய்ந்த மறைமுதல் வோனைப்
பூரண மாகப் போற்றுவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 62

கையையுங் காலையு முன்பணிக் காக்கிச்
செய்கை யெல்லாந் திருவடிக் காக்கிப்
பொய்யுங் கொலையும் புலையும் போக்கி
மெய்யன் புடன்மே தினியில் வாழ்வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 63

கொன்றை மத்தம் தும்பை கூன்பிறை
துன்று கங்கை சூடிய சொக்கனை
மன்றுள் மாணிக்க வல்லி மகிழ்நனை
என்று மேத்தி யிறைஞ்சுதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 64

கோகனகத் தானுங் கோவிந் தனுந்தேடி
ஆகம் நொந்து அறிவழிந் தார்கள்
மோகஞ்சேர் மாரன் முழுது மழிந்தான்
யோக நாதன்றன் னுரைக்கா ரொப்பார்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 65

சக்கரம் மாலுக்குத் தந்த பரமனை
அக்கரந் தோறு மமர்ந்த பெருமானைத்
துக்கம் வெட்கம் தொலைய நினைந்து
தக்க வன்பொடு சமர்ப்பிக் குதும்நாம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெம்மை யாண்ட
போத குருவைப் புண்ணிய மூர்த்தியை
நாதங் கடந்த ஞான வெளியிடை
பேத மின்றிக் கண்டுபிறப் பற்றோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 67

சித்திர காரன் தீட்டிய தீபம்போல்
நித்திய வஸ்துவில் நினைப்பு மறப்பற
முத்தியி லிருக்கும் முறையைப் புகல்வாய்
எத்திக்கு மாகி யிருக்கு மீசனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 68

சீரக முள்ள சீவான் மாவே
பாரக மெல்லாம் பரந்த தென்னத்
தாரக மோதிச் சாந்தம் பொறுமையோ
டோரகஞ் சார வுறுதி தந்தருள்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 69

செல்வர்பின் சென்று தினமலை யாமல்
நல்வரந் தருவாய் ஞானிகள் நாட்டமே
சில்பக றோன்றிச் சிதையா வண்ணம்
எல்லையில் கால மென்றனுக் கருளுதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 70

சேணிடை விடைமேற் றிருஞான சம்பந்தர்
காணிய வண்ணங் காட்சி கொடுத்த
ஆணிப் பொன்னே அம்பல வாணா
வேணியா வென்முன் வெளிப்பட வருக
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 71

சைவனே யுன்னைத் தமசம மாதியோ
டைவரும் பொன்ற வடியே னுக்குக்
கைவர மருள்வாய் கால காலா
மைதவ ழும்மை மருவு மார்பனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன பாணன் சுந்தரன் கவிக்காய்ச்
சொர்ண மளித்த சொக்க நாதனே
இன்னு மென்னை யிடருற வைத்தால்
என்ன செய்குவே னேழை யேனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 73

சோடி ழந்த வன்றில் சுகத்தைத்
தேடி யலையுஞ் செய்கை போல
நாடி யானு முன்னை யணுக
ஓடி வந்தரு ளுதவு வாயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 74

தந்தை தாயும் மைந்தரும் பிறரும்
வந்த வாழ்வுமோ ரிந்திர சாலம்
அந்த மாதியு மில்லா வரனே
எந்த நேரமு மென்னைக் காக்குதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 75

தாவும் வேங்கை யுடையாய் சடையாய்
ஏவும் மார னெனைத்தொட ராமல்
கூவு மென்குரல் கேட்டி ரங்குதி
தாழ்வும் வாழ்வும் இல்லாச் சம்புவே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 76

திங்கள் கங்கை வைத்த செல்வனே
அங்கை தன்னி லனலேந்து மாதியே
மங்கை பங்கனே மறலி காலனே
எங்கே நினைப்பினு மென்னெதிர் நிற்குதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 77

தீவினை கெஞ்சத் தீப்பிணி யஞ்ச
நாவினில் நமச்சி வாயங் கொஞ்ச
சாவிற் சஞ்சல முழுதுந் துஞ்ச
சேவிக்க வருள்தா செஞ்சர ணிணையினை
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டப் பிறையாய் தூவெண் ணீற்றாய்
அண்டர் பிரானே அரகர சிவனே
தொண்டர் மனத்தாய் சோதியுட் சோதி
கண்டவ ருண்டோ கடவுளே யுன்னை
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 79

தூதுசுந் தரர்க்காய்ச் சென்றாய் நள்ளிருட்
போதுசம் பந்தர்க்குப் பொற்கிழி கொடுத்தாய்
மாதுலர்க் காக வழக்குமுன் னுரைத்தாய்
சேது மேவிய செல்வா நீதுணை
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 80

தென்னவன் தீப்பிணி தீர்த்தாய் முன்னாள்
மன்னவ னாக மதுரையில் வாழ்ந்தாய்
அன்னந் தண்ணீ ரரசுக் கீந்தாய்
என்னநான் கேட்பே னெந்தாய் இரங்காய்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 81

தேவர் பிரான்பழி தீர்த்தாய் கூடலில்
சேவக னாகக் குதிரை செலுத்தினை
மூவர் தமிழ்மொழி கேட்டுகந் தாய்முன்
காவல னாகவும் நடித்தனை நீயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 82

தையலை வேட்டுச் சார்ந்தாய் மதுரையில்
வையகம் வானக முட்க நடித்தாய்
பையர வந்தனை யார்த்தாய் பணியாய்
ஐய ஐயவென் றனக்கரு ளாயே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 83

தொல்லைநா ளிருவர் காணாச் சோதியே
தில்லை யம்பலத் தாடிய சிவனே
எல்லை யில்லா ஏக வெளியே
ஒல்லை வந்தரு ளுதவுவாய் கடனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளா முத்தே சுடரிற் சுடரே
பாழா யடியேன் பதையா வண்ணம்
நீளா வருள்நீ தருவாய் வருவாய்
ஆள்வா யடியார் குடிவாழ் பவனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 85

நந்தா விளக்கே ஞானச் சுடரே
இந்தா றணியு மிறையே முறையோ
வந்தாள் தருணம் மறையின் முடிவே
எந்தா யென்றுங் காப்பா யெனையே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 86

நாமார்க் குங்குடி யல்லோம் நாடிற்
தாமார்க் குங்குடி யல்லாச் சங்கரன்
கோமான் வைத்த குடியே நாங்கள்
ஏமாப் போம்பிணி யறியோ மென்றும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 87

நின்னா வார்பிற ரில்லை யெலாம்நீ
சொன்னார் முன்னோர் தோத்திரஞ் செய்து
பன்னா ளிப்படிப் பயிலப் பயில
என்னா யகமே யெமக்கறி வுண்டோ
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 88

---

## வேறு

தாமரையில் நீர்போற் சகத்திலே தம்பிநீ
சேமமுடன் வாழ்வாய் சிவனைநினை – ஆமளவும்
நன்மையையே செய்வாய்நீ நல்லோரைப் பேணிநட
தன்னை யறியலாந் தான் 1

தந்தைதாய் மற்றுந் தமர்தார மெல்லாருஞ்
சந்தையிற் கூட்டமிது தப்பாது – எந்தைபால்
எப்போது மன்புவை எல்லா மவன்செயலே
இப்போ சமய மிணங்கு 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராபரக் கண்ணிகள் ~ 1

அன்னைதந்தை சுற்றம் அரிய சகோதரர்கள்
உன்னையன்றி யுண்டோ என்னுயிரே பராபரமே 1

ஆக்கையே கோயில் அகமே சிவலிங்கம்
பூக்கைகொண்டு போற்றவருள் புரியாய் பராபரமே 2

இருவினையால் கட்டுண்டு இடர்ப்பட்டுத் திரிவேனைக்
கருணையா லாட்கொண்ட கண்ணே பராபரமே 3

ஈயாத புல்லர் இடந்தோறும் நாயடியேன்
வாயார வாழ்த்தி வாழவிட்டாய் பராபரமே 4

உன்னைப் பிரிவேனோ உயிர்நான் தரிப்பேனோ
என்னைப் பிரிவாயோ இறையே பராபரமே 5

ஊரும் பேருமில்லா ஒருவன் உலகத்திலே
ஆரென்று காட்டென்பார்க் கென்சொல்வேன் பராபரமே 6

எல்லாமா யல்லவுமாய் இருப்பான் இறைவனென்றால்
சொல்லாலே எப்படிநான் சொல்வேன் பராபரமே 7

ஏக னனேக னென்றுசொல்லும் விந்தை
தேகத்துக்கோ சித்துக்கோ செப்பாய் பராபரமே 8

ஐம்பொறியும் மனமும் அறியாமல் நிற்குமொன்று
எம்மறிவுக்கு எட்டுமோ எந்தாய் பராபரமே 9

ஒருபொல் லாப்புமில்லை உண்மை முழுதுமென்ற
திருவாக்கை யாரறிவார் செப்பாய் பராபரமே 10

ஓங்காரத் தாலே உலக முதிக்குமென்ற
பாங்கறிவார் யார்தான் பகர்வாய் பராபரமே 11

ஔவிய நெஞ்சத்தார் அறியா ரெனவுரைத்தால்
ஔவிய நெஞ்சமிலார் யார்தான் பராபரமே 12

அஃ்குத லில்லா அறிவுடைய பெரியோர்யார்
வெஃ்குத லின்றி விளம்பாய் பராபரமே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராபரக் கண்ணிகள் ~ 2

ஒருபொல்லாப்பு மில்லையென்னு மொருமொழியால் உள்ளம்
உருகாதோ வென்றன் உயிரே பராபரமே 1

எப்பவோ முடிந்ததென எந்தை குருநாதன்
செப்புந் திருவாக்கின் சீர்தருவாய் பராபரமே 2

நாமறியோ மென்றுமுன்னாள் நல்லூரில் சொன்னமொழி
நாமறிந் துய்யவரம் நல்காய் பராபரமே 3

ஆரறிவா ரென்றுமுன்னாள் ஆசா னுரைத்தசொல்லின்
சீரறியச் செய்வாய் சிவமே பராபரமே 4

அப்படியே யுள்ளதென அன்றாசான் சொன்னமொழி
இப்படியில் யானறிய இரங்காய் பராபரமே 5

என்றுநீ யன்றுநாம் என்னுந் திருவாக்கைக்
கண்டுதொண்டு செய்யக் கருணைசெய்வாய் பராபரமே 6

அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்தா தழுத்திநிற்கக்
கஞ்ச மலரடியைக் காட்டாய் பராபரமே 7

பஞ்சப் புலன்வழிபோய்ப் பாரி லலையாமல்
செஞ்சரணே தஞ்சமெனச் செய்வாய் பராபரமே 8

கட்டுப்படா மனத்தைக் கட்டத் திருவருளை
இட்டமுடன் நீதாராய் எந்தாய் பராபரமே 9

ஊனா யுயிராய் உடலாயென் னுட்கலந்த
தேனா ரமுதே தீங்கரும்பே பராபரமே 10

ஒருதெய்வம் ஒருலகம் உண்மை முழுதுமென்னும்
திருவருளில் நிற்கவருள் செய்வாய் பராபரமே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராபரக் கண்ணிகள் ~ 3

சிந்தித்துச் சிந்தித்துச் சிவமேநா மென்றெண்ணத்
தந்திடுவாய் நல்லவரம் தற்பரனே பராபரமே 1

அந்தமு மாதியு மில்லா ஆண்டவனே
என்தன் பந்தத்தை நீக்கிடுவாய் பராபரமே 2

ஆரறி வாரென்ற அருமைத் திருவாக்கின்
சீரறியச் சிவஞானம் தருவாய் பராபரமே 3

இருவினையை நீக்கி யின்பத்திலே நான்தேக்க
வருவாயென் னுள்ளத்தில் வாழ்வே பராபரமே 4

ஈசனே யெவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் நிற்கும்
தேசனே சிந்தை தெளியவைப்பாய் பராபரமே 5

உருகி யுருகி உணரும்மெய்ஞ் ஞானிகளின்
திருக்கூட்டஞ் சேரவருள் செய்வாய் பராபரமே 6

ஊரூராய்த் திரிந்து உன்மத்த னிவனென்னும்
பேரூரச் செய்து பிறப்பறுப்பாய் பராபரமே 7

எல்லாமா யல்லவுமா யிருக்குந் திருவருளைச்
சொல்லாமற் சொல்லுஞ் சுகந்தருவாய் பராபரமே 8

ஐயப் படாமல் அருள்வழியே செல்லநல்ல
துய்ய வருள்தாராய் என்துணையே பராபரமே 9

ஒன்பதுவாய்த் தோற்பைக்கு உணவளிக்க நான்திரிதல்
என்ன மதிதான் இயம்பாய்நீ பராபரமே 10

ஓங்காரக் கம்பத்தின் உச்சியிலே நிற்குமுனை
பாங்காய்ப் பணியவருள் பண்ணாய் பராபரமே 11

ஒளவிய மில்லாதார் அகம்மேவும் ஆண்டவனே
எவ்வித மாய்ப்பணிவேன் இயம்பாய் பராபரமே 12

அஃகமுங் காசுந்தேடி அலையும் அடியேனை
நஃகுதல் செய்யாமல் வரந்தாராய் பராபரமே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராபரக் கண்ணிகள் ~ 4

அன்பிற் கரைந்துருகி யடிபணியும் மெய்யடியார்
இன்ப நிலையே எந்தாய் பராபரமே 1

ஆறாய்க்கண் ணீர்பெருக்கி அவசமுறும் மெய்யடியார்
மாறாக் கருணை மனவிளக்கே பராபரமே 2

இருவினையை நீக்கி இரவுபக லற்றவன்பர்
கருவினையை நீக்கும் கதியே பராபரமே 3

ஈசனே யெங்குமென வெண்ணுகின்ற மெய்யடியார்
வாசனே நல்லவழி காட்டாய் பராபரமே 4

உன்னை யுணர்ந்தவர்கள் ஓசையற்ற நிட்டையிலே
தன்னை மறந்திருப்பார் சத்தே பராபரமே 5

ஊனா யுயிராகி யுட்கலந்த சோதிதனை
நானா ரறியவென்றன் நட்பே பராபரமே 6

எல்லாம் நினதுசெய லென்றறிந்த மெய்யடியார்
நில்லா வுலகை நினைவரோ பராபரமே 7

ஏது மறியாத ஏழையென்று கைவிட்டால்
யாதுசெய் வேனென்னை யாள்வாய் பராபரமே 8

ஐயுந் தொடர்ந்து அறிவழியு முன்னமென்
கையுந் தொழப்பண்ணிக் காப்பாய் பராபரமே 9

---

## வேறு

பார்க்குமிட மெங்குஞ்சிவ தொண்டராய்ப் பார்க்கவொரு
வார்த்தை சொல்லவந்த மகத்தே சிவதொண்டா 1

ஆர்க்குங் கடல்சூழ்ந்த அகிலமெலாம் தொண்டரெனக்
காக்குங் கருணைக் கடலே சிவதொண்டா 2

மூர்க்க குணமில்லை முழுதுஞ் சிவதொண்டரெனப்
பார்க்கும் அறிவுதந்த அன்பே சிவதொண்டா 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதூது சங்கே ஊதூது ~ 1

ஊதூது சங்கே ஊதூது
ஓம்சிவாய நமவென் றூதூது 1

ஊதூது சங்கே ஊதூது
ஒருபொல்லாப் பில்லையென் றூதூது 2

ஊதூது சங்கே ஊதூது
உட்பகையை விட்டிடென் றூதூது 3

ஊதூது சங்கே ஊதூது
உங்கள்பிரான் இங்குவர ஊதூது 4

ஊதூது சங்கே ஊதூது
ஒருவருக்குந் தெரியாதென் றூதூது 5

ஊதூது சங்கே ஊதூது
ஐம்பூதம்நா மல்லவென் றூதூது 6

ஊதூது சங்கே ஊதூது
ஐம்பொறி நாமல்லவென் றூதூது 7

ஊதூது சங்கே ஊதூது
அந்தக்கரணம் நாமல்லவென் றூதூது 8

ஊதூது சங்கே ஊதூது
பஞ்சவாய்வு நாமல்லவென் றூதூது 9

ஊதூது சங்கே ஊதூது
தசநாடி நாமல்லவென் றூதூது 10

ஊதூது சங்கே ஊதூது
அடிமுடி இல்லையென் றூதூது 11

ஊதூது சங்கே ஊதூது
காமக்குரோதம் நாமல்லவென் றூதூது 12

ஊதூது சங்கே ஊதூது
உன்னையுன்னால் அறியென் றூதூது 13

ஊதூது சங்கே ஊதூது
சிவதொண்டன் வாழ்கவென் றூதூது 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊதூது சங்கே ஊதூது ~ 2

ஊதூது சங்கே ஊதூது
ஒருபொல்லாப்பு மில்லையென் றூதூது
காது செவிடுபட ஊதூது
கங்குல்பகல் காணாமல் ஊதூது 1

நல்லூரான் திருமுன்புநின் றூதூது
நாமேநா மென்றுசொல்லி ஊதூது
எல்லாஞ்சிவன் செயலென் றூதூது
ஏகமன தாய்நின் றூதூது 2

அல்லும்ப கலுமற ஊதூது
ஆணவத்தை நீக்கிநின் றூதூது
வெல்லும் பகையொழிய ஊதூது
வேறுபொருள் இல்லையென் றூதூது 3

ஐம்பூதம்நா மல்லவென் றூதூது
ஐம்பொறிநா மல்லவென் றூதூது
ஐம்புலன்நா மல்லவென் றூதூது
அந்தக்கரணம் நாமல்லவென் றூதூது 4

ஆன்மாவே நாமென் றூதூது
ஆசானைப் பணிந்துநின் றூதூது
ஆரறிவா ரென்றுசொல்லி ஊதூது
அன்பே சிவமென்று ஊதூது 5

மாதுமை பங்கனென் றூதூது
மங்களம் மங்களமென் றூதூது
சோதி சொரூபனென் றூதூது
சுந்தரர்தூ தானானென் றூதூது 6

அடியார்க் கடியானென் றூதூது
ஆதியந்த மில்லானென் றூதூது
திங்கட் சடையானென் றூதூது
தேவாதி தேவனென் றூதூது 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா நீ

அன்பி னுருகி அவனேநா னென்றுசொல்லி
இன்பக் கடலில் இளைப்பாறித் – துன்பமற்று
எந்நாளும் வாழ்வாய் இறப்பும் பிறப்புமில்லைச்
சொன்னே னிதுவே சுகம் 1

ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியு நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை ஆன்மாநீ – உண்மையில்
செம்மையாய் வாழ்ந்துசீ வன்சிவ னென்றமுழு
உண்மை யறிவாய் உகந்து 2

உகந்து மனங்குவிந்து ஒன்றுக்கு மஞ்சா
தகந்தை அவாவெகுளி யாற்றிச் – சகந்தனிலே
தாமரையிற் றண்ணீர்போற் சாராமற் சார்ந்துநற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து 3

சிந்தனைக் கெட்டாத தெய்வத்தை நாம்நிதமும்
வந்தனை செய்து வணங்குவோம் – பந்தமுண்டு
முத்தியுண் டென்று முனைத்துநில் லாமலே
நித்தியனா மென்றே நினை 4

தன்னை யறியத் தனக்கொருகே டில்லையென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால் – தென்னைபனை
சேரிலங்கை வாழுஞ் சிவநேயச் செல்வர்காள்!
தேரீரிச் சீவன் சிவன் 5

தெரிந்து செயலாற்றுந் தீரர்களே நல்ல
விரிந்த அறிவுள்ள மேலோர் – திரிந்து
மதியிழந்து வாடாமல் மாணடியை யென்றும்
துதிமனமே சொன்னேன் வெற்றி 6

வெற்றிதரும் வேண்டியன வெல்லாந் தருமனமே
பத்தியுடன் பாடிப் பணிசெய்வாய் – சித்தத்தில்
ஆனந்தம் பொங்கும் அதுவே நானென்று
தியானஞ்செய் சீவன் சிவன் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றதுணை

*வெண்பா*

சேவித்துஞ் சென்றிரந்துஞ் சீவன் சிவனென்று
பாவித்துக் கொண்டாலிப் பாரினிலே – ஆவிக்கே
உற்ற துணையென் றுறுதிகொண்டு நல்லூரில்
நற்றவனை நாடுவோம் நாம் 1

நாமந்தி சந்திதொறும் நல்ல சிவநாமம்
சேம முறப்பாடிச் சிந்தையிலே – காமமுதல்
கட்டறுத்து நிட்டையிலே கங்குல் பகலின்றி
இட்டமுடன் வாழ்வோம் இனிது 2

இனியே தெனக்குன் அருள்வருமென் றெண்ணாது
கனிகாய் அருந்திக் கடும்பசிக்குத் – தனியே
இருந்துமுத்தி சேர்வதற் கெண்ணுவதே யல்லாமல்
பொருந்துவனோ பூவிற் புகுந்து 3

போதுகொண்டு போற்றேன் பொறிவழியே போயலையேன்
தீது செயுமனத்தைச் சேர்ந்திடேன் – யாதுக்கும்
அஞ்சேன் அவரிவரை அண்டிடேன் எஞ்ஞான்றுந்
தஞ்சமென்று வாழ்வேன் தனித்து 4

சற்குருவைப் போற்றித் தரணியிலே சீரடியார்
பொற்பதத்தைப் போற்றிப் புகலுவேன் – கற்றவர்கள்
நாடுஞ் சிவதொண்டன் நாஞ்சிவம் என்றுசொல்லி
ஓடி வருவான் உவந்து 5

உவந்து வருவானோ மென்றுரு வேற்றிப்
பவம்வெந்து போக வருள்வான் – தவஞ்செய்வார்
கண்டு மகிழுவார் காதலுட னாதரிப்பார்
பண்டுபோ லென்றும் பரிந்து 6

பரிந்தன்பர் பாதத்தில் பாங்குடனற் போது
சொரிந்துசிவ தொண்டன் தொழுது – கரங்கூப்பிச்
சீவன் சிவனாச் சிவநாமம் பாடுவான்
தேவர் புகழநிற்பான் தேர்ந்து 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகமறியேன்

யோக மறியேன்யான் யோகியரை யும்மறியேன்
ஆகுநெறி மற்றொன் றறியேன்யான் – தேகமிது
வீழ்வதன் முன்னுன் விரையார் மலர்த்தாளைச்
சூழப் பணியாய் தொழுது 1

தொழுது வணங்கிநின் தூநெறியே செல்லும்
முழுமனத்தார் தங்கூட்டம் முன்னி – அழுதே
உருகி யுருகி யுளநைந்து கண்ணீர்
பெருக வரந்தருவாய் பின் 2

பின்ன ரெனக்குப் பிறப்போ டிறப்பென்னும்
மன்னுபெரு வாதைமற் றென்செய்யும் – உன்னைச்
சரணென் றடைந்த தகவுடையார் பாதம்
அரணென் றிருந்தேற் கறி 3

அறிவுக் கறிவாகி யப்பாலுக் கப்பாற்
பிறிவற் றிருக்கும் பெருமான் – நெறிநின்றார்
நீடூழி வாழ்வாரே நீநா னவனென்று
பாடுபட மாட்டார் பரிந்து 4

பரிந்து பணியாற்றிப் பாவமெல்லாந் தீர்த்தேன்
இருந்த படியிருக்கு மெம்மான் – வருந்த
வழியு மினியுண்டோ வாழ்வுடன் தாழ்வோ
செழுமலர்ப் பாதஞ் சிரம் 5

சென்னிக் கணியுன்றாள் சேவித்து நிற்றலே
பண்ணுக் கணியுன்னைப் பாடுதலே –கண்ணுக்
கணியுன் வடிவுகண் டானந்தங் கொள்ளல்
பணியை யணிந்தாய் பரம் 6

பரவுமடி யார்க்கருளைப் பாலிக்கும் ஐய!
இரவுபகல் காணாநின் றேத்த – வரமருள்வாய்
வாய்விட்டுச் சொல்ல வகையெனக்கிங் கில்லையே
நீவிட் டிடாதே நினை 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவி னினைவாகி நீயிருக்க நாயேன்
வினைவழியே சென்று மெலிகோ – எனையும்
இடுக்க ணெனக்கில்லை நின்செயலே யாவும்
நடுக்கமெனக் குண்டோ நவில் 8

நவிலு மறைநான்கு மாகமமுந் தேடி
நவில முடியாத நாத – தவமுடையார்
தம்மனத்தாய் நாயடியேன் சாற்றுங் கவிக்கிரங்க
எவ்வமுண்டோ கூறா யினி 9

இனிப்பிறவா நன்னெறிக்க ணெய்தினார் சேவைக்
கினிப்பிறக்க வென்னைப் பணியாய் – இனித்ததிருக்
கோலத்தா லைந்தொழிலுங் கூட்டிக் குனித்தருளுஞ்
சீலத்தாய் தில்லைச் சிவ! 10

---

## பதைப்பற்றிரு நெஞ்சமே

இராகம் – தன்யாசி தாளம் – ஆதி

**பல்லவி**

பார்ப்பதெல் லாஞ்சிவ மாகவே கண்டு
பதைப்பற்றிரு நெஞ்சமே

**அநுபல்லவி**

பதைப்பற்ற பேர்க்கேசிவ பாக்கிய முண்டு
பஞ்சேந் திரியம் அஞ்சையும் வென்று (பார்)

**சரணம்**

மார்க்கஞ் சொல்லும் வழிதனிற் செல்லு
மாறாத மௌனத் தியானத்தில் நில்லு
தீர்க்க மானகுரு செல்லப்பன் பாதம்
சிந்திக்கும் யோகசுவாமி வந்திக்குங் கீதம் (பார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தி நெறி

*நேரிசை வெண்பா – அந்தாதித்தொடை*

நல்லூர்ப் பதியிலே ஞான நெறிகாட்டச்
செல்லப்பன் என்னும் திருப்பெயரான் – பொல்லாப்பிங்
கொன்றுமே யில்லையென ஓதினான் ஓதயான்
கண்டுமெய் தேறினேன் காண் 1

காண்பதெலாம் பொய்யென்று காட்டினான் காட்டயான்
வீண்பா வனையெல்லாம் விட்டொழிந்தேன் – மாண்புடனே
நீயும் மனத்தில் நினைத்தால் வினையெல்லாம்
மாயும் இதைநீ மதி 2

மதிக்கும் மதிகொடுக்கும் மாநிலத்தை யாள
விதிக்கும் விமலனடி சேர்க்கும் – துதிக்கும்
அடியவர்கள் துன்பம் அகற்றி அருளுங்
கடிமலராற் பூசித்துக் காண் 3

காணுவார் தொண்டர் கருதுவார் சொன்னசொற்
பேணுவார் பேணிப் பெரிதுவப்பார் – சாணு
வளர்க்க வழிதேடி வையத் தலையார்
கலக்கமறக் கண்டு களி 4

களிபெருகுங் காமக் குரோதமெலாங் குன்றுந்
தெளிவுண்டாஞ் சித்தத்தில் தீமை – விளியுமே
ஆரறிவா ரென்றதனை அந்திசந்தி சிந்தித்தாற்
பேரறிவு தான்வருமே பின் 5

பின்னுமுன்னு மில்லைப் பிரமமே யுள்ளபொருள்
என்னு மொழிதம் இதயத்தில் – மன்னுபவர்
சாந்தம் அடக்கம் தயவுடனே வாழ்ந்தினிது
சேர்ந்திடுவார் முத்தி தெரி 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நம் நாடு

தூண்டு சுடர்ச்சோதி தொல்லுலகில் வந்துநமை
யாண்டுகொண் டானா மார்க்குங் குடியல்லோம்
வல்வினையும் போச்சு வரம்பிலின்ப மேயாச்சு
நல்வினை சேரிலங்கை நாடு 1

வேண்டுதல் வேண்டாமை யில்லான் விரும்பிவந்து
ஆண்டுதான் கொண்டானா மார்க்குங் குடியல்லோம்
பொய்பேசு கில்லேம் புறங்கூறு கில்லேம்யாஞ்
செய்யா ரிலங்கை நமது 2

இல்லையென்று சொல்கிலோம் யார்பாலு மன்புடையோம்
எல்லையில்லா வின்ப மெவர்க்குங் குடியல்லோம்
தில்லைவாழ் தெய்வத் திருவடியைச் சிந்தித்து
நைவோ மிலங்கைநம் நாடு 3

தீமையெவர் செய்தாலும் சித்தத்திற் கொள்ளேம்யாம்
ஆமைபோ லடக்குவோ மார்க்குங் குடியல்லோம்
செய்வோம் சிவபூசை தீங்கவிகள் பாடுவோம்
உய்வோ மிலங்கைநம தூர் 4

அச்சமொடு கோபத்தை ஆகா வெனத்தடுத்தோம்
இச்சையெல்லாம் விட்டோம் எவர்க்குங் குடியல்லோம்
நெஞ்சிற்பஞ் சாக்கரத்தை நேச முடனுரைப்போம்
மஞ்சு தவழிலங்கை வைப்பு 5

ஆதியு மந்தமு மில்லைநமக் கென்றுமென
ஓதி யுணர்ந்தோ மொருவர் குடியல்லோம்
ஆறுங் குளமும் அணியார் பொழில்களுஞ்
சேருநம தூரிலங்கை தேர் 6

*வெண்பா*

சிந்திக்க நெஞ்சும் தெரிசிக்கக் கண்ணிரண்டும்
வந்திக்கச் சென்னிபிறர் வைத்தகுடி நாமல்லோம் – அந்திசந்தி
வாழ்த்தி வணங்குவோம் வாயாரப் போற்றுவோம்
தாழ்த்திநிற் போமிலங்கை தாள் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லார்க்கு மாங்கடவு ளொன்றென் றியம்புவோம்
பொல்லாங்கு செய்யோம் பிறர்குடி – யல்லோம்
கொலைகளவு கோபத்தைக் கொள்கிலேம் நெஞ்சில்
நிலையென் றிலங்கை நினை 8

நிற்போம் சமாதியிலே யென்றும் நிலைத்திருப்போம்
பெற்றோம் பிறர்க்கடிமை நாமல்லோம் – சுற்றந்
துறந்தோம் பிறவாத தொல்பதியைச் சேர்ந்தோம்
சிறந்தோ மிலங்கை தெரி 9

செல்வநிலை யாதென்று தேர்ந்தோம் சிவபெருமான்
நல்ல பதமறவோம் ஆளல்லோம் – அல்லலுற
மாட்டோ மவனி மதித்தாலு மின்புறோம்
வேட்டோ மிலங்கை வெளி 10

இலங்கைவாழ் தெய்வ மெமையாளுந் தெய்வம்
கலங்க விடாத்தெய்வம் காணின் – புலன்வழியிற்
செல்ல விடாத்தெய்வம் தேவர் தொழுந்தெய்வம்
நல்லதெய்வம் நாடோறும் நாடு 11

எல்லாந் தருந்தெய்வம் எல்லாமா குந்தெய்வம்
எல்லாந் தொழுந்தெய்வ மெந்தெய்வம் – நில்லாநீர்
செஞ்சடைசேர் தெய்வம் சிரஞ்சீவி யானதெய்வம்
அஞ்செழுத் தானதெய்வ மாம் 12

நிலனாகிக் காற்றாகி நீராகுந் தெய்வம்
அலகி லருக்கனு மம்புலியும் – பலபலவாம்
வேடங் கொளுந்தெய்வம் வேதாளஞ் சூழ்தெய்வம்
மாட மலியிலங்கை வாழ்வு 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னையறிந்தோர் தலையானோர்

*வெண்பா*

தன்னை யறிதல் தலையானோர் தங்கடமை
என்னப் பெரியோ ரியம்புவரால் – மின்னனைய
பொய்யான வாழ்வைப் புதுமையென வெண்ணுவரோ
கைமேற் கனியாகக் காண் 1

தெரிந்து வினையாற்றுந் தீரர்களே மண்ணில்
அருந்தவர்க ளென்றுமுனோ ராய்ந்தார் – பொருந்துவன
செய்து சிறுதொழில்கள் செய்யா தொழியவிட்டு
உய்வாய்நீ யென்னி லுறைந்து 2

சிவத்தை விடத்தெய்வம் வேறில்லை யென்போர்
அவத்தி லழுந்துவரோ வன்றே – உவத்தல்
வெறுத்தலாற் றெய்வம் பலவாய் விதித்தோம்
அறுத்தார்க்கு முண்டோ வவை 3

அவைக்கஞ்சா வீர ரவர்தம்மை நோக்கில்
சுவைமுதலாய் வென்றநல்ல தூயோர் – நவைசேரும்
இந்திரனே சாலுங் கரியென்றால் வேறெனக்குச்
சந்தேக மேன்காணுஞ் சாற்று 4

சாற்று முடல்பொருளு மாவியுந்தந் தோர்களிந்த
மாற்றமாம் வையம் மதிப்பாரோ – தோற்றமெலாம்
தாமே யலவென்று தம்மையறிந் துய்வோருக்
காமாறென் காணு மறை 5

அறையும் மறைநாலு மாகமங்கள் தாமும்
இறையளவும் தெய்வ மியம்பா – தறநெறியே
கும்பிட்டார்க் கல்லால் குளிர்ந்த மலர்ப்பாதம்
இம்மட்டென் றேகூற லில் 6

இசையும் பொருளை யிரப்போருக் கீந்தே
இசைபடவே வாழ்வார்க்கிப் பூமி – திசையறியப்
பூங்கோயி லாகப் பொருந்துமே யாதலினால்
நீங்காம லீந்தே நிலை 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மீழத்து நற்றமிழ் நாடனே

அந்தி சந்தியுஞ் சிந்திக்கு மெய்யன்பர்
பந்த பாசங்க ளேர்க்கும் பரிசினன்
அந்த மாதியு மில்லா வியல்பினன்
இந்த விலங்கை யெழில்நக ரானே 1

ஆடு பாம்பணிந் தம்பலத் தாடுவான்
பாடு வார்பவந் தீர்த்திடும் பண்பினன்
ஓடு கங்கை யுடன்வைத்த சென்னியன்
நாடு மீழத்து நற்றமிழ் நாடனே 2

இருவினை வந்தெனைத் தாக்கா திருக்கவும்
கருவி கரணமென் கட்டளை கேட்கவும்
அருவி கண்களி லாறாய்ப் பெருகவும்
தருக வருளீழத் தண்ணக ரானே 3

ஈவது கடைப்பிடித் தென்று மொழுகவும்
நோவது பேசாது நோன்பைப் பிடிக்கவும்
சாவது வந்தாலுஞ் சத்தியந் தழைக்கவும்
தேவர்தொழு மிலங்கைத் திருநக ரானே 4

உண்டான போதுநா னுற்றார்க் குதவவும்
சண்டாள ரோடுசச் சரவின்றி வாழவும்
கண்டொன்று சொல்லாமற் காலங் கழிக்கவும்
மண்டலம் புகழிலங்கை மாநக ரானே 5

ஊனா யுயிரா யுடலா யுறுப்பாய்க்
கோனாய்க் குருவாய்ச் சீடனாய் நீநின்றாய்
யானா ரறிவே னம்பலத் தரசே
தேனா ரிலங்கைத் திருநக ரானே 6

ஐயா றகலாத வானந்தக் கூத்தனே
தையலாள் தன்னைப் பிரியாத தாணுவே
மையல்சேர் மாரனை நீறுசெய் வள்ளலே
தெய்வமே யீழச் செழுநக ரானே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பற்ற தெய்வமே உயிருக்கு ளுயிரே
தப்பற்ற மாதவர் தாந்தொழுங் கோவே
துப்பிதழ் மடந்தை சேவிக்குஞ் செல்வமே
இப்புவி யீழத் தெழில்நக ரானே 8

ஓதுவார் தீவினை உடன்தீர்க்குந் தெய்வமே
மாதுமை பாகனே மான்மழுக் கையனே
பாதுகாப் பதுகடன் பாரேழு முன்னிடம்
மீதுநீ கிருபைவை வேலையிலங் கையானே 9

ஔவிய மில்லா மனந்தா வடியாரைத்
திவ்விய மாய்ப்பாடுஞ் சித்தமும் நீதா
நவ்வியை யேந்தும் நம்பா நடராஜா
கௌரிதன் பாகனே கடியிலங்கை நகரானே 10

---

# முழுவதும் உண்மை

**பல்லவி**

முழுவதும் உண்மையென்று
மோனமுனி சொன்னானன்று

**அநுபல்லவி**

பழுதொன்று மில்லையென்று
பண்ணுவாய் சிவதொண்டு (முழு)

**சரணங்கள்**

ஒழிந்துபோ கும்பிறவி அழிந்துபோம் பழிபாவம்
எழுந்திரு விழித்துக்கொள் எல்லாம் உனக்குவெற்றி
(முழு) 1

தளர்ந்துபோ காதேகுரு சாற்றிய ஞானமொழி
தெளிந்துகொண் டாற்சீவன் சிவனெனக் காணலாம் (முழு) 2

சொல்லித்து திக்கும்யோக சுவாமியைத் தினங்காக்கும்
செல்வன்திருப் பாதமே யல்லும்ப கலுந்துணை (முழு) 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையானே

*கலிவிருத்தம்*

மதியும் நதியும் வைத்த சென்னியன்
விதியு மரியு மறியா விமலன்
துதிசெ யடியார் துன்பந் தீர்ப்பவன்
மதில்சே ரிலங்கை மாநக ரானே 1

நீருங் காலும் நிலனுந் தீயும்
ஆரும் வானு மம்புவி கதிருஞ்
சீருந் திருவுஞ் சிறப்பு முடையான்
நேரு மிலங்கை நெல்வய லானே 2

எண்ணி யெண்ணி யுருகு மடியார்
மண்ணில் வந்து பிறவா வண்ணம்
உண்ணின் றருளை யுதவும் நாதன்
எண்ணில் வளஞ்சே ரிலங்கை யானே 3

போக்கும் வரவும் இல்லாப் புனிதன்
ஆக்கும் அழிக்கும் அவனி யெல்லாங்
காக்கும் அடியார் கவலை தீர்க்கும்
பூக்கும் இலங்கைப் பொன்னக ரானே 4

பொன்னும் பொருளும் புகழுந் தருவான்
முன்னும் பின்னும் இல்லா முதல்வன்
என்னுள் அறிவா யென்றும் விளங்கும்
துன்னும் வரைசூழ் இலங்கை யானே 5

நினைக்கு மடியார் நெஞ்சத் துள்ளே
முனைக்கும் காமக் குரோதம் மோகம்
அனைத்தும் போக்கும் அம்மான் பெம்மான்
சுனைச்சே ரிலங்கைத் தொன்னக ரானே 6

நீள நினைக்கு மடியார் பாவம்
மாள வருளை வழங்கும் பெருமான்
ஆழ நீள வாழி சூழ்ந்த
நீள விலங்கை நெல்வய லானே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவ ரறியா முதல்வ னுலகில்
தேவ ராலு மறியாத் தெய்வம்
யாவ ரேனுந் தொழுவார் பாவம்
வேவ வருளு மிலங்கை யானே 8

செக்கர் போலும் மேனிச் செல்வன்
அக்கு மாலை யணியு மமலன்
சொக்க னென்னுஞ் சொந்தப் பெயரான்
இக்கு மலியு மிலங்கை யானே 9

ஆளும் பெருமா னகத்து ளிருக்க
நாளுங் கோளு நங்கட் கெங்கே
வீழு மருவி விளங்கு மிலங்கை
வாழும் பெருமான் மலர்த்தாள் காப்பே 10

---

# இலங்கையான்

*கலிவிருத்தம்*

நேசத் தாலரன் நீள்கழல் போற்றுவார்
பாசத் தாற்றுயர் பாரினி லெய்திடார்
வாசக் காபல சேரு மிலங்கையித்
தேசத் தான்சொல்லைச் சிந்தையிற் கொண்மினே 1

எல்லாம் வல்ல இறைவன் றிருப்பதம்
சொல்லும் பூக்கொடு தோத்திரஞ் செய்பவர்
கல்லா ராயினுங் கதியுண் டிலங்கையான்
சொல்லைச் சிந்தித்துத் துன்பத்தைத் தீர்மினே 2

மொழிக்கு நற்றுணை முன்னஞ் செழுத்துமே
விழிக்கு நற்றுணை மென்மலர்த் தாள்களே
வழிக்கு நற்றுணை வண்புகழ் பாடலே
களிக்கு மிலங்கையான் கட்டுரை கேண்மினே 3

பொறிவ ழிமனம் போயலை யாமலே
நெறிவ ழிநிற்கக் கற்றுக் கணந்தொறும்
அறிவ ழிந்திட ரெய்தீ ரிலங்கையான்
குறிவ ழிச்செலக் கூடிடும் முத்தியே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னெ றிசெலும் போக்கை யொழித்துநீர்
நன்னெ றிதனில் நாட்டத்தை வைத்திடிற்
சென்னெ றிக்குநற் செல்வ மிலங்கையான்
சொன்னெ றிதனைச் சோரா துணர்மினே 5

சமய தீக்கையைப் பெற்றுப்பின் சற்குரு
அமையு மப்பா லவன்வழி செல்விரால்
தமையு ணரறிவு தலைப்படு மிலங்கையான்
சுவைதருஞ் சொல்லைக் கேட்பது தக்கதே 6

காண்பான் காட்சி காட்சிப் பொருளிவை
மாண்பாய் விட்டு மலரடி சிந்தித்தால்
வீண்பா வங்கள் வெருண்டோடு மிலங்கையான்
மாண்பாச் சொன்னது மனத்திடை வைம்மினே 7

இருப்பி னும்நடந் தெத்திசை செல்லினும்
பொருப்பில் வாழ்ந்திடு புங்கவன் பொற்பதம்
விருப்ப மாவிளம் பீரிவ் விலங்கையான்
விருப்ப மானசொல் வீட்டை யளிக்குமே 8

அம்மை யப்ப னரிய சகோதரர்
இம்மை யில்லிறை யென்றுநீ ரெண்ணியே
மும்மைக் காலத்தும் போற்றீ ரிலங்கையான்
செம்மை யானசொன் முத்தியிற் சேர்க்குமே 9

போன காலத்தை யெண்ணிப் புகையுநீர்
ஞான நாயகன் நற்பதம் போற்றுவீர்
ஈன மானவை யேகு மிலங்கையான்
மோன நல்கு மொழிதனை உள்ளுமின் 10

எனக்கினி யான்பிறர் யாவர்க்கு மினியான்
தனக்கொப் பிலாதான் தத்துவா தீதன்
சினக்குங் கரியுரி திருமேனி போர்த்தான்
வனப்புறுஞ் சோலைசூ ழிலங்கை மன்னுமே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு முள்ளவன் எல்லாம் வல்லவன்
மங்கையோர் பாகன் மான்மழுக் கையினன்
பங்கயன் மால்பறந் திடந்துங் காணான்
கொங்கவிழ் காவிலங்கை கோயில்கொண் டானே 12

என்னை யென்னா லெனக்கறி வித்தவன்
அன்னை தன்னினு மன்புமிக் குள்ளவன்
தன்னை யெவரு மறியாத் தலைமையன்
தென்னைசே ரிலங்கை தேடியாண் டானே 13

---

## நல் வரம் தா

*கலிவிருத்தம்*

என்னை யென்னா லெனக்கறி வித்தவன்
தென்னை மாப்பனை சேரும்நல் லூருளான்
அன்னை தன்னினும் மேம்படு மன்புளான்
தன்னை நாடினன் தந்தன னோர்வரம் 1

மதியி லேரவி வைத்திடும் மாதவர்
துதிசெய் தூய மலரடி யென்னுளம்
பதிய வைத்திடும் பாக்கியம் யான்பெற
மதியை வேண்டினேன் தந்தரு ளிவ்வரம் 2

இருவி னைக ளெனைக்கண்டா லஞ்சவும்
வருவி னைகளிவ் வையத்திற் கெஞ்சவும்
குருப ரனுடன் கூடிச் சிறக்கவும்
மருவு பாவம் மறக்கவுந் தாவரம் 3

அதுவி துவென்ற வவையெல்லாங் கண்டாருக்
கதுவி துவுமாய் நின்ற பரம்பொருள்
பொதுவி னில்நடங் கண்டு களிக்கவுன்
புதும லரடி போற்றிடத் தாவரம் 4

ஆதா ரத்தால் நிராதாரஞ் சென்றுயான்
பேதா பேதங்கள் காணாப் பெருமையை
வேதாக மத்தில் விளங்கும் விமலனே
நாதா நீதா எனக்கிந்த நல்வரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் எது

*கலிவிருத்தம்*

எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே
எல்லாம் நானென எண்ணுதல் இன்பமே
எல்லாஞ் சிவன்செயல் என்பதும் இன்பமே
எல்லாம் என்செயல் என்பதும் இன்பமே 1

குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே 2

மோனத் தாழுதல் முடிவிலா இன்பம்
ஞானத் துயருதல் நவையறு மின்பம்
மானமார் நற்றவம் மதிப்பரு மின்பம்
யானென தற்றிடல் எல்லையில் இன்பமே 3

தன்னலம் வீந்திடத் தோன்றிடு மின்பம்
இன்னல்செய் வினையற இயைந்திடு மின்பம்
துன்னிய மலமறத் தழைத்திடு மின்பம்
மன்னிய பிறப்பற மலர்ந்திடு மின்பமே 4

ஐம்புலப் பந்தனை அற்றிடல் இன்பம்
வெம்புறு வெகுளி விலக்குதல் இன்பம்
துன்புறு காமத் தொடக்கறல் இன்பம்
வம்புறு மயக்கற வாய்த்திடும் இன்பமே 5

மன்னுயி ரெல்லாம் மகிழ்ந்திடல் இன்பம்
என்னுயிர் போலவை ஓம்பிடல் இன்பம்
இன்னுயி ரிவையெலா மிறைவன் வடிவென
உன்னிடும் மெய்யுணர் வுற்றிட லின்பமே 6

யாவருஞ் சமமென வுணர்ந்திட லின்பம்
யாவருஞ் சகோதர ரென்பது மின்பம்
யாவரும் நலனுற வுழைத்திட லின்பம்
யாவரு மொன்றென வொன்றிட லின்பமே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிதலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணிபயன் கருதா தாற்றிட லின்பம்
பணிமுயன் றாற்றி முற்றுற லின்பம்
பணியெலாஞ் சிவபணி யாக்கிட லின்பமே 8

கூசுங் கொலைகள வொழித்திட லின்பம்
மாசுடை மதுவகை நீக்கிட லின்பம்
பூசலும் பகைமையும் போக்கிட லின்பம்
தேசத் தொற்றுமை யோம்பிட லின்பமே 9

நல்லன புரிந்திடல் நவின்றிட லின்பம்
அல்லன வஞ்சி யகற்றிட லின்பம்
புல்லியோர் பிழையெல்லாம் பொறுத்திட லின்பம்
தொல்லைக ளல்லல்கள் தாங்கிட லின்பமே 10

வாய்மையும் ஆற்றலும் வளர்த்திடல் இன்பம்
தூய்மையும் அழகும் ஆர்த்திடல் இன்பம்
மேயநன் னீதி மேவிடல் இன்பம்
நேயஅன் புலகினில் நிறைந்திடல் இன்பமே 11

பாமர மக்கட் பணிசெயல் இன்பம்
தோமற அவர்வாழ் வுயர்த்துதல் இன்பம்
சேமநச் சாலைகள் நிறுவுதல் இன்பம்
வாமநூற் கலைகள் வகுத்திடல் இன்பமே 12

முத்தமிழ்ச் சங்கம் மல்குதல் இன்பம்
வித்தகர் சங்கம் விரவிடல் இன்பம்
பத்தர் சங்கம் பரவுதல் இன்பம்
நற்றவர் சங்கம் நாட்டிடும் இன்பமே 13

எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனிற்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே 14

பவநெறி கடக்கப் பிறந்திடு மின்பம்
அவநெறி துடைப்ப அணைந்திடு மின்பம்
தவநெறி தலைப்படத் தழைத்திடு மின்பஞ்
சிவநெறி பூத்திடுஞ் சச்சிதா னந்தமே 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏதும் இயம்ப மாட்டேன்

*கலிவிருத்தம்*

ஒன்றென இரண்டென எண்ணவும் மாட்டேன்
நன்றெனத் தீதென நண்ணவும் மாட்டேன்
அன்றென இன்றென அறையவும் மாட்டேன்
சென்றன வருவன தெரிந்திட மாட்டேன் 1

ஒருபொல்லாப்பு மிலையென ஓரவும் மாட்டேன்
குருவென்றுஞ் சீடனென்றுங் கொள்ளவும் மாட்டேன்
இருவினை யுண்டென இயம்பவும் மாட்டேன்
சுருதியின் முடிவெனச் சொல்லவும் மாட்டேன் 2

இகழ்ச்சி புகழ்ச்சியென ஏங்கவும் மாட்டேன்
மகிழ்ச்சியி லேமனம் வைக்கவும் மாட்டேன்
முகமன்சொல் வாரிலே மோகமும் வையேன்
அகம்பிர மாஸ்மியென் றனுதினம் நையேன் 3

இடையறா அன்பென எடுத்துநான் சொல்லேன்
கொடைகொடு விடுவெனக் கூறவும் மாட்டேன்
மடையரை ஞானியரை மதிக்கவும் மாட்டேன்
இடைமுதல் முடிவென இயம்பவும் மாட்டேன் 4

அஞ்சென ஆறென எட்டென அறியேன்
வஞ்சனை சூதென மனத்தினிற் குறியேன்
நஞ்சிது அமுதென நயக்கவும் மாட்டேன்
வெஞ்சினம் சஞ்சலம் விரும்பவும் மாட்டேன் 5

---

## அன்பாய் இருப்போமே

அன்பே சிவமென்று கிளியே! ஆன்றோ ருரைத்தார்கள்
ஆனமையால் நாங்கள் கிளியே! அன்பாய் இருப்போமே
இரப்பவர்க் கில்லையென்று கிளியே! எடுத்துநீ சொல்லாதே
ஈவது நன்மையெனக் கிளியே! எடுத்தவ்வை சொன்னாரே
சாவது வந்தாலுங் கிளியே! சத்தியம் மறவாதே
தேவர்கள் வந்தாலுங் கிளியே! சித்தங் கலங்காதே
தாய்சொல்லைத் தட்டாதே கிளியே! தந்தைசொல் மந்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் அருள்

*கலிவிருத்தம்*

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அகங்கு ளிர்ந்தது
ஆசான் அருளால் அன்பு வளர்ந்தது
ஆசான் அருளால் ஆசானைக் கண்டிலன் 1

அளந்தேன் அருளால் பூதங்கள் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்பொறி ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்புலன் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஆன்மாவை அறிந்தேன் 2

சிவதொண்டு செய்தல் செகத்திற் சரியை
சிவதொண்டு செய்தல் செகத்திற் கிரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் யோகம்
சிவதொண்டு செய்தல் சிவஞானம் ஆமே 3

ஆவதும் இல்லை அழிவதும் இல்லை
போவதும் இல்லைப் புகுவதும் இல்லை
தேவரும் இல்லைத் திசைகளும் இல்லை
யாவரும் இல்லை யார்தான் அறிவார் 4

அயலறி யாத ஆனந்தம் பெற்றேன்
மயலறி யாத மௌனத்தில் உற்றேன்
செயலறி யாத சிவத்தினைக் கற்றேன்
இயம நியமாதி யாவையு மற்றேன் 5

ஆணில் பெண்ணும் பெண்ணில் ஆணும்
தூணில் துரும்பும் துரும்பில் தூணும்
காணுங் கண்ணுங் காணாத கண்ணும்
பேணும் அடியார் பிறப்பற் றாரே 6

பூவும் மணமும் போலப் பொலியும்
நாவுஞ் சுவையும் போலத் தெளியும்
தேவுக் கடியார் செய்யுந் தொழிலும்
நாவுக் கெளிதோ நாமறி வோமோ 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் இரண்டும் மூன்றும் ஐந்தும்
நன்றுந் தீதும் நாளுங் கோளும்
ஒன்றி லொன்றி இருக்கு முபாயம்
கண்டு கொண்டவர் கலங்காச் சித்தரே 8

திங்களுங் கங்கையுஞ் சீறும் பாம்பும்
மங்கையும் மானும் மழுவுஞ் சூலமும்
அங்கியு முடுக்கையும் அரக்கனும் பொலியும்
சிங்காரங் கண்டார் சீவன் முத்தரே 9

அகரத்தில் உகரமும் மகரமும் சேர்த்து
சிகரமும் வகரமும் யகரமுஞ் செபித்தாற்
பகரவொண் ணாத பாத மணிந்து
தகரா காயத்தில் தனித்து வாழலாம் 10

அகலிடத் தாசான் அருளா லடியேன்
புகலும் பத்தும் போற்றி யேத்துவார்
இயல்சேர் இருவினை இடுக்கண் நீக்கிப்
பகலிர வில்லாப் பதவி யடைவரே 11

---

## நல்லூர்ச் செல்வன்

ஒருபொல்லாப்பு மில்லையென்று சொல்வான் — செல்வன்
உல்லாச மாகவே நல்லூரிற் செல்வான் 1

குருசீட முறையொன்றுங் கொள்ளான் — செல்வன்
குணாதீத னொருவரையுங் கும்பிட்டு நில்லான் 2

அருவென்றும் உருவென்றும் சொல்லான் — செல்வன்
ஆரறி வாரென் றதட்டியே வெல்வான் 3

வருவாரைப் போவாரைத் தெருவில் — செல்வன்
வைவான் சிரிப்பான் மகிழ்ச்சி தருவான் 4

மருமத்தில் மருமமா யிருப்பான் — செல்வன்
மாதவ ருமறி யாதம கத்தான் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூராசான்

*கலிவிருத்தம்*

உலகமு முயிரும் உம்பர் பிரானும்
கலகஞ் செய்யும் நடனங் கண்டால்
உலகில் பிறந்திறந் துழலா ரென்று
நலஞ்சேர் நல்லூ ராசான் நவின்றான் 1

மலர்மிசை யோனும் மாலுங் காணா
அலகிலா வாட லுடைய அப்பன்
மலர்தலை யுலகத்து மானிடன் போல
நலமிகு நல்லூரில் நாடியாட் கொண்டான் 2

குலநலம் பாராக் கொள்கை யுடையான்
சலன மில்லாத் தத்துவா தீதன்
பலரும் பைத்திய காரனென் றேச
நலமிகு நல்லையில் நாடக மளித்தான் 3

கற்றவர் விழுங்குங் கருணை யாளன்
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
சிற்றறி வுடையார் தேறாச் செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூ ரானே 4

விருப்பு வெறுப்பை வேரறப் பறித்தோன்
திருவடி மறவாச் சீருடை யாளன்
ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தோன்
குருவடி வாகக் கோலங்கொண் டானே 5

உண்மை முழுதுமென் றோயா துரைப்பவன்
நன்மை தீமையைக் கடந்த நாதன்
என்னையுந் தன்னையு மொன்றாய்க் காண்பவன்
சென்னியில் சேவடி சூட்டினன் அன்பால் 6

ஆரறி வாரென அடிக்கடி ஓதும்
பேரறி வாளன் பேர்செல் லப்பன்
பாரறி யாத பயித்திய காரன்
தேரடிப் படியில் தினமு மிருப்பான் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்நிற வண்ணன் கைதலை யணையாய்ப்
பார்மிசை யுறங்கும் பண்பை யுடையான்
நீர்வளம் நிலவளங் குறையா நல்லூர்
சீர்பெற வாழ்ந்த தேசிக மூர்த்தி 8

நாமறி யோமெனும் நல்ல மந்திரம்
சேமமுண் டாகச் செப்புந் திறத்தோன்
காமங் குரோத மோகங் கழிந்தவன்
நாமமோ செல்லப்பன் நல்லூ ரானே 9

எப்பவோ முடிந்ததென் றெடுத்தெடுத் துரைக்கும்
ஒப்பிலா மாமணி உன்மத்த னெவரும்
இப்படி யென்று இயம்பவொண் ணாதவன்
எப்போதும் முருகன்சந் நிதியில் வாழ்பவன் 10

பாவலர் நாவலர் பணியும்நல் லூரில்
சாவதும் பிறப்பதுந் தவிர்த்தெனை யாண்ட
காவலன் நல்லூர்க் கந்தன் பதியில்
சேவகஞ் செய்யுஞ் செல்லப்ப மூர்த்திகாண் 11

---

## வேடிக்கை செய்கிறானே

**பல்லவி**

வேடிக்கை செய்கிறானே – பரமபிதா
வேடிக்கை செய்கிறானே

**அநுபல்லவி**

வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்
வேறாய் இருப்பதுபோற் பாசாங்கு பண்ணுகிறான் (வேடி)

**சரணம்**

பாடுகிறான் படிக்கிறான் பக்தரினம் சேர்கிறான்
நாடுகிறான் நன்மைதீமை நாமல்ல வென்கிறான்
ஓடும் இருநிதியும் ஒன்றாகக் காண்கிறான்
ஒன்றோ விரண்டோவென ஓதி யறியவொண்ணான் (வேடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசிவ என்னச் சிவகதியாமே

*கலிவிருத்தம்*

தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே 1

ஒருவ னாலே உலக முதித்தது
ஒருவ னாலே உலகம் நிலைத்தது
ஒருவ னாலே உலகம் ஒடுங்கிடும்
ஒருவ னேயென் உயிர்த்துணை யாமே 2

ஒருவ னேயொரு மூவரு மானான்
ஒருவ னேயெல்லா வுயிர்களு மானான்
ஒருவ னேயெல்லா வுலகமு மானான்
ஒருவ னேயென்னை உய்யவைத் தானே 3

அண்ட சராசர மவன்வடி வாகும்
அண்ட சராசர மவனே யாகும்
அண்ட சராசரத் ததிசயந் தன்னை
அண்டரு மறியா ததிசயித் தாரே 4

சிவபக்தி யாலே சிந்தை குவிந்தது
சிவபக்தி யாலே சிந்தை தெளிந்தது
சிவபக்தி யாலே சிந்தை யிறந்தது
சிவபக்தி யாலே சீவன் முத்தியே 5

சிவனையல் லாமல் தேவரு மில்லை
சிவனையல் லாமல் சீவரு மில்லை
சிவனையல் லாமல் தேகமு மில்லை
சிவனையென் சித்தத்துட் கண்டுகொண் டேனே 6

நகரத் துள்ளே நான்முக னானான்
மகரத் துள்ளே மாலவ னானான்
சிகரத் துள்ளே சிவனாய் நின்றான்
வகரத் துள்ளே யருள்வடி வானானே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிவ என்று சிந்திப்பர் தேவர்
சிவசிவ என்று சிந்திப்பர் சீவர்
சிவசிவ என்று சிந்திப்பர் முனிவர்
சிவசிவ என்னச் சிவகதி யாமே 8

பக்தி செய்து பந்தத்தை நீக்கினேன்
பக்தி செய்து பரமனைக் கண்டேன்
பக்தி செய்யும் பாக்கியம் பெற்றேன்
பக்திக் கடலில் படிந்திருந் தேனே 9

ஒன்றை நினைந்தென் னுள்ள மொடுங்கிற்று
ஒன்றை நினைந்தென் னுள்ளங் களித்தது
ஒன்றை நினைந்தென் சிந்தை யுயர்ந்தது
ஒன்றை நினைந்து ஒன்றா னேனே 10

அஞ்செழுத் தாலே ஆக்கை பிறந்தது
அஞ்செழுத் தாலே ஆன்மா சிறந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கிநின் றேனே 11

அஞ்செழுத் தாலே சஞ்சல மழிந்தது
அஞ்செழுத் தாலே பஞ்ச மொழிந்தது
அஞ்செழுத் தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத் துள்ளே அடங்கிநின் றேனே 12

அஞ்செழுத் தாலே அரனடி காணலாம்
அஞ்செழுத் தாலே அகிலத்தை யாளலாம்
அஞ்செழுத் தாலே அகவினை தீர்க்கலாம்
அஞ்செ முத்துமென் நெஞ்சம் புகுந்ததே 13

ஆறாறுக் கப்பால் ஆனந்தக் கூத்து
ஆறாறுக் கப்பால் ஆனந்த வீடு
ஆறாறுக் கப்பால் ஆர்தான் ஈடு
ஆறாறுக் கப்பால் சென்றோரைக் கூடு 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை யறிந்தேன் தானவ னானேன்

*கலிவிருத்தம்*

அகண்ட வெளியிலே அப்பனு மம்மையும்
அகண்ட வெளியிலே யாருயி ரெல்லாம்
அகண்ட வெளியிலே யஞ்சுபூ தங்களும்
அகண்ட வெளியிலே யானிருந் தேனே 1

அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டேன்
அண்டமும் பிண்டமு மகமாய்க் கண்டேன்
அண்டமும் பிண்டமு மகத்திற் கண்டிலேன்
அண்டமும் பிண்டமு மாயிருந் தேனே 2

அன்னை பிதாக்குரு வாகிய வமலன்
என்னை வளர்த்தா னென்னோ டிருந்தான்
முன்னை வினையெலாம் முடித்த முதல்வன்
தன்னை யறிந்தேன் தானவ னானேன் 3

அருந்தவர் நெஞ்சி லிருக்கு மமிர்தம்
இருந்த படியே யிருக்கு மின்பம்
பொருந்திய வல்வினை போக்கும் மருந்து
அருந்துயர் நீக்கி யறிந்தேன் யானே 4

அருவமு முருவமு மாகிய வமலன்
குருவாய் வந்தே குறித்தெனை யாண்டான்
இருபதும் நாலு மில்லா விடத்தில்
கருவாகி நின்றான் காரணன் றானே 5

அச்சந் தீர்த்தெனை யாண்ட சோதி
பொய்த்தவர் நெஞ்சிற் போகா நீதி
மெய்ச்சம யத்தில் விளங்கு மாதி
வைச்சனன் திருவடி வாழ்ந்தேன் யானே 6

அறுபதும் நாலு மறியா வாதி
உறுதுயர் தீர்க்கு முயர்ந்த சோதி
குறுமுனிக் கருள்முனங் கொடுத்த வாதி
மறுவிலா வென்மனம் வாழ்ந்திருந் தானே 7

அஞ்சின் வழியை யடைத்தோ ரகத்தில்
பஞ்சின்மெல் லடியாள் பாக னிருக்கும்
வெஞ்சினம் வேட்ட வெறிய ரகத்தில்
அஞ்செழுத் துட்பொரு ளடையா தாமே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள் வணக்கம்

*கலிவிருத்தம்*

செய்ய மேனிய னேசிவ னேயுனைக்
கையு மெய்யுங் கருத்திற் கிசையவே
வைய கந்தனில் வாழ்த்தி வணங்கிடத்
தையில் வந்தருள் தான்செய்ய வேண்டுமே 1

மாசில் மாதவர் மனத்திற் கினிமையே
பேசில் இன்பம் விளைக்கும் பெருமையே
வாசி யாம்பரி ஏறும் வலவனே
மாசி மாதம் வருக வருகவே 2

பங்கில் மங்கையை வைத்த பராபர!
இங்கு மங்கும் இருக்கு மிறைவனே
துங்க மால்விடை யேறுநற் சோதியே
பங்கு னிதனிற் பாங்கின் வருகவே 3

செத்தா ரென்பு திகழ்திரு மார்பனே
அத்தா வென்றடி போற்றுவார்க் கன்பனே
கத்தா வுன்னைநான் கண்டு களித்திடச்
சித்தி ரைதனிற் சீக்கிரம் வருகவே 4

தேகா திதனை மெய்யெனச் சிந்தைசெய்
மோகா திபதி யாகிய மூர்க்கனை
ஏகா திபதி நீயெனை யாளுவான்
வைகா சியெனும் மாதம் வருகவே 5

ஆனி ரைதனை மேய்க்கு மரியொடு
நானி லந்தரு நாதனுங் காண்கிலர்
வானு லாவும் மதிவைத்த அப்பனே
ஆனி மாதம் வருக வருகவே 6

பாடி யாடிப் பணியு மடியவர்
கூடிக் கூடிக் கும்பிடு வாரவர்
வாடிப் பின்னர் மகிழச்செய் வள்ளலே
ஆடி மாதம் வருகவன் பாகவே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவ ணிசெய்து பாடு மடியவர்
நாவ ணிசெய்து நிற்கும் நலஞ்சுடர்
பூவ ணிசெய்து போற்றுவார் சிந்தையில்
ஆவ ணியருள் மாதம் வருகவே 8

அரற்று மன்பர்க் கருள்செ யிறையவன்
அரக்க னுக்கருள் செய்தவன் என்னையும்
புரக்கு மாறடி யேன்புகழ் போற்றிடப்
புரட்டா சிதனில் புண்ணியன் நண்ணுமே 9

துப்பி சைந்த இதழ்மடத் தோகையான்
அப்பி சைந்த அணிமுடி யாண்டவன்
செப்பி சைந்து திறலுடன் என்முனம்
ஐப்ப சியெனு மாதம் அணுகவே 10

கார்த்தி கேயனைக் கண்ணுத லிற்றரு
கீர்த்தி வாய்ந்த கிருபா சமுத்திரம்
தோத்திரஞ் செய்வார் துன்பந் துடைத்திடக்
கார்த்தி கையெனும் மாதத்திற் காணுமே 11

மார்க்க நன்னெறி சென்றிடு மாந்தர்கள்
மூர்க்க மான குணத்தை முனிந்திடும்
போர்க்கு றிப்புடைப் புங்கவன் புண்ணிய
மார்க ழியினில் வருக வருகவே 12

---

## வேறு

ஐயம்வை யாதேநெஞ்சே யரனடி தினம்பணி
தெய்வமா லோனல்லால் வேறொரு தெய்வமில்லை
செய்வன திருந்தச்செய் சேரிடம் அறிந்துசேர்
உய்யவ ழியிதுவே உனக்குண்மை யாய்நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதரிசனம்

*வெண்பா*

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் – திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடாநீ யென்றான் அவன் 1

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் – சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து 2

வண்டுபண் செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் – கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடாபற் றென்றான் சிரித்து 3

கன்னலொடு செந்நெல் கதலிபலா மாவர்க்கந்
துன்னுநல்லூர்ச் சாமி திருமுன்றில் – மன்னுசீர்த்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
சீரடியார் சூழ்ந்துநின்றார் தேர் 4

அயலறியா வந்தணர்க ளான்றநல் லூர்ப்பதியிற்
கயற்கணார் காமவலை சேரா – வியல்புடைய
செல்லப்ப னென்னுஞ் சிவகுருவை நான்கண்டேன்
நல்லதப்பா வென்றான் நயந்து 5

ஒன்றோ விரண்டோ வொருமூன்றோ வென்றெவரும்
அன்றுதொட் டின்றுவரை யாராய – ஒன்றுக்கும்
எட்டாமல் நின்றா னெழிற்குருவாய் நல்லூரிற்
பட்டமளித் தானெனக்குப் பார் 6

நீராய் நெருப்பாய் நெடுநிலனாய்க் காற்றாகி
ஆராலுங் காணா வமலனங்கே – நேராகச்
சற்குருவாய் வந்தேயென் சந்தேகந் தீர்த்தாண்டான்
நிர்க்குணம் பூண்டேன் நினை 7

புனலொழுகப் புள்ளிரியும் பொன்னீழ நாட்டில்
அனலேந்து வான்றன் புதல்வன் – மனமார
வாழ்நல்லை யம்பதியில் வாழ்வளிக்கச் சற்குருவாய்த்
தாள்காட்டி யாண்டான் தனி 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையொத்த செல்வன் அறி

*நேரிசை வெண்பா*

ஒருபொல்லாப் பில்லையென் றோதுந் திருவாக்கால்
உருகி யுருகி யுணர்வற் – றிருநிலத்தில்
இன்பதுன்ப மென்னுமவை யென்றுமொப்பாந் தன்மைகண்டேன்
என்னப்பன் செல்லப்ப னென்று 1

உண்மை முழுதுமென வோதுந் திருமொழியின்
தன்மையினைக் கண்டேன் தலைப்பட்டேன் – பின்னைப்
பிறப்பு மிறப்புமிலைப் பேதைமட நெஞ்சே
மறப்பின்றி யேத்தி மதி 2

முடிந்த முடிபென்று முன்னின்று சொல்லப்
படிந்ததென் னுள்ளம் பதியில் – முடிந்ததே
மாயவிருள் மந்திரமுந் தந்திரமும் நான்மறந்தேன்
தாயனைய செல்லப்பன் தான் 3

நாமறியோ மென்று நகைத்தென்னை நோக்கியே
காமங் கடந்தோன் கழறினான் – சேமமுடன்
சிந்தித்துச் சிந்தித்துச் சேவடியே தஞ்சமென்று
வந்தித்து நின்றேன் மகிழ்ந்து 4

ஆரறிவா ரென்றே அடிக்கடி யேநகைக்கும்
பேரறி வாளனையும் பித்தனென்றே – பாரிற்
பலரே இகழுவார் சில்லோர் புகழ்வர்
சலனமற்று வாழுவார் தாம் 5

கரைகாணா வின்பக் கடலாடு வானை
உரையாட யாருக்கிங் கொல்லுந் – தரைமீது
நால்வேதங் காண்கிலவே நற்றவத்தோர் தாமறியார்
மால்பிரமன் தேரார் மதி 6

ஆசைக் கடலி லலைந்து திரிவார்கள்
ஆசை கடந்தவனை யாரறிவார் – மாசற்ற
மேகத்தைச் சந்திரனை மின்மினிதான் மூடுமோ
மோகத்தை யின்றே முனி 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்ததிருக் கோபுரமு மோங்கெயிலுங் கண்டு
வியந்து விழுந்தெழுந்து விம்மி – அயர்ந்துநிற்கும்
ஆடவரும் மங்கையரும் மற்றுள்ள அன்பர்களும்
பாடவரு வார்தினமும் பார் 8

எட்டு மிரண்டும் அறியாத வென்னையும்
நட்டஞ்செய் செல்லப்பன் நல்லூரில் – திட்டமுடன்
நீயேநா னென்று நினைந்துருக வைத்தனனே
தாயே யனையா னவன் 9

ஆதியந்த மில்லையென்று சொல்லாமற் சொன்னான்காண்
நீதி நெறிவிளங்கும் நல்லூரில் – வீதியிலே
என்னைத்தா னாக்கி எடுத்தாண்டான் யாரென்னின்
அன்னையொத்த செல்வன் அறி 10

---

# தம்பி கேளடா

தாவித்தாவிச் செல்லும் மனத்தைத் தம்பிகேளடா
கூவிக்கூவி யழைத்துக் கூடக் குடியிருத்தடா 1

சேவித்துஞ் சென்றிரந்துந் தம்பி கேளடா
சிவமேநா மென்றுதினஞ் சிந்தை செய்யடா 2

பாவித்தும் பாட்டிசைத்துந் தம்பி கேளடா
மூவிதமாம் ஆசைதன்னை முனிந்து வெல்லடா 3

வாவியாறு சேரிலங்கை நல்ல நாடடா
பாவியென்ற நாமந்தன்னைப் பகைத்து நில்லடா 4

தூவிமயி லேறும்வேலைத் துதித்துக் கொள்ளடா
நாவினில் நமச்சிவாயம் நவின்று நில்லடா 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானைக் கண்டேன்

*நேரிசை வெண்பா*

ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் – கூசாமல்
நின்றேன்நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள் 1

அருளொளிக்குள் ளேபுகுந்து சென்றேன்யான் ஆங்கே
இருள்சூழ்ந் திருப்பதைக் கண்டேன் – பொருளறியேன்
ஓர்பொல்லாப் பில்லையென வோதினான் கேட்டுநின்றேன்
மர்மந்தே ராது மலைத்து 2

மலைத்துநின்ற வென்னை மனமகிழ நோக்கி
அலைத்துநின்ற மாயை யகலத் – தலைத்தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்மறந்து நின்றேன் வியந்து 3

வியந்துநின்ற வென்றனக்கு வேதாந்த வுண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய் – நயந்துகொள்
அப்படியே யுள்ளதுகாண் ஆரறிவார் என்றானால்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று 4

உற்றாரும் போனார் உடன்பிறந்தார் தாம்போனார்
பெற்றாரும் போனார்கள் பேருலகில் – மற்றாரும்
தன்னொப்பார் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னொப்பா ரின்றியிருந் தேன் 5

## வேறு

ஓடும்பு ளியம்பழ மும்போலும் உலகத்தை
நாடுதல் சீலமென்று ஞானிகள் முன்சொன்னார்
கோடுதல் இல்லாமல் குரைகழல் அடிபணி
வீடுனக் குண்டாகும் விருப்பமா யிதைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லமழை பெய்யாதோ

*நேரிசை வெண்பா*

நல்லமழை பெய்யாதோ நாடு சிறவாதோ
எல்லவரும் இன்புற்று வாழாரோ – நல்லூரான்
ஆசானாய் வந்தே யடியேனை யாண்டுகொண்டான்
பேசாவனு பூதியென் பேறு 1

நற்சிந் தனையென்னும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசினியில் – விற்றூண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக்(கு)
என்றுமின்ப மென்றே யிசை 2

பாட வறியான் பலகலையுந் தானறியான்
தேட வறியான் சிவயோகன் – நாடறியப்
பிச்சைச்சோ றுண்டு பிறவிப் பிணிதீர்ந்தான்
அச்சமிவற் கில்லை யறி 3

இச்சையில் லோரே யிடும்பைக் கிடும்பையை
நிச்சய மாய்ப்படுப்பர் நீயறியாய் – அச்சமற்று
வாழ்சிவ யோகனைமுன் வந்துவலிந் தாண்டுகொண்டான்
கேள்கிளைகள் நீங்கக் கிளர்ந்து 4

எழுவாய் பயனிலைகள் இல்லாமற் பாடித்
தொழுவான் சிவயோகன் சொல்லின் – அழுவான்
விழுவான் விதிர்விதிர்ப்பான் ஆரறிவார் என்று
தழுவுவான் தன்னையுன்னித் தான் 5

---

# ஞானதேசிகன்

**பல்லவி**

ஞான தேசிகனே சரணம்
நற்றவனே நல்லூர் வித்தகனே வருக

**அநுபல்லவி**

ஈனப் பிறவி நீக்கு மெழிலது கண்டேன்
என்னை யென்னாலறிந் தானந்தங் கொண்டேன் (ஞான)

**சரணம்**

காமக் குரோதமோகக் கடலைக் கடந்தேன்
கங்குல் பகலற்ற காட்சியைக் கண்டேன்
கருதுஞ் சுவாமியோக நாதனுன் தொண்டன்
தருமொரு வரமுண்டு அதுவெங்கும் மங்களம்
தங்கும்படி யருள்தந்து இரட்சி (ஞான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தங்கம்

தெய்வத்துக்குத் தெய்வம் சிந்தையிலே தானிருக்க
வையகத்தி லேனலைந்தாய் – சின்னத்தங்கம்
வாட்டமெல்லாம் விட்டிடடி 1

ஆழித் துரும்பெனவே யங்குமிங்கு மாயலைந்து
பாரில் தவியாதே – சின்னத்தங்கம்
பார்த்து மகிழ்ந்திடடி 2

அங்குமிங்கு மெங்குமந்த ஆண்டவன் தானிருக்க
அங்குமிங்கு மலையாதே – சின்னத்தங்கம்
ஆடிப்பாடி மகிழ்ந்திடடி 3

கங்குல்பகல் காணாத கருணைதனை வேண்டிக்கொண்டு
செங்கமல மடமாதே – சின்னத்தங்கம்
சீராக வாழ்ந்திடடி 4

ஆடம் பரமெல்லாம் அடியோடே நீக்கிவிட்டு
கேடறியாத் திருவடியைச் – சின்னத்தங்கம்
கிட்டநீ கண்டிடடி 5

வேடமொன்றும் போடாதே வீணருடன் கூடாதே
தேடவேண்டாந் திகைக்கவேண்டாஞ் – சின்னத்தங்கம்
சீவன்சிவன் ஆச்சுதடி 6

தொழுது வணங்கிடுவாய் துரியநிலை சாருமட்டும்
அழுதழுது ஆண்டவனைச் – சின்னத்தங்கம்
ஆன்மலாபம் தேடிடடி 7

முழுதுமுண்மை யென்றுமுன்னாள் மோனகுரு சொன்னாரடி
பழுதொன்று மில்லையடி – சின்னத்தங்கம்
பவுத்திரமாய் வாழ்ந்திடடி 8

காண்பானுங் காட்சியும்போய்க் காட்சிப் பொருளுமற்று
மாண்புடனே நின்றிடுவாய் – சின்னத்தங்கம்
மரணபய மில்லையடி 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேண்பொலியுந் திருவடியே சித்தத்திலெப் போதுமுண்டு
வீண்காலம் போக்காதே – சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடுவாய் 10

மானாபி மானம்விட்டு மண்ணும்விண்ணுந் தெரியாமல்
தானான தன்னிலையில் – சின்னத்தங்கம்
தனியே யிருந்திடடி 11

தானான தானேயல்லால் தனக்குதவி யாருமில்லை
மோன நிலைதனிலே – சின்னத்தங்கம்
மூழ்கி யிருந்திடடி 12

புத்தியைநீ நாட்டாதே புன்னெறியைச் சூட்டாதே
வெற்றியுனக் குண்டாகுஞ் – சின்னத்தங்கம்
விருப்பும் வெறுப்பும்விடு 13

எத்திக்கு மீசனடி இருந்தபடி யேயிருந்து
பத்திசெய்து பார்த்திடுவாய் – சின்னத்தங்கம்
பழிபாவ மில்லையடி 14

தத்துவப் பேயோடு தான்தழுவிக் கொள்ளாதே
சுத்தபரி பூரணத்தில் – சின்னத்தங்கம்
சுகித்துநீ வாழ்ந்திடடி 15

வித்தகம்நீ பேசாதே வேறொன்றை நாடாதே
செத்தாரைப் போல்திரிவாய் – சின்னத்தங்கம்
தெய்வம்நீ கண்டிடடி 16

மெத்தக்கதை பேசாதே மேன்மக்களை யேசாதே
சத்துருவும் மித்துருவுஞ் – சின்னத்தங்கம்
தானொன்றாய்ப் போகுமடி 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகரில்லாத இன்பம் நிறையுமே

அன்று மின்று மென்று முள்ளவன்
என்று மெங்க ளகத்துள் நிறையுமே 1

ஆக்கையே கோவில் அகஞ்சிவ லிங்கம்
பூக்கைக் கொண்டு பொன்னடி போற்றுதும் 2

இல்லை யுண்டென்று சொல்லவொண் ணாதவன்
நல்லூரில் வாழும் நற்றவ ராசனே 3

உம்பர் தலைவ னுயர்கை லாயன்
செம்பொ னம்பலத்தே திருநடனம் புரியுமே 4

ஊரும் பேரு மில்லா வொருவன்
சீருந் திருவுமாயென் சிந்தையுள் நிற்குமே 5

எண்ணு மெழுத்துமாய் நின்றிடு மெந்தை
கண்ணுக்குக் கண்ணாய் கலந்து நிற்குமே 6

ஏகம்பம் மேவி ஏந்திழை கலக்கம்
போக வருள்செய்தான் புண்ணிய மூர்த்தியே 7

ஐங்கரத் தொருகோட் டானையைத் தந்தவன்
அங்கு மிங்கு மெங்குமாய் நிற்கும் 8

ஒருபொல் லாப்பு மில்லையென் றோதினான்
திருவாழும் நல்லைத் தேசிக மூர்த்தியே 9

ஓங்கா ரத்தில் உதித்த வுலகெலாம்
ஓங்கா ரத்தில் ஒடுங்கு முண்மையே 10

ஔவனத் தில்லையில் ஆடல் உகந்தவன்
நவ்வியைப் பாகம் வைத்த நம்பனே 11

அ.்.குத லில்லா அறிவினை யுடையவன்
ந.்.கும் நம்வஞ்ச வேடங் கண்டே 12

கட்டுப் படாத மனத்தைக் கட்டினால்
எட்டுணை யேனும் இடுக்கண் இல்லையே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம் போல நாங்கள் வாழ்ந்தால்
நிகரில் லாத இன்பம் நிறையுமே 14

சந்ததம் சாதனை தவறாது செய்யின்
சிந்தூர முரித்த சிவனடி சேர்வோம் 15

ஞான யோகம் நாங்கள் புரிந்தால்
மோனவீ டடைவோம் முழுது முண்மையே 16

இடத்து மடந்தையை வைத்த பெருமான்
நடத்தைக் கண்டால் நாமுய்ந் தோமே 17

அணங்கு தந்தெமை ஆட்டும் மனத்தை
இணங்காம லெந்தை யிணையடி பணிகுதும் 18

தன்னைத் தன்னா லறிந்த ஞானிகள்
விண்ணில் விளங்கும் வெய்யவன் போல்வார் 19

நன்றுதீ தென்று நாடாமல் நாடினால்
குன்றின்மேல் வைத்த விளக்கின் கொள்கையே 20

பத்மா சனத்தில் பரிவுட னிருந்து
சித்த விருத்தியைத் தீர்த்திடு வோமே 21

மணிவா சகந்தரு மந்திர மோதினால்
பிணிமூப் பில்லாப் பிரம மாகுதும் 22

யவனர் சோனகர் தமிழர்சிங் களவர்
எவரும் வணங்குவார் எந்தைதன் தாளே 23

அரவார் செஞ்சடை அண்ணல்தன் பாதம்
விரவி நிற்பவர் வீடுபெற் றனரே 24

இலது உளதென வெவருமே மாறக்
கலந்து நிற்பவன் கண்ணுத லாமே 25

வஞ்ச நெஞ்சினர் காணா வள்ளலை
அஞ்செழுத் தோதி அர்ச்சிப் போமே 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகா ரரியும் அம்புயா சனனும்
தொழுதிட நின்றவன் சுத்த சிவமே 27

இளமை மூப்பிலா னெம்பி ரானெனத்
தொழுதிட நின்றவன் சோதிசொ ரூபனே 28

இறப்பும் பிறப்பு மெமக்கில்லை யென்றவன்
அறமார் நல்லூ ராசா னாமே 29

அனங்க னாகத்தை யன்றெரி செய்தவன்
கணங்கொள் பேயோ டாடிய கள்வனே 30

---

## ரங்கநின் திருவருள் தரலாகாதா

இராகம் – காபி தாளம் – ஆதி

**பல்லவி**

ரங்கநின் திருவருள் தரலாகாதா (ஸ்ரீ)

**அநுபல்லவி**

தேசகாலம் யாவும் மறந்து
தேவா உன்றனருள் நிறைந்து (ஸ்ரீ)

**சரணங்கள்**

பாதகன் கஞ்ச னனுப்பிய பூதகி
பாரில் மாளவே செய்தாய்
அதுபோல் அடியேன் ஆணவமொழிய
அருள்நீ தருவாய் ஐய (ஸ்ரீ) 1

வேத புராணம் காணவொண் ணாத
வித்தகனே பக்தர் வேண்டும்
விமலா அமலா கமலக் கண்ணா
விரைவாய் நீ வருவாய் (ஸ்ரீ) 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே வடிவாய் அமைந்த துறவீ

*ஆசிரியப்பா*

அன்பே வடிவாய் அமைந்த துறவீ
அன்பே யன்றி யாற்றலு முண்டோ?
இன்பமா முலகி லெங்கணுஞ் செறிக
துன்பமாம் மாயை தொடரா தொழிக
எல்லியு மல்லு மீசனைப் போற்றுக
கல்லுங் கரையக் கவிமழை சொரிக
கங்குல் பகலற்ற காட்சி பெறுக
எங்குஞ் சிவத்தைக் கண்டின் புறுக
மங்குவார் செல்வம் மதியா தொழுகுக
இங்கு நீ,
இருந்த படியே யிருந்து வாழுதி
அருந்துய ருன்னை யடையா வன்றே 1

வஞ்சகம் நீங்கி வாழுந் துறவீ!
அஞ்செழுத் துட்பொரு ளாகிய வமலனை
நெஞ்சத் துள்நீ வைத்து வணங்குதி
கஞ்சத் தேவனுங் கண்ணனுங் காணார்
தன்போற் பிறரைத் தானி னைந்திடு
உன்போற் பிறரிவ் வுலகி லுண்டோ
முன்பு நீ,
செய்த வல்வினை தீர்ந்திடுந் தியானஞ்
செய்தினஞ் சீவன் சிவனே யன்றோ 2

ஒருமைமனம் படைத்த வுத்தமத் துறவீ!
இருமையு மளிக்கு மிறைவன் திருவடி
அந்தியுஞ் சந்தியு மகலாது போற்றிப்
பந்தித்து நின்ற பாவம் போக்குதி
சிந்தித்துச் சிந்தித்துச் சீவபோத நீக்குதி
நிந்திப் பார்களை நேசத்தால் வெல்லுதி
சந்தேகமில்லை
நீயோ நித்தியன் நினக்கயல் கற்பனை
நீயோ நிராமயன் நினைவொழிந்து வாழுதி 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வாழவந்த சிவதொண்டன்

ஈழநாடு வாழவந்த எழில்மிகுந்த தொண்டன்
எளியவர்க்கும் பெரியவர்க்கும் ஏவல்செய்யுந் தொண்டன்
தாளமேள மில்லாமலே தான்வளருந் தொண்டன்
தன்னைப்போல அயலவரைத் தான்நினையுந் தொண்டன்
காளகண்ட னடியவர்க்குக் காவலான தொண்டன்
கங்குல்பகல் காணாமற் கருமமாற்றுந் தொண்டன்
நீளநினை நித்தியன்நீ யென்றுரைக்குந் தொண்டன்
நிட்டையிலே யெந்நாளும் நிலைத்துநிற்குந் தொண்டன் 1

ஈழநாடு வாழவந்த எங்கள்சிவ தொண்டன்
ஏழைகட்கும் பெரியவர்க்கும் ஏவல்செய்யுந் தொண்டன்
காளகண்ட னடியவர்க்குக் காவலான தொண்டன்
காமக்கு ரோதமோகம் நீக்கிவிடுந் தொண்டன்
வாழவெண்ணும் அடியவர்க்கு வழிகாட்டுந் தொண்டன்
மறுபிறப்பை யிப்பிறப்பில் நீக்கிவிடுந் தொண்டன்
தாளமேள மில்லாமலே தான்வளருந் தொண்டன்
தாயாகி யனைத்துலகுந் தாங்கிநிற்குந் தொண்டன் 2

சூழமிக நினைத்துவினை யாற்றுமெங்கள் தொண்டன்
சோம்பலே பாவமென்று சொல்லுகின்ற தொண்டன்
கூழெனினும் கூடிக்குடி யென்றுசொல்லுந் தொண்டன்
கூச்சமின்றி யுலகத்திலே குடியிருக்குந் தொண்டன்
ஆழநினை யகம்பாவம் போகுமெனுந் தொண்டன்
அடியவர்கள் திருவடியைச் சிரசில்வைக்குந் தொண்டன்
வாழிமிக வாணிச்சிக்கா மண்சுமந்த மாறன்
மாபெருமை வழுத்துகின்ற மாண்புமிக்க தொண்டன் 3

நானென்னும் ஆணவத்தை நலியவைக்கும் தொண்டன்
நன்மைக்குந் தீமைக்கும் நடுவில்நிற்குந் தொண்டன்
தேனென்ன இதயத்தில் தித்திக்குந் தொண்டன்
சிவாயநம வென்றுதினஞ் செப்புகின்ற தொண்டன்
ஆணென்றும் பெண்ணென்றும் அறியாத தொண்டன்
அடியவரைத் தானாக ஆக்கிவிடுந் தொண்டன்
பேணாத மாந்தரையும் பிரியாத தொண்டன்
பெரியோர்கள் கருத்திலென்றும் பொருந்திவளர் தொண்டன் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு செய்வார்

தொண்டுசெய் வாருக் குண்டே ஞானம்
தொண்டுசெய் வாருக் குண்டே மோனம்
தொண்டுசெய் வாருக் குண்டே தானம்
தொண்டுசெய் வாருக் குண்டே கானம் 1

எல்லா ரிடத்தும் அடியேன் வாழ்வேன்
எல்லா ரிடத்தும் அடியேன் தாழ்வேன்
எல்லார்க்கு மென்றும் அடியேன் கேள்வன்
சொல்லாற் பயனிலை யென்றே சூழ்வன் 2

எல்லா ருருவமு மென்னுரு வாகும்
எல்லார் நலன்களு மென்னல மாகும்
எல்லார் பலமு மென்பல மாகும்
நல்லோர் என்னுரை நயந்துகொள் வாரே 3

வருவன வெல்லாம் வந்தே யேகுக
கருதுவ வெல்லாங் கருதித் தீருக
ஒருவரு மறியா வொண்செஞ் சீறடி
குருபரன் திருவடி கொண்டா டுதுமே 4

ஒன்றிரண் டென்றே யுரையார் பெரியார்
கன்றும் மனத்தைக் கண்டாற் பரிவார்
கொன்றுயிர் வாழக் குறியார் திரிவார்
நன்றிது தீதென நலியார் அரிஓம் 5

எல்லா ரிடத்தும் உள்ளாய் தூயாய்
எல்லா எழிலும் நீயே யானாய்
கல்லாய் மலையாய்க் கவின்பெறு மரமாய்ப்
புல்லாய்ப் பூடாய்ப் பொலிவாய் நீயே 6

உன்துணை யன்றி யுயிர்த்துணை காணேன்
பின்னை யென்னைப் பிரியா துறைவாய்
அன்னையுந் தந்தையும் ஆசா னும்நீ
முன்னைப் பொருட்கெலாம் முன்னைப் பொருள்நீ 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்பொருள் ஆவி யுன்னதே இறைவா!
திடம்பெற ஞானத் தெளிவை நல்குதி
கண்ணே கருத்தே யெண்ணே எழுத்தே
விண்ணே விண்ணில் விளங்கும் மதியே 8

பண்ணே பண்ணிற் கணியே பரம!
எண்ணேன் இனிப்பிற தெய்வம் நாயேன்
ஏத்தி யேத்தி யிணங்கி வணங்கச்
சாற்றிய கவியை யேற்றிடு வாயே 9

## ஒன்றே தெய்வம் ஒன்றே உலகம்

உலக முவக்கவும் உன்மனங் களிக்கவும்
கழறும் வாசகங் கருத்தி லிருத்துக
ஒன்றே தெய்வ மொன்றே யுலகம்
நன்றே யென்றும் நாடிப் புரிவாய்
நீசடப் பொருளல நிறைதரு சித்து
பேச வரிதுன் பெருமையெவ ராலும்
ஆதலா லுன்னை யங்கி சுடாது
காதல்சேர் காற்றும் உலர்த்தா கவலல்
மாதிரந் தானும் வருத்த முடியாது
ஓதிடு மப்புவுங் குளிரச்செய் யாதுனை
ஈறிலாப் பொருணீ யெள்ளள வேனும்
மாறிலா மகிழ்ச்சி மனத்திடைக் கொள்வாய்
சாதி சமயம் யாவுமுனக் கில்லை
நீதி யொன்றை நெஞ்சிடை வைத்திடு
உபாதி செய்யும் புலன்வழி யுறாதே
அபாய மொன்று மென்று முனக்கிலை
செய்ய வேண்டிய செவ்வனே செய்வாய்
உய்ந்தாய் முன்னர் யுலகமுன் கைவசம்
சந்தேக மில்லைச் சாற்றினன் கேணீ
சற்குரு உன்துணை சாட்சிநீ யாவாய்
அற்புத னடியிணை யென்றும் வாழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூத்தாடுதே மனமென்ன கொடுமை

**பல்லவி**

கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா உன்னடிமை

**அநுபல்லவி**

தீர்த்தங்க ளாடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்னநான் செய்வேன் (கூத்)

**சரணங்கள்**

பார்த்த விடமெங்கும் நீயல்லா தில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத்தெனை யாள்வ துன்றன் கடமை
கருணைக் கடலே நானுன் உடைமை (கூத்) 1

பத்திசெய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தம ராக உலகினில் வாழ்ந்து
வித்தகன் சேவடி விரவிநிற் பாரே (கூத்) 2

---

## சிவ சிவ ஓம் ஓம்

சிவ சிவ செல்வக் கணபதி ஓம் ஓம்
சிவ சிவ செல்வவே லாயுதன் ஓம் ஓம்
சிவ சிவ செல்வச் சிவதொண்டன் ஓம் ஓம்
சிவ சிவ செல்வச் சிவனடியார் ஓம் ஓம்
சிவ சிவ எம்முள் திருவருள் ஓம் ஓம்
சிவ சிவ செல்வத் திருமால் ஓம் ஓம்
சிவ சிவ அயன்முதல் தேவர்கள் ஓம் ஓம்
சிவ சிவ ஐம்பெரும் பூதங்கள் ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ ஐம்பொறி ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ ஐம்புலன் ஓம் ஓம்
சிவ சிவ சிவ தச நாடிகள் ஓம் ஓம்
சிவ சிவ சற்குரு நாதன் ஓம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரகர சிவசிவ மறையோனே

அன்பர்தஞ் சிந்தையில் உறைவோனே
அரகர சிவசிவ மறையோனே 1

பொன்னே மணியே பூங்கோவே
புலவரெல் லாம்புகழ் எங்கோவே 2

காணுங் கண்ணிற் கலந்தவனே
கதிரொளி போலெங்கும் நிறைந்தவனே 3

ஆணும் பெண்ணும் ஆனவனே
அடியவர் பேணும் வானவனே 4

கோணிய பிறையை முடித்தவனே
கொல்புலித் தோலை யுடுத்தவனே 5

வேணியிற் கங்கை தரித்தவனே
வேழத்தின் தோலை யுரித்தவனே 6

பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணாய்ப் பரந்தவனே 7

நூற்பொருள் தன்னை விரித்தவனே
நுண்ணிடை யாள்தன் இடத்தவனே 8

தில்லையில் ஆடிய சிற்பரனே
சிவசிவ சிவசிவ தற்பரனே 9

எல்லையில் லாவருள் தந்தவனே
என்போல் நல்லையில் வந்தவனே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி குரு
நாதனைப் பாடிக் கும்மியடி
இம்மை மறுமைக்கும் எங்களை யாட்கொண்ட
எழிலைப் பாடிக் கும்மியடி 1

சிவனொ ருத்தனே தெய்வமடி தோழி
சென்னியிற் கங்கை பாயுதடி
அவனி டத்தினிற் பெண்ணைநீ பாரடி
எண்ணியெண் ணிக்கடைத் தேறடி 2

அவனன்றி யொன்றும் இல்லையடி பெண்ணே
அங்கையி லங்கியெ ரியுதடி
அவன்ற னாகத்தில் நாகமடி பெண்ணே
அரையி லேபுலி யுடையடி 3

அடிக்கீ ழரக்கன் கிடக்கி றானடி
அங்கையி லேமழு மானடி
துடியொ ருகையில் தோன்றுதடி பெண்ணே
சூலமுங் கையிற் றுலங்குதடி 4

குடிமு ழுதையும் ஆண்டுகொண் டானடி
கொல்லும் நமனை யுதைத்தான்டி
அடிமு டியொன்று மில்லையடி பெண்ணே
ஆனந்த மாய்க்கும்மி பாடடி 5

தூக்கிய பாதத்தின் தோற்றத்தைப் பாரடி
தொந்தோந் தோமென்ற நாதத்தைக் கேளடி
ஆக்கி யழிக்கவும் வல்லவ னவனடி
ஆனந்த மாய்க்கும்மி பாடுமடி 6

பாம்பும் புலியும் பார்த்திருந் தாரடி
பாரளந் தோனயன் பாடுபட் டாரடி
நாம்பு கழ்ந்திட நற்றரு ணமடி
நங்கைய ரேகும்மி பாடுமடி 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிப் புலன்வழி போகா தேயடி
மதிக்குள் ளேரவி சேர்த்திடடி
ஆறியிருந்து பாரடி பெண்ணே
அவனை நீகண்டு தேறடி 8

சித்தத்துள் நித்தந் தித்திக்குந் தேனடி
தீராப் பிணியைத் தீர்க்கும் மருந்தடி
பத்தர்கள் கண்டு பரவு வாரடி
பாவைய ரேகும்மி பாடுமடி 9

## இலங்கை என் திருநாடு

எல்லார்க்குந் தம்பிரா னென்னைவந் தாண்டுகொண்டான்
கொல்லேன்பொய் சொல்லேன்யான் குருமொழியை மறக்கிலேன்
நில்லாத காயத்தை நிலையெனவே யெண்ணுகிலேன்
செல்லாரும் பொழில்சூழ மிலங்கையென் திருநாடே 1

என்னைவிட் டகலாம லெப்போது மிருக்கின்ற
அன்னையொப் பானவனை யடியேன்யான் மறப்பேனோ
முன்னைநா ளிராவணன்றன் முடிபத்தும் நெரித்தவன்
தென்னைபனை சேரிலங்கை சிறியேன்றன் திருநாடே 2

நீர்நிலந்தீ கால்வானாய் நின்றபிரான் சிறியேனை
ஓர்கணமும் பிரிவறியான் உத்தமர்தஞ் சிந்தையான்
கார்நிற மேனியனுங் கமலனுங் காண்கிலான்
சீர்பெறூஉ மிலங்கையென் திருநாடு கண்டுகொளே 3

பொறிவழிபோ யலையாமற் பூவுலகிற் காத்தபிரான்
அறிவுக் கறிவானான் ஆரணமு மறியகில்லான்
குறிகுணங்க ளற்றவொன்றைக் கும்பிடுவோ மெப்போதும்
செறிபொழில்சூ ழிலங்கையே சிறியேன்றன் திருநாடே 4

முற்றாத பின்மதியம் முடிதனிலே வைத்தபிரான்
அற்றார்க்கு மலர்ந்தார்க்கு மருள்புரியு மம்பலவன்
நற்றாம ரைப்பாதம் நாள்தோறுங் கைதொழுவார்
வற்றாத வளஞ்செறியு மிலங்கையென் திருநாடே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கட்சடையாய் எங்களையுடையாய் சிவனே ஓம்

திங்கட் சடையாய் எங்களை யுடையாய் சிவனே ஓம்
சீரிய அடியார் சிந்தையி லுறையுஞ் செல்வா ஓம்
மங்கையை யுடையாய் மழவிடை யானே மாதவனே ஓம்
மண்ணும் விண்ணும் ஒன்றாய் விளங்கும் மணியே ஓம்
அங்கையி லங்கி தங்கிய பரனே யரனே ஓம்
ஆருயி ரெல்லாம் நீயே யாகி யமர்ந்தாய் ஓம்
கங்குலும் பகலும் இல்லாக் காட்சி தருவாய் ஓம்
கருதும் நல்ல வடியரை யென்றுங் காப்பாய் ஓம் 1

சிறையார் வண்டறை கொன்றைப் போதனே சிவனே ஓம்
சீவன் சிவனாய்ப் பாவனை செய்வார் திருவே ஓம்
குறையா வன்பு தரவே வருவாய் குருவே ஓம்
கூடிக்கூடி யுன்னடி பாடல் கொடுப்பாய் ஓம்
பிறையார் சடையாய் பேரா யிரமே யுடையாய் ஓம்
பேசப் பேச வின்பம் பெருகும் பிரானே ஓம்
அறையார் கழலே யல்லாற் சிறியே னறியேன் ஓம்
அன்புசெய் யடியரை யென்றும் ஆளக் கடவாய் ஓம் 2

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையும் பொறுப்பாய் ஓம்
காலனைக் காலாற் றாக்கிய பரனே யரனே ஓம்
எல்லாஞ் செய்ய வல்லபம் உடையாய் எந்தாய் ஓம்
எழில்சேர் நல்லை வாழும் குருவே யிறைவா ஓம்
பொல்லா வினைகள் போகும் வண்ணம் புரிவாய் ஓம்
பூவார் மலர்கொண்டடியார் போற்றும் பொருளேஓம்
எல்லா முன்செய லாமெனும் எண்ணந் தருவாய் ஓம்
ஏத்தும் நல்ல வடியரை யென்றுங் காப்பாய் ஓம் 3

மாறிப் பொறிவழி போகா மனத்தார் இனத்தாய் ஓம்
மாலோ டயனுங் காணா ஒளியே மணியே ஓம்
ஆறும் பிறையுஞ் சூடிய ஐயா மெய்யா ஓம்
ஆதியு மந்தமு மில்லாய் உள்ளாய் அறிவே ஓம்
தேறித் தெளிவார் சிந்தையி லூறும் அமுதே ஓம்
செயசெய வென்று பணியும் தேவர்கள் தேவா ஓம்
கூரிய சூலப் படையினை யுடையாய் கோவே ஓம்
கும்பிடும் நல்ல வடியரை யென்றுங் காப்பாய் ஓம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றியென் வாழ்முத லாய பொருளே யருளே ஓம்
புண்ணியர் நண்ணும் பூரண வடிவே புகலே ஓம்
தோற்ற மறைக்குங் காரண மாகிய தொல்லோய் ஓம்
சோதிச் சுடரே தோகைக் கிடமீ துணையே ஓம்
நீற்றொடு பொலியும் நெற்றிக் கண்ணா நிமலா ஓம்
நீதி வழுவா மாதவர் தங்கள் நெறியே ஓம்
ஆற்றொடு தும்பை யம்புலி சூடிய யரனே ஓம்
அன்பு செய்யடியரை யென்றும் ஆளக் கடவாய் ஓம் 5

---

# ஆநந்த நடனம் ஆடினான்

**பல்லவி**

ஆநந்த நடனம் ஆடினான்
அல்லும் பகலும்நல்லூர் வீதியிற் செல்லப்பன்

**அநுபல்லவி**

மோனந் திகழுஞ்சிவ யோகியர்தா மறியார்
முழுவது முண்மையென முகமலர்ந் தோதுவான் (ஆநந்த)

**சரணங்கள்**

ஈனந் தரும்பிறவி யெடுத்தெடுத் துழலாமல்
என்னைவந் தாண்டு கொண்டான் இன்பத்தில் மாண்டு
கொண்டேன்
தானந் தவமிரண்டுஞ் சரியை கிரியைவிண்டும்
சதுர்வித வுபாயத்தாலே தானாக வென்னைச்செய்தான்
(ஆநந்த) 1

முன்னிலை யில்லையென்றும் முழுவது முண்மையென்றும்
மூடிய மாயவிருள் ஓட வருள்புரிந்தான்
அந்நிலையி லேயுட லாவியவன் வசமாச்சு
ஆகா அதையறிவார் ஆர்தானிவ் வையகத்தில் (ஆநந்த) 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் திருமொழி

அறஞ்செய விரும்பென ஔவையார் தந்த
சிறந்த திருமொழி தீவினை தெறுமே 1

ஆறுவது சினமெனு மரிய மந்திரங்
கூறுவார் நாவிற் குலவுஞ்சொல் லணங்கே 2

இயல்வது கரவே லெவரே யாயினும்
பயில்வுறப் பயில்வுறப் பாவங் கெடுமே 3

ஈவது விலக்கே லெல்லாந் தந்து
சேவைகள் செய்யத் திறங்கொடுக் கும்மே 4

உடையது விளம்பே லுணர்வார்க் கெல்லாந்
தடையிலா வான்ம சக்தியீ னும்மே 5

ஊக்கமது கைவிடே லூழ்வினை நீக்கும்
தேக்குமா னந்தஞ் சித்தியுந் தருமே 6

---

# பணியவா என் மனமே

நித்தியர்நா மென்னும் நினைவுதடு மாறாமற்
பத்திபண்ணிப் பாடிப் பணியவா என்மனமே 1

முத்திக்கு வித்தை முனையில்வைத்துச் சீராட்டித்
தித்திக்குந் தேனருந்தச் சீக்கிரம்வா என்மனமே 2

அத்துவி தப்பொருளை யருந்தவர்கட் காரமுதைச்
சித்தத்துட் கண்டு தெளியவா என்மனமே 3

எத்திக்கு மாகி என்னிதயத் தேவாழும்
தத்துவத்தைக் கண்டு சலிப்பறவா என்மனமே 4

சித்திதருந் தேவாய்த் திகழும் பரம்பொருளின்
வித்தகத்தாள் வாழ்த்த விரைந்துவா என்மனமே 5

உத்தமர்கள் போற்றும் ஓங்காரத் துட்பொருளைப்
பத்தியொடு பாடிப் பணியவா என்மனமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னை யறிந்தோமே

தன்னை யறிந்தோமே – கிளியே
தவத்தி லுயர்ந்தோமே
பின்ன மிறந்தோமே – கிளியே
பெருமா னருளாலே
எம்மை நிகராவார் – கிளியே
எவரு முலகிலில்லை
செம்மை மனத்துடனே – கிளியே
சிவன்பாதம் நினைப்போமே
இம்மை மறுமைக்கும் – கிளியே
எவரும் இணையில்லை
அம்மையு மப்பனுமே – கிளியே
ஆம்துணை நீயறியே

## நல்லூர் வெளியில்

நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிகிறான்
நங்கள்குரு நாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரை யுந்தன் னிடத்திலே காண்பவன்
இயம நியமங்களில் எள்ளளவு மோபிசகான்

பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்

ஆரறி வாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்கார மாய்க்கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரெவரு மோவறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா ரேசுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராதனைசெய் தறிவாய் சிவனை

ஆதியு மந்தமு மில்லான் – தம்பி
ஆதியு மந்தமு முள்ளான் 1

சாதி சமயங்க ளில்லான் – தம்பி
சாதி சமயங்க ளுள்ளான் 2

ஓதி யுணர முடியான் – தம்பி
ஓதி யுணரும் வடிவான் 3

நீதி குருபர னானான் – தம்பி
நீர்நிலந் தீகால் வானமு மானான் 4

சந்திர சூரிய ரானான் – தம்பி
தாரா கணங்களு மானான் 5

மந்திர தந்திர மானான் – தம்பி
மருந்து மருந்து மவர்களு மானான் 6

இந்திர ராதியோ ரானான் – தம்பி
எல்லா வுலகமுந் தானே யானான் 7

இந்த வுயிருட லானான் – தம்பி
இருக்கு முதலிய வேதங்க ளானான் 8

பந்தமும் வீடும் படைப்பான் – தம்பி
பந்தமும் வீடுந் துடைப்பான் 9

அந்தியுஞ் சந்தியு மிதனைத் – தம்பி
ஆரா தனைசெய் தறிவாய் சிவனை 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னைபிதாக் குருவானான் – அரன்

அன்னை பிதாக்குரு வானான் – அரன்
ஆகாய மாதி பூதங்க ளானான்
என்னையுந் தன்னையும் பிரியான் – அரன்
ஏக னநேகன் என்பார் பெரியோர்
முன்னைப் பொருட்கெல்லாம் முன்னோன் – அரன்
மூர்த்தி தலந்தீர்த்த மாதற் குரியோன்
அண்ட சராசர மெல்லாம் – அரன்
ஆடலைக் கண்டு தொண்டுசெய் வோமே
சண்டை யிடும்போதுஞ் சலியான் – அரன்
தன்னி லையினிற் சற்றுஞ் சலியான்
ஆணென்றும் பெண்ணென்று மறியான் – அரன்
அப்போதைக் கப்போ தாடல் புரிவான்
வீண்புகழ் தன்னை விரும்பான் – அரன்
வேதாந்த சித்தாந்த சமரசந் தருவான்
கூறும்நா முதலாக யாவும் – அரன்
கொண்டாடு மிடமென்று கண்டுகொள் வோமே
நித்திய வாழ்வினைத் தந்தான் – அரன்
நீநா னென்பதை நீங்கினான் றானே

## சன்மார்க்கம்

மார்க்கஞ் சன்மார்க்கம்
மகரிஷிகள் கண்டமார்க்கம் – மார்க்கம் 1

மூர்க்கமான குணம்போக்கும்
முழுதும்உண்மை யெனவாக்கும் – மார்க்கம் 2

பார்க்கப்பார்க்க இன்பந்தேக்கும்
பரமானந்த நிலையைநோக்கும் – மார்க்கம் 3

ஆர்க்குஞ்சுதந்தி ரத்தையாக்கும்
அனைவரையும் முத்தியிலேசேர்க்கும் – மார்க்கம் 4

பக்திசெய்யோக சுவாமிபாட்டு
படிப்பவருக்குநல்ல வழிகாட்டும் – மார்க்கம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமாய் வாழ்ந்திடடி

அங்கிங்கென் றெண்ணாதே அவனிவனென் றுன்னாதே
எங்குஞ் சிவத்தைக்கண்டு – தங்கமே
இன்பமாய் வாழ்ந்திடடி 1

ஆசை வலையிற்சிக்கி – ஆண்டவனை நீமறந்தாய்
பூசைசெய்து பொன்னடியைத் – தங்கமே
பூரணமாய் வாழ்ந்திடடி 2

இல்லையென்றும் உண்டென்றும் எடுத்துச்சொல்ல வொண்ணாத
நல்லூரான் திருவடியைத் – தங்கமே
நாடோறும் போய்வணங்கு 3

ஈடேற வேண்டுமென்றால் எல்லாஞ் சிவன்செயலாய்
நாடோறும் வேண்டிப்பணி – தங்கமே
நல்லூரான் கிருபையுண்டு 4

உண்மை முழுதுமென்ற வுயர்ந்த திருவாக்கை
எண்ணாமல் எண்ணிப்பணி – தங்கமே
எல்லாங்கை கூடுமடி 5

ஊரும்பேரு மில்லாத உத்தமனைச் சித்தத்தில்
சேரும்வண்ணம் நாள்தோறும் – தங்கமே
தியானஞ்செய்து வாழுவமே 6

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கு மீசனென்று
சொன்ன திருவாக்கே – தங்கமே
சுந்தரமென் றெண்ணியிரு 7

ஏழுலகும் தொழுதேத்தும் எம்பெருமான் திருவடியை
நாளும் மறவாதே – தங்கமே
நானுமில்லை நீயுமில்லை 8

ஐம்பூதம் நீயல்லை அறிந்திதனைக் கொள்ளுவாய்
ஆன்மாநீ மறந்திடாதே – தங்கமே
ஆட்சிசெய்ய வேண்டாமடி 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயிலுள்ள வுடம்பு சிவன்கோயில்
என்பதை மறந்திடாதே – தங்கமே
ஏத்தியேத்திப் பணிந்திடடி 10

ஓதுவதொ ழியேலென்ற உண்மையைநீ மறவாதே
ஏதுக்கு மஞ்சாதே – தங்கமே
எல்லாஞ் சிவமயமே 11

ஔவியம் பேசாதே ஆவியுள்ள மட்டும்நீ
தெய்வம் ஒருவனென்று – தங்கமே
திடமுடன் வாழ்ந்திடடி 12

அஃகமும் காசுந்தேடி அம்புவியி லலையாதே
வெஃகாதே பிறன்பொருளைத் – தங்கமே
வீடுனக்குச் சொந்தமடி 13

## திருநாமத்தைச் செபித்திடடா

அனைத்துயிரும் நீயேதம்பி அதையறிந்து வாழ்ந்திடடா
தினைத்துணையும் மறந்திடாமல் திருநாமத்தைச்
செபித்திடடா 1

வினைப்பகையை வென்றிடுவாய் வேறுபொரு ளில்லையடா
முனைத்துவருஞ் சினத்தைவென்றால் மூவர்களும்
ஏவல்செய்வார் 2

உனைப்போலே யுத்தமர்கள் உலகத்தினி லில்லையடா
நினைத்தபடி நடந்திடடா நிட்டையிலே பொருந்திடடா 3

ஆவதில்லா அழிவதில்லா ஆன்மாவை யறிந்திடடா
தேவர்களும் முனிவர்களுஞ் சித்தத்திலே திகழுகின்றார் 4

ஒருபொல்லாப்பு மில்லைத்தம்பி உண்மையே முழுதுமடா
குருநாதன் கூற்றிதடா கும்பிட்டுக்கொண் டாடிடடா 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் கடவுள் கண்டீரோ

*கலித்தாழிசை*

காணுங் கண்ணிற் கலந்து நிற்பது கடவுள் கண்டீரோ
ஆணும் பெண்ணு மலியு மானது அதுநீர் குறியீரோ 1

பாரும் விண்ணு மாகி நிற்பது அதுநீர் பாரீரோ
சீருந் திருவு மாகி நிற்பது அதுநீர் தெரியீரோ 2

தாயுந் தந்தையு மாகி நிற்பது தாணு வறியீரோ
நீயும் நானு மாகி நிற்பது நினைந்து பாரீரோ 3

காயுங் கனியு மாகி நிற்பது கண்டு களியீரோ
தேயு வாயு வாகித் திகழ்வது சிந்தித் துணர்வீரோ 4

மாயும் மனிதரை மாயாது வைக்கும் மருந்தை யுண்ணீரோ
பேயொடு காட்டிலாடும் பிரானைய பேதமாய்ப்பாரீரோ 5

---

## ஆன்மா நித்தியம்

ஐம்புலன் வழிபோம் ஆசைதனைத் தடுப்போம்
ஆன்மா நித்தியம் என்று படிப்போம்
வெம்பகையை வென்று வெற்றி எடுப்போம்
வேறுபொருள் இல்லை என்றுதிடப் படுவோம்
நம்பிக்கை யென்னும் கையைநாம் நீட்டுவோம்
நாதாந்த நிலையில் நாம்முடி சூட்டுவோம்
சும்மா இருக்குஞ் சுகத்தினைக் காட்டுவோம்
சுருதி நிலையில் நிற்குஞ் சுகங்காட்டுவோம்
இம்மை மறுமைதனை யிங்கு காட்டுவோம்
ஏகாந்த வெளியிலே நம்மை நாட்டுவோம்
தம்மைத் தாமாக உய்யவழி காட்டுவோம்
சஞ்சலமில் லாவழியில் நம்மை நாட்டுவோம்
தும்பிமுகன் பாதத்தைத் தோத்திரஞ் செய்வோம்
சுவாமி தரிசனஞ் சூத்திரம் என்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் தத் சத்

இருவருந் தேடிக் காணா இறைவ னென்போ
லுருத்தாங்கி
இணங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னா
னிவனென்ன
ஒருவரு மறியா தோடியுலாவி யுவகை பூத்த
முகத்தினராய்
ஒருநா ளென்றனை யுற்று நோக்கிஓர் பொல்லாப்பு
மிலையென்று
அருவமுங் காட்டி யுருவமுங் காட்டி யப்பாற்
கப்பாலாம்
அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டி யந்த மாதி
யில்லாச்
சொரூபமுங் காட்டிச் சும்மா விருக்கும் சூட்சத்தில்
மாட்டி விட்டான்
துன்ப மிறந்தன வின்ப மிறந்தன சோதிசோதி
சிவசோதி 1

சிவத்தினை வளர்க்கும் பாக்கிய மெமக்குச் சித்தித்த
தினிமேலே
தெய்வம் வேறே யுண்டென வெண்ணுஞ் சிந்தையு
மிறந்ததுவே
அவத்தினிற் செல்லும் மனத்தினை வெல்வோம்
ஐம்பொறி வழிச்செல்லேம்
அழியா மெய்ப்பொரு ளாகிய ஆன்மா அறிவோம்
நாம்நன்றாய்
தவவழிச் செல்வோம் குருமொழி கொள்வோம்
தன்னைத் தானறிவோம்
சாந்தம் பொறுமை யேய்ந்த நற்பணி சந்தத
மணிந்துகொள்வோம்
உவத்தலுங் காய்தலு மோடி யொளித்தன ஒன்றுங்
குறைவில்லோம்
உண்மை முழுதும்நீ ஓதுக தினமும் ஓம்தத் சத்ஓம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவ னெழுமுன் காலை யெழுந்து கைகால் முகங்கழுவு
கடிமல ரெடுத்து மாலை தொடுத்துக் கடவுளைப்
பூசனைசெய்
அதிர வராமுன் மனத்தினை யடக்கி ஐம்பொறி
வழிச்செல்லாது
ஆண்டவன் திவ்விய பாதத்தை வேண்டி ஆசையை
வென்றிடலாம்
முதிர முதிர முழுவது முண்மை யெனமுனி
சொன்னமொழி
முகமுக மாகக் கண்டு தெளிந்து முத்தியிற்
சேர்ந்திடலாம்
இதிலோர் ஐய மில்லை யில்லை யெல்லா மவன்செயலே
இரவும் பகலு மிதய வெளிக்குள் ஏத்துக ஓம்தத்சத் 3

எண்ணி யெண்ணிப் பணிவார் நெஞ்சே யீசன்
உறைகோயில்
இருந்துங் கிடந்தும் நடந்துந் தொடர்ந்தும் ஏத்திப்
பணிவோமே
புண்ணிய பாவ மிரண்டுங் கற்பனை போக்கொடு
வரவில்லாப்
பொருளே நாங்கள் அருள்கொண் டறிநீ புத்தியை
நாட்டாதே
மண்ணில் வந்து பிறந்ததும் வாழ்ந்ததும்
மாமா யையிதனை
மாதவ ரறிவார் மற்றவ ரறியார் மதியா தேயிதனை
எண்ணில் காலம் உயிரோ டிருப்போம் ஏதுக்கு
மஞ்சாதே
இயைந்த படிநீ நடந்துகொ ளென்றும் ஏத்துக ஓம்தத்சத் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னைத் தன்னா லறிந்திடடா

அன்பேசிவ மறிந்திடடா
அதுவேநாமெனத் தெரிந்திடடா
என்புருகப் பாடிடடா
எழுந்திரடா நடந்துவாடா
எல்லாஞ்சிவ ரூபமடா 1

விண்ணைப்போல விளங்கிடடா
வீணாசையை விட்டிடடா
கண்ணைப்போலக் காத்திடடா
கருமத்தைச் செய்திடடா
கலங்காமல் நடந்திடடா
இலங்கையெங்கள் நாடிதடா 2

பெண்ணுமாணு மில்லையடா
பேதாபேத மில்லையடா
மண்ணும்விண்ணுமொன் றாச்சுதடா
மகத்துக்களின் பேச்சிதடா
மகிழ்ந்துவாடா நடந்துவாடா
மாநிலத்தை யாள்வோமடா 3

தன்னைத்தன்னா லறிந்திடடா
தானேதானென் றிருந்திடடா
அன்னைபோல வந்தானடா
அழகாரும்நல் லூரிலடா
பின்னைப்பேச் சில்லையடா
பெருமைசிறுமை தொல்லையடா 4

## வேறு

உறுதி தருவது சிவமே உள்ளத் துணர்வது சிவமே
பொறுதி தருவது சிவமே பூரண மானது சிவமே
இறுதி யிலாதது சிவமே என்னை யுடையது சிவமே
கருத வினியது சிவமே காசினி யெல்லாஞ் சிவமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பொல்லாப்புமில்லை

ஒருபொல்லாப்பு மில்லையென்பான் உண்மை முழுதுமென்பான்
ஒருவருக்குந் தெரியாதென்பான் – சின்னத்தங்கம்
ஓவியம்போல் இருந்தானடி 1

அப்படியே யுள்ளதென்பான் ஆரறிவா ரென்றுசொல்வான்
செப்படி வித்தையென்பான் – சின்னத்தங்கம்
செல்லப்பன் என்னுஞ்சீமான் 2

கந்தைத் துணியணிவான் கந்தன்திரு முன்றில்நிற்பான்
வந்தாரைப்போ வாரைவாயில் – சின்னத்தங்கம்
வந்தபடி யேசிடுவான் 3

அப்படியே யுள்ளதென்பான் அங்குமிங்கு மாயலைவான்
செப்படி வித்தையென்பான் – சின்னத்தங்கம்
தேரடியி லிருப்பானடி 4

சாதி சமயமென்னுஞ் சங்கடத்துக் குள்ளாகான்
சேதியொன்றுஞ் சொல்லகில்லான் – சின்னத்தங்கம்
சித்தப் பிரமையென்பார் 5

நீதி யநீதியென்னும் நிலைமையொன்று மில்லாதான்
மாதிரிகள் ஒன்றுஞ்செய்யான் – சின்னத்தங்கம்
மத்தனைப்போல் திரிவானடி 6

நீறு மணியான் நெற்றியிலே பொட்டுமிடான்
கூறிய தைக்கூறான் – சின்னத்தங்கம்
குணமொன்று மில்லானடி 7

ஆறுதலா யிருமென்னான் ஆணவத்தை நீக்குமென்னான்
மாறுபாடாய்ப் பேசிடுவான் – சின்னத்தங்கம்
மதியிழந்தான் என்பாரடி 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத் தனமாய்த் தெருவாலே போவாரை
என்னப்பன் பேசிடுவான் – சின்னத்தங்கம்
இவன்விசரன் என்பாரடி 9

உல்லாச நடையனடி ஊரூராய்த் திரிவனடி
எல்லோரு மிவனைக்கண்டு – சின்னத்தங்கம்
ஏளனஞ் செய்வாரடி 10

பத்துப்பாட்டுப் படிப்போரும் கேட்போரும் பாரினிலே
வித்தகராய் வாழ்ந்துபின்னே – சின்னத்தங்கம்
விதேகமுத்தி சேர்வாரடி 11

## அங்கு மிங்கு மெங்கும் ஓடாதே

அங்கு மிங்கு மெங்கு மோடாதே
ஆன்மாநித் தியமதைத் தேடாதே 1

பொங்கும் காமக் குரோதமதம் போக்காயோ
பூரண நிட்டையிலே தேக்காயோ 2

தங்குஞ் சிவயோ கத்தைத் தேராயோ
தன்னைத்தன் னாலறியப் பாராயோ 3

மங்கள மான வார்த்தை பேசாயோ
மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாராயோ 4

உன்னை யுனக்கொரு போதும் ஒளியாதே
ஒருபொல் லாப்புமில்லை யறிவாயே 5

செந்நெலுடன் கன்னல் எங்கும் மல்கும்
சீர்பெருகும் நல்லூரில் கல்லும் 6

கரைய வொருசொற் சொல்லுஞ் செல்வன்
கழலடியை மறவாமற் சொல்லு 7

செல்வம் அது பெரிய செல்வம்
சிவசிவ என்றுநீ சொல்லு 8

துள்ளும் மனத்தை யென்றும் வெல்லு
சும்மா விருக்கும்நிலை நில்லு 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யடியார்கள் ஓம்

கடவுளை யெங்குங் கண்டு களிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
காமக் குரோத மோகம் நீக்குவர் மெய்யடியார்கள் ஓம் 1

திடமுடன் தியானஞ் செய்து களிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
தீவினை நல்வினை கண்டு களிப்பார்
மெய்யடியார்கள் ஓம் 2

படமுடியாத துயரம்வரினும் கண்டு களிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
பாரும் விண்ணு மொன்றாய்ப் பரவுவர்
மெய்யடியார்கள் ஓம் 3

நடமிடுந் திருவடி கண்டு களிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
நமச்சிவாய வாழ்க வென்று நவில்வர்
மெய்யடியார்கள் ஓம் 4

ஆதியு மந்தமும் நமக்கிலை யென்பார்
மெய்யடியார்கள் ஓம்
அன்புசெய் பத்தரை யென்றும் மறவார்
சிவனடியார்கள் ஓம் 5

சாதி சமயப் பற்றினை விட்டார்
மெய்யடியார்கள் ஓம்
சந்ததம் மோன நிலைதவ றாதார்
மெய்யடியார்கள் ஓம் 6

மாதிரி யொன்றுஞ் செய்யா ருலகில்
மெய்யடியார்கள் ஓம்
மன்னா இளமை யென்றும் மகிழார்
மெய்யடியார்கள் ஓம் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதி யோதி யுன்மத்த ராவார்
மெய்யடியார்கள் ஓம்
உண்மை முழுதும் என்று சொல்வார்
மெய்யடியார்கள் ஓம் 8

ஆணும் பெண்ணு மலியு மறியார்
மெய்யடியார்கள் ஓம்
அரகர சிவசிவ வென்று மகிழ்வார்
சிவனடியார்கள் ஓம் 9

காணுங் கண்ணிற் கலந்த தென்பர்
சிவனடியார்கள் ஓம்
கங்குல் பகலற்ற காட்சியைக் காண்பார்
சிவனடியார்கள் ஓம் 10

பேணும் பிறப்பிறப் பில்லை யென்பார்
மெய்யடியார்கள் ஓம்
பேயர் பித்தர் போல விருப்பார்
மெய்யடியார்கள் ஓம் 11

நாணும் நன்னெஞ்சில் வஞ்சகந் தீர்ப்பார்
மெய்யடியார்கள் ஓம்
நாதன் நாம நமச்சி வாயவென்பார்
மெய்யடியார்கள் ஓம் 12

ஆவது மழிவதும் இல்லை யென்பார்
மெய்யடியார்கள் ஓம்
அஞ்சும் மூன்று மொன்றா யறிவார்
மெய்யடியார்கள் ஓம் 13

போவதும் வருவது மில்லை யென்பார்
மெய்யடியார்கள் ஓம்
புன்னெறி செல்லும் மனத்தை வெல்வார்
மெய்யடியார்கள் ஓம் 14

தேவரும் முனிவரும் சித்தரு மறியார்
மெய்யடியார்கள் ஓம்
சிவசிவ வென்று தினமுந் துதிப்பார்
மெய்யடியார்கள் ஓம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ தேவனை யென்றுந் துதிப்பார்
சிவனடியார்கள் ஓம்
தீவினை செய்வார் தம்மையு மிகழார்
சிவனடியார்கள் ஓம் 16

ஐம்பொறி வழிபோ யவனியி லலையார்
மெய்யடியார்கள் ஓம்
ஆணவந் தன்னை யழித்திடு வார்கள்
மெய்யடியார்கள் ஓம் 17

ஐந்து மடக்கா வறிவு பெற்றார்
மெய்யடியார்கள் ஓம்
ஆசை வழிபோய் மோசம் போகார்
மெய்யடியார்கள் ஓம் 18

வந்தது போனது மனத்தே வையார்
மெய்யடியார்கள் ஓம்
வாணாள் ஆசை பேணா திருப்பார்
மெய்யடியார்கள் ஓம் 19

நைந்துநைந் துருகி நமனை வெல்வார்
சிவனடியார்கள் ஓம்
நாளுங் கோளும் மனத்தில் வையார்
சிவனடியார்கள் ஓம் 20

அந்த விதமே தோற்றினா னுலகில்
அறிவார் சிவதொண்டன் ஓம்
அவனியில் நாளும் வளர்மதி போல
வாழ்க சிவதொண்டன் ஓம் 21

எந்தச் செயலுஞ் சிவன்செயல் என்பார்
சிவனடியார்கள் ஓம்
எளிதா யெவர்க்கு மின்னுரை சொல்வார்
எழிலார் சிவதொண்டர் ஓம் 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயமே கோயில்

*நிலைமண்டில ஆசிரியப்பா*

காயமே கோயில் கடிமன மடிமை
நேயமே பூசை நீயிதை யறிந்தே
உபாயமாய் நடந்தா லுனக்கொரு குறைவிலை
ஆயநான் மறையும் இப்படி யறையும்
எள்ளள வேனும் பிரியா இறைவனைக்
கள்ள மனத்தவர் காண மாட்டார்
உள்ளமே கோயில் உயிரே விளக்கு
உள்ள வுள்ள உண்மை யுதிக்கும்
பகைவ ருறவோ ரென்று பகரும்
வகையை நீக்கிச் சிவசிவா வென்ன
உவகை யுன்னை விழுங்கிக் கொள்ளும்
தகைமை யிதுவே சாதனை செய்யே
சாதனை செய்வோர் தன்னை யறிவார்
பேதபுத் தியைத்தவிர் பெம்மா னருளால்
நீர்மேற் குமிழியிவ் வாக்கை வாழ்வே
ஆதலா லன்பர் பணியே யறமாம்
பணியப் பணியப் பாவ மகலும்
அணிமா வாதியாம் சித்திக ளெய்தும்
பிணியு மகலும் பேரின்பம் வாய்க்கும்
துணிவுண் டாகும் சொல்லொணாச் சுகமே
எல்லா வுயிரையுஞ் சிவனென வெண்ணி
நல்லறம் புரிவோர் நாடுவார் பரகதி
அல்ல லறுப்பார் ஆனந்தம் பெறுவார்
தில்லை நடேசனைச் சேருவார் திண்ணமே
உடல்பொரு ளாவியுன் னடைக்கல மென்றே
திடமுட னொப்புக் கொடுப்பார் தமக்கு
நடராஜ வள்ளல் நளினபொற் பதத்தை
உடனே கொடுக்கு முண்மை யிதுவே
ஓடவும் வேண்டாம் உலரவும் வேண்டாம்
பாடவும் வேண்டாம் பணியவும் வேண்டாம்
தேடவும் வேண்டாஞ் சிந்திக்க வேண்டாம்
ஆடகப் பொன்னடி சூடிய காலை
ஒழுக்க முயிரினு மோம்பப் படுமென
வழுத்திய பெரியவன் மறைமொழி தன்னை
அழுத்த வழுத்த ஆனந்த வீச்சுரன்
வழுத்தொணா மலரடி நாடிவாழ் வோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோன நிலை நீங்காதே

அங்கிங் கலையாதே – அகப்பேய்
ஆண்டவன் அருள்பெறவே
எங்குமவன் காணடி – அகப்பேய்
ஏத்தியேத்தித் துதிப்பாய் 1

பொன்னாசை மண்ணாசை – அகப்பேய்
புத்தி சிதைக்குமடி
மன்னான மன்னவனை – அகப்பேய்
மனத்து நினைத்திடடி 2

கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தைக்
கொண்டுவா சித்தப்படி
அஞ்சாதே யொருவருக்கும் – அகப்பேய்
ஆண்டவன் உன்னுளடி 3

துஞ்சாதே தூங்காதே – அகப்பேய்
துரியநிலை சாரடி
ஒன்றுமற நில்லடி – அகப்பேய்
ஓமென்று செபித்திடடி 4

பண்டுசெய் வல்வினைநோய் – அகப்பேய்
பாரில் பறக்குமடி
மிண்டு மனம்விடடி – அகப்பேய்
வேதாந்த நெறிநில்லடி 5

என்று மிருந்தபடி – அகப்பேய்
இருந்தபொருள் நீதான்டி
குருநாதன் சொல்லை – அகப்பேய்
தூய்மையாய்ப் போற்றிடடி 6

தானான தத்துவனை – அகப்பேய்
சார்ந்து நீ வாழ்ந்திடடி
மோனநிலை நீங்காதே – அகப்பேய்
முத்தியுன் கைவசமே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றென்றுந் தீதென்றும் – அகப்பேய்
நாட்டிமலை யாதேயடி
கொன்றொன்றும் புசியாதே – அகப்பேய்
குருபாதம் போற்றிடடி 8

கண்டாரு மில்லையடி – அகப்பேய்
காணாரு மில்லையடி
முன்னுமில்லைப் பின்னுமில்லை – அகப்பேய்
மூவரில்லைத் தேவரில்லை 9

கஞ்சாஅபின் தின்னாதே – அகப்பேய்
கருணை அகத்தேயடி
பஞ்சாட்சரத்தை நெஞ்சில் – அகப்பேய்
பக்குவமாய்ப் போற்றிடடி 10

---

## குரு பக்தி

குருபக்தி யேபெரும் பேறு
கொண்டாடிக் கொண்டாடி ஆறு 1

தரும நிலையிலே ஏறு
சங்கர சிவனேயென்று கூறு 2

ஒருபொல்லாப்பு மில்லையென்று தேறு
உண்மை முழுதுமென்று கூறு 3

திருவருளை நாடிநீ செல்லு
சிவாயநம வென்றுநீ சொல்லு 4

தன்னைத்தன் னாலறிய வேண்டும்
சாந்தம் பொறுமையுன்னில் தோன்றும் 5

பின்னை யுனக்குத்துணை நீயே
பேதா பேதமெல்லாம் அணையே 6

முன்னைவினை யென்றும்நினை யாதே
மூவாசை போக்கநினை வாயே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆநந்தக் கூத்தாடினான்

**பல்லவி**

ஆநந்தக் கூத்தாடினான் தொண்டன்
ஆநந்தக் கூத்தாடினான் தொண்டன்

**அநுபல்லவி**

தானதாம் என்றுபாடி
சாந்தம் பொறுமைகூடி (ஆநந்த)

**சரணங்கள்**

மோனந் தனைத்தேறி
முழுதுமுண்மை யென்றுகூறி (ஆநந்த) 1

வேதாந்த நிலைமேவி
வேறில்லை யெனக்கூவி (ஆநந்த) 2

தாதா தரிகிடதோம்
ஜனதஜனத தீமென்று (ஆநந்த) 3

---

## ஒடுங்குவதாங்கே

உலக முதித்தது மாங்கே – இந்த
உலக முதித்து ஒடுங்குவ தாங்கே 1

சலன முதிப்பது மாங்கே – இந்தச்
சலன முதித்து ஒடுங்குவ தாங்கே 2

நீர்நிலம் தீகாற்று மாங்கே – நெடு
வானொடு சந்திர சூரியர் ஆங்கே 3

சீர்பெறு சித்தரும் ஆங்கே – நல்ல
தேவரும் முனிவரும் பத்தரும் ஆங்கே 4

இல்லையுண் டென்பது மாங்கே – எங்கும்
ஏது மறியாமல் நிற்பது மாங்கே 5

வல்லாரும் மாட்டாரும் ஆங்கே – வளம்
வாய்ந்த இலங்கையில் வாழ்வாரும் ஆங்கே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனே நான்

இராகம் — பைரவி                    தாளம் — ஆதி

**பல்லவி**

அவனேநா னென்று சொல்லித் தியானஞ்செய் வாய்தினமும்
ஆசையெல் லாமொழியும் ஈசனருள் பொழியும்

**அநுபல்லவி**

அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்
பஞ்சாட்சரத்தை நெஞ்சில் துஞ்சாமலே செபி (அவனே)

**சரணங்கள்**

கொஞ்சங் கொஞ்சமாய் மனத்தைக் கூடுமட்டு மடக்கு
குருநாதன் திருவடியைக் கும்பிட்டு நீதொடக்கு
கோபம் பொறாமை தள்ளு கொலை களவை எள்ளு
கூடிப் பாடி யாடு சிவனடி யாரோடு (அவனே)

ஆதியோ டந்தமில் லாதவான் மாவென்று
அடிக்கடி நீபடி துடிதுடிப் பாய்நடி
அயலுனக் கில்லை ஆரறி வார்நல்லை
ஆசான் சொன்னமொழி முழுவது முண்மை (அவனே)

பலபல வானசித்தி பாரினிற் கைகூடும்
பத்திநெறி விட்டிடாதே பத்தர்சொல்லைத் தட்டிடாதே
பைரவி ராகம்பாடிப் பணிசெய்யும் யோகசுவாமி
பாவமெல் லாமோடப் பாரினில் ஈடேற (அவனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாரும் வாழியடா

ஒருபொல் லாப்பு மில்லையடா – தம்பி
உண்மை முழுதும் அறிந்திடடா
வருவதைக் கண்டு மகிழாதே – தம்பி
வஞ்சகப் பேச்சைத் தழுவாதே 1

கருமத் தைக்கை நெகிழாதே – தம்பி
கவலை கொண்டு கலங்காதே
தரும நெறியில் வழுவாதே – தம்பி
தன்னை யறிய எழுவாயே 2

அகர முதல எழுத்தெல்லாந் – தம்பி
அதுபோல் ஆதி யுலகுக்கடா
பகரில் அவனோ ஒருவனடா – தம்பி
பலபல வாகச் சொல்வாரடா 3

கற்றதனாற் பயன் இல்லையடா – தம்பி
கழல் அடியிணை கண்டிடடா
வெற்றிப் பேச்செல்லாம் விட்டிடடா – தம்பி
விதியை மதியால் வென்றிடடா 4

பொறி வழியினிற் செல்லாதே – தம்பி
போனதை யெண்ணிக் கொள்ளாதே
கிறியுங் கீழ்மையுஞ் செய்யாதே – தம்பி
கெட்டவர் மேல்நட்பு வையாதே 5

புத்தியை ஒன்றிலும் நாட்டாதே – தம்பி
புகழும் இகழுஞ் சூட்டாதே
எத்தொ ழிலைநீ செய்தாலுந் – தம்பி
ஈசனுக் கர்ப்பணம் பண்ணிடடா 6

வித்தாரப் பேச்சையும் விட்டிடடா – தம்பி
விருப்பு வெறுப்பை யகற்றிடடா
செத்தாரைப் போலத்தி ரிந்திடடா – தம்பி
சீவன் சிவனென் றறிந்திடடா 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரொ ருவரும் இல்லையடா – தம்பி
நின்ற நிலையிற் பிரியாதே
ஆன்மா நாங்கள் அறிந்திடடா – தம்பி
ஆக்கை நாமன்று தெரிந்திடடா 8

வீண்பா வனையெல்லாம் விட்டிடடா – தம்பி
வேத நெறியிலே தொட்டிடடா
காண்பான் காட்சியு மில்லையடா – தம்பி
காணப் படும்பொரு ளில்லையடா 9

வாழி குருநாதன் வாழியடா – தம்பி
வாய்மை யடியாரும் வாழியடா
கேளிருஞ் சுற்றமும் வாழியடா – தம்பி
கேட்டவ ரெல்லாரும் வாழியடா 10

---

## பார்க்கு மிடமெங்கு மந்தப் பரமவஸ்து

பாவியென்று சொல்லாதே எவரையும் – நீ
பார்க்கு மிடமெங்கு மந்தப் பரமவஸ்து

கூவியழைத் திடுவாய் என்றுஞ் – சிறு
குழந்தையைப் போலநின்று கும்பிட்டுக் கொள்வாய்

கோபம் பொறாமையை நீதள்ளு – பொல்லாக்
குடிவெறியை மோகத்தை நீயெள்ளு

தாபதர்தம் சங்கத்தை நீநாடு – தன்னைத்
தன்னா லறிந்த பெரியோரைக் கூடு

குருவான நல்லூரிற் செல்வன் – உள்ளங்
குளிர வைத்தான் நானொரு புல்லன்

வெட்ட வெளியில் என்னை விட்டான் – நல்லூர்
வீதியிலே தன்கரத்தால் தொட்டான்

அட்டாங்க யோகமெல்லாம் விட்டேன் – அங்கே
அடியார்க் கடியனாய் ஆட்பட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கப்பாட்டு

காயமே கோயிலடி தங்கமே தங்கம்
கடவு ளிருப்பிடங்காண் தங்கமே தங்கம்
மாயம னைத்தைவெல்லு தங்கமே தங்கம்
மற்றுப்பற்றை நீக்கிவிடு தங்கமே தங்கம்
உபாய மதுவாகுந் தங்கமே தங்கம்
உண்மை முழுதுமடி தங்கமே தங்கம்
ஒருபொல்லாப்பு மில்லையடி தங்கமே தங்கம்
உறுதி யெழுதிக்கொள் தங்கமே தங்கம்
அப்படி யுள்ளதடி தங்கமே தங்கம்
ஆரறிவார் பாரினில் தங்கமே தங்கம்
எப்பவோ முடிந்ததடி தங்கமே தங்கம்
ஏகாந்த மாயிரடி தங்கமே தங்கம்
செப்ப முடியாதடி தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்
ஒப்பற்ற வாக்கடி தங்கமே தங்கம்
உடம்பை மறந்துவிடு தங்கமே தங்கம்
அப்பிலுப்புச் சேர்ந்தாற்போல் தங்கமே தங்கம்
ஆண்டவனில் கரைந்துவிடு தங்கமே தங்கம்
வெப்பந்தட்ப மில்லையடி தங்கமே தங்கம்
வேதாந்த நெறிநில் தங்கமே தங்கம்
அப்பனு மம்மையுந் தங்கமே தங்கம்
அகத்திலே வாழ்கின்றார் தங்கமே தங்கம்
ஒப்புரவாய் நடந்திடடி தங்கமே தங்கம்
ஒருகுறையு மில்லையடி தங்கமே தங்கம்
கைப்போது மலர்கொண்டு தங்கமே தங்கம்
கழலடியைப் போற்றிடடி தங்கமே தங்கம்
முப்போதும் முடிசாய்த்துத் தங்கமே தங்கம்
மூர்த்தியைப் பணிந்திடடி தங்கமே தங்கம்
அப்போதைக் கப்போது தங்கமே தங்கம்
அருள்வடிவங் காட்டுவான் தங்கமே தங்கம்
தப்பேதுஞ் செய்யாதே தங்கமே தங்கம்
தனித்திருந்து பார்த்திடடி தங்கமே தங்கம்
அப்பாலுக் கப்பாலே தங்கமே தங்கம்
ஆருமறி யாரடி தங்கமே தங்கம்
அப்புசுவாமி தன்சொல்லைத் தங்கமே தங்கம்
அகத்தில்மற வாதேயடி தங்கமே தங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ சிவா

சீரான வடியரொடு கூடு – சிவசிவா
செல்லப்பன் தந்த மந்திரம் நாடு (சீரா)

ஆராய்ந்து கருமத்தை யாற்று – சிவசிவா
அனைவரையு மன்பாய் உலகத்தில் போற்று (சீரா)

ஆரென்ன சொன்னாலும் வாது – சிவசிவா
ஆணவத்தை யுண்டாக்குந் தீது (சீரா)

பாரெல்லாம் பகைத்தாலுஞ் சிறிதும் – சிவசிவா
பதையாம லிருப்பதே மிகவும் பெரிது (சீரா)

சீவனே சிவமென்று பெரியோர் – சிவசிவா
செப்பிய மொழியை ஒப்புக்கொள் ளறிவாய் (சீரா)

ஆவது மழிவதும் உண்டோ – சிவசிவா
ஐம்புலனை வென்றவர்கள் நன்றாக அறிவார் (சீரா)

கருமஞ் சிதையாமல் உலகில் – சிவசிவா
கண்ணோட வேண்டும்நீ கருது (சீரா)

அருமையி லருமையெங்க ளான்மா – சிவசிவா
அதையறிந்து வாழ்வதே மாண்பாம் (சீரா)

அங்கிங் கெனாதபடி நாங்கள் – சிவசிவா
அம்புவியில் வாழ்வதே பாங்கு (சீரா)

எங்குநீ யங்குநா னென்று – சிவசிவா
எங்கள்குரு ஓதினான் நன்கு (சீரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ப்பொருளை ஒன்றெனக் கும்பிடுவாய்

இராகம் — கமாஸ் தாளம் — ஆதி

**பல்லவி**

ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே யிந்த
உலகுயிர் பரமென ஒளிரும்மெய்ப் பொருளை
— ஒன்றெனக் கும்பிடுவாய்

**அநுபல்லவி**

உண்டில்லை யென்றெவரும் ஓதமுடி யாததாய்
பண்டுமின்றும் என்றும் அப்படி யுள்ளதாய்
— ஒன்றெனக் கும்பிடுவாய்

**சரணம்**

நன்றுக்குந் தீதுக்கும் நடுவாய் உள்ளதாய்
ஞான யோக தியானத்தில் வருவதாய்
கன்றிய காமனைக் கண்ணால் எரித்ததாய்
கால காலனைக் காலால் உதைத்ததாய்
— ஒன்றெனக் கும்பிடுவாய்

---

## எங்கு தேடினாய் இறைவனை

**பல்லவி**

எங்குதேடினாய் இறைவனைநீ
இங்கு காணாமல் (எங்கு)

**சரணங்கள்**

அங்குமிங்கும் ஓடியே அவதிப்படுகிறாய்
பங்குபோட்டுப் பார்க்கிறாய் பரிதவித்து வாடுகிறாய்
எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம்
என்றுவாதுபேசுகிறாய் (எங்கு)

சாதி சமயமென்று சண்டைப் படுகிறாய்
தத்துவத்தை யறியாமல் சங்கடப்படுகிறாய்
ஓதியு முணராமல் உண்மை யறிந்தவன்போல்
ஊரெங்குஞ் சென்றுநீ பிரசங்கம் பண்ணுகிறாய் (எங்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்குரு தரிசனம்

இராகம் – சாமா தாளம் – ஆதி

### பல்லவி

சற்குரு தரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளிணை பணிநீ தினம்

### அநுபல்லவி

தாந்தன்னை யறியுமே
சாந்தமுஞ் செறியுமே (சற்குரு)

### சரணங்கள்

பேரன்பு பெருகிடும் பேதைமை கருகிடும்
பிரியாப் பிரியமெல்லாம் பேசாம லகன்றிடும் (சற்குரு)

ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதிவரும் (சற்குரு)

தேவாதி தேவர்களுஞ் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னுந் தெளிவுமுண் டாகுமே (சற்குரு)

---

# வேறு

சிவமேநா மாமென்று சிந்திக்கச் சீரார்
சிவமேநா மென்று தெளிவோம் – அவமே
மனமே யுடன்போகும் மற்றுமோர் தெய்வம்
கனவிலும் எண்ணாது காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆநந்தக் களிப்பு

சங்கர சங்கர சம்பு – சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு

ஒருபொல் லாப்பு மில்லையெனவே – முன்னாள்
ஓதினான் உண்மை முழுது மெனவே (சங்கர)

பருவத்தில் மழைபெய்தாற் போல – ஐயன்
பந்தத்தை நீக்கி வளர்த்தானன் பாலே (சங்கர)

அருவமு முருவமு மானான் – என்னை
ஆட்கொள்ள வந்தான் நல்லூரிற் றானாய் (சங்கர)

கருவிக ரணங்க ளெல்லாம் – தத்தம்
கருமத்தை விட்டுக் காவலுக் குள்ளாய் (சங்கர)

வருவதும் போவது மின்றித் – தூய
மௌன நிலையில் நிலைத்தது தானே (சங்கர)

ஆரு மறியா ரெனவே – அப்பன்
அப்படி யுள்ளதென் றானறி வாயே (சங்கர)

---

## வேறு

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலான் நல்லூர்க்
குருவாக வந்து குறைதீர்த்தான் – வருவாரை
வையாமல் வைது வரந்தருவான் நாமெல்லாம்
உய்யாமல் உய்வோம் உவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மா விருந்துபார் தம்பி

நல்ல சமயமிது தம்பி
நம்மைநா மறிந்துகொள்ளத் தம்பி 1

எல்லார்க்கும் நன்மைசெய் தம்பி
இறைவனுன் னிடமுண்டு தம்பி 2

கொல்லாதே கோபம்வை யாதே
கும்பிடு காலைமாலை தம்பி 3

சொல்லாலே பயனில்லைத் தம்பி
சும்மா விருந்துபார் தம்பி 4

கண்ணல்லக் காதல்லத் தம்பி
கண்ணுக்குக் கண்ணெடா தம்பி 5

எண்ணிலடங் காதெடா தம்பி
எல்லா மதுவெடா தம்பி 6

மண்ணாசை வையாதே தம்பி
மற்றிரண்டும் அப்படியே தம்பி 7

ஒன்றுக்கு மஞ்சாதே தம்பி
ஓடி ஒளியாதே தம்பி 8

பண்டுமின்றும் உள்ளதெடா தம்பி
பாடிப் பணியெடா தம்பி 9

அகம்பிர மாஸ்மியென்று தம்பி
அனுதினமுஞ் சாதனைசெய் தம்பி 10

இகலோகம் பரலோகந் தம்பி
இங்கேநீ கண்டுகொள்வாய் தம்பி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும் எங்கும் நான்

அங்கும் இங்கும் எங்கும் நான்
அதை யறியும் விசரன் நான் 1

பங்கு போட்டு வணங்க மாட்டேன்
பாவ புண்ணியம் அறிய மாட்டேன் 2

மங்கள மாகப் பேச மாட்டேன்
மாய வாழ்வை மதிக்க மாட்டேன் 3

பொங்கல் பூசை செய்ய மாட்டேன்
போனதை யெண்ணிக் கலங்க மாட்டேன் 4

மங்குவார் செல்வம் மதிக்க மாட்டேன்
மாய வித்தை காட்ட மாட்டேன் 5

சிங்கக் குட்டி போல நடப்பேன்
தீயா ரோடு கூட மாட்டேன் 6

எங்கும் என்றன் தங்கும் வீடு
ஏற்ப திகழ்ச்சி என்ன மாட்டேன் 7

சிங்களவர் தமிழரைக் காண மாட்டேன்
சின்னம் ஒன்றும் போட மாட்டேன் 8

தங்கப் பொம்மை போல விருப்பேன்
சாம்ப சிவசிவ என்று சொல்வேன் 9

மங்கைமார் சூழ்ந்து கும்பிடும் நல்லூரான்
என்னப்பன் செல்லப்பனை மறக்க மாட்டேன் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு பாம்பே

ஆடுபாம்பே பணிந்தாடு பாம்பே
ஆன்மாநித் தியமென்று ஆடுபாம்பே

மாடுமக்கள் சுற்றமெல்லாம் மயக்க மென்றே
மாதவர்தம் இயக்கத்தை மகிழ்ந்து கொண்டே
தோடுடைய செவியனைத் தோத்திரஞ் செய்தே
சும்மா விருந்துகண்ணைத் திறந்து கொண்டே (ஆடுபாம்பே) 1

வீடு நமக்கென்றுஞ் சொந்த மென்றே
வீணாசைப் படுவதெல்லாம் பந்தம் என்றே
தேடும்பொரு ளெல்லாஞ்சிவ தொண்டுக் கென்றே
தேசமெங்குஞ் சென்றுண்மை பேசிக் கொண்டே (ஆடுபாம்பே) 2

பாடு படும்போதும் ஆதிபதம் நினைந்தே
பாடிப் பாடித் திருவருளைப் புகழ்ந்துகொண்டே
ஓடு மிருநிதியும் ஒன்றாகக் கண்டே
உண்மை முழுதுமென மன்றாடிக் கொண்டே (ஆடுபாம்பே) 3

---

# திருவருள் கைகூடுது

இராகம் — சாவேரி தாளம் — ஆதி

**பல்லவி**

திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது

**அநுபல்லவி**

ஒருவரும் எதிரில்லாத உண்மை முதிருது (திருவருள்)

**சரணங்கள்**

ஒன்றோ விரண்டோ வென்னுஞ் சந்தேகந் தெளியுது
ஓம்சிவாய நமவென்ன உள்ளங் குளிருது (திருவருள்)

அதிர வரும்நமனும் அஞ்சியே பணிசெய்யும்
அஞ்சுவ தொன்றுமில்லை அஞ்சவரு வதுமில்லை (திருவருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரந் தருவார்

வருவார்வ ருவார்வரந் தருவார் சுவாமி
வஞ்சம்பொ றாமைகோபம் நெஞ்சினில் நீவையாதே (வரு) 1

ஒருவரு மிருவரும் மூவரு மானவர்
ஓங்காரத் துட்பொருள் ஆகியே நிற்பவர் (வரு) 2

கருமத்தைச் செய்பலன் கருதாம லுலகத்தில்
காயமே கோயிலாய்க் கண்டு வணக்கஞ்செய் (வரு) 3

தருமநெறி பிசகாமல் தாரணி தனில்வாழ்
தன்னைத்தன் னாலறியத் தியானத்தில் நீமூழ்கு (வரு) 4

மரும மறிந்தவர்கள் மண்ணிற்பிற வாரென்ற
மகத்துக்கள் வாக்கியத்தை மறவாமல் நினைத்துக்கொள்
(வரு) 5

திருவாரும் நல்லூரில் செல்லப்பன் மாணாக்கன்
திருவாளன் சொன்னசொல்லைச் சிந்திக்கச் சீவன்முக்தி
(வரு) 6

---

# காயமொரு சித்திரக் கோயில்

காயமொரு சித்திரக் கோயில் – அது
கண்ணுதல்பெண் ணுமைவாழ் கோயில்
மாய மெனமதி யாதே – அடடா
மகத்துவஞ்சொல்ல மதிபோ தாதே
தூய குருவரு ளாலே – நானும்
சொல்லுவேன் கேள்மருள் போமே
மாய னயன்மக பதியும் – அடடா
மற்றுமுள்ள தேவர்களும் அரக்கர்களும்
தேயுவுடன் வாயு வப்பு – மண்விண்
சேர்ந்திருக்குஞ் சித்திரக் கோயில்
ஆதித்தனுஞ் சந்திரனும் இங்கே – இன்னும்
அளவற்ற அண்டங்களும் இங்கே
வேதியருஞ் சூத்திரரும் இங்கே – விளங்கும்
வேதமுஞ் சூத்திரமும் இங்கே (காயமொரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் திருவடி

இராகம் — தன்னியாசி　　　　　　　　　　　　　　தாளம் — ஆதி

### பல்லவி

ஆண்டவன் திருவடி வேண்டிக்கொண் டாலென்றும்
ஆறுதல் உண்டாகும்

### அநுபல்லவி

காண்பதெல் லாம்நிலை யன்றெனக் காட்டும்
காயத்தை வெல்லுமு பாயத்தை யூட்டும்　　　　(ஆண்டவன்)

### சரணங்கள்

பஞ்சப் புலன்வழி போம்மனத் தினைவெல்லும்
பஞ்சாட் சரத்தை யனுதினஞ் சொல்லும்
கொஞ்சங்கொஞ் சமாகச் சினத்தினைக் கொல்லும்
குற்றம் யாவையுங் குணமாகக் கொள்ளும்　　　　(ஆண்டவன்)

பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை போக்கும்
போக்கு வரவற்ற பொன்னடி நோக்கும்
எந்நாளும் சும்மா விருப்பதைக் காக்கும்
ஏழைகள் பேரில் இரக்கத்தை யாக்கும்　　　　(ஆண்டவன்)

வெட்ட வெளியிலே நின்றிடர் தீர்க்கும்
வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று நோக்கும்
கட்டுப் படாத மனத்தினைக் கட்டும்
கங்குல் பகலற்ற காட்சியுண் டாக்கும்　　　　(ஆண்டவன்)

சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தர மான வழிதனைக் காட்டும்
ஆவி யுள்ளளவும் அமுதத்தை யூட்டும்
அகம்பிர மாஸ்மி யெனமுடி சூட்டும்　　　　(ஆண்டவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாங்கிமாரே

ஐம்பூதம் நீவிரல்லீர் பாங்கிமாரே
ஐம்பொறியும் நீவிரல்லீர் பாங்கிமாரே
ஐம்புலனும் நீவிரல்லீர் பாங்கிமாரே
அந்தக்கரணம் நீவிரல்லீர் பாங்கிமாரே 1

ஆதியந்த முங்கட்கில்லைப் பாங்கிமாரே
ஆன்மாவே நீவிர்காணும் பாங்கிமாரே
வந்ததிலும் போனதிலும் பாங்கிமாரே
மனம்வையாமல் வாழ்ந்திடுவீர் பாங்கிமாரே 2

ஆதார மாறும்விட்டுப் பாங்கிமாரே
அப்பனை வணங்கிடுவீர் பாங்கிமாரே
பாதார விந்தங்காண்பீர் பாங்கிமாரே
பகலு மிரவுமில்லைப் பாங்கிமாரே 3

முன்னிலை யுங்கட்கில்லைப் பாங்கிமாரே
முனையில்வைத்துச் சீராட்டும் பாங்கிமாரே
அன்னிய முங்கட்கில்லைப் பாங்கிமாரே
ஆச்சரிய மொன்றுமில்லைப் பாங்கிமாரே 4

நீயேநீ யாயிருக்கப் பாங்கிமாரே
நித்தியத்தைத் தேடுவதேன் பாங்கிமாரே
தாயைப்போ லிருக்கவேண்டும் பாங்கிமாரே
சங்கற்பம் விட்டிடுவீர் பாங்கிமாரே 5

வையகம் முழுதும்நீங்கள் பாங்கிமாரே
வார்த்தையொன்றும் பேசாதீர் பாங்கிமாரே
கையில்நெல்லிக் கனிபோலப் பாங்கிமாரே
கடவுள்நம் மிடமுண்டு பாங்கிமாரே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு

அன்னைபிதாக் குருவாகி யடியேனை யாட்கொண்ட
தன்னகரில் லாதசற் குருவேநீ கண்வளராய் 1

என்னையினிப் பிறவாமல் ஈடேற்றி வைத்தவனே
உண்மை முழுதுமென்ற வுத்தமனே கண்வளராய் 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனே
சேமமுட னென்னகத்தில் சீமானே கண்வளராய் 3

அப்படியே யுள்ளதென வடிக்கடியே சொல்லியென்னை
இப்படியில் வாழவைத்த எந்தையே கண்வளராய் 4

காணும் கண்ணிற் கலந்தவனே கார்வண்ணா
நானும்நீயு மென்றுரைக்க நாணுவேன் கண்வளராய் 5

சீராரும் நல்லூரில் தேரடியி லேயிருந்து
ஆரறிவா ரென்றுசொன்ன அப்பனே கண்வளராய் 6

எப்பவோ முடிந்ததென எனக்குப தேசஞ்செய்த
ஒப்பிலா மாமணியே யுறவோனே கண்வளராய் 7

ஒருபிடி சோற்றுக்காய் ஊரூராய் நானலையத்
திருவருள் தந்தவனே செல்லப்பனே கண்வளராய் 8

எட்டாத கொப்பில் இருக்குமுனை யாரறிவார்
மட்டில்லா மாமணியே மாதவனே கண்வளராய் 9

கண்ணே யுறங்குறங்கு கார்வண்ணா நீயுறங்கு
எண்ணேன் பிறதெய்வமென் னிதயத்தே நீயுறங்கு 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தை தெளிந்தேனே

**பல்லவி**

தேடித் தேடித் திரிந்தலைந்து நான்
சிந்தை தெளிந்தேனே

**சரணங்கள்**

சிந்தையிற் கண்டேயென் தீவினை போச்சுது
சிவபெரு மான்தன் னிணையடி வாய்ச்சுது
இந்த வுலகம் கனவாய்ப் போச்சுது
எல்லாம் என்தன் கைக்குள்ளே யாச்சுது (தேடி) 1

கருவி கரணங்கள் ஓய்ந்து போச்சுது
காணாத காட்சிகள் காண லாச்சுது
ஒருவரு மெதிரில் லாமற் போச்சுது
ஓ மாயை பறந்து போச்சுது (தேடி) 2

நில்லென்று சொல்லி மனத்தை நிறுத்துவேன்
நேர்மை யான வழியிற் செலுத்துவேன்
வல்லபம் பேசி யாரையும் வெல்லுவேன்
வாணா ளாசை வீணெனச் சொல்லுவேன் (தேடி) 3

# யாழ்ப்பாணத்தானே

அன்பி னாற்பணிந் தேத்து மடியவர்
துன்பம் யாவும் துடைத்தருள் செய்தவன்
பொன்னார் மேனியன் போர்விடை யூர்தியன்
இன்பந் தங்கும் யாழ்ப்பாணத் தானே

ஆதி யந்தமும் அற்றவன் மெய்த்தவர்
ஓதி நாளும் உவந்திடும் உத்தமன்
பாதி மேனியில் பாவையை வைத்தவன்
நீதி நின்றிடும் யாழ்ப்பாணத் தானே

இன்ன தன்மைய னென்றறிய வொண்ணான்
முன்னர் இராவணன் முடிபத்தும் நெரித்தான்
மன்னர் மன்னவன் மதிதவழ் சென்னியன்
நன்ன லஞ்சேர் யாழ்ப்பாணத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தியானஞ் செய்

சிவத்தியா னத்தைச் செய்யும் மாந்தர்கள்
அவத்தில் பாரினில் அலைவ தில்லையே 1

தவத்தை யாற்றிடில் தன்னை யறியலாம்
அவத்தை யாற்றிடில் வீழ்வர் நரகினில் 2

தில்லை யம்பலத் தாடுஞ் சேவடி
எல்லை யற்றநல் லின்பம் நல்குமே 3

உள்ளத் தூய்மையாய் ஒருவன் பாதத்தை
உந்து வார்தமக் குணர்வு வந்திடும் 4

அல்லும் எல்லியும் இறைவன் பாதத்தைச்
சொல்ல வல்லவர் தூய்மை யாவரே 5

எங்கு மீசனை யேத்துவார் தம்மைப்
பொங்கும் வல்வினை பொருந்த லில்லையே 6

தெய்வ மொன்றெனத் தெரியும் மாந்தர்கள்
உய்வர் வையத்தில் உண்மை யுண்மையே 7

எந்த நேரமும் இறைவன் பாதத்தைச்
சிந்தை செய்திடில் தீரும் வல்வினை 8

அடியவர் பாதத் தன்பு செய்திடில்
கொடிய கூற்றுவன் மடியுந் திண்ணமே 9

சீலஞ் சேர்சிவ ஞானத் தேனினை
ஞாலத் துண்பவர் நமனை வெல்லுவார் 10

வாலை வணக்கமாய் மகிழ்ந்த பாவினைக்
காலையும் மாலையும் ஓதக் கவலைபோம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதாந்த முடிவில் நடனம் புரிவது

கண்ணாலே காணொணாதது கண்ணுக்குக் கண்ணாயுள்ளது
காதாலே கேட்கொணாதது காதுக்குக் காதாயுள்ளது
கையாலே எடுக்கொணாதது கைக்குக்கை யாயிருப்பது
காலாலே நடக்கொணாதது காலுக்குக்கா லாயுள்ளது
வாயாலே பேசொணாதது வாய்க்குவா யாயிருப்பது
மனத்தாலே எண்ணொணாதது மனத்துள்மன தாயிருப்பது
மூக்காலே முகரொணாதது மூக்குக்குமூக் காயிருப்பது
முன்னொடுபின் னில்லாமுதலது மூப்புப்பிணி யில்லாவடிவது
தாயுந் தந்தையு மானவுருவது தானே தானாய்த்
தழைத்துநிற்பது
ஒன்றிரண்டென ஓதவொண்ணாதது ஓவியராலும்
எழுதவொண்ணாதது
நன்று தீதிற்கு நடுவாய்நிற்பது ஞானியர்
நெஞ்சில் என்றுமுள்ளது
வேதாந்த சித்தாந்தம் வேறொணாதது
நாதாந்த முடிவில் நடனம்புரிவது

---

# ஏற்குமோ

**பல்லவி**

ஏற்குமோ திருவருளுக் கேற்குமோ

**அநுபல்லவி**

என்னையும் உன்னையும் வேறாய்
எண்ணிப் பணிவதற்கு (ஏற்குமோ)

**சரணங்கள்**

கண்ணே கண்ணின் மணியே கனியே கனிரசமே
எண்ணேன் பிறதெய்வம் எல்லாம் உனது செயல் (ஏற்குமோ)

விண்ணாதி பூதமே வேதவே தாந்தமே
பெண்ணே ஆணே அலியே பேதமில்லாப் பெம்மானே (ஏற்குமோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா நித்தியம்

ஆன்மா நித்தியம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம் பிறந்தோம் இனிநாம்
அதுவே நாமென எண்ணிடுவோம் 1

அநுதினம் சாதனை செய்யச் செய்ய
ஆனந்த மான மோட்ச வீட்டை
அடைவோம் இதிலோர் ஐயமும் இல்லை – ஆனால்
அடக்கமும் பொறுமையும் வேண்டுதுமே 2

குழந்தை யன்பொடு குருவின் பாதத்தைக்
கும்பிடும் பாக்கியம் உண்டானால்
கோடா கோடி பாவத்தைப் போக்கும்
நாட்டத்தைச் சிவத்தில் வைப்போமே 3

கௌரியை யிடத்தில் வைத்தவன் பாதம்
கைதொழும் அடியார்கள்
காலனை வென்று ஞாலந் தன்னில்
கவலையை நீங்கி வாழ்வாரே 4

---

# அருள் நீ தா

இராகம் – கரஹரப்பிரியா தாளம் – ஆதி

**பல்லவி**

அருள்நீ தாதாவே – எனக் கார்தான் துணை வேறே

**அநுபல்லவி**

இருள்சேர் வினையாலே யிடரே படலாமோ (அருள்)

**சரணம்**

ஆசாபாச தோஷம் நீக்கி – ஆரவார மார போத
தந்திர ரூபனே – நேச வாசம் தந்து வீடருள் தேவ – தேவ
சாலஞ் செய்யலாமோ அநுகூல கோல கால
லீல விநோத – ராஜராஜநீ – வளர்த்தி வளர்த்தி
உண்டி யூட்டி முழுதும் உண்மை (அருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே நீ

*வஞ்சித்துறை*

| | | | | |
|---|---|---|---|---|
| நானே | நீ | நீயே | நான் | |
| கோனே | நீ | குருவே | நீ | 1 |
| வானே | நீ | மண்ணே | நீ | |
| தேனே | நீ | தெருளே | நீ | 2 |
| ஊனே | நீ | உயிரே | நீ | |
| மீனே | நீ | வெண்மதி | நீ | 3 |
| ஆனே | நீ | அடல்விடை | நீ | |
| கானே | நீ | கடலே | நீ | 4 |
| சாணே | நீ | சதுரே | நீ | |
| ஆணே | நீ | பெண்ணே | நீ | 5 |
| தூணே | நீ | துரும்பே | நீ | |
| ஊணே | நீ | உடையே | நீ | 6 |
| பொன்னே | நீ | பொருளே | நீ | |
| எண்ணே | நீ | எழுத்தே | நீ | 7 |
| நானே | நீ | நன்மதி | நீ | |
| தானே | தான் | தானே | தான் | 8 |
| பூதம் | நீ | பொறியும் | நீ | |
| வேதம் | நீ | வேதியன் | நீ | 9 |
| காதல் | நீ | கருத்தும் | நீ | |
| ஆத | லால் | அறிவார் | யார் | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரடியே தஞ்சமெடி

பிறியென்றான் பிறியாமற் பிறியென்றான் பேசாமல்
நெறிநின்று பாரென்றான் – கிளியே
நீயேநா னென்றுரைத்தான் 1

ஒருபொல் லாப்புமில்லை யென்றே யுரைத்தான்
உண்மை முழுதுமென்றான் – கிளியே
ஊமைபோ லிருந்தானெடி 2

முடிந்த முடிபென்றான் முன்னும்பின்னு மில்லையென்றான்
இடிபோ லுரைத்தானெடி – கிளியே
இனியென்ன சொல்வேனடி 3

அப்படியே யுள்ளதென்றான் ஆரறிவா ரென்றான்
ஒப்புவமை காணேனெடி – கிளியே
ஓவியம்போ லானேனடி 4

நாமறியோ மென்றுசொன்னான் ஞான குரவனெடி
சேமமாய் வாழவைத்தான் – கிளியே
தீவினைகள் போச்சுதெடி 5

அண்டபிண்ட மனைத்தும் ஒன்றாகக் கண்டேனடி
கண்டவெனைக் காணேனெடி – கிளியே
காரணமும் போச்சுதெடி 6

நல்லைநகர் வாசனெடி நாட்டிலவன் திருநாமம்
செல்லப்ப னென்றுசொல்வார் – கிளியே
தேரடியி லிருப்பானெடி 7

சொல்லித் துதிக்குந்தொண்டர் சுயநல மற்றவர்கள்
அல்லும் பகலுங்காணார் – கிளியே
அவரடியே தஞ்சமெடி 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னைத் தன்னால் அறிவார் சான்றோர்

*கலிவிருத்தம்*

நம்மிட மெல்லா நலனு முண்டு
நம்மிட மெல்லா வுலகமு முண்டு
நம்மிட மெல்லாக் கலகமு முண்டு
நம்மிட மெம்மைக் காண்பது தொண்டு 1

நம்மிட மென்றுங் கடவு ளுண்டு
நம்மிடம் நன்மை தீமை யுண்டு
நம்மிடம் பிறப்பு மிறப்பு முண்டு
நம்மிடம் நரக மோட்சமு முண்டு 2

தன்னைத் தன்னால் அறிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் பணிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் பிறிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் தேடுவார் சான்றோர் 3

கண்ணைக் கண்ணால் பார்ப்பார் சான்றோர்
பண்ணைப் பாடிப் பணிவார் சான்றோர்
விண்ணை நோக்கி விழிப்பார் சான்றோர்
மண்ணைக் கிண்டி வாழ்வார் சான்றோர் 4

# எங்கள் பெருமான்

அன்னைபிதாக் குருவானான் எங்கள் பெருமான்
ஆதியந்த மில்லாதான் எங்கள் பெருமான்
இருவரோ டொருவரானான் எங்கள் பெருமான்
ஈசனானான் அனைவருக்கும் எங்கள் பெருமான்
உண்மை முழுதுமென்றான் எங்கள் பெருமான்
ஊரும்பேரும் உள்ளானில்லான் எங்கள் பெருமான்
எண்ணுக் கடங்காதான் எங்கள் பெருமான்
ஏவலாளாய் மண்சுமந்தான் எங்கள் பெருமான்
ஐம்பூதமைம் பொறியானான் எங்கள் பெருமான்
ஒருபொல்லாப்பு மில்லையென்றான் எங்கள் பெருமான்
ஓமென் றுறுதிதந்தான் எங்கள் பெருமான்
ஔவனத்தில் ஆடுகின்றான் எங்கள் பெருமான்
அ∴து மி∴துமானான் எங்கள் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை

நித்தியம் நாமென்று சொன்னால் நினைக்கிறோமில்லை
நீநான் அவனென்று சண்டைபோட்டுக் கொள்ளுகிறோம்
பத்தி செய்து வாழவழி தேடுகிறோமில்லைப்
பத்தரினத் தோடுநாம் கூடுகிறோமில்லை 1

எத்திசைக்கும் ஈசனென்று எண்ணுகிறோமில்லை
இரப்பவர்க்கு ஈயாமல் தேடுகிறோம் ஐயே
முத்திக்கு வழிதேட முயல்கிறோமில்லை
மூவாசை யாலேமனம் கோணுகிறோம் ஐயே 2

வித்தார மாகக் கதைபேசிக் கொள்ளுவோம்
வீணருடன் கூடி விளையா டுகிறோம்
சத்திசிவம் ஒன்றான தன்மையைக் காணோம்
சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை 3

குழந்தை யன்போடுநாம் கும்பிடமாட்டோம்
கூக்குரல் போட்டுநாம் கும்பிட்டுக் கொள்ளுவோம்
தளர்ந்துபோன அடியவரைத் தாங்குகி றோமில்லைச்
சற்குரு பாதத்தை வணங்குகி றோமில்லை 4

மதிக்குமதி கொடுப்பவனை மதிக்கிறோமில்லை
மண்ணாசை பெண்ணாசையால் மாய்கிறோமையே
விதியினை வெல்லவழி காண்கிறோமில்லை
விதிவிதி யென்றுசொல்லி விளங்குகிறோமையே 5

கண்ணுக்குக் கண்ணை நாம் காண்கிறோமில்லைக்
காதுக்குக் காதுதன்னைக் கருதுகிறோமில்லை
விண்ணைப்போல் உலகத்தில் விளங்குகிறோமில்லை
வேதாந்த சித்தாந்தம் படிக்கிறோமில்லை 6

அலங்கார மாக ஆடை அணிந்துகொள்ளுவோம்
அங்கு மிங்கும் நாம்திரிந்து அலைகிறோம்
கலங்காத நன்னெறியிற் செல்கிறோமில்லைக்
கந்தா முருகா என்று கத்திக்கொள்ளுவோம் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிவாடா தொண்டா

ஓடிவாடா தொண்டா ஓடிவாடா
ஒருபொல்லாப்பு மில்லையென்று ஓடிவாடா 1

தேடிவாடா தொண்டா தேடிவாடா
சிவனடியார் மனங்களிக்கத் தேடிவாடா 2

பாடிவாடா தொண்டா பாடிவாடா
பரமபதி யொன்றென்று பாடிவாடா 3

நாடிவாடா தொண்டா நாடிவாடா
நாங்கள்சிவ மென்றுசொல்லி நாடிவாடா 4

கூடிவாடா தொண்டா கூடிவாடா
குழந்தைக ளோடுசேர்ந்து கூடிவாடா 5

சூடிவாடா தொண்டா சூடிவாடா
தூயநீறு சூடிக்கொண்டு ஓடிவாடா 6

ஆடிவாடா தொண்டா ஆடிவாடா
அஞ்செழுத்தை நாவிற்கொண்டு ஆடிவாடா 7

---

# சொல்லச் சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்

சொல்லச்சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்
அல்லும் பகலுமற்ற ஆனந்தந் தருமோனம்
வெல்லவரும் மாந்தர்தம் வாயடக்குஞ் சிவஞானம்
கொல்லவரும் யமனுங் குடியோடிப் போய்விடுவான்
கல்லை யுருக்கிவிடுங் கருணைவெள்ளம் பெருக்கிவிடும்
இல்லையென்னுஞ் சொல்லை யில்லாமல் ஆக்கிவிடும் 1

நல்லூரில் தேரடியில் நாங்கண்ட சிவயோகம்
சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டிவிடும்
வில்லை விடத்தையஞ்சா வீரசாந்தம் ஊட்டிவிடும்
பல்லைக்காட்டித் திரியாமல் பரலோகங் கூட்டிவிடும்
பத்துப்பாட்டுப் படிப்பவருங் கேட்டுச் சுவைப்பவரும்
வித்தக ராகவாழ்ந்து விதேகமுத்தி சேர்வாரே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டிப் பணிந்திடடி

அவனன்றி யோரணுவும் அசையா தெனும்பெரிய
சிவனடியார் தம்மைக்கண்டு — சின்னத்தங்கம்
சிவனென்று வணங்கிடடி 1

அங்கிங் கெனாதபடி யானந்தமாய்க் கூத்தாடும்
சங்கரனை நீவணங்கிச் — சின்னத்தங்கம்
சந்தேகந் தீர்த்திடடி 2

அத்து விதப்பொருளை அறிவுக்கறி வானதொன்றைச்
சித்தத்தி லேநீவைத்து — சின்னத்தங்கம்
சிந்தை தெளிந்திடடி 3

அருவா யுருவாகி யம்பலத்தே கூத்தாடும்
குருபரனை நீவாழ்த்திச் — சின்னத்தங்கம்
கும்பிட்டுக்கொண் டாடிடுவாய் 4

அகம்பிர மாஸ்மியென்னும் அரியதிரு மந்திரத்தை
அகத்திலே நீசெபித்துச் — சின்னத்தங்கம்
ஆறுதலாய் இருந்திடடி 5

அந்தியுஞ் சந்தியும்நீ ஆசானைச் சிந்தித்து
வந்தனைசெய் திருந்திடுவாய் — சின்னத்தங்கம்
மதியிரவி யுள்ளமட்டும் 6

ஆவது மில்லையடி அழிவது மில்லையடி
தேவரு மில்லையடி — சின்னத்தங்கம்
சிவனே முழுதுமுண்மை 7

ஆசையை விட்டிடடி அதுவேசிவ பூசையடி
காசைக் கருத்தில்வைத்துச் — சின்னத்தங்கம்
கவலைநீ கொள்ளாதே 8

ஆன்மாவுக் கயலில்லை யப்படியே யுள்ளதடி
வீண்வாதம் விட்டிடடி — சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடடி 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்குமோ வினை

இராகம் — நாட்டை　　　　　　　　　　தாளம் — ரூபகம்

**பல்லவி**

அடுக்குமோ வினை நம்மைக் — கெடுக்குமோ

**அநுபல்லவி**

ஆன்மா அழியாதென்ன
ஆசான்பால் கேட்டபின்　　　　　　(அடுக்குமோ)

**சரணங்கள்**

அடுத்தடுத்துச் சொல்வதினால்
ஆம்பயன் ஒன்றுமில்லை
அன்பேசிவ மென்றடியார்
அருள்வாக்கை மறவாதே　　　　　　(அடுக்குமோ)

ஒன்றோ விரண்டோவெனுஞ்
சந்தேகந் தனைநீக்கி
ஓம்சிவாய நமவென
உள்ளத்துட் டெளிந்துகொள்　　　　　　(அடுக்குமோ)

தவஞ்செய்யும் யோகநாதன்
சாற்றும்நாட் டையைக்கேட்டு
சஞ்சலமில் லாமல்நெஞ்சில்
தானான தன்னையறி　　　　　　(அடுக்குமோ)

---

# சிவதொண்டன் நடந்துவரும் சிங்காரம்

**பல்லவி**

சிங்காரந் தனைப்பாரீர்
சிவதொண்டன் நடந்துவரும்　　　　　　(சிங்)

**அநுபல்லவி**

சிங்காரந் தனைப்பாரீர் சீவனே சிவனென்று
திங்கள் தோறுஞ்சிவ தொண்டர்கள் வீடுவரும்　　　　　　(சிங்)

**சரணம்**

நற்சிந் தனையெனும் நல்ல மருந்தை யூட்டி
நல்லூரான் திருவடியை நாளும்மற வாமலேற்றிக்
கற்பனை கடந்தவனைக் காணாமல் கண்டுகொண்டு
காலமொரு மூன்றுங் கடவாமல் கடந்துநிற்கும்　　　　　　(சிங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனடி

சிவனடியைச் சிந்தை செய்வோமே – இந்தச்
சீவன் சிவனென்று தெளிந்துகொள் வோமே 1

அவனரு ளாலே யவன்றாள் – நாங்கள்
ஆரா தனைசெய்து சீராய்வாழ் வோமே 2

உவமை கடந்தபே ரின்பம் – எங்கள்
உள்ளத்தி லுண்டொரு பொல்லாப்பு மில்லை 3

சிவனடி யாரொடுங் கூடி – நாங்கள்
சிவபுரா ணந்தினம் படித்துவரு வோமே 4

ஐம்பூதம் நாமல்லக் காணும் – நாங்கள்
ஐம்பொறியும் ஐம்புலனும் நாமல்ல அறியும் 5

அந்தக்கரண நாமல்லப் பேணும் – இந்த
ஆன்மாவே நாமென் றறிந்திட வேணும் 6

வாழிசிவ னடியார்கள் வாழி – இந்த
வையகத்தில் வாழும் உயிரெல்லாம் வாழி 7

ஆழிசூழ் இலங்கையும் வாழி – எங்கள்
அப்பனு மம்மையும் எந்நாளும் வாழி 8

---

## ஆரறிவார் என்றப்பன் சொல்வான்

ஆரறிவார் என்றப்பன் சொல்வான் – தன்னை
அணைந்துவந்த பேர்களையே யாதரித்துக் கொள்வான் 1

பாரறியார் இவருடைய தன்மை – பலர்
பைத்திய காரனென்று பரிகாசஞ் செய்வார் 2

தேரடியில் எந்நாளும் இருப்பான் – ஆசான்
தெருவாலே வருவாரைப் போவாரை வைவான் 3

ஆரடா நீயென்றே யதட்டி – ஆசான்
அன்பிலான் போலவே துன்புறுத்தி நிற்பான் 4

அப்படியே யுள்ளதெனச் சொல்லி – ஆசான்
அந்தரங்க மாகவே பேசிக்கொண் டிருப்பான் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி யிவன்றன்மை யென்று – எவரும்
எண்ண முடியாமல் சும்மா இருப்பான் 6

பாவலர் நாவலர்கள் தாமும் – ஆசான்
பரிபாஷை யறியாமல் பதறியே போவார் 7

மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்த – நல்ல
மூர்த்த மிதுவென்று முகமலர்ந்து நிற்பார் 8

---

## மருந்து கண்டேனே

மருந்து கண்டேனே நல்லூரில்நான் – மருந்து
கண்டேனே

மருந்து கண்டேன் மாறாப் பிறவியை நீக்கும்
மாறாத நோயைத் தீர்த் துடல்காக்கும் – மருந்து
கண்டேனே 1

அருந்த வர்தம் மோடுற வாக்கும்
ஆமில்லை யென்று சொல்லாமற் காக்கும் – மருந்து
கண்டேனே 2

திருந்து மடியவ ரோடுற வாக்கும்
சீவன் சிவனென ஆனந்தந் தேக்கும் – மருந்து
கண்டேனே 3

குருந்த மரத்தடியில் குருவாக வந்து
கும்பிட்ட மாணிக்கர்க்குத் தீக்கைவைத் தாண்ட – மருந்து
கண்டேனே 4

அப்பர்க்குச் சமணர்செய் யாபத்துத் தீர்த்து
அப்பூதி யடிகள்தம் பிள்ளைக்குயிர் கொடுத்த – மருந்து
கண்டேனே 5

மார்க்கண்டற் காக மறலியை யுதைத்து
மாயா மருந்தை அவன்றனக் கீந்த – மருந்து
கண்டேனே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவருக்குந் தெய்வம் ஒன்றே

அனைவருக்குந் தெய்வம் ஒன்றே – அதை
அறிந்துலகில் வாழ்வது தொண்டே 1

முனைந்துநிற்கும் காமக்குரோதம் போக்கிப் – பின்பு
மூவரையுந் தேவரையும் ஏவலாக்கு 2

நெஞ்சுருகு மடியார்கள் கூட்டம் – இந்த
நீணிலத்தில் நன்மையெல்லாங் கூட்டும் 3

வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கங் – குரு
வேந்தன் தந்ததிரு வாக்கு 4

தினைத்துணைப் போதும்மற வாமல் – சிவத்
தியானத்தில் தினந்தினம் மூழ்கு 5

மனத்துயரை நீக்கநல்ல மருந்து – குரு
வாக்கியமொரு பொல்லாப்பு மில்லை 6

நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம் – நாங்கள்
நித்தியரா மென்பதை நாளும்மறவோம் 7

அயலுனுக் கில்லையென்று பெரியோர் – சொன்ன
அந்தரங்க மறிந்துநீ திரிவாய் 8

முயல முயலவின்பந் தேக்கும் – பொல்லா
மூவித ஆசைகளை நீக்கும் 9

சுயநல மடியோடே மடியும் – சுருதி
சொன்ன சுவானுபவம் படியும் 10

---

## வேறு

ஆநந்த மாநந்த மாநந்தந் தானே
அங்கு மிங்கு மெங்கும் நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணமேனுஞ் சும்மா விருக்குங் கருத்திலார்

மனச்சாட்சி மனச்சாட்சி யென்று மருட்டினார்
தனதாட்சி செய்யத் தலைநி மிர்த்தினார் 1

பணமாட்சி வேணுமென்று பறை யறைகிறார்
கணமேனுஞ் சும்மா விருக்குங் கருத்திலார் 2

மனமாட்சி வேணுமென்று மனம் பதைக்கிறார்
குணமாட்சி யில்லாமல் தினங்கு ரைக்கிறார் 3

மனமாட்சி யுள்ளார்போல் தம்மை மதிக்கிறார்
இனமாட்சி யுள்ளோமெனத் தம்மைத் துதிக்கிறார் 4

வணக்கம் வணக்கமென்று வாயால் பதிக்கிறார்
இணக்க மறிந்து இணங்க எதிர்க்கிறார் 5

சினத்தை மனத்தில் வைத்துச் சிரிக்கிறார்
கனக்கக் கதைத்து தம்மை வியக்கிறார் 6

நனைத்து உலர்ந்த உடையு டுக்கிறார்
வினைப்பய னென்று வீணாய்ப் பதைக்கிறார் 7

தினைத்துணைப் போதும்மற வோமெனச் செபிக்கிறார்
மனத்துயர் வந்த போது தவிக்கிறார் 8

---

## சர்வம் பிரம்ம மயம்

பிருதுவியப்புத் தேயுவாயு ஆகாசம் – அவை
பிரம மயமென்று பேசுவார்
கருமை வெண்மை செம்மையை – அது
கலந்து நிற்கும் காரணம்
காமக் குரோதமற்ற பெரியோர்கள் – அவர்
கண்டு கொண்டனர் உண்மையை
எள்ளுக்குள் எண்ணெய்போல் நிறைந்திடும் – அது
எல்லா ரிடத்தும் இருந்திடும்
சொல்லும் பொருளுமாய்த் தொடர்ந்திடும் – அது
சூக்கும ரூபமாய்ப் படர்ந்திடும்
செப்படி வித்தை காட்டிடும் – அது
செய்தி யறியாமல் மாட்டிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்குக் கண்ணாய்க் கண்டிடும் – அது
காதுக்குக் காதாய்க் கேட்டிடும்
காலுக்குக் காலாய் நடந்திடும் – அது
கைக்குக் கையாய் எடுத்திடும்

# இசைந்து வா என்மனமே ~ I

கண்டொன்று சொல்லாதே கடவு ளொருவன்
உண்டென் றுறுதி கொள்ளவா என்மனமே 1

அண்டர் முனிவர்நரர் அன்புசெய்யும் பெருமானைக்
கண்டு களிக்கக் கருதிவா என்மனமே 2

பண்டுசெய்த வல்வினையால் பலபிறவி நாமெடுத்துத்
திண்டாட்டப் பட்டோம் சீக்கிரம்வா என்மனமே 3

எட்டுணையும் தாழ்ச்சியில்லா இறைவன் திருவடியைச்
சுட்டாமற் சுட்டிச் சுகம்பெறவா என்மனமே 4

பட்டுக் குடைபிடித்துப் பரியேறித் திரிவாரை
எட்டுணையும் நம்பாமல் என்பின்னே வாமனமே 5

விட்டகுறை தொட்டகுறை யிரண்டும்விட் டேகாந்த
நட்டணையில் நிற்க நயந்துவா என்மனமே 6

முட்டாத பூசைபண்ணி முழுமனமாய் நாம்வணங்கத்
திட்டமிட் டென்பின்னே சேர்ந்துவா என்மனமே 7

சிட்டர் பரவுஞ் சிவதொண்டன் நிலையத்தே
கிட்டாமற் கிட்டிநிற்கக் கிருபையுடன் வாமனமே 8

அட்டாங்க யோகம் அவத்தையைந்தும் விட்டேகி
மட்டற்று நிற்க மகிழ்ந்துவா என்மனமே 9

எட்டாத கொப்பில் இருக்கின்ற தேனமுதை
இட்ட முடன்புசிக்க எட்டிவா என்மனமே 10

எட்டும் இரண்டும் இசைந்துவந்த பாமாலை
தட்டாமல் நாம்படிக்கத் தாவிவா என்மனமே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைந்து வா என்மனமே ~ 2

அல்லும் பகலும் அறிவாக நிற்பவர்க்கு
எல்லையில்லா வின்பமுண்டு என்பின்னே வாமனமே 1

ஆறுவது சினமென்னும் ஔவைமொழி கண்டார்க்கு
ஆறுதல் வேறுமுண்டோ அதிவிரைவாய் வாமனமே 2

இடும்பைக்கு இடும்பை படுப்பார் இடும்பைக்கு
இடும்பை படாதவர் என்பின் வாமனமே 3

ஈசன் ஒருவனென எண்ணிப் பணிவார்க்குப்
பூசைசெய்ய வேண்டுமோ புகலவா என்மனமே 4

உண்மை முழுதுமென்னும் உத்தமனைக் கண்டார்க்கு
என்னகுறை வுண்டு இசைந்துவா என்மனமே 5

ஊக்கத் தைப்போல உறுதுணைவே றுண்டாமோ
பூக்கை யிலேந்திப் போற்றவா என்மனமே 6

எல்லாஞ் சிவன்செய லென்றேத்திப் பணிவார்க்குப்
பொல்லாங்கு முண்டோ புத்தியுடன் வாமனமே 7

ஏகன் அநேகன் இறைவனடி வாழ்கவென்று
தேகம் விழுமுன்னே செப்பவா என்மனமே 8

ஐயமிட் டுண்ணென்னும் ஔவை திருவாக்கே
துய்ய வழிகாட்டும் சொல்லக்கேள் என்மனமே 9

ஒருபொல்லாப்பு மில்லையெனு முத்தமனார் திருவாக்குத்
தருமநெறி காட்டுஞ் சடுதியில்வா என்மனமே 10

ஓம்சிவாய நமவென்று உறுதியுடன் செபித்தால்
நாம்சிவமே ஆவோம் நயந்துவா என்மனமே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளவியம் பேசுதல் ஆக்கத்துக் கழிவென்னும்
ஒளவைசொல் நாமறிய அன்புடன் வாமனமே 12

அஃகமுங் காசுஞ் சிக்கெனத்தே டென்றமொழி
அஃகு தலில்லா அறிவுதரும் என்மனமே 13

## இசைந்து வா என்மனமே – 3

ஒருபொல்லாப்பு மில்லையென்றென் னுள்ளங் குளிரவைத்த
குருநாதன் திருவடியைக் கும்பிடவா என்மனமே 1

உண்மை முழுதுமென வுறுதி யெனக்களித்த
அண்ணலை நான்வணங்க அதிவிரைவாய் வாமனமே 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனைச்
சேம முடன்காணச் சீக்கிரம்வா என்மனமே 3

அப்படியே யுள்ளதென அடிக்கடியே சொல்லுஞ்செல்
லப்பனை யான்காண அதிவிரைவாய் வாமனமே 4

ஆரறிவா ரென்றென் னகங்களிக்கத் தேரடியிற்
பாரறியச் சொன்னவனைப் பாடவா என்மனமே 5

தவராச சிங்கத்தைச் சற்குருவை நல்லூரில்
எவருமறி யாதவனை யேத்தவா என்மனமே 6

கந்தைத் துணியணிந்து காமங் குரோதமற்ற
எந்தை தனைக்காண இசைந்துவா என்மனமே 7

மந்திர தந்திரமும் மானாபி மானமில்லாச்
சுந்தரனைக் காணத் தொடர்ந்துவா என்மனமே 8

பிச்சைக்கே யிச்சித்துப் பித்தனைப் போற்றிரிந்த
அச்சமில்லா வாசானை யன்புசெய்ய வாமனமே 9

ஆறாறு தத்துவத்துக் கப்பாலே யுள்ளவனை
மாறாக் கருணையனை மருவவா என்மனமே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைந்து வா என்மனமே-4

அன்பே சிவமென்ற அடியார் திருவாக்கை
இன்பமென்று போற்ற இசைந்துவா என்மனமே 1

ஆரறிவா ரென்னும் ஆசான் திருவாக்கைப்
பாரறியச் சொல்லிப் பணியவா என்மனமே 2

இதுவதுவென் றெண்ணாமல் எல்லாஞ் சிவமயமாய்ப்
பொதுவில் நடங்காணப் புகழ்ந்துவா என்மனமே 3

ஈச னொருவனென எண்ணியெண்ணி யேயுருகிப்
பூசைசெய்ய வென்பின் புறப்படுவாய் என்மனமே 4

உன்மத்தன் போல வுலகறிய நல்லூரில்
என்னப்பன் வாழ்ந்தவிடம் போகவா என்மனமே 5

ஊரும் பேருமில்லா வொருவனே நல்லூரில்
சீருடனே வாழ்ந்ததிறம் தெரியவா என்மனமே 6

எண்ணிப் பணிவார் இடரகற்ற நல்லூரில்
கண்ணியமாய் வாழ்ந்தகழல் காணவா என்மனமே 7

ஏதுமற நில்லென் றெனக்குரைத்த செல்வன்தாள்
போதுகொண்டு போற்றப் புறப்படுவாய் என்மனமே 8

ஐயமெலாந் தீர அன்புடனே நோக்கியெனை
வையகத்தில் வாழவைத்த வரங்காண வாமனமே 9

ஒருபொல்லாப்பு மில்லையென உவந்தெனக்குச் சொன்னகுரு
திருவாக்கைக் காணச் சிறந்துவா என்மனமே 10

ஓடு மிருநிதியும் ஒன்றாகக் காணவைத்த
கேடுபடாத் திருவடியைக் கிட்டவா என்மனமே 11

ஔவியத்தை நீக்கி அகந்தூய்மை யாக்கிவைத்த
திவ்விய பாதந் தெரிசிக்கவா என்மனமே 12

அ.்.கமுங் காசுந் தேடி யலையாமல்
ந.்.குதல் செய்தானை நண்ணவா என்மனமே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாடு

அன்பர்பணிந் தேத்திநிற்கும் நாடெங்கள் நாடு
அறஞ்செய்ய விரும்பென்னும் நாடெங்கள் நாடு
ஆதியந்த மில்லாத நாடெங்கள் நாடு
ஆறுவது சினமென்னும் நாடெங்கள் நாடு
இயல்வது கரவேலென்னும் நாடெங்கள் நாடு
இன்பதுன்ப மில்லாத நாடெங்கள் நாடு
ஈவது விலக்கேலென்னும் நாடெங்கள் நாடு
ஈச னொருவனென்னும் நாடெங்கள் நாடு
உடையது விளம்பேலென்னும் நாடெங்கள் நாடு
உண்மை முழுதுமென்னும் நாடெங்கள் நாடு
ஊக்கத்தைக் கைவிடாத நாடெங்கள் நாடு
ஒருபொல்லாப்பு மில்லையென்னும் நாடெங்கள் நாடு
எண்ணிக்கைக் கடங்காத நாடெங்கள் நாடு
ஏவாது பணிசெய்யும் நாடெங்கள் நாடு
ஐயமிட் டுண்ணென்னும் நாடெங்கள் நாடு
ஐயஞ்சற்று மில்லாத நாடெங்கள் நாடு
ஒப்புர வொழுகென்னும் நாடெங்கள் நாடு
உத்தமர்கள் வாழ்கின்ற நாடெங்கள் நாடு
ஓதுவ தொழியேலென்னும் நாடெங்கள் நாடு
ஒருவனே தெய்வமென்னும் நாடெங்கள் நாடு
ஔவிய மில்லாத நாடெங்கள் நாடு
ஔவைசொல் மறவாத நாடெங்கள் நாடு
அஃகஞ்சுருக் கேலென்னும் நாடெங்கள் நாடு
ஆரறிவார் என்றுசொல்லும் நாடெங்கள் நாடு
ஆணவத்தை நீக்குவிக்கும் நாடெங்கள் நாடு
கண்டொன்று சொல்லேலென்னும் நாடெங்கள் நாடு
ஙப்போல் வளையென்னும் நாடெங்கள் நாடு
நாங்கள்சிவ மென்றுசொல்லும் நாடெங்கள் நாடு
ஞயம்பட வுரையென்னும் நாடெங்கள் நாடு
தந்தைதாய் பேணென்னும் நாடெங்கள் நாடு
நன்றி மறவேலென்னும் நாடெங்கள் நாடு
பருவத்தே பயிர்செய்யென்னும் நாடெங்கள் நாடு
மன்றுபறித் துண்ணேலென்னும் நாடெங்கள் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பாய்ப் பணிந்திடடி

வடிவ மிலாதவனே – கிளியே!
வடிவ மெடுத்தான்டி
அடிமுடி யில்லையடி – கிளியே!
அன்பாய்ப் பணிந்திடடி 1

கடிவது மறந்திடடி – கிளியே!
காப்பது விரதமடி
மடியும்நாள் வருமுன்னே – கிளியே!
மாதவஞ் செய்திடடி 2

முடியாப் பிறப்பிறப்பைக் – கிளியே!
முற்றும் அழித்திடடி
துடியிடை பாகனடி – கிளியே!
சோமசுந்தர சுவாமியடி 3

கொடிய வசுரர்புரங் – கிளியே!
கோபித் தெரித்தான்டி
படியில் மனிதனாகக் – கிளியே!
பரிவுடன் வந்தான்டி 4

வடிவுடை வணிகனாகக் – கிளியே!
மதுரையில் வந்தான்டி
கொடியிடை பாகனடி – கிளியே!
கொண்டாட நல்லதடி 5

விடியுமுன் எழுந்திடடி – கிளியே!
விமலனைப் போற்றிடடி
பொடியணி மேனியனைக் – கிளியே!
புகழ்ந்துநீ பாடிடடி 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம்சிவாய நமவெனத் துதிப்போம்

ஓம்சிவாய நமவெனத் துதிப்போம்
நாம்சிவ மென்றுநெஞ்சில் பதிப்போம் 1

வீம்பிடும்பை யகங்காரம் விடுவோம்
போம்வினை யென்றுசொல்லித் தடுப்போம் 2

ஐம்பொறி வழிசெல்லாமல் தடுப்போம்
ஐம்பூதம்நா மல்லவென்று தொடுப்போம் 3

வெம்பகை விளையாமல் மடுப்போம்
நம்பொருள் சிவமெனப் படிப்போம் 4

தும்பிமுகன் அடிக்கீழ்ப் படுப்போம்
அம்மையப்பன் பாதத்தில் கிடப்போம் 5

ஆறுவது சினமென நடிப்போம்
நாறுமுடல்நா மல்லவென்று முடிப்போம் 6

தேறித் தெளிந்தவரை அடுப்போம்
ஊறிவரும் அமுதத்தை உண்போம் 7

வாழ்கசிவ தொண்டனெனக் களிப்போம்
ஊழ்வினையை முற்றாக அழிப்போம் 8

---

## ஆசான் வாசகம்

*ஆசிரியத் தாழிசை*

முழுவது முண்மை யெனமுன் சொன்ன
பழுதில் வாக்கியம் பரகதி காட்டும்
தொழுது வணங்கிச் சுகமாய் வாழுதி 1

அப்படி யுள்ளதென் றாசான் சொன்ன
ஒப்பில் வாக்குநல் லுணர்வை யளிக்குங்
கைப்போது தூவி எப்போதும் வாழுதி 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரறிவா ரென்ற ஆசான் வாசகம்
பேரறி வைத்தரும் பேணி வாழுதி 3

நாமறியோ மென்ற நலந்திகழ் வாக்குச்
சேம மளித்துச் சிவகதி யாக்குமே
தாமத மின்றிச் சார்ந்து வாழுதி 4

முடிந்த முடிபென்னும் முனிவன் வாக்கு
படிந்த மனத்தில் பரகதி காட்டும்
விடிந்ததும் மலரிட்டு விரும்பி வாழுதி 5

ஆசான் மலரடி மறவா அடியவன்
பேசுஞ் செந்தமிழ் பிறவிநீக் கும்மே 6

## நாம் எங்கே நாதன் எங்கே

### பல்லவி

ஆதார வாதேயம் முழுதுமான அப்பனுக்குப்
பாதார விந்தமெங்கே பார்த்துப் பணிவதெங்கே

### அநுபல்லவி

பூதாதி ஐந்துமவன் பொறிபுலன்க ளெல்லாமவன்
தாதாவும் பெற்றெடுத்த தாய்தந்தை தானுமவன் (ஆதா)

### சரணங்கள்

தாம் தீமி திமிதீமி ததிங்கிணதோ மென்று
தானேதா னாய்நின்று சலிப்பற நடஞ்செய்யும் (ஆதா)

வாணாளை வீணாகக் கழியாதே என்றுசொல்வார்
நானாரோ இதைக்கேட்டு நாமெங்கே நாதனெங்கே (ஆதா)

தேனாரும் நல்லூரில் சீவன்முத்த னாய்வாழ்ந்த
கோனாகுஞ் செல்லப்பனைக் கும்பிடும் மாணாக்கன் (ஆதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எக்காலம் ~ 1

அல்லும் பகலும் அப்பன் திருவடியைச்
சொல்லாமற் சொல்லிச் சுகம்பெறுவ தெக்காலம் 1

நில்லா வுலகையும் நிலையென வெண்ணிமனஞ்
செல்லாமல் திருவடியைச் சிந்திப்ப தெக்காலம் 2

காண்பான் காட்சியுங் காட்சிப் பொருளுமற்றுத்
தூண்போ லிருந்து சுகம்பெறுவ தெக்காலம் 3

பொன்னாசை மண்ணாசை பெண்ணா சையைநீக்கிப்
பொன்னார் திருவடியைப் போற்றுவது மெக்காலம் 4

வேதாந்தம் பேசி வீண்காலம் போக்காமல்
நாதாந்த மோனநிலை நண்ணுவது மெக்காலம் 5

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தவனைத்
தெள்ளுதமிழ் பாடிச் சேவிப்ப தெக்காலம் 6

ஆறாறு தத்துவத்துக் கப்பாலா யிப்பாலாய்
வேறா யுடனாய் நினைப்பதுவு மெக்காலம் 7

நினைவுக்கு நினைவாய் நிலைத்திருக்கும் மெய்ப்பொருளை
அனைத்துக்குங் காரணனை யறிவதுவு மெக்காலம் 8

முனைத்துவரும் மூர்க்கக் குணமெல்லாம் நீக்கித்
தினைத்தனையும் மறவாமல் சேவிப்ப தெக்காலம் 9

பத்தும் படிப்போர்கள் கேட்போர்க ளெல்லாரும்
வித்தகன்றன் திருவடியை விரவிநிற்பர் நிச்சயமே 10

---

## எக்காலம் ~ 2

அன்பு சிவமென்ற ஆன்றோர் திருவாக்கை
இன்பமுடன் போற்றி யிருப்பதுவு மெக்காலம் 1

ஆதியந்த மில்லாத ஆன்மாவே நாமென்ற
சேதி யறிந்து தெரிவிப்ப தெக்காலம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையிலும் மறுமையிலு மெம்மைவிட்டு நீங்காத
செம்மலர்த் தாள்கண்டு சேவிப்ப தெக்காலம் 3

ஈசன் திருவடியை யென்றும் மறவாமல்
வாச மலர்கொண்டு வணங்குவது மெக்காலம் 4

உருகி யுருகி உணர்வழிந்து நின்று
பெருகி வருமமிழ்தைப் பருகுவது மெக்காலம் 5

ஊரும் பேருமில்லா ஒருவன் திருவடியை
நீரும் பூவும்போட்டு நெக்குநிற்ப தெக்காலம் 6

எல்லா வுயிரினும் நில்லாமல் நிற்பவனை
நினைந்து நினைந்துருகி நிற்பதுவு மெக்காலம் 7

ஏக னநேக னிறைவனடி வாழ்கவெனும்
மோக மறுக்குமொழி கண்டுய்வ தெக்காலம் 8

ஐந்து புலன்வென்ற ஆன்றோர் திருவடிக்கீழ்
நைந்துருகி நின்று நயம்பெறுவ தெக்காலம் 9

ஒன்றென் றிருதெய்வம் உண்டென் றிருவென்று
அன்றுசொன்ன பட்டினத்தா ரடிபணிவ தெக்காலம் 10

ஓமெனு மெழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற
சோமசுந் தரத்தின் அடிதொழுவ தெக்காலம் 11

---

## சிவசிவ என்றிடத் தீரும் பாவம்

சிவசிவ என்றிடும் போதினிலே செய்த
 பாவமெல்லாம் ஓடும் பாரினிலே
அவனிவன் என்கின்ற வார்த்தையெல்லாம் போக்கி
 ஐயன் திருப்பாதம் உண்மையதாய் நோக்கி
தவம்செய் வார்தமைத் தானாக நோக்கிச்
 சச்சி தானந்தம் தன்னிடத்தே தாக்கில்
உவமையில் லாமுத்தி நிலையிலே போக்கும்
 உண்மை யறிந்து சொன்னேன் யோகசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்மை முன்னிலை படர்க்கை அற்றவன்

தன்மை முன்னிலை படர்க்கை யற்றவன்
தன்னை யுணர்ந்தவச் சற்குரு வாமே 1

பின்னைப் பிறப்பிறப் பவனுக் கில்லை
முன்னை வினையின் முடிச்சவிழ்த் தானே 2

அன்னை பிதாகுரு தெய்வம் அவனே
அவனை வணங்கினார் அருந்தவத் தோரே 3

பூதங்க ளில்லைப் பொறிபுல னில்லை
வேதங்க ளில்லை விளங்குசாத் திரமில்லை 4

சந்திரனில்லைச் சூரியனில்லை தாரகா கணங்களில்லை
இந்திரன் முதலிய தேவருமில்லை இருடிக ணங்களுமில்லை 5

வாசித்துக் காணொணாதபொருள், வாய்விட்டுச்
சொல்லொணாதபொருள்
மாயத்துக்கு அப்பாலுள்ளது மாதவர்க் கெட்டொணாதது 6

## எந்நாளோ

ஒருபொல்லாப்பு மில்லையென வுரைத்த குருநாதன்
திருவடியைச் சேவிக்கு மருள்பெறுவ தெந்நாளோ
உண்மை முழுதுமென வோதுந் திருவாக்கு
என்னை விழுங்கி யிருப்பதுவு மெந்நாளோ
ஆரறி வாரென்று அடிக்கடியே சொல்லும்
சீரறிந்து வாழும் செயலறிவ தெந்நாளோ
அப்படியே யுள்ளதென அடிக்கடியே பேசும்
அப்பனைக் காணும் அருள்பெறுவ தெந்நாளோ
முடிந்த முடிபென்று முகமலர்ந்து சொன்னவன்றன்
அடிபணிந்து நிற்குநாள் இந்நாளோ எந்நாளோ
சீராரும் நல்லூர்த் தேரடியிலே யிருக்குங்
காராரும் மேனியனைக் காணும்நாள் எந்நாளோ
பித்தனென எல்லோரும் பேசுவதைக் கேட்டிருந்தும்
சித்தங்கலங் காதவனைச் சிந்திப்ப தெந்நாளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைவாழ் தெய்வம்

எல்லாஞ்செய வல்லதெய்வம் எல்லார்க்குந் தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
நில்லாத நீர்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நிலமேழுந் தாண்டிநின்ற நின்மலஞ்சேர் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
செல்லாரும் மலைசூழு மிலங்கைவாழ் தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிதே தெய்வம் 1

இருநிலனா யிரவிமதி யாகிநிற்குந் தெய்வம்
இன்னதன்மை யென்றெவரும் சொல்லவொண்ணாத் தெய்வம்
கருவிகர ணங்களெல்லாங் கலந்துநிற்குந் தெய்வம்
காவலனாய் மதுரைநகர் ஆண்டுகொண்ட தெய்வம்
ஒருவனா யுலகேத்த ஓங்கிநின்ற தெய்வம்
உத்தமிக்குக் கூலியாளாய் மண் சுமந்த தெய்வம்
திருவரைசேர் இலங்கைநகர் வாழுகின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிதே தெய்வம் 2

பண்டயனும் மாலுமடி பரவவருள் தெய்வம்
பரியெல்லாம் நரியாகப் பணித்தபர தெய்வம்
மண்டலத்தி லுயிரெல்லாம் வணங்கவருள் தெய்வம்
மருவியென் சிந்தையிலே புகுந்துறையுந் தெய்வம்
கண்டெவரும் சொல்லவொணாக் கதிசேருந் தெய்வம்
காதலிக்கும் மெய்யடியார்க் கருள்செய்யுந் தெய்வம்
தண்டரளம் விளங்கிலங்கை நகர்வாழுந் தெய்வம்
தானாக விருக்கின்ற தெய்வமிதே தெய்வம் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில்லடா நிலையிலென்று சொல்லுது

ஓம்நாம் நாமென்று ஒலிக்குது
ஞாதுருஞானம் போயோடி ஒளிக்குது 1

நமக்குநாமே துணையென்று விழிக்குது
நாதாந்த முடியிலேறிக் குளிக்குது 2

வேதாந்தசித்தாந்தஞ் சமமென்று களிக்குது
மாதாபிதாவை மறவாதிருக்க மதிக்குது 3

மூதாதைமார் சொல்நெஞ்சில் மதிக்குது
சூதான வார்த்தைதன்னைத் தொலைக்குது 4

நில்லடா நிலையிலென்று சொல்லுது
நீயேநான் என்றுசொல்லி வெல்லுது 5

உல்லாச மாயெங்குஞ் செல்லுது
உண்மை முழுதுமென்று சொல்லுது 6

நல்லூரில் செல்லப்பன் என்னப்பன்
நானவரைக் கேட்கும் விண்ணப்பம் 7

## கடவுளைக் காண்பீரோ

தலையை நிலத்தில் நிறுத்திப் பார்த்தா லிறைவனாவீரோ
காலை மேலே யேற்றிப் பார்த்தால் கடவுளைக்காண்பீரோ 1

மலைமே லேறி மவுனஞ் செய்தால் மகாதேவனைக் காண்பீரோ
சிலைபோ லிருந்து சிந்தித்துப் பார்த்தால் தேவனைக் காண்பீரோ 2

கலைகள் பலவுங் கற்றுவிட்டால் கங்கா தரனைக்காண்பீரோ
விலைக்குப் புத்தகம் வேண்டிப் படித்தால் விமலனைக் காண்பீரோ 3

பாலைக் குடித்துப் பட்டினி கிடந்தால் பரமனைக் காண்பீரோ
வேலைசெய் யாமல் வீதியில் திரிந்தால் வேந்தனைக் காண்பீரோ 4

மூலையி லிருந்து முணுமுணுத்தால் முதல்வனைக் காண்பீரோ
சாலப் பசிக்கொரு போது புசித்தால் சாமியாவீரோ 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் அருளால் ஆசான் ஆயினேன்

சிவதொண்டு செய்வார் தீநெறிச் செல்லார்
சிவதொண்டு செய்வார் புலனைந்தும் வெல்வார்
சிவதொண்டு செய்வார் பிறன்பொருள் வெஃகார்
சிவதொண்டு செய்வார் சிவமே யாவர் 1

ஆதியு மந்தமும் அரனார்க் கில்லை
ஆதியு மந்தமும் ஆன்மாவுக் கில்லை
சாதி சமயமுஞ் சற்குரவர்க் கில்லை
ஓதி யுணர்ந்தா னுரைத்தான் நல்லூரில் 2

அருளா லறிந்தேன் ஐம்பூதத் தியக்கம்
அருளா லறிந்தேன் ஐம்பொறி மயக்கம்
அருளா லறிந்தேன் ஐம்புலன் தயக்கம்
அருளா லறிந்தேன் ஆன்ம வியப்பே 3

சிவமே தாமெனச் சிந்திப்பார் பெரியோர்
சிவமே வேறாகச் சிந்திப்பர் சிறியோர்
தவநெறி நிற்பின் தன்னை யறியலாம்
அவநெறி நிற்பின் பின்ன முறலாம் 4

ஆசா னருளால் அகந்தை யழிந்தது
ஆசா னருளால் அருண்மழை பொழிந்தது
ஆசா னருளால் ஆனந்தம் விளைந்தது
ஆசா னருளால் ஆசா னாயினேன் 5

சிவத்தை மறைத்தது தீநெறிச் சேறல்
சிவத்துள் மறைந்தது தீநெறிச் சேறல்
அவத்தை யைந்தும் அருளை மறைத்தன
அவத்தை யைந்தும் அருளால் மறைந்தன 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவனே தெய்வமென்னும் உண்மையைக் கண்டோம்

ஒருவனே தெய்வமென்னும் உண்மையைக் கண்டோம்-இந்த
உலகமெல்லாம் நமக்குற வாகவே கொண்டோம்
தரும நெறிசற்றும் பிசக மாட்டோம்
தாய்தந்தை சொல்லையினித் தட்ட மாட்டோம்
வருவதையும் போவதையும் எண்ண மாட்டோம்
வாணாளில் ஆசையைப் பேண மாட்டோம்
சாந்தம் பொறுமை யென்னும் பணியணிவோம்
சற்குரு பாதத்தை இனிம றவோம்
வேந்தர் விதியையொரு காலத்துந் தட்டோம்
வீணிலே காலத்தைக் கழிக்க மாட்டோம்
அச்சமொடு கோபத்தை யகற்றி விட்டோம்
ஆருக்கு மினிநாம் ஆட்பட மாட்டோம்
பொய்ச்சமய நெறிசொல்லும் போதனை கேளோம்
எச்சமயத் தோரையும் ஏளனஞ் செய்யோம்
பஞ்சப் புலன்வழியிற் செல்ல மாட்டோம்
பழியோடு பாவத்தைக் கொள்ள மாட்டோம்
மந்திரங் கற்போம்வினைத் தந்திரங் கற்போம்
மனத்தைக் கொல்வோம் பொல்லாச் சினத்தை வெல்வோம்
உழுதுண்ணு வோமினிப் பழுதெண் ணிடோம்
ஊரெங்குஞ் செல்லுவோம் நல்ல வேதங்கள் சொல்லுவோம்
வான மளப்போம் இந்த மண்ணையளப்போம்
சிவஞான முவப்போந் திரிகால முணர்வோம்
தானங் கொடுப்போம் பொல்லா ஈனம் விடுப்போம்
சகல சமயத்துக்குஞ் சம்மதங் கொடுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊக்க முள்ளவர் ஏக்க முற்றிடார்

அந்தியுஞ் சந்தியும் ஆசான் திருவடி
சிந்தை செய்பவர் சீவன் முத்தரே 1

ஆன்மா நித்தியம் என்று அறிந்தவர்
அங்கு மிங்கு மாய லைந்திடார் 2

இல்லை யுண்டென எடுத்துச் சொல்லொணா
இறைவ னிதயத்தில் என்று முள்ளவன் 3

ஈசன் திருவடி யென்றும் ஏத்துவார்
இறந்து பிறந்திடார் இவர்கள் முத்தரே 4

உலகமே கோயிலாய் உணர்ந்து கொண்டவர்
உண்மை முழுவதும் என்று காண்பரே 5

ஊக்க முள்ளவர் ஏக்க முற்றிடார்
உதய பானுபோல் உலகில் வாழ்வரே 6

எல்லாஞ் சிவமயம் என்று கண்டவர்
எங்கு இருப்பிலென் என்ன செய்யிலென் 7

ஏக மாகிய இறைவன் பாதத்தை
எண்ணு வார்தினம் நண்ணு வாரவர் 8

ஐயப் பாடின்றி யகத்தது உணர்பவர்
ஆப்தர் வாக்கியம் என்று கூறுவார் 9

ஒருபொல் லாப்பு மில்லை யென்றவர்
உயர்ந்த நல்லூர் இருந்த மாதவர் 10

---

## வேறு

அடியா ருள்ளக் கமலத்தே யணையா தெரியும்
மணிவிளக்கே
முடியா முதலே முக்கண்ணா மூவர் போற்றும் முழுமுதலே
முடியாப் பிறவிக் கடலிடத்தே மூழ்கா தென்னை
யாண்டுகொள்வாய்
அடியே னுன்றன் குடியன்றோ அரசே யுனக்கே
யடைக்கலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு ~ I

*உயிர் வருக்கக் கோவை*

அரியும் பிரமாவும் அடிமுடியுந் தேடித்
தெரிவரி தாய்நின்ற தெய்வமே கண்வளராய் 1

ஆராயும் வேதமுதல் ஆகமங்கள் தாமறியாப்
பேரா யிரமுடைய பெம்மானே கண்வளராய் 2

இரவும் பகலுமுன்னை ஏத்தித்துதிப் போர்க்குவரந்
தரவல்ல தெய்வமே சங்கரனே கண்வளராய் 3

ஈசனே எவ்வுயிர்க்கு முயிராய் விளங்குகின்ற
தேசனே செல்வக் கொழுந்தேநீ கண்வளராய் 4

உன்னையல்லால் வேறுதெய்வ முள்ளத்திற் கொள்ளாத
பொன்னப் பனைக்காக்கும் பூரணனே கண்வளராய் 5

ஊரும் பேருமில்லா வுத்தமனே சிவனடியார்
சாருந் தவக்கொழுந்தே சம்புவே கண்வளராய் 6

எல்லைசொல்ல வல்லார் எவருமில்லா மெய்ப்பொருளே
அல்லலெல்லாம் நீக்கும் அரனேநீ கண்வளராய் 7

ஏழைக்காய் வந்திரங்கி எழில்வைகை யாறடைத்த
தாளைமற வாமலருள் தந்தவனே கண்வளராய் 8

ஐயனே யாரூரில் ஆரூரன் தனையாண்ட
தெய்வமே சிந்தா மணியேநீ கண்வளராய் 9

ஒன்பதுவாய்த் தோற்பைக்கு ளுயிரடங்கி நிற்கும்வண்ணம்
அன்புசெய்த வண்ணலே ஆருயிரே கண்வளராய் 10

ஓம்சிவாய நமவென்று ஓதுகின்ற அன்பருக்கு
ஆம்என் றுறுதிதந்த அத்தனே கண்வளராய் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவியம் பேசா அறிவுதந்த ஆண்டவனே
நவ்வி மழுவேந்தும் நாயகமே கண்வளராய் 12

அஃகுத லில்லா அறிவுடைய அன்பரகம்
வெஃகுத லில்லா விமலனே கண்வளராய் 13

பதின்மூன்று பாடல்களும் படிப்போருங் கேட்போரும்
கதியுண்மை யுடன்வாழ வுறுதிசெய்வோய் கண்வளராய் 14

---

## தாலாட்டு – 2

சீரா ரிலங்கைநகர் சிறக்கவந்த செல்வமே
பேரார் பிறைசூடும் பெருமானே கண்வளராய் 1

ஆராயும் வேதம் அறியாத மெய்ப்பொருளே
பேராயி ரம்படைத்த பெம்மானே கண்வளராய் 2

ஆறாத காதல்சேர் அடியார் அகத்தூறும்
மாறாத வின்பமே மகாதேவனே கண்வளராய் 3

நீறார் திருமேனி நிமலா வுனையல்லால்
வேறார் துணைசொல் விமலனே கண்வளராய் 4

என்னா ருயிரே எனக்கினிய மெய்ப்பொருளே
பின்னார் துணையாவார் பெருமானே கண்வளராய் 5

ஆக்கைநிலை யாதெனவே யறிந்து பிரிந்திருந்த
நீக்கமற்ற அன்பர் நிறைவேநீ கண்வளராய் 6

எங்கெங்கே பார்த்தாலும் எல்லாம்நீ யென்றுகண்ட
துங்க வடியார்தந் துணைவனே கண்வளராய் 7

சித்தத்தி லூறுந் தெவிட்டாத தெள்ளமுதே
அத்தனே யாருயிரே ஆண்டவனே கண்வளராய் 8

மத்தம் மதிசூடி மழவிடையின் மீதேறி
எத்திசையுஞ் செல்லும் இறைவனே கண்வளராய் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கருத்தேயென் கண்ணுக் கினியவனே
நிருத்தமிடுஞ் சோதியே நின்மலனே கண்வளராய் 10

வருத்தமற்ற மெய்யடியார் மனத்திற் குடியிருக்கும்
ஒருத்தனே யுன்னையன்றி உண்டோநீ கண்வளராய் 11

காமக் கடல்கடந்து காட்சிபெற்ற நல்லடியார்
சேம நிதியே சிவனேநீ கண்வளராய் 12

அன்பிற் குழைந்து குழைந்தையா வெனவரற்றும்
அன்பர்க் குகந்த அரசேநீ கண்வளராய் 13

மண்ணாதி பூதமெல்லாம் வகித்த வுனையன்றி
எண்ணவே றுண்டோ இறைவனே கண்வளராய் 14

ஆதார மாறு மகன்ற பழம்பொருளே
பேறான செல்வப் பிரானேநீ கண்வளராய் 15

எட்டுத் திசையுமற் றெவ்விடத்தும் நின்னையன்றிச்
சுட்டவே றுண்டோ சுவாமிநீ கண்வளராய் 16

அந்திசந்தி யுன்னடியை வந்திக்கும் மெய்யடியார்
சிந்தனையி லூற்றே செழுஞ்சுடர்நீ கண்வளராய் 17

குற்றமெல்லாம் போக்கிக் குணமாக்கி யெனையாண்ட
தற்பரனே யென்குருவே சாமிநீ கண்வளராய் 18

ஆறாக் கவலையெல்லாம் நீறாக்கி யடிமையெனைப்
பேறாக்கி வைப்பாய் பிரானேநீ கண்வளராய் 19

---

## வேறு

உள்ளத் தினுள்ளே யொளிருஞ் சிவக்கொழுந்தைக்
கள்ள மனத்தவருங் காண்பரோ பராபரமே

எல்லாஞ் சிவன்செயலென் றெண்ணாத மாந்தருக்கு
உல்லாச மானகுணம் வருமோ பராபரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவியம் பேசா அறிவுதந்த ஆண்டவனே
நவ்வி மழுவேந்தும் நாயகமே கண்வளராய் 12

அஃகுத லில்லா அறிவுடைய அன்பரகம்
வெஃகுத லில்லா விமலனே கண்வளராய் 13

பதின்மூன்று பாடல்களும் படிப்போருங் கேட்போரும்
கதியுண்மை யுடன்வாழ வுறுதிசெய்வோய் கண்வளராய் 14

## தாலாட்டு ~ 2

சீரா ரிலங்கைநகர் சிறக்கவந்த செல்வமே
பேரார் பிறைசூடும் பெருமானே கண்வளராய் 1

ஆராயும் வேதம் அறியாத மெய்ப்பொருளே
பேராயி ரம்படைத்த பெம்மானே கண்வளராய் 2

ஆறாத காதல்சேர் அடியார் அகத்தூறும்
மாறாத வின்பமே மகாதேவனே கண்வளராய் 3

நீறார் திருமேனி நிமலா வுனையல்லால்
வேறார் துணைசொல் விமலனே கண்வளராய் 4

என்னா ருயிரே எனக்கினிய மெய்ப்பொருளே
பின்னார் துணையாவார் பெருமானே கண்வளராய் 5

ஆக்கைநிலை யாதெனவே யறிந்து பிரிந்திருந்த
நீக்கமற்ற அன்பர் நிறைவேநீ கண்வளராய் 6

எங்கெங்கே பார்த்தாலும் எல்லாம்நீ யென்றுகண்ட
துங்க வடியார்தந் துணைவனே கண்வளராய் 7

சித்தத்தி லூறுந் தெவிட்டாத தெள்ளமுதே
அத்தனே யாருயிரே ஆண்டவனே கண்வளராய் 8

மத்தம் மதிசூடி மழவிடையின் மீதேறி
எத்திசையுஞ் செல்லும் இறைவனே கண்வளராய் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கருத்தேயென் கண்ணுக் கினியவனே
நிருத்தமிடுஞ் சோதியே நின்மலனே கண்வளராய் 10

வருத்தமற்ற மெய்யடியார் மனத்திற் குடியிருக்கும்
ஒருத்தனே யுன்னையன்றி உண்டோநீ கண்வளராய் 11

காமக் கடல்கடந்து காட்சிபெற்ற நல்லடியார்
சேம நிதியே சிவனேநீ கண்வளராய் 12

அன்பிற் குழைந்து குழைந்தையா வெனவரற்றும்
அன்பர்க் குகந்த அரசேநீ கண்வளராய் 13

மண்ணாதி பூதமெல்லாம் வகித்த வுனையன்றி
எண்ணவே றுண்டோ இறைவனே கண்வளராய் 14

ஆதார மாறு மகன்ற பழம்பொருளே
பேறான செல்வப் பிரானேநீ கண்வளராய் 15

எட்டுத் திசையுமற் றெவ்விடத்தும் நின்னையன்றிச்
சுட்டவே றுண்டோ சுவாமிநீ கண்வளராய் 16

அந்திசந்தி யுன்னடியை வந்திக்கும் மெய்யடியார்
சிந்தனையி லூற்றே செழுஞ்சுடர்நீ கண்வளராய் 17

குற்றமெல்லாம் போக்கிக் குணமாக்கி யெனையாண்ட
தற்பரனே யென்குருவே சாமிநீ கண்வளராய் 18

ஆறாக் கவலையெல்லாம் நீறாக்கி யடிமையெனைப்
பேறாக்கி வைப்பாய் பிரானேநீ கண்வளராய் 19

## வேறு

உள்ளத் தினுள்ளே யொளிருஞ் சிவக்கொழுந்தைக்
கள்ள மனத்தவருங் காண்பரோ பராபரமே

எல்லாஞ் சிவன்செயலென் றெண்ணாத மாந்தருக்கு
உல்லாச மானகுணம் வருமோ பராபரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை முழுது மறிந்திடடா

ஒருபொல் லாப்பு மில்லையெடா தம்பி
உண்மை முழுது மறிந்திடடா
வருவது வந்து போகட்டுஞ் சாட்சியாய்
வையகத்தில்நீ வாழுவாய் மாட்சியாய் 1

சர்வம் பிரம மயமெடா தம்பி
சந்தேக மில்லை நம்புநீதம்பி
மர்ம மிதுபெரும் மர்மமெடா
மகத்துக்கள் கண்ட மர்மமெடா 2

அப்படியே யுள்ள பொருளெடா தம்பி
ஆசையை நீக்கி யறிவாய்நீ நம்பி
ஒப்புவமையு மில்லாப் பொருளெடா
உள்ளும் புறம்பு முள்ளதெடா 3

எல்லாச் சமயமுஞ் சொல்லுமெடா தம்பி
ஏத்தி ஏத்தி வணங்கிடெடா
உல்லாச மாகத் திரிந்திடடா தம்பி
ஓம்சிவாய நமவென் றோதெடா 4

குணங்க டந்தது குணத்தில் கிடந்தது
கும்பிட்டுக் கொண்டாடிப் போற்றிடெடா
கணப்பொ ழுதும்மற வாதே தம்பி
காமக் குரோதத்தை நீக்கிடெடா 5

கூறும் நாமுதல் எல்லா மதுவெடா
கூர்ந்து பார்த்துக் கும்பிடெடா
ஆறுமுகமும் ஐந்து முகமும்
ஐம்பெரும் பூதமும் அதன்வடிவே 6

நல்லூரில் வாசன் செல்லப்பன் சொல்லை
எல்லோருங் கேட்டு மகிழ்ந்திடுவீர்
பொல்லாப்பு மிங்கில்லைப் புதுமையு மிங்கில்லைப்
பூரண சுதந்திரம் எம்மிடமே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடி துணை

கண்ணபிரானுங் காணாக் கழலிணை என்றும் எம்துணை ஓம்
விண்ணும் மண்ணும் ஒன்றாய்நின்ற மெய்யடி எம்துணை ஓம்
எண்ணு மெண்ண மெல்லா மறியு மிணையடி எம்துணை ஓம்
நண்ணு மடியார் நாவில் நிற்கும் நல்லடி எம்துணை ஓம் 1

பண்டுமின்றும் என்றுமுள்ள பரனடி எம்துணை ஓம்
மண்டுபேயோ டாடும்மலரடி என்றும் எம்துணை ஓம்
நன்றுந்தீதுந் தானா காத நல்லடி எம்துணை ஓம்
மன்றுளாடும் மலரடி யிணைகள் என்றும் எம்துணை ஓம் 2

அந்த மாதி யில்லா வடியிணை என்றும் எம்துணை ஓம்
வந்த கால னுயிரை வாங்கிய மலரடி எம்துணை ஓம்
பந்த பாசம் நீக்கி யாண்ட பரனடி எம்துணை ஓம்
தந்தை தாயாய் நின்ற தாளிணை என்றும் எம்துணை ஓம் 3

நினைக்கு மடியரை உருக்கு மடியிணை என்றும் எம்துணை ஓம்
சினத்த காலனைச் செறுக்கு மடியிணை என்றும் எம்துணை ஓம்
தனத்த தனதன தாண்டவத் தாளிணை என்றும் எம்துணை ஓம்
அனைத்துந் தானா யாடிய அடியிணை என்றும் எம்துணை ஓம் 4

---

# சிவனடி துணை

ஓம் சிவசிவ சிவனடி துணைஓம்
ஓம் சிவசிவ கணபதி துணைஓம்
ஓம் சிவசிவ சிவகுரு துணைஓம்
ஓம் சிவசிவ அடியார் துணைஓம் 1

அரகர சிவசிவ ஆடும் அடிதுணைஓம்
சுரர்நரர் துதிசெய் தூய அடிதுணைஓம்
பரவும் அடியார் பாடும் அடிதுணைஓம்
கரவுடை நெஞ்சினர் காணாக் கழல்துணைஓம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பலத் தாடுஞ் சேவடி துணைஓம்
எல்லையில் லாவருள் அருளிய அடிதுணைஓம்
வல்லை வந்தெனை ஆண்டவன் அடிதுணைஓம்
கல்லை நேர்மனங் கரைத்தவ னடிதுணைஓம் 3

அம்மை யப்பன் அழகிய அடிதுணைஓம்
இம்மைநற் பயன்தரு மீச னடிதுணைஓம்
செம்மை சேர்சிவன் திருவடி துணைஓம்
எம்மை யாண்ட எங்கோன் அடிதுணைஓம் 4

தேசம் புகழுஞ் சிவன்திரு வடிதுணைஓம்
வாசம் மருவும் மலரடி எம்துணைஓம்
பாசம் அகலும் பரன்திரு வடிதுணைஓம்
ஈச னெந்தை எம்பிரா னடிதுணைஓம் 5

---

# ஓம் நமோ நாராயணா

இராகம் — மத்தியமாவதி தாளம் — ஆதி

**பல்லவி**

ஓம்நமோ நாராயணா
உத்த மனே ஸ்ரீராமா

**அநுபல்லவி**

நாம் வேறோ நீ வேறோ
நல்ல வாக்குத் தாராயோ (ஓம்)

**சரணங்கள்**

ஏங்குவதே நாமையா எழில்சேரும் ராமையா
தாங்குவா யினிராமச் சந்திரனே தருணமிது (ஓம்)

அசோதைகுல பாலனே யசுரர்குல காலனே
தசாவ தாரனே தமியேனுக் காதரவே (ஓம்)

எந்தவே ளையுமுன்னை ஏத்திநீநா னேயென்று
சிந்திக்கவரந் தாராய் சீமானே ஸ்ரீராமா (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

அன்னை பிதாக்குரு தெய்வந்
தன்னை அறிந் தேனடி – தங்கமே
சற்குருவி னருளாலே
தானதாம் தானதாம்
தனதாம் தனதாம் 1

ஆரறி வாரென்று சொல்லும்
பேரறிவைக் கண்டேனடி – தங்கமே
பேசாதேவாய் நேசமாய்நில்
ஆசாபாச மனைத்தையும்வெல் 2

இம்மையிலும் மறுமையிலும்
எம்மைவிட்டு நீங்கானடி – தங்கமே
இறப்புப் பிறப்பில்லையடி
ஏத்தியேத்தித் தோத்திரஞ்செய்
சூத்திரத்தைக் கண்டுதொழு 3

ஈயாத புல்லரைநீ
வாயாரப் பாடாதே – தங்கமே
வாணாளைநீ பேணாதே
நாணாதேமனங் கோணாதே
காணாதே பணம் பேணாதே 4

உண்மை முழுதுமென்ற
கண்ணைத் திறந்துவிடு – தங்கமே
காட்சியைவிடு சூட்சியைத்தொடு
சாட்சியையடு மாட்சிமைப்படு 5

ஊனாயுயிராய்க் கலந்த
கோனாரைநீ கொண்டாடு – தங்கமே
கூவிக்கூவி யழைத்திடுவாய்
கும்பிட்டுக்கொள் நம்பிக்கைவை
கூடாதகூட்டங் கூடாதே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுவார் நெஞ்சிலீசன்
நண்ணுவான் நீயறிந்துகொள் – தங்கமே
நானுமில்லை நீயுமில்லை
நாடிக்கொள் தேடிக்கொள்
கூடிக்கூடிப் பாடிக்கொள் 7

ஏகன நேகனென்று
மோகமறச் சொன்னசொல்லைத் – தங்கமே
மொழியாமல் மொழிந்துகொள்
மூட்டிக்கொள் அங்கி
கூட்டிக்கொள் அருள் 8

ஐம்பூதம் நீயல்லை
ஐம்பொறிநீ யல்லையடி – தங்கமே
அந்திசந்தி கும்பிடடி
ஆதாரமவன் ஆதேயமவன்
நிராதாரமாய் ஆராதனைசெய் 9

ஒன்றிரண்டென் றெண்ணாதே
நன்றுதீதென்று நாடாதே – தங்கமே
நாதாந்தமென்று நாடிடடி
நந்தாவிளக்கது சிந்தாமணி
நொந்தாரைவந்து ஆதரிக்கும் 10

ஓவியம்போ லிருந்திடடி
பாவியென்றநாமம் படையாதே – தங்கமே
சேவித்துச்சீவன் முத்தியடைந்திடு
சிந்தித்திடுதினம் வந்தித்திடு
பந்தபாசம் வெந்துவிடும் 11

ஔவியநெஞ்சம் படையாதே
திவ்வியமாக வாழ்ந்திடடி – தங்கமே
அக்குமாலை யணிந்திடடி
அஞ்சாதேசென்று கெஞ்சாதே
அஞ்செழுத்தைநெஞ்சிற் கொஞ்சிடடி 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன்

நில்லாத நீர்சடைமேல் வைத்த நிமலனை
நினைக்கு மடியவர் மனங்கோயில் கொண்டானை 1

எல்லாமு மல்லவு மாயிருப் பானை
என்னா ரமுதினை எளிவந்த பிரானை 2

கொல்லானை யின்னுரி போர்த்துகந் தானைக்
கூடலிற் பரியெல்லாம் நரியாக்கி னானை 3

செல்லார் வரைகளும் அருவியும் பொழில்களும்
தேங்கும் இலங்கை மாநக ரானை 4

எண்வகை யொருவனை யேந்திழை பாகனை
மண்முதற் பூதங்கள் வகுத்த பிரானை 5

கண்ணுக் குக்கண் ணாய கடவுளை
மன்னு மிலங்கை மாநகர் கண்டேன் 6

தித்திக்கு மமுதினைத் தெளிந்த தேறலை
எத்திக்கு மாகிய என்னா ருயிரினை 7

பத்திக்கு மடியவர் பாட்டிற் குகந்தானை
முத்துக்கள் சேர்முது இலங்கையிற் கண்டேன் 8

சாந்தம் பொறுமையன்பு தாங்கொண்ட வடியார்
மாய்ந்துபோ காவண்ண மருள்தரும் ஒருவனை 9

காந்தள் முல்லை கானார் மல்லிகை
ஏந்திருக்கும் நல்ல இலங்கையிற் கண்டேன் 10

பொன்னார் மேனி புரிசடை யண்ணலைப்
பூதங்க ளைந்தும் பொருந்திநிற் பானை 11

தென்னா தென்னா வெனவண்டு பாடும்
சீரார் இலங்கை மாநகர் கண்டேன் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும்

நாங்கள் சிவமென் றெண்ண வேண்டும்
தூங்காமல் தூங்கிச் சுகிக்க வேண்டும்
ஆங்காரந் தன்னை யகற்ற வேண்டும்
நீங்காத நிட்டையில் நிலைக்க வேண்டும்
மாங்காய்ப்பா லுண்டு மகிழ வேண்டும்
தேங்காமல் தேங்கி யிருத்தல் வேண்டும்
ஏங்காமல் வையத்தி லிருக்க வேண்டும்
உல்லாச மாக வுலாவல் வேண்டும்
எல்லா ரிடத்தும் அன்பு வேண்டும்
மேலோரைக் கண்டால் வணங்க வேண்டும்
பொல்லாப் பில்லையெனச் சொல்ல வேண்டும்
வல்லமை பேசி மகிழ வேண்டும்
அல்லாகூ என்று அரற்ற வேண்டும்
சில்லாலைப் பாட்டுப் பாட வேண்டும்
தில்லாலைக் கள்ளுக் குடிக்க வேண்டும்
கல்லானை கன்னல் உண்ணல் வேண்டும்
மல்லாகத் தானை மதிக்க வேண்டும்
தன்னைத் தன்னா லறிய வேண்டும்
முன்னை வினையைக் களைய வேண்டும்
சென்னைப் பட்டினஞ் செல்ல வேண்டும்
அன்னை போல அன்பு வேண்டும்
பொன்னை மாதரைப் போக்க வேண்டும்
பின்னைப் பிறவியை நீக்க வேண்டும்

# வேண்டாம்

சாங்காலம் வந்தால் திகைக்க வேண்டாம்
வாங்காமல் வாசியில் தூங்க வேண்டாம்
பாங்காக வாழ விரும்ப வேண்டாம்
வேங்கைப் புலிவந்தா லோட வேண்டாம்
ஆங்கென்றும் ஈங்கென்றும் அலைய வேண்டாம்
போங்காலம் வந்தால் புலம்ப வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் கூசான் பேசான்

ஒருபொல்லாப்பு மில்லையென்பான் ஆசான் – அவன்
உன்மத்தன் போற்றிரிவான் கூசான் 1

வருவாரைப் போவாரை ஆசான் – வாயில்
வையாமல் வைதுவிடக் கூசான் 2

உண்மை முழுதுமென்பான் ஆசான் – அவன்
உறங்காம லுறங்குவான் பேசான் 3

நன்மைதீமை யறியாதான் ஆசான் – அவன்
நாமறியோம் என்றுசொல்லக் கூசான் 4

அப்படியே யுள்ளதென்பான் ஆசான் – சொல்லி
ஆரறிவா ரென்றுநகை செய்வான் 5

முப்போதுந் தேரடியி லிருப்பான் – ஆசான்
முகமலர்ந்து தன்னிலே சிரிப்பான் 6

விற்றூணொன் றறியாதான் ஆசான் – என்றும்
விசரனைப் போற்றிரிவான் கூசான் 7

கற்றோரும் அறியாத சீரான் – அவனைக்
கைதொழுது நின்றாலும் பாரான் 8

இன்னானிவ னென்றெவரு மறியார் – இவனை
ஏற்றித் தொழுதவரைக் குறியான் 9

பன்னாட் பழக்கத்தினாற் சிலபேர் – இவனைப்
பாரிற் குருவாகக் கொண்டார் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா நித்திய மாமடி

அக்கக் காவடி அம்மம்மாவடி
ஆன்மாநித்திய மாமடி 1

முக்குறுணிப்பிள்ளையாரை வேண்டி
மூலமந்திரஞ் செபியடி 2

பக்குவமாய்ப் பேணடி
பத்தரினத்தொடு கூடடி 3

அக்குமணிதனைக் கட்டடி
ஆசைமூன்றும் நீக்கடி 4

திக்குத்திகாந்தமுங் கைவசமாச்சடி
சீவன்சிவனென்று சிந்தித்துக்கொள்ளடி 5

முக்குணமாயைக் கப்பாலேசெல்லடி
முன்னும்பின்னும் பாராதேயடி 6

பக்குவகால மித்தருணமடி
பாராதிபூத மெல்லாநீயடி 7

விக்கினமொன்றும் இல்லையடி
விண்போலிலங்கி நின்றிடடி 8

துக்கஞ்சுகம் இல்லையடி
சும்மாவிருந்து பாரடி 9

தர்க்கஞ்செய்யப் போகாதேயடி
தானேதானா யிருந்திடடி 10

செக்கச்சிவந்த கழற்பாதம்
சிரசிற்சுமந் தேத்திடடி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவை வாக்கி னருமை காண்க

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தன்னையும் பிறரையுந் தானே காண்க 1

ஆலயந் தொழுவது சாலவும் நன்று
சீலமு டைமையைச் சிந்தையிற் காண்க 2

இல்லற மல்லது நல்லற மன்றெனுஞ்
செல்வ வாக்குத் திசைதொறுங் காண்க 3

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
ஓயாது பேசி யுவந்து காண்க 4

உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகெனும்
ஒண்டொடி ஔவை தன்னுரை காண்க 5

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடுமெனுஞ்
சீருடை நன்மொழி சிறப்பே காண்க 6

எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகுமெனும்
வண்ணச் செய்யுளின் வளத்தினைக் காண்க 7

ஏவா மக்கள் மூவா மருந்தெனுந்
தேவா மிர்தஞ் சிந்தையிற் காண்க 8

ஐயம் புகினுஞ் செய்வன செய்யெனும்
பொய்யில் வாசகம் புந்தியிற் காண்க 9

ஒருவனைப் பற்றி யோரகத் திருவெனுந்
திருமொழி தன்னைத் தேடிக் காண்க 10

ஓதாதார்க் கில்லை யுணர்வோ டொழுக்கம்
வேதா கமத்தின் விதியினைக் காண்க 11

ஔவியம் பேசல் ஆக்கத்திற் கழிவெனுந்
திவ்விய வாக்கைத் தினமுமே காண்க 12

அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடெனும்
அஃகுத லில்லா வரும்பொருள் காண்க 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூறுவார் கோடிபாவம் நீறுமே

*வஞ்சி விருத்தம்*

கூறுவார் கோடி பாவம்
நீறுமே நெஞ்சி லெண்ண
ஆறுவா ரகத்தி லீசன்
சேருமே சிந்திப் பாயே 1

சிந்தித்துத் தெளிந்தார் தம்மைப்
பந்திக்க மாட்டா பாவம்
பொறிவழி போகார் நல்லோர்
அறிவினா ரறிவார் திண்ணம் 2

இருவினை சேரா தீசன்
திருவடி சேர்வார் தம்மை
குருவருள் கொண்டார் தம்மைத்
திருவருள் சேரும் மெய்யே 3

இருவருங் காணா வீசன்
அருவமு முருவு மாவான்
இணங்கியே யேத்து வாரை
வணங்குமே மண்ணும் விண்ணும் 4

---

## வேண்டும்

நமச்சிவாய வாழ்கவென நயந்து பாடவேண்டும் –
நயந்து பாடவேண்டும்
நமனுக்கிட மில்லையென வியந்து கூறவேண்டும்
இமைப்பொழுதும் மறவாமல் ஏத்தி விடவேண்டும்
– ஏத்தி விடவேண்டும்
எமக்குக்குறை வில்லையென வாழ்த்தி விடவேண்டும் 1

சமயநெறி கடவாமல் தான்வாழ வேண்டும்
– தான்வாழ வேண்டும்
தன்னைப்போற் பிறரையெல்லாம் நேசித்திட வேண்டும்
உமையம்மை திருவடியைக் கும்பிட்டிடவேண்டும்
– கும்பிட்டிட வேண்டும்
உடன்பிறந்தா ரோடுறவு கொண்டாட வேண்டும் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதுபட்டேற்றம்

கண்டவரும் விண்டதில்லை
விண்டவருங் கண்டதில்லைத் – தங்கம்
வேறுபொரு ளில்லையெடி 1

பண்டயனும் மாலுந்தேடிப்
பார்க்கொணாது நின்றாரெடி – தங்கம்
என்றுமே யுள்ளதெடி 2

பட்டதுபட் டேற்றுமென்று
பட்டினத்தார் சொன்னாரெடி – தங்கம்
இருந்தபடி யிருக்குதெடி 3

பொறியஞ்சும் வென்றவர்தம்
பூஷணமா யுள்ளதெடி – தங்கம்
நெறியா யிருந்திடெடி 4

சித்தத்திலே தித்திக்குந்
தேனைநீ யுண்டிடெடி – தங்கம்
தீராநோய் தீருமெடி 5

அட்டாங்க யோகத்திற்கும்
அப்பாலே யுள்ளதெடி – தங்கம்
ஆரறிவா ரென்றாரெடி 6

கட்டுப்ப டாமனத்தைக்
கட்டிவிட்டால் பூமியிலே – தங்கம்
தட்டுப்பா டில்லையெடி 7

வலமிடமா யோடுகின்ற
வாசியின் நிலையறிந்தால் – தங்கம்
வாழ்வுனக் குண்டாமெடி 8

தச்சன்கட்டா வீட்டிலே
தாவுபரி கட்டிவிட்டால் – தங்கம்
அச்சமினி யில்லையெடி 9

பிறப்பிறப் பில்லாத
பெருமான் திருவடியைத் – தங்கம்
மறக்க முடியுமோடி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்தை நெஞ்சகத்தில்
துஞ்சாமல் சொல்லுமவர் — தங்கம்
துரியத்தில் வாழ்வாரெடி 11

இன்சொல் விளைநிலனாய்
ஈதலே வித்தானால் — தங்கம்
இன்பம் பெருகுமெடி 12

துட்டச் சமணர்கள்தம்
துடுக்கை யடக்கினவன் — தங்கம்
மட்டில்லாத் தெய்வமடி 13

நன்மையுந் தீமையும்
நாமல்ல வென்றுகண்டால் — தங்கம்
மயக்க மொழியுமெடி 14

சுருதியோ டாகமங்கள்
சொல்லமுடி யாதபொருள் — தங்கம்
கருத்தி லிருத்திடெடி 15

விருத்தனாய்ப் பாலனாகி
வேடிக்கை செய்தவனைத் — தங்கம்
வேண்டிப் பணிந்திடெடி 16

---

## அறிவை அறிவாலே அறி

இராகம் — பைரவி தாளம் — ஆதி

**பல்லவி**

பொறிவழிப் புகுத்துதே பொல்லாத மனமையோ
போக்கு வரவில்லாப் புண்ணியனே கண்பாராய்

**அநுபல்லவி**

அறிவை யறிவாலே அறியெனப் பெரியோர்தாம்
அன்றுசொன் னாரதை ஐயை யோமறந்து (பொறி)

**சரணம்**

கிறியும்கீழ் மையுஞ்செய்து கீழும்மே லுஞ்சென்று
நெறிவழிச் செல்லாமல் நெஞ்சு கலங்குதே
நீயேநா னெனவெண்ணி நேசிக்க எனக்குன்றன்
நிசசொ ரூபங்காட்டி நேரில்முன் வாராயோ (பொறி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருமணி

புலனைவென்ற பெரியோர்க ளுளம்பூத்த மணி
பொள்ளாமணி யென்றும் புதுமணி
இலமென்று வந்தடைந்தா ரிடும்பை கெடுக்கும்மணி
எவராலும் விலைமதிக்க வொண்ணா மணி
பலநிறமாய்ப் பாரினிடைத் தோற்றும் மணி
பச்சைமால் மெச்சிப் பணியும் மணி
இலங்கையிலே யெங்கு மிருக்கும் மணி
என்னைப் பணிகொண்ட குருமா மணி 1

கசிந்துருகிப் பாடுவார் காணும் மணி
கண்முன் றுடைய கதிர்மா மணி
வலிந்தென்னைப் பணிகொண்ட வண்ண மணி
மலரோனும் மாலவனுங் காணா மணி
இந்தோடு கங்கைசென்னி யேந்தும் மணி
இளநாகம் மேனியிலே சாத்தும் மணி
அந்தமணி இலங்கையிலே வாழும் மணி
ஆரேனும் தேடுவார்க் ககப்படுந் தெய்வமணி 2

பந்தமெனும் பாழிருளைக் கிழிக்கும் மணி
பரவுவார்க் கிலவசமாய்க் கிடைக்கும் மணி
அந்தமுட னாதியில்லா அரும்பொன் மணி
அதிசயங்க ளநேகமெல்லாங் காட்டும் மணி
முந்திய மணிக்கெல்லாம் முதலான மணி
மூவர்களுந் தேவர்களும் பணியும் மணி
இந்தவளஞ் சேரிலங்கை வந்த மணி
எனையாண்ட குருமணியென் சொந்த மணியே 3

---

## ஓம் சிவாயநம

ஓம் சிவாயநம என்று சொல்லு
உண்மை முழுது மென்று வெல்லு
நாம் நாம் நாம் என்று நில்லு
நரக மோட்சம் நாடாமல் தள்ளு
போம் போம் வினையென்று கொள்ளு
பூரண நிட்டையிலே நில்லு
வீம்பிடும்பை யகங்காரம் கல்லு
விண்ணும் மண்ணும் கைவசமாய்த் துள்ளு 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்குருவின் பாதத்தைப் போற்று
தன்னைத் தன்னால் அறிந்து தேற்று
நிர்க்குண நிட்டையிலே யேற்று
நீநான் என்பதை மாற்று
மல்லாகத்தில் சுன்னாகத்தான் வீற்று
மாசற் றிருப்பா னென்று சாற்று
பொல்லாப் பிங்கில்லையென்று போற்று
போக போக்கியம் எல்லாம் மாற்று 2

அன்பருடன் கூடிநீ வாழ்த்து
புண்ணிய பாவத்தை வீழ்த்து
போக்குவர வில்லையென்று தேற்று
எல்லாரி டத்து மன்பு காட்டு
ஏகனநேகன் என்று நாட்டு
நல்லூரான் திருவடியே பாட்டு
நமச்சிவாய வாழ்க வென்று சூட்டு 3

## போக்கும் வரவு முள்ளா னில்லான்

போக்கும் வரவு முள்ளா னில்லான்
பூத கணங்கள் சூழப் பொலிவான்
தேக்கு மடியார் சிந்தையி லுள்ளான்
திருவே யுருவாய்ச் செறிந்த சீமான்
காக்குந் தலைவன் கருணை யுடையான்
கண்மூன் றுடையான் கால காலன்
பூக்கும் பொழில்சே ரிலங்கை வாழ்வான்
பொன்னா ரடியைப் போற்றாய் மனனே 1

என்று மினியான் ஏத்து மடியார்
இடர்சே ராமே விடைமேல் வருவான்
நன்றுந் தீது முள்ளா னில்லான்
நாரி பாகன் ஞான வுருவான்
அன்று மின்று மென்று மாகி
யந்த மாதி யில்லாப் பெருமான்
குன்றும் மலையும் பொலியு மிலங்கை
குடியாய்க் கொண்டா னடிகள் போற்றுதுமே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மையன்றி வேறொன்றுங் காணார்

தம்மைத்தம் மாலறிந்த சாலப் பெரியோர்கள்
தம்மையன்றி வேறொன்றுந் தாங்காணார் – பின்னைப்
பிறப்பும் இறப்புமில்லைப் பேய்பித்தர் போல்வார்
மறப்பின்றி வாழ்வார் மகிழ்ந்து 1

மதியு மிரவியும் மன்னுஞ் சமாதி
பதியும் படியாக்கிப் பாழ்த்த – விதிவென்று
வாழ்வாரை வாழ்த்தி வளரு மடியவர்க்குத்
தாழ்வுண்டோ தம்பிநீ சாற்று 2

சாந்தம் பொறுமை தயைதவந் தானமிகு
மாந்தருக்குத் துன்பம் மருவுமோ – சாந்தனையும்
அன்னார்பா லன்புவைத்து ஆரறிவார் என்றகுரு
தன்னாணை போற்றல் தவம் 3

தவத்திற் சிறந்தார் தமதுயிர் போல
உவப்புடனே யோம்பியொரு பொல்லாப்பு – மில்லென்றான்
தாளிணையைப் போற்றிச் சகத்துடன் கூடியே
வாழக் கருதுவதே மாண்பு 4

மாண்டார் மனத்தானை மண்விண்ணு மொன்றாகி
நீண்டானை நெஞ்சமே நீநினைப்பாய் – வேண்டாமை
வேண்டுவோர் வீடு பெறுவாரே வையத்தை
ஆண்டாலு மென்னா மறி 5

அப்படி யுள்ளதென் றன்பாகச் சொல்லியே
அப்பன்செல் லப்ப னருள்தந்தான் – இப்பார்
இருள்கடிந் துள்ளத் தெழுந்தவெல் லென்றான்
அருள்சேர் மாதவத்தோ னன்று 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாதி தேவ

இராகம் — மோகனம் தாளம் — ஆதி

**பல்லவி**

தேவாதி தேவ அடியார் இடர் பொடிபட
அருள் தரு (தேவாதி)

**அநுபல்லவி**

ஆபாச மாபாச ஆழி வீழாவடிய வரும்
கோபாலனும் மற்றுங் கோகனகத்தானுந் துதி (தேவாதி)

**சரணங்கள்**

காலும் புன லனலும் வானும் நெடுநிலனும்
சசி ரவியுமான மாவடிவா
மேலை யெழுவிடத்தை மிடற்றி லடக்கிவைத்த
விகிர்தன் எனையுடையான் (தேவாதி)

கலகஞ் செய்யும் இருண்ட காலனும் நெஞ்சமஞ்ச
உலகங்களும் நடுங்க நடனமிடும்
துதிமிகு யோகசுவாமி சொன்ன கீதம்
விளங்கச் சதுர்வேத முழங்கத் தாண்டவமாடும் (தேவாதி)

---

## செல்வன் சீரடிகள் காப்பு

ஒருபொல்லாப்பு மில்லை யென்னு மோசையோடுவந்து நோக்கித்
திருவருள் தீக்கை செய்த செல்வன்சீ ரடிகள் காப்பு 1

ஆரறி வாரென் றுன்னு மரியமந் திரத்தைத் தந்த
பேரறி வுடைய செல்வன் பெய்கழ லென்றுங் காப்பு 2

முழுவது முண்மை யென்று முகமலர்ந் தெனக்குச் சொல்லிப்
பழுதற வாண்டு கொள்ளும் பாதபங் கயமே காப்பு 3

பாராதி பூத மெல்லாம் பரமன்றன் வடிவ மென்றே
சீராக வெடுத்துச் சொன்ன செல்வன்தா ளென்றுங்காப்பு 4

காயமே கோவிலாகக் கண்டுபா வனைசெய் யென்று
நேயமா யெனக்குச் சொன்ன நிமலன்தா ளென்றுங்காப்பு 5

பற்றினாற் பிறந்திறந்து பாரினில் சுழன்றா யந்தப்
பற்றினை விடுவாயென்ற பரமன்தா ளென்றுங்காப்பு 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தனை செய்திடடா தம்பி

உண்ணாதே யுறங்காதே யூரூராய்த் திரியாதே
பெண்ணாசை வையாதே – தம்பி!
பிரமத்தை யறிந்திடடா 1

கண்ணாரக் கண்டிடடா காலைமே லேற்றிடடா
விண்ணாணம் பேசாதே – தம்பி!
வேறுபொரு ளில்லையடா 2

எண்ணாம லெண்ணிடடா இயைந்தபடி நடந்திடடா
மண்ணாசை வையாதே – தம்பி!
மலரடியைப் போற்றிடடா 3

சுன்னாகத் தானையென்றுந் தோத்திரம்நீ செய்திடடா
அன்னை பிதாக்குருவை – தம்பி!
அன்புடனே போற்றிடடா 4

வலமிடமாய்ச் செல்லுகின்ற வாயுவைநீ தம்பியடா
பலமுனக்கு வந்துவிடுந் – தம்பி!
பற்றற்று நின்றிடடா 5

குலநலம் பாராதே கோபம்நெஞ்சில் வையாதே
தலமாறுந் தாண்டிடடா – தம்பி!
தனிமையைநீ நாடிடடா 6

உண்டில்லை யென்றுசொல்லி யுரையாட வேண்டாமடா
கண்டு களித்திடடா – தம்பி!
கருணைவெள்ளம் பெருகுமடா 7

பண்டுசெய்த வல்வினைநோய் பாரிற் பறக்குமடா
நன்றென்றுந் தீதென்றுந் – தம்பி!
நடுவாக நின்றிடடா 8

கொன்றொன்றும் புசியாதே குருவாக்கை மறவாதே
அன்றுமின்று மென்றுந் – தம்பி!
அப்படியே யுள்ளதடா 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றுபறித் துண்ணாதே மாயத்திற் சிக்காதே
குன்றுபோல் நின்றிடடா – தம்பி! 10
குறைவொன்று மில்லையடா

இந்தப்பத்துப் பாடலையும் இரவும்பக லும்சொல்லி
வந்தனை செய்திடடா – தம்பி! 11
வறுமைபிணி தீருமடா

## சிவனடி வாழ்க

உலகெலா முணர்ந்த வொருவ னடிவாழ்க
அலகிலா நாத னடியிணை வாழ்க
ஈறாய் முதலா யிருந்தோ னடிவாழ்க
மாறாக் கருணை வள்ளலடி வாழ்க
சிவனென்னும் நாமத் திருவுடையான் தாள்வாழ்க
என்னை விலகா விறைவனடி வாழ்க
அன்னைபோல் வந்த வவனடி வாழ்க
பின்னைப் பிறவிப் பெருமா னடிவாழ்க
முன்னைவினை தீர்த்த முதல்வனடி வாழ்க
எல்லாமா யல்லவுமா யிருந்தோ னடிவெல்க
கொல்லானை யுரிபோர்த்த குழக னடிவெல்க
தில்லையிற் கூத்தன் திருவடிகள் மிகவெல்க
எல்லையில் லாத இறைவ னடிவெல்க
கல்லானை கன்னல் கறிக்கவைத்தோ னடிபோற்றி
நல்லோரை நாளும் பிரியா னடிபோற்றி
நாரணனுங் காணாத நாத னடிபோற்றி
ஆரணமுங் காணா வடியிணைகள் தாம்போற்றி
பூரண மான புண்ணியன்றன் தாள்போற்றி
எல்லையில் லாம லிறந்து பிறந்தேனை
எல்லையில் லாத கருணையினா லாண்டபின்பு
கண்டேன் களித்தேன் கலங்காத சித்தமின்று
கொண்டேன் குளித்தேன் குவலயத்தி லாசையெல்லாம்
விண்டேன் வெளிப்பட்டேன் வேறொன்றி லிச்சையுமே
அண்டாத வண்ண மடிமைகொண்ட பெம்மானே
பொன்னான மேனியனே போக்குவர வில்லானே
எந்நாளு மென்னை மறவாப் பெருமானே
அடியார்த முள்ளமே யாலயமாய்க் கொண்டோனே
கடியார் புரமூன்றுங் கண்ணழலாற் செற்றோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியா முதலே முதலீறு மானவனே
அடியேனை யாட்கொண்ட வையா பெருமானே
பொடியாரும் மேனியனே பூங்குழலாள் பாகனே
படிமீதில் வேடனிட்ட பன்றியூ னுண்டானே
அடியார்க் கடியனே யானந்தக் கூத்தனே
பாண்டியனாய் வந்துமண்ணிற் பாராண்ட பெம்மானே
வேண்டுவார் வேண்டுவதை விரும்பிக் கொடுப்போனே
இருநிலனாய்த் தீயா யிருந்த விறையோனே
மருவார் குழலியொடு மகிழ்ந்தங் கிருந்தவனே
அப்பருக்குப் பொற்கா சளித்த பெருமானே
ஒப்பிலா வொன்றே யொளியே யெனவழுத்தி
எப்பொழுது முன்னை யிறைஞ்சத்
தப்பிலாத் தண்ணருளைத் தந்தாள் தனிப்பொருளே

---

# ஆள வேண்டுமே

இராகம் – சங்கராபரணம் தாளம் – திரிபுடை

**பல்லவி**

சஞ்சல மிகவும் மிஞ்சுதே சற்குருநாதா
தமியேனை யாள வேண்டும் (சஞ்சல)

**அநுபல்லவி**

வஞ்சம் பொறாமை கோபம் வரவர நெருக்குதே
வாணா ளினாசை மிகமிகப் பெருக்குதே (சஞ்சல)

**சரணம்**

எப்படிச் சொன்னாலும்நீ யேனென்று கேளாமல்
செப்படி வித்தை செய்தல் திருவருட் காகுமோ
ஒப்புவமை யில்லாத அப்பனே செல்லப்பனே
உன்றுணை யல்லாம லொருவரு மில்லை ஐயா (சஞ்சல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருள் தருவாயே

இராகம் — மோகனம் தாளம் — ஆதி

**பல்லவி**

தெய்வமே திருவருள் தருவாயே நீ

**அநுபல்லவி**

வையக மீதில் வணங்க அறியேன்
பொய்யும் புலையுங் கொலையுந் தவிரேன் (தெய்வமே)

**சரணங்கள்**

கையும் மெய்யுங் கருத்துக் கிசைய
ஐயா தந்தனை யதையா னறியேன்
மெய்யா யுன்றன் மெல்லடிக் கபயம்
மேலும் மேலும் உனையான் வேண்டுவன் (தெய்வமே)

செந்நெலுங் கன்னலுஞ் செறியும்நல் லூரில்
தேசிகன் தாசன் யோகசுவாமி
சொல்லுங் கீதம் சொல்லுவார் கேட்பார்
துன்பம் நீங்கி யின்ப மோங்கும் (தெய்வமே)

---

## தாளம் போடு

தாளம்போடு தாளம்போடு தாளம்போடு தாளம்போடு
தன்னையறிந்தோ மென்றுசொல்லித் தாளம்போடு 1

ஆழநீள மில்லையென்று தாளம்போடு
அவனேநா மென்றுசொல்லித் தாளம்போடு 2

வாழுவோ மென்றுவென்று தாளம்போடு
மாளமாட்டோ மென்றுசொல்லித் தாளம்போடு 3

நாம்நாம் என்றுசொல்லித் தாளம்போடு
நம்மையறிந் தோமென்று தாளம்போடு 4

போம்போம் வினையென்று தாளம்போடு
பெம்மானுக் கடிமையென்று தாளம்போடு 5

ஓம்ஓம்ஓம் என்றுசொல்லித் தாளம்போடு
உள்பொருள்நாம் எனறுசொல்லித் தாளம்போடு 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங் கடந்த சங்கரா வடைக்கலம்

*நேரிசையாசிரியப்பா*

உவமையொன் றில்லா வொன்றே யடைக்கலஞ்
சமயங் கடந்த சங்கரா வடைக்கலம்
அமையு மடியா ரன்பே யடைக்கலம்
உமையாள் மகிழு மொருவா வடைக்கலம்
எந்தா யடைக்கல மிறைவா வடைக்கலஞ்
சிந்தனைக் கரிய சிவமே யடைக்கலம்

அந்தமு மாதியு மில்லாய் போற்றி
அந்தமு மாதியு முள்ளாய் போற்றி
ஓடும் பொன்னும் ஒன்றாய் நோக்குவார்
தேடும் பொருளே செல்வமே போற்றி
பாடு மடியார் பரனே போற்றி
வாடு மடியார் மழையே போற்றி
தேடக் கிடையாச் சிவமே போற்றி
ஆடகத் தில்லை யரனே போற்றி
குழைத்தெனை யாண்ட கோவே போற்றி
மழவிடை யேறும் மாதவ போற்றி
பிழைத்த வெல்லாம் பொறுப்பாய் போற்றி
தழைத்தநற் கொன்றைச் சடையாய் போற்றி

வரம்பி லின்ப வடிவே வாழ்க
கரத்தி லங்கி கலந்தாய் வாழ்க
சிரத்திற் றண்மதி தரித்தாய் வாழ்க
புரத்தை யெரித்த புங்கவ வாழ்க
வாழ்க வாழ்க நின்னடி வாழ்க
வாழ்க வாழ்க வையகம்
வாழ்க வாணுதல் மங்கையும் மகிழ்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைக்கலம் அடைக்கலம் ~ I

அளவிலா வொன்றே யன்பர்க ளன்பே
உலகெலாம் நிறைந்த வொண்சுட ரொளியே
மலமிலா முதலே மாசிலா மணியே
பலரும் புகழ்ந்துரை பரம தயாளுவே
நிலம்நீர் தீகால் வானாய் நின்ற
அலகிலா வாட லுடைய வப்பனே
அழும்பிள் ளைக்காய்ப் பாற்கட லழைத்தாய்
தொழுதசுந் தரர்க்காய்த் தூயபொன் வழங்கினாய்
வழுதிபோல் வந்து மாமுடி தாங்கிப்
பழுதி லாத பார்தனை யாண்டாய்
அந்தணன் வேண்ட வரிய கூற்றினை
வெந்திறற் றாளால் வீழச் செய்தனை
கண்ணப்ப னூனைக் கலந்து புசித்தாய்
என்பது கேட்டுன் னிணையடி யடைந்தேன்
என்பிழை யெல்லாம் பொறுப்பதுன் கடனே
பொன்போல் மதியம் பொதிந்த சடையாய்
அடைக்கலம் அடைக்கலம் அப்பனே
படைக்கலம் நின்திருப் பஞ்சாக் கரமே

---

## அடைக்கலம் அடைக்கலம் ~ 2

அடைக்கல மடைக்கல மரனே யடைக்கலம்
விடைக்கல னுகந்த வேதாந்த விளக்கே
ஆறும் பிறையுஞ் சூடிய வரசே
கூறு மடியார் தங்கள் குருவே
உருகி யுருகி யடியே னுணரப்
பெருவரந் தருவாய் பேரரு ளாள
மாசிலா மணியே மன்னர்தம் மன்னவா
காசி வாழும் கண்ணுதற் பரனே
பூசிக்கும் யோக நாதன் பொற்பே
வாசித்துக் காண வொண்ணா மறையே
இந்திரன் முதலோ ரறியா விறையே
சந்திரன் தயங்குஞ் சடையுடை யோனே
அந்தமு மாதியு மில்லா வமலா
சந்தத முன்பதஞ்
சாற்றுவார் தமக்குச் சாலோக பதவி
வீற்றிருக்க வைத்த விமலா வடைக்கலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படியே உள்ளது

ஒருகறியும் ஒருசோறும் ஆக்கியுண்ணும் ஆசான்
ஒருபொல்லாப்பு மில்லையென்றான் உணர் 1

ஓதாமல் வேதம் உணர்ந்த குருநாதன்
உண்மை முழுதுமென்றான் உணர் 2

நாமறியோம் என்ற நல்ல திருவாக்கை
நாமறியச் சொன்னான் நய 3

முடிந்த முடிவென்று முன்னாளில் ஆசான்
அடியவர்முன் சொன்னா னறி 4

அப்படியே யுள்ளதென அத்து விதப்பொருளைச்
செப்பினான் செல்லப்பன் தேர் 5

நீறணியான் காவி யுடையணியான் நீணிலத்தில்
தேறவைத்தான் என்முன் சிரித்து 6

சிரித்துப் புரமெரித்த சிவனேயொப் பானென்னை
மரித்துப்பிறவாத மாண்பளித்தான் மதி 7

பாசத்தால் வெந்துநொந்து பாழாகப் போகாமல்
நேசத்தால் ஆக்கினான்என்னை நினை 8

தேரடியில் வீற்றிருப்பான் சிரிப்பான் சினத்திடுவான்
ஆரறிவார் என்பா னவன் 9

பித்தனென்றும் பேசுவார் பேயனென்றுஞ் சொல்லுவார்
சித்தனென்றுஞ் சொல்லுவார் சிலர் 10

ஆர்கொடுக்க வாசையுடன் வந்தாரோ வவரைச்
சீர்கேடாய்ப் பேசுவான் தேர் 11

நரிபோல் உழலுவான் நாய்போல் திரிவான்
பெரியவனென்னும் பேர்படையான் பித்தன் 12

மாறாட்ட மாகவே வந்த படிபிதற்றித்
தேறாமற் செய்வான் சிரித்து 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமார் குடியுமல்லோம் நாகநாதன் குடிகாணும்

நானென நீயென வேறில்லை யெனநகையால்
தானெனைச் செய்தபிரான் அவன்சமர்த் தாரறிவார்
கோனெனை யாண்டுகொண்டா னொன்றுங் குறைவில்லைத்
தேனெனச் சிந்தையுள்ளே யெந்தநாளுந் தித்திக்குமே 1

பாரவன் விண்ணவன்காண் பன்னும்வேத மொழியவன்காண்
காரவன் கடலவன்காண் கறைக்கண்ட முடையவன்காண்
சீரவன் திறலவன்காண் சிரம்பத் துடையானைமுன்
தேர நெரித்தவன்காண் தேவதேவர் தம்பெருமானே 2

நாமார் குடியுமல்லோம் நாகநாதன் குடிகாணும்
ஏமாந்து போவோமல்லோ மினிமறலி தானுமஞ்சோம்
சாமாறுந் தனிவிடையன் திருப்பாத மல்லாமல்
நாமார்க்குந் தொண்டுசெய்யோம் இனிநாளை நினையோமே 3

போக்கொடு வரவுமில்லைப் பூமிவான மிங்கில்லை
நீக்கற வோங்கிநிற்கும் நின்மலன் றன்னையன்றிக்
காக்குமோர் தேவுமில்லைக் காலநே ரமுமில்லை
நோக்குவார் தங்கட்கெல்லாம் நுணுக்கமாய்த் தெரியுமன்றே 4

---

## எத்திக்குமாகி யிருக்குந் தெய்வமே

இராகம் — சங்கராபரணம் தாளம் — ஆதி

**பல்லவி**

முத்திக்கு வழிகாட்டும் — என்றன்
மூட புத்தியை யோட்டும்

**அநுபல்லவி**

எத்திக்கு மாகி யிருக்குந் தெய்வமே
ஏழையடி யார்க்கு இரங்கு முய்யவே (முத்தி)

**சரணம்**

சித்தத்துட் டித்திக்குந் தீங்கரும்பே
தெளிந்த தேனே சீனியே பாகே
பத்த ருள்ளத்தில் பாக்கிய வானே
பாவ மனைத்தும் நீக்கியாள் கோனே (முத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வம்

இராகம் – எதுகுலகாம்போதி தாளம் – மிஸ்ரம்

**பல்லவி**

கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வமே
கடைக்கண் பார்நீ தெய்வமே

**அநுபல்லவி**

ஒருத்தர் துணையுமில்லை யுன்றுணை யல்லாமல்
உலகுயிர் பரமாகி நடிக்கின்ற செல்வமே (கருத்தில்)

**சரணம்**

எங்கெங்கு சென்றாலும் அங்கெங்கும் நீயே
ஈசா மதுராபுரி வாசா மீனாட்சி
நேசனே சொக்கநாதா யோகனுக்கருள் தாதா
நின்று மிருந்துமுனை யென்றென்றும் போற்றநான் (கருத்தில்)

---

# அரகர சிவசிவ

இராகம் – சுத்தபங்களா தாளம் – ஆதி

**பல்லவி**

அடியா ருள்ளத்தே வாழும் பரனே
அஞ்சுவ தகற்றி யாள்வதுன் பரமே

**அநுபல்லவி**

அரகர சிவசிவ சம்போ சங்கர
அறிஞரு மறிவரி தாகிய பொருளே (அடியா)

**சரணம்**

அறிவாருளரோ அகம்பிர மாஸ்மி
வெகுபலம்வாசி சமாதிநீ யோசி
வேண்டும் வேண்டும் அருள்நீ தாதா
விக்ந விநாயக விமலா நமோநமோ (அடியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்படாதிருக்கத் தயவுவை

இராகம் – நளினகாந்தி　　　　　　　　　　தாளம் – ஆதி

**பல்லவி**

எனதுயானெனும் இடர்படா(து)
இருக்கத்தயவுவை எம்பிரான்

**அநுபல்லவி**

கண்ணுதலே கறைக்கண்ட நீ
கருணானந்த காமாட்சி பாகா வா　　　　(எனது)

**சரணம்**

எந்நேரமும் உன்றன் பொன்னாரடி
ஏத்தித்தொழ வேழைக் கேயருள்
அன்னே யுன்னை யல்லால்துணை
இம்மாநிலம் எவரு மில்லையே　　　　(எனது)

---

# நிஜமா மான்மா தெளி

இராகம் – உமாபரணம்　　　　　　　　　　தாளம் – ஆதி

**பல்லவி**

நிஜமா மான்மா தெளி அரகர சிவசிவ
நெஞ்சே யஞ்சேல் நீ வரோதய

**அநுபல்லவி**

தசமுகன் நெரிதரத் தனதடி யூன்றிய
சாமிநாத பாதமே ஓதுமந்திரம் நீதமே　　　　(நிஜமா)

**சரணம்**

சுதிரச பூரண பரப்பிரம தாரக
தூய அற்புத சுகமார மாரண
சுரசேவித தொந்தத்தசி
சுந்தரா னந்தனே துய்யா மெய்யா சுபானுபவ　　　　(நிஜமா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கார நாதமே

இராகம் – ஹரிகாம்போதி                    தாளம் – ஏகம்

**பல்லவி**

ஓங்கார நாதமே யோதவொண்ணாப் பிரமாதமே

**அநுபல்லவி**

தாந் தாந் தோம் என்றிடு மோசை
அற்புத விற்பன நிர்க்குண நேயம்    (ஓங்கார)

**சரணங்கள்**

உத்திக்கும் எத்திக்கும் அவரவர்
சத்திக்கும் பத்திக்கும் அதிரச    (ஓங்கார)

ஓதும் வேதம் இதமுடன்
அன்றும் இன்றும் ஒருவிதம்    (ஓங்கார)

உம்பர்களு மிம்பர்களும் தினசரி
எண்ணரிய சித்தர்களும் மிகவேத்தும்    (ஓங்கார)

ஓதிடவே யருள் பாலிக்குமே நன்மை
பூரிக்குமே மனஞ் சேவிக்குமே யருள்    (ஓங்கார)

உயிரை யெழுப்பிச் சிவத்தி லேமனம்
பயிலப் பயிலச் சுவைக்கு மேதினம்    (ஓங்கார)

ஆதரித் தினிமேற் சுகித்திட
நீநினைத்திடு ஆசைவைத்திடு    (ஓங்கார)

**தொகையறா**

நீங்காது எந்தநாளு மினிது முடிந்து
இளந்தென்றலும் வீச விபுதர் பலர் ஒன்றுகூடி
அஞ்சலஞ்சலென்று செஞ்சொல் மிஞ்ச
றீங்காரம்பாட வருள்கூட நல்ல
சித்தர்கள் பத்தர்கள் தித்தி மத்தளம்
தத்தித் தகு தகு    (ஓங்கார)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருட் செய லெப்படியோ

இராகம் – காப்பி தாளம் – சதுர்ச ஜாதி ஏகம்

**பல்லவி**

திருவருட் செய லெப்படியோ
சீமானே கோமானே

**அநுபல்லவி**

திருவளர் நல்லூர் மேவிய
தேவே செல்லப்பா (திரு)

**சரணங்கள்**

வரவர மனத்திற் கவலைகள் மிஞ்சி
வலிந்துகவரும் மாய வாழ்வினுக் கஞ்சி
அரகரசிவனே சங்கராவென்று
போற்றினேன் புகழ் சாற்றினேன் (திரு)

இரவும் பகலு மிணையடி மறவேன்
இனியடியேன் மண்ணிற் பிறவேன்
பரவும் யோக சுவாமிகட் கன்பு
காட்டுமோ வொளி சூட்டுமோ! (திரு)

---

## நீ வா தா அருள்

இராகம் – ஹம்சத்வனி தாளம் – ஆதி

**பல்லவி**

நீ வா தா அருள் பத்திசெய்வோம் சிவ
நித்திய ஆனந்தம் நிர்மல சகிதம்

**அநுபல்லவி**

ஆசாபாசம் ஆகிய விசனம்
நாசமாகவுன் ஞானப் பிரகாசம்
தாதா தொம்தொம் தகுதகு தகுதகு
தளங்கு தரிகிட தக்கிட கிடஜாம் (நீவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

பாராய் என்முகம் பரமயோகப் பரப்பிரவேசந்
தாராய் சகலலோக வஸ்ய சம்மதம்
பராபர பரிபூரணம்
கோலாகல குமாரி கவுரி
கும்பிடும் புராரி பிரமாதிதேவர்
கொண்ட கோடி பழிவிண்ட விபுதன்
குஞ்சிதாம் புயமலர் நெஞ்சில் வைத்திடு
குற்ற மற்றசிவ யோக நற்றவன்
குருகுல வாசந் தருமொரு வசனங்
கருது மவர்மிடி காணா தோடுங்
காவாய் அடியனைப் பூணா யன்பு
ஹம்சத்வனி பேசிடு பேரின்பம் (நீவா)

---

## மறவாதே என்மனசே!

இராகம் – சங்கராபரணம் தாளம் – ஆதி

**பல்லவி**

குருராஜ ராஜ பரசிவ பக்தி
தன்னைநீ மறவாதே யென்மனசே

**சரணங்கள்**

அச்சுதன் அயன்முதல் அமரருங் காண்கிலர்
அடிமுடி யில்லை யறி
அண்டசரா சரங்கள் அவையனைத்தும்
அவனே தானென வறியென் மனசே (குருராஜ)

தவஞ் செய்வோர்க் கனுகூலன்
சர்வ சாட்சிப் பிரதாபன்
அவனிவன் என்னும் மாயம்
அனைத்து மில்லாத சிவயோக நாதன்
விசுவாசன் சிவராசன் (குருராஜ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மமெங்குந் தங்க அருளையா

இராகம் - காம்போதி    தாளம் - ஆதி

**பல்லவி**

ஐம்பொறி மாட்டு மனசுபோய்
அலைந்திடிலோ பழி பழி

**அநுபல்லவி**

நம்பினேன் நானே நடராஜ நீவாகா
நியாயந்தானோ கைவிடச் சற்குருநாதா (ஐம்)

**சரணம்**

சர்வகுணாதி சசிதவழ் சேகர சாமுண்டி சமேத சாமி
சர்வாலங்கிர்த சகள நிஷ்கள மங்கள
சுரசேவிதபானு
சித்தம்வைத்து ஆண்டிடு சின்மய ஜெகசோதி
சாயுச் சியமும் வேண்டினேன் ஆண்டி
சர்வதியாகந் தந்தேன் தாளைத் தலையிற் சூட்டிடு
தர்மமெங்குந் தங்கக் குறைகள் மங்க அருளையா (ஐம்)

---

## பராபரமே

சொன்னத்தைச் சொல்லித் துடிக்குமிவ் வன்பனுக்கு
என்னத்தைச் சொல்லி முறையிடுவேன் பராபரமே

என்னத்தன் எம்மையிட்டுக் கொண்டானென் றாலும்
சின்னத்தன மாய்த்திரிய நினைக்கின்றான் பராபரமே

கல்லொத்த நெஞ்சினனோ, கவனந்தா னில்லானோ
நில்லொத்து என்றாலும் நிற்கஅறியான் பராபரமே

அவனன்றி அணுவும் அசையாதென்றார் பெரியோர்
இவனோ அதன்பொருளை எண்ணான் பராபரமே

பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டுமென
எண்ணி இவனும் இடர்கொள்வான் பராபரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னடிமை நான் ஐயனே

இராகம் – கானடா　　　　　　　　　　தாளம் – திஸ்ரம்

**பல்லவி**

உன்னடிமை நான் ஐயனே
உளமகிழ்ந்து பார் மெய்யனே

**சரணங்கள்**

பொன்னடி மாதவர் சேர்பெரு முத்தனே
பூங்கொடியாள் பங்கா
உன்னடி யென்முடி வைத்தினி யாளுவாய்
ஓங்காரத்துட் பொருளே　(உன்)

ஓயாமற் பொய்பேசி உழைக்கின்ற வுலுத்தரை
உறவென்றிருந்து விட்டேன்
வாயார வாழ்த்தி வணங்கு மடியாரை
மனசாரப் போற்ற வைப்போய்　(உன்)

சித்தத்துட் டித்திக்குந்தேனே பாலென்று
சிந்தனை செய்தடியேன்
உத்தம ரோடினிப் பிரியாமல் யான் வாழ
உன்னருள் தாருமையா　(உன்)

நீயே நானென்று நினைக்கும்மெய் யடியாரை
நேயத்தொடு வணங்கிடுவார்
தாயே யனைய சங்கரனே வந்து
தண்ணருள் தாருமையா　(உன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ அருளாவிடிற் கதியேது

இராகம் – அடாணா                    தாளம் – ஆதி

**பல்லவி**

நீ யருளா விடிற் கதியேது – ராமா
நீ ரவிகுல திலகம் உலகுக் கெல்லாம்

**அநுபல்லவி**

தாயுந் தந்தையுஞ் சகலமும் நீயே
தமியேன் உயிருக்குயி ராகிய பரனே (நீயரு)

**சரணம்**

பாற்கடல் தன்னிற் பள்ளி கொள்வோனே
பாக்கிய லட்சுமி தன்மண வாளா
ஆர்க்கு முணர்வரி தாகிய பொருளே
அடியேன் மனத்தைக் கொள்ளை கொண்டவனே
நீக்கமற் றெங்கும் நிறையும் நின்மலனே
நினையும் யோக சுவாமிதன் துணையே
போக்கும் வரவு மில்லாப் பொருளே
பூதலத் துள்ளோர் போற்றும் அருளே (நீயரு)

---

# சிவசிவ வென்றுசொல்லிப் பேணேனோ

இராகம் – செஞ்சுருட்டி                    தாளம் – ஆதி

**பல்லவி**

தில்லையம்பலத்தைக் கண்ணாற் காணேனோ
சிவசிவ வென்று சொல்லிப் பேணேனோ

**அநுபல்லவி**

நல்லவர் கூட்டத்தைத் தேடிநா டேனோ
அல்லும் பகலும் பாடியா டேனோ (தில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணங்கள்**

கல்லை நிகர்த்த மனமுரு காதோ
காமக்குரோத மோகங் கருகாதோ (தில்லை)

எல்லை யில்லாத வின்பம் பெருகாதோ
ஏழைகள்மே லிரக்கம் வாராதோ (தில்லை)

நில்லாத காயத்தை நான்வெல் லேனோ
நீயேநா னென்றுசொல்லி நில்லேனோ (தில்லை)

உல்லாச மாக வெங்குஞ் செல்லேனோ
உண்மையைச் சொல்லிச்செல் கில்லேனோ (தில்லை)

இல்லையென் றெவர்க்கும்நான் சொல்வேனோ
இனிய செஞ்சுருட்டியைக் கல்லேனோ (தில்லை)

---

## சிவனே உன் தரிசனந் தாராயோ

இராகம் – ஆனந்தபைரவி தாளம் – ஆதி

**பல்லவி**

சிவனே யுன்தரிசனந் தாராயோ
தேவாதி தேவர்தொழும் பெருமானே

**அநுபல்லவி**

தரிசனந் தாராய் தமியேனைக் காவாய்
தத்துவா தீதனே சங்கர சிவசம்போ (சிவனே)

**சரணங்கள்**

அரிய விருவரும் அறியாத விமலனே
கரியுரி போர்த்த கருணைக் கடலே
திரிபுர தகனனே தில்லையில் வாசனே
சிவகாமி யம்மை பூசிக்கு மீசனே (சிவனே)

வரவர மனசு சங்கடப் படுகுதே
வாராய் துயர்தீராய் கண்பாராய் என்னைக்காவாய்
இரவும் பகலுமுன்றன் இணையடி மறவாமல்
பரவி யானந்த பைரவி ராகம் பாடி (சிவனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாஞ் சிவன்செயலென் றிருப்போம்

தோன்றாத் துணையை யென்றுந் துதிப்போம்
தூயதிருப் பாதத்தைப் பதிப்போம்
ஈன்றாளையு மப்பனையும் மதிப்போம்
எல்லாஞ் சிவன்செயலென் றிருப்போம்
ஆன்றோர் விதித்தபடி நடப்போம்
அந்திசந்தி மந்திரத்தைப் படிப்போம்
நான்றா னெனுமிரண்டுந் தடுப்போம்
நாதனடி யிணைக்கீழ்க் கிடப்போம்
வஞ்சம் பொறாமை நெஞ்சில் வையோம்
சஞ்சலத் தால்மிஞ்சி நாங்கள் நையோம்
கொஞ்சம் கொஞ்ச மாய்மனத்தை வெல்வோம்
கூடாத கூட்டத்தில் நாங்கள் செல்லோம்

---

## வாரா வரவினில் வந்த சஞ்சீவியே

தோடுடைச் செவியனே தோன்றாத் துணையே
பீடுடைப் பெரியோர் பெட்டகத் தணியே
தந்தையுந் தாயும் மைந்தருந் தமரும்
எந்தையே நீயென் றெண்ணியெப் போதும்
விந்தைசே ரவர்பணி வேண்டியா னாற்றி
இவ்வுல கத்தி லிறுமாப் புடனே
சந்ததம் வாழத் தயைபுரி யுமையாள்
வந்தனை புரியும் வண்ணமே னியனே
கந்தமுங் காயுங் கடும்பசி மூடியே
வந்திடி னுண்ணும் மாசிலா மனத்தர்
சிந்தையிற் குடிகொள் தேசிக மூர்த்தி
தீராக் கோபமுஞ் சித்தக் குரோதமும்
நீரா யுருக்கும் நெறியிது காணெனத்
தாரா விடில்யான் தளையுண் டுழல்வேன்
வாரா வரவினில் வந்தசஞ் சீவியே
பழியொன்று பூணா வழிபடு தெய்வமே
ஒழியா வின்பமாய் நின்று
தெளியாவென் சிந்தை தெளிந்திடச் செய்யே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் ஆட்டக்காரன்

நல்லூரில் ஆட்டக்காரன் நான்வணங்கும் குருநாதன்
கல்லைக்க ரைக்குஞ்சித்தன் கருணைபூத்த திருமுகத்தான்
இல்லை யென்னுஞ்சொல்லை இல்லாம லாக்கிடுவான்
அல்லும் பகலுமென்றன் அகத்தினிலே வாழ்ந்திடுவான் 1

ஒருபொல்லாப்பு மில்லையென்பான் உண்மை முழுதுமென்பான்
கருப்பையிலே வாராமல் காத்தென்னை யாண்டுகொண்டான்
தேரடியில் வீற்றிருப்பான் செல்லப்பனென்னும் பெயரான்
ஆரறிவா ரென்றுசொல்வான் அன்னையைப்போல்
அன்புடையான் 2

பொய்சொல் லாதேயென்பான் மெய்யுஞ்சொல் லாதேயென்பான்
வல்லபங்கள் பேசிவந்தோர் வாயை யடக்கிடுவான்
வித்தையொன்றுஞ் செய்துகாட்டான் விவேகமற்றோர்
போலிருப்பான்
அத்துவா மார்க்கம்விட்டு ஆறியி ருந்திடுவான் 3

---

# சூதான வெளியிலே சும்மாவிருப்போம்

ஓம்நம சிவாயவென உருவேற்றுவோம்
உருகி யுருகிநாம் உணர்வவிழ்வோம்
வீம்பிடும்பை யகங்காரம் விட்டுவிடுவோம்
வேதாந்த வீட்டிலே குடியிருப்போம்
நாம்நாம் நாமென நடமிடுவோம்
நல்லவிருளை நல்ல வொளியாக்குவோம்
போம்போம் வினையெனப் போற்றிசெய்குவோம்
பூரண மானநிட்டை புகுந்திடுவோம்
ஆம்ஆம் நமக்கெல்லாம் ஆய்விடுமென்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனேநா மென்றுசொல்லி யானந்தங்கொள்வோம்
சந்திரனைச் சூரியனை ஒன்றுசெய்குவோம்
சச்சிதா னந்தத்தேனைத் தானருந்துவோம்
இடைகலை பிங்கலை யிரண்டுமடைப்போம்
எழிலாருஞ் சுழுமுனைக்குள் ஒடுங்கிநிற்போம்
பஞ்சவர்ணப் பரிமேலே பவனிசெல்வோம்
பாரும்விண்ணும் ஒன்றாகப் பண்புசெய்குவோம்
ஆதார மாறுக்கு மப்பாலேசெல்வோம்
அங்கே திருநடனங் கண்டுகளிப்போம்
சூதான வெளியிலே சும்மாவிருப்போம்
சுகம்சுகம் எந்நாளு முற்றிடாதோ

---

# அப்பா பரமசிவம்

இராகம் – புன்னாகவராளி தாளம் – ஆதி

**பல்லவி**

அப்பா பரமசிவம் (அப்பா)

**சரணங்கள்**

அன்றுதொட்டு இன்றுமட்டும் அடியேனுந் தேவரீரும்
அத்துவித மாயிருந்தவித்தைதனை யாரறிவார் (அப்பா)

ஒப்பாரும் மிக்காரு மில்லா வொருபொருளே
தப்பேது யான்செயினும் அப்பா பொறுத்தருள்வாய் (அப்பா)

அப்பாலுக் கப்பாலா யாருமறி யாதவண்ணம்
ஆடுந் திருநடனங் காண வருள்புரிவாய் (அப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மவனே

அனைத்து மவனே அவன்செயலே யென்றால்
வினைப்பயன்றா னுண்டோ விளம்பு 1

ஆதியு மந்தமு மான்மாவுக் கில்லையென்றால்
ஓதி யுணர்வதென்னோ வோது 2

இருந்த படியே யிருப்பதனைக் காண
வருந்துவதேன் நெஞ்சே மகிழ் 3

ஈடேற்ற முண்டாமே யெல்லா மதுவென்றால்
காடே திரிந்தென்ன காண் 4

உண்மை முழுதுமென்றால் ஓகெடுவாய் நெஞ்சமே
பின்னைப் பிறப்புண்டோ பேசு 5

ஊனா யுயிரா யுலகாயோ னைவிரிக்க
நானார்நீ தானார் நவில் 6

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தவனைத்
துள்ளுமனங் காட்டுமோ சொல் 7

ஏக னநேக னிறைவனடி வாழ்கவென
மோகமறச் சொன்னார்கள் முன் 8

ஐம்பூதம் ஐம்பொறியும் ஐம்புலனு மானவனே
நம்பெருமான் என்று நய 9

ஒன்றிரண் டென்னு முரைகடந்த மெய்ப்பொருளைக்
கண்டுகளிப் பாரார் கருது 10

ஓவியம் போலிருந் துற்றுற்றுப் பார்த்தாலுஞ்
சேவித்த லாமோ தெரி 11

ஔவியத்தை நீக்கி யறத்தைப் புரியென்பார்
தெய்வீகந் தேர்வாரோ செப்பு 12

அஃகமுங் காசும் அதிகம் படைத்தாலும்
இஃதால் பயனென் இசை 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை என்னூர்

எல்லாமென் னூர்எல்லா மென்சுற்றத் தார்களே
எல்லா மெனக்குதவி யென்றறிந்தேன் – நில்லாத
நீர்சடைமேற் கொண்ட நிமல னெனக்கன்பன்
சீரிலங்கை யென்னூர் தெரி

நாமார்க்கும் ஆளல்லேம் நாளை வருவதெண்ணேம்
ஆமா றறம்புரிவே மார்க்குமஞ்சேங் – கோமாற்கே
மீளா வடிமையாய் மேதினிமேல் வாழுவேம்
தாளா ரிலங்கையென்னூர் தான்

மெய்யுரைப்போம் மேன்மக்கள் நட்பை விரும்புவோம்
செய்வனவெல் லாந்திருந்தச் செய்குவோம் – வையகத்தில்
தாமரைமேல் நீர்போற் றானியைந்து வாழுவோம்
காம ரிலங்கையென்னூர் காண்

சூரியன் தோன்றுதற்கு முன்ன ரெழுந்திருப்போம்
சீரியவா யாற்சிவனைப் பாடுவோம் – பாரினிலே
தண்ணார் பொழிலுந் தடவரையு மாறுகளும்
நண்ணிலங்கை யென்னூர் நய

புன்சொல் புறங்காப்பேம் போன வகையெண்ணேம்
என்செயலா லொன்றுமில்லை யென்னுவேம் – வன்சொற்
களைவேம் கனமேகங் கண்ணுறங் கின்பப்
பழவிலங்கை யென்னூரே பார்

சித்தி பெறலாம் திருவெல்லாஞ் சேரலாம்
பத்தியின்றேல் என்ன பலனிவற்றால் – எத்திசையும்
மெச்சு புகழிலங்கை மேலோர்கள் வந்துதினம்
நச்சு மிலங்கையென்னூர் நாடு

நாடி யொருகருமம் நாடோறு மாற்றுவார்
வாடி மெலிவதில்லை மாநிலத்தில் – நீடியசீர்
கொண்ட விலங்கையிலே கோடிசனம் வந்துபணம்
கொண்டுசெல்வார் என்னூர் குறி

கருங்குயில்கள் பாடுங் கரியினங்கள் கூடும்
நெருங்குங் கதலிபலா தென்னை – ஒருங்குதிரை
கொண்டுவந்து முத்தங் கொடுக்கும் வளநாடு
கண்டுகொண் டேனிலங்கை காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லு மணியே

எல்லை யெமக் கில்லையென்று சொல்லுமணியே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு மணியே 1

இல்லையென் றொருபோதுஞ் சொல்லாய் மணியே
ஈச னொருவ னென்று சொல்லு மணியே 2

அன்னைதந்தை சுற்றத்தைப் பேணு மணியே
அயலவர் தம்முறவு வேணு மணியே 3

பின்னைப்பொய் சொல்லாமல் காணு மணியே
பிறர்பொருள்மே லாசையின்றி வாழு மணியே 4

என்னையினி மறவாமல் பாடு மணியே
ஈச னடியவரைத் தேடு மணியே 5

முன்னை வினையெல்லா மோடு மணியே
முருகன் திருவடியைக் கூடு மணியே 6

---

## சிவனடியைச் சிந்திநெஞ்சே

அன்பிலா ரோடுறவு கொள்ளாதே அடுத்தோருக்குத்
துன்பத்தைச் செய்யாதே சூதும்வாதும் பேசாதே
இன்பத்தில் துன்பத்தில் ஏகமன சாயிருந்து
தென்புடனே யரன்பாத மந்திசந்தி சிந்திநெஞ்சே 1

ஆரோடும் பகையாதே ஆசைதனைக் கொள்ளாதே
ஊரோடே ஒத்துநட உண்மையைத் தேடிக்கொள்
நீரோடே வெகுநேரம் நீந்திவிளை யாடாதே
சீரோடே சிவன்பாத மெப்போதுந் தேடுநெஞ்சே 2

இடுவதை மறவாதே ஏழைகளை இகழாதே
கெடுவது நினையாதே கேளிரைப் பிரியாதே
சுடுவது சொல்லாதே துணையின்றிச் செல்லாதே
படுதலையிற் பலிகொள்ளும் பரமனைப் பாடுநெஞ்சே 3

ஈவது விலக்காதே யிழிதொழில்கள் செய்யாதே
சாவது வந்தாலுஞ் சத்தியத்தை மறவாதே
ஆவதும் அழிவதும் நமக்கில்லை யெனவறிந்து
தேவர்கள் தொழுதேத்துஞ் சிவனடியைச் சிந்திநெஞ்சே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சமற்று வாழ அருள் தாடா

முச்சந்திக் குப்பையிலே மூவாசையும் நீக்கி
அச்சமற்று வாழவருள் தாடா குருநாதா 1

பச்சைப் புரவியிலே பாங்காக நானேறி
இச்சகத்தைச் சுற்றிவர எனக்கருள் ஈந்திடடா 2

கொச்சைமக்கள் தம்மைக் கூடாமல் நான்வாழ்ந்து
பிச்சை யெடுத்துண்ணப் பேரருளைத் தந்திடடா 3

தச்சன் கட்டா வீட்டிலே தாவும் பரியைக்கட்டி
நிச்சயத்தை நான்காண நீதா வருளெனக்கு 4

பச்சைநிறப் புற்றரையில் படுத்துநான் கண்ணுறங்க
நச்சரவம் பூண்டவனே நல்லவாக்குத் தந்திடடா 5

## நித்தியத்தை நாடடா தம்பி

ஆக்கைநிலை யல்லவடா தம்பி
அதுவீழுமுன் காணடா தம்பி 1

பூக்கை கொண்டு போற்றடா தம்பி
நாக்கை யடக்கி வெல்லடா தம்பி 2

தன்னைத் தன்னா லறியடா தம்பி
தாக்கற்றுநீ நில்லடா தம்பி 3

ஊக்கமுடன் செபியடா தம்பி
சுன்னாகத்தானைப் போற்றடா தம்பி 4

மார்க்கத்தை யறியடா தம்பி
மாமாயை தன்னை வெல்லடா தம்பி 5

நீக்கமற்று நில்லடா தம்பி
நித்தியத்தை நாடடா தம்பி 6

ஏக்கத்தை வெல்லடா தம்பி
எல்லாஞ்சிவன் செயலடா தம்பி 7

பத்தும்நாலுஞ் சேர்த்துச் சொல்லடா தம்பி
பதினாலு லோகமும் கைக்குள்ளே தம்பி 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாது பங்கனை மறக்கவு மாமோ

ஒப்பில்லாத இலங்கைநகர் ஒருவன் றிருவடியைத்
தப்பில்லாமற் போற்றுவார்கள் சாகார் பிறவாரே
கொப்பில் மந்தியோடு குயில்பயிலும் பொழில்நீழல்
எய்ப்பிலாத விளமான் மரைமேதி துயில்கொள்ளும் 1

கடல்சூ ழிலங்கைநகர் மேவிய கடவுள்பாதம்
திடமோ டெந்தநாளுஞ் சிந்திப்பார்கள் மிடியாலே
புடவிதனில் துயரால் நொந்துபோகார் வரைமீது
அடவிதனில் ஆமா புலியானை துயில்கொள்ளும்
கரையு மன்பர்தங் கருத்தி னானையே
உரைசெய் வார்க்கொரு குறையு மில்லையே 2

ஆடு பாம்பணிந் தாடு வான்கழல்
பாடு வார்களே பரம யோகிகள் 3

அறஞ்செய்வார் தங்க ளகமே கோவிலாய்
நிறைஞ்சு நிற்குமே நிமலன் நாடொறும்
புறத்திற் கூறுவர் புகழைப் பெற்றிடார்
அறத்தைக் கூறுவா ராக்கஞ் சேர்வரே 4

காலை மாலையுங் கடவுள் பாதத்தைச்
சால வேதொழு வார்க ளன்பரே 5

ஓது மன்பர்க ளுள்ளத் துளானை
மாது பங்கனை மறக்கவு மாமோ
பாது காவெனைப் பகலு மிரவும்
மோதுங் கரைசேர் முதுலங்கை யானே 6

கூடலி லன்று குதிரையை நரியாய்
நாட வைத்த நம்பனை யல்லால்
பாட வும்வேறு பரம்பொரு ளுண்டோ
மாடமலி யும்மிலங்கை மாநக ரானே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையு மன்பர்கள் கண்டுகந் தானும்
வரையை யெடுத்த மன்னைநெரித் தானும்
மரையும் மானும் மயிலினமுங் குயிலும்
நிரைநிரையாய் நிற்கு மிலங்கைமா நகரானே 8

மத்தம் மதியொடு மாநா கத்தை
வைத்த சென்னியன் வாணுதல் கணவன்
புத்தஞ் சமணம் போயக லும்படி
சித்தத்திற் கொண்ட சீரிலங்கை யானே 9

---

## சிவ சிவ சிவ

அன்பரன்பது சிவசிவசிவ ஆசையற்றது சிவசிவசிவ
இன்பமயமது சிவசிவசிவ ஈசனுயிர்தொறுஞ் சிவசிவசிவ
முன்பின் அற்றது சிவசிவசிவ மோனமுதலது சிவசிவசிவ
தன்வயத்தது சிவசிவசிவ சர்வவல்லபஞ் சிவசிவசிவ 1

பொன்னிறத்தது சிவசிவசிவ போக்கிலாதது சிவசிவசிவ
என்னிடத்தது சிவசிவசிவ எங்குமுள்ளது சிவசிவசிவ
மண்ணிடத்தது சிவசிவசிவ மந்திரரூபஞ் சிவசிவசிவ
விண்ணிடத்தது சிவசிவசிவ வேதமானது சிவசிவசிவ 2

மட்டில்லாதது சிவசிவசிவ மங்கைபங்கது சிவசிவசிவ
முட்டிலாதது சிவசிவசிவ மூவராவது சிவசிவசிவ
கிட்டொணாதது சிவசிவசிவ கிருபையுள்ளது சிவசிவசிவ
எட்டிலானது சிவசிவசிவ ஏகமாவது சிவசிவசிவ 3

அன்னையாவது சிவசிவசிவ அப்பனாவது சிவசிவசிவ
முன்னையுள்ளது சிவசிவசிவ முனிவர்புகழ்வது சிவசிவசிவ
என்னையாள்வது சிவசிவசிவ எடுத்ததிருவடி சிவசிவசிவ
பின்னையென்பிழை சிவசிவசிவ பேதாபேதஞ் சிவசிவசிவ 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நகரானே

சிந்தை செய்கதிர் வேலனைத் தந்த
எந்தையை யெந்த நாளும் மறந்திடார்
பந்தங்க ளற்றுப் பரமவீ டெய்துவர்
கந்தம் பொலியு மிலங்கைக் கடிநகரானே 1

கண்மூன் றுடைய கடவுளை நாளும்
பண்முறை தப்பாது பாடு மடியார்
மண்ணுள வளவும் மனக்கவலை எய்தார்கள்
விண்டொடு வரைமே விலங்கைமா நகரானே 2

மண்முதற் பூதங்கள் வகுத்த வொருவனை
எண்முத லெல்லா மாயிருப் பானைப்
பெண்ணுமை யாளைப் பிரியாப் பெருமானை
விண்ணோர் விரும்பு மிலங்கை நகர்கண்டேன் 3

ஓதுபல் வேத முரைசெய்த நாவானே
போது கங்கை சூடிய புனிதனே
தீதுசேர் தக்கன் வேள்வி சிதைத்தானே
மீதுவண் டார்க்கு மிலங்கை மேவியபரனே 4

கமல நான்முகன் கண்ணனுங் காணா
தமல னேயென வாரருள் செய்தானே
பவன மனலம் பாராகிய பரமனே
உவமைசொல் லவொண்ணா லங்கை நகரானே 5

பாலனுக் காகப் பாற்கடலை யழைத்தானை
ஞாலம் புகழ்ஞான சம்பந்தன் நாயகனை
ஆல மரத்தின்கீ ழன்றற முரைத்தானைக்
கோலக் குயில்கூவு மிலங்கையிற் கண்டேனே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைஞ்சவா என்மனமே

கும்பிடுவார் நன்மனத்தைக் கோயிலாய்க் கொண்டருளும்
எம்பெருமான் திருவடியை இறைஞ்சவா என்மனமே 1

எல்லாமா யல்லவுமா யிருக்குந் திருவடியைச்
சொல்லாமற் சொல்லித் துதிக்கவா என்மனமே 2

எங்கேநீ அங்கேநான் என்ற திருமொழியை
இங்கேயான் கண்டேத்த இயைந்துவா என்மனமே 3

ஒன்றா யிரண்டா யொருமூன்றாய் நின்றவனை
நன்றாய்த் தொழுதிறைஞ்ச நயந்துவா என்மனமே 4

பற்றற்றார் பற்றும் பரம குருவருளை
மற்றுப்பற் றின்றி வணங்கவா என்மனமே 5

மனவா சகங்கடந்த மாறாக் கருணையனைத்
தினமும் பணிந்தேத்தச் சீக்கிரம்வா என்மனமே 6

காதலிக்கு மெய்யடியார் கருத்திற்கருத் தாயிருக்கும்
நாதனைநான் கண்டுதொழ நடந்துவா என்மனமே 7

அண்டபிண் டமெல்லா மடக்கி யொருவடிவாய்
நின்றவனைக் காண நீவாராய் என்மனமே 8

நீயேநா னென்று நேர்நேராய்ச் சொன்னவனைப்
பேயேன் வணங்கவென்பின் வாராயோ என்மனமே 9

முழுதுமுண்மை யென்ற முனிவன் திருவடியைத்
தொழுது வணங்கச் சுறுக்காய்வா என்மனமே 10

பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் பாரின்மிசை
உத்தமராய் வாழ்வா ருறுதியிதே என்மனமே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் – எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் – என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து) 1

அட்ட வசுக்களுங் காப்பாம் – எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் – எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து) 2

பிராண னபானனுங் காப்பாம் – என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் – எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து) 3

பஞ்சப் புலன்களுங் காப்பாம் – என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் – நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம் (அத்து) 4

சந்திர சூரியர் காப்பாம் – எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் – நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து) 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாஞ்சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே

---

## மங்களம் ஜெய மங்களம் ~ I

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் ஜெய மங்களம் ~ 2

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்த மில்லா அப்பனுக்கு மங்களம்
சோதிவடி வாயுள்ள சுவாமிக்கு மங்களம் 1

ஆன்மா நித்தியமென்ற ஆன்றோர்க்கு மங்களம்
தேன்போ லுருசிக்குஞ் சிவனார்க்கு மங்களம் 2

காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
நாண்மல ரெடுத்துப்பூசை பண்ணுவோர்க்கு மங்களம் 3

பொறிவழிபோ யலையாத புண்ணியர்க்கு மங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம் 4

நாமறியோ மென்றுசொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற வுத்தமர்க்கு மங்களம் 5

தன்னைத் தன்னாலறிந்த தாபதர்க்கு மங்களம்
அன்னைபிதாக் குருவான அப்பனுக்கு மங்களம் 6

மண்ணைப்பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்
வண்ணைநகர் வாழும்வைத் தீசனுக்கு மங்களம் 7

திண்ணனென்ற பேர்கொண்ட அப்பனுக்கு மங்களம்
சண்முக நாதனுக்குஞ் சங்கரற்கும் மங்களம் 8

விண்ணில்விளங்குஞ் சூரிய சந்திரர்க்கும் மங்களம்
எண்ணிலடங் காவுயிர்கள் அத்தனைக்கும் மங்களம் 9

நித்தியகர்மந் தவறாத நின்மலர்க்கு மங்களம்
பத்துப்பாட்டும் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் மங்களம் 10

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 2

# உரைநடைப் பகுதித் திரட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குருநாதன் அருள்வாசகம்

## ஒரு குறைவுமில்லை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே
ஆகையால் நாம் அவருடைய உடைமை
அவருடைய அடிமை
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது
நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்று முள்ளோம்
எங்கு மிருக்கிறோம்
எல்லா மறிவோம்

இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

**"சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந் தன்மை**
**நினையன்றி யில்லாத்**
**தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த**
**சமரச சுபாவமிதுவே"**

என்னுந் தாயுமானவர் அருமைத்திருவாக்கே இதற்குப் போதிய சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டு

## 1

நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவு மில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்.

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்கின்றன. தேவர்களும் அசுரர்களும் கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் செயல்; அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்தபடியே இருக்கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை. மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசையில்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கில்லை. நாம் அனைத்துக்குஞ் சாட்சியாக விளங்குகின்றோம்.

ஓம் தத் சத் ஓம்

## 2

நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு ஆற்றுவதே எங்கள் தொழில். அதற்காகவே நாம் உயிரோடிருக்கிறோம். உண்பதும் உறங்குவதும் அதற்காகவே. எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் எல்லாம் அதற்காகவே செய்கிறோம். நமக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. பிறப்புமில்லை இறப்புமில்லை. நாம் விளையாட்டுக்காகினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்பொருளைக் கவரோம். பிறர்வசை உரையோம். எல்லாஞ் சிவன்செயலென்பதை மறவோம். பசித்தாற் புசிப்போம். பிறர்செய்யும் நிட்டூரத்தையாவது கிருபையையாவது பொருளாகக் கருதமாட்டோம். எப்பொழுதும் தூய்மை உடையோம். துன்பத்திலும் இன்பத்திலும் கவலை அடையோம். முழுதும் உண்மை.

ஓம் தத் சத் ஓம்

## 3

நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார். இது சரியை; இது கிரியை; இது யோகம்; இது ஞானம்; இது மந்திரம்; இது தந்திரம்; இது மருந்து.

இந்தத் தியானத்தில் நிலைத்தலே நிட்டை; இந்த நிட்டையுடையோர்க்குச் சீலமில்லை; தவமில்லை; விரதமில்லை; ஆச்சிரமச் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பிய வண்ணம் மண்ணில் வாழ்ந்தார்கள்; வாழுகிறார்கள்; வாழ்வார்கள்; இவர் பெருமை யாவருமறியார்; கற்கண்டின் இனிமை கற்கண்டை உமிபவர்க்கே தெரியும்.

ஒரு பொல்லாப்புமில்லை.
எப்பவோ முடிந்த காரியம்.
நாமறியோம்.
முழுதும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன கொல்லாமை, கள்ளாமை, பிறர் வசை உரையாமை, பிறர் பொருள் கவராமை, தாழ்மை, பொய்யுரையாமை முதலியனவாம்.

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடுஞ் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடுஞ் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச்செய்து பழகி வந்தால் மனஉறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்மசக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது.

எல்லாம் என்னிடத்தே உண்டாகின்றன; எல்லாம் என்னிடத்தே நிலைத்திருக்கின்றன; எல்லாம் என்னிடத்தே ஒடுங்குகின்றன என்ற தூய்மையான எண்ணம் உடையவராய் இருத்தல் வேண்டும். மேலும் எனக்கொரு குறைவுமில்லை; என்னிடத்திலே எல்லோரும் அன்பாய் இருக்கிறார்கள்; நானும் எல்லாரிடத்திலும் அன்பாய் இருக்கிறேன் என்று அடிக்கடி நினைந்து நினைந்து சாதிக்க வேண்டும். இப்படியே இடைவிடாமற் பழகி வந்தால் எல்லாமறியும் ஆற்றலும் எல்லாஞ் செய்யும் வல்லமையும் எளிதிற்கைவரும்.

ஓம் தத் சத் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மார்க்கம்

குரங்குபோல் மனங்கூத்தாடுகின்றதே.

இதன் கூத்தை எப்படி யடக்குவதென்று தெரியவில்லையே. நன்று சொன்னாய். இதற்கு நல்ல மருந்துன்னிடமுண்டு. நீ அதை மறந்து போனாய். சொல்கிறேன் கேள்.

சிவத்தியான மென்னும் மருந்தைத் தினந்தோறுஞ் சாப்பிட்டுவா. மனக்குரங்கின் பிணி மாறும்.

அதைச் சாப்பிடும் போது அனுபானத்தைக் கூட்டிச் சாப்பிடு. அதுவுமுன்னிடமுண்டு.

அது என்னவென்றால் நாவடக்கம், இச்சையடக்கமென்னுஞ் சரக்கோடு சேர்த்துச் சாப்பிடு.

இதுவும் போதாது. பத்திய பாகத்திலே தான் முற்றுந் தங்கியிருக்கிறது. அதுவு முன்னிடமுண்டு.

அது என்னவென்றால், மிதமான ஊண், மிதமான நித்திரை, மிதமான தேக அப்பியாசம் என்பவையே. வெற்றி நிச்சயம். ஆன்ம இலாபத்தின் பொருட்டிதைச் செய்.

மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழு மனத்தோடு விரும்புவானானால் **சிவத்தியானத்தைத் தினந்தோறுஞ் செய்து வரக் கடவன்**

படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை அவன் கண் கூடாகக் காணுவான்.

சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத் துதிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனமெந்த நேரமும் மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும். இகழ் புகழிரண்டினாலும் இழிவடையான். அந்தராத்மாவிலே சுகிப்பான். பிறர் சுகந் தன் சுகமென்ற எண்ணம் பெருகும்.

கைவிளக்கை யொருவன் கொண்டு செல்வானானால் இராக்காலத்தில் அவன் மனங் கலங்குவானா? கலங்கான். அப்படியே சிவத்தியானத்தைச் செய்து வருவானானால் மாயவிருள் அவனை அடையுமா? அடையா.

போதனையிலுஞ் சாதனை சிறந்தது. ஒரு பொல்லாப்புமில்லை.

ஆன்ம இலாபமே பொருளெனக்கண்ட அறிஞர் அநித்தியமான இந்த உலக இன்ப துன்பத்தில் மயங்காது தாமரையிலையில் நீர் போற் சகத்துடன் கூடிவாழ்வார். ஆன்ம இலாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலகத்துன்ப இன்பத்தினாற் கலங்கித் தியங்கித் திரிவார்கள். ஆன்ம இலாபத்தையே குறிக்கோளாகக்கொண்டு நன்மை தீமையையென்று நான் எனதென்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்த அறிஞர் இறைவன் திருவடி நிழலில் பிறப் பிறப்பற்றுப் பேரின்பத்துடன் வாழ்வார்.

அஃதறியா அறிவிலிகளே துன்பக் கடலிலே வீழ்ந்து எரிவாய் நிரயத்துக் காளாவார்.

வண்டுகள் பூவைக்கிண்டித் தேனை உண்டு ஒன்று மறியாது கிடப்பதுபோல், பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தினால் கிண்டி ஆங்குவரு மானந்தத்தேனையுண்டு, ஒன்று இரண்டு, நன்று தீதென்றறியாமற் தேக்கிக் கிடக்கிறான்.

ஒரு கமக்காரன் தன்னுடைய நிலத்திலே நல்லவித்தையிட்டு அதிலுண்டாகுங் களையைக் களைந்து, விளையுந் தானியத்தை யொன்று சேர்க்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத்திலே பக்தியென்னும் வித்தை வித்திக் காமக் குரோத மோக மத மாச்சரிய மென்னுங் களையைக் களைந்து சிவபோக மென்னுந் தானியத்தைச் சேர்த்து வைத்துப் புசிக்கிறான்.

பூலோகமாகிய நந்தன வனத்திலே சீவர்களாகிய மலர்கள் மலர்ந்து கிடக்கின்றன. சிவன் அதைக்கண்டு மகிழ்கிறான்.

பொற்கொல்லன் பொன்னை யெடுத்துப் பல பூண்களைப் படைக்கிறான்.

சிவனாகிய பெரிய பொற்கொல்லன் ஆன்மாவாகிய பொன்னையெடுத்துச் சீவர்களாகிய பலபணிகளையுமாக்குகிறான்.

வைத்தியன் பல மூலிகைகளையு மெடுத்து ஒன்றாக்கி நோய்க்கு மருந்து கொடுத்து நோயை மாற்றுகிறான்.

பெரிய ஞான வைத்தியனும் தனு கரண புவன போகங்களை ஆன்மாவுக்குக் கொடுத்து, அதன் நோயை மாற்றி இன்பவீட்டில் வைக்கிறான்.

தாய் தனது குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து மகிழ்விக்கிறாள்.

சிவபெருமானுந் தன் குழந்தைகளாகிய எங்களுக்குப் பல விதமான இன்பங்களையுந் தந்து மகிழ்விக்கிறான்.

பொறி வழியே போந்து, மனம் அலைய அறிஞர் இடங்கொடார். ஏனெனில் ஆத்மாவே தானென அறிந்தவர்கள் ஆசை நோய்க்கு இடங்கொடுப்பாரா? அன்று.

அவர்தம் பெருமையை வேத சிவாகமங்களும் புகழ்கின்றன. இவர்களைக் கண்டால் கல்லுங்கரையும்.

அனைத்தினும் வெற்றி யுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்தியானம்

ஓ மனிதனே! நீ உண்மைப்பொருள். கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடு விளைவிக்க முடியாது.

நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன்.

உறுதியுடனே சிங்கங் கானகத்தில் திரிவது போல் உலகமாகிய கானகத்தில் திரி. எந்த விதத்திலுந் தளர்வடையாதே. ஒரு நூதனமு மிங்கில்லை. முழுதுமுண்மை. ஒரு பொல்லாப்புமில்லை.

ஓ மனிதனே! வானம் வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சிசெய்யக் கருதாதே. சாட்சியாயிரு. மாட்சி உன் பிறப்புரிமை.

அது என்ன வுபாயத்தாலு மடையப்படுவதொன்றன்று. அப்படியுள்ள காரியம். மற்றனைத்துஞ் செப்படிவித்தை. அறிவு, அறியாமை உன்னிடமில்லை. நீ பரமாத்மா.

|| ஓம் தத் சத் ஓம் ||

ஓ மனிதனே! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீ யாரெனத் தெரிந்து கொள்வாய். துயருறத் தகாத காரியங்களில் துயருறாதே. துன்பமும் இன்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

உன்னை ஒன்றுந் தாக்கமாட்டாது. எழுந்திரு. விழித்துக்கொள். சிவத்தியான மென்னுந் திறவுகோலால் மோக்ஷவீட்டின் கதவைத்திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

|| ஓம் சாந்தி சாந்தி சாந்தி ||

ஓ நண்பனே! உன்னை யார்தான் பாவியென்று சொல்லவல்லான்? ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்து போனாய். ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமற் சொல்லு. உன் முழுமனத்தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக்கொடு. சிவத்தியானத்தை அசட்டை பண்ணாதே. ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும். சோம்பலுக்குஞ் சோம்பலின்மைக்கும் நீ கட்டுப் படாதே.

அதிகப் பேச்சில் என்ன பயன். பண்படுத்தப்பட்ட தரையிலன்றோ நல்ல பயன் வரும். அஞ்சாதே.

நாங்கள் சிவனடியார். சிவபெருமான் என்றுள்ளவரோ அன்று நாமுமுள்ளோம்.

வெப்பந் தட்பம், இன்பந் துன்பம், இளமை முதுமை இயற்கையின் குணங்கள்.

இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படுவான். இவைகள் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவதுமில்லை. மறைவதுமில்லை.

உண்மை இன்மை யாகாது, இன்மை உண்மையாகாது.

எல்லாஞ் சிவன் செயலென்ற எங்களுக்குக் குறைவு முண்டோ? நிறைவுமுண்டோ? நாம் சிவபெருமானென்ற நூலிலே கோக்கப்பட்ட பல நிறமுள்ள மணிகளை யொப்பவர். நூலறுவதுமில்லை. நாங்கள் சிதறிப்போவதுமில்லை. பலபடக் கூறுவதால் பயனில்லை.

|| ஓம் சாந்தி சாந்தி சாந்தி ||

ஓ சினேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத் தோடும் நினை, எல்லா வெற்றியு முன்னிடமுண்டு. அதற்கு மேல் வேறொன்று மில்லை. யாவு முன் காலடியில்.

|| ஓம் சாந்தி சாந்தி சாந்தி ||



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாசகம்

ஆத்துமா நித்தியமானது; பிரிவில்லாதது. பூரணமானது. சரீரமோ அழியுந் தன்மையுள்ளது; பிரிவுள்ளது. இப்படியிருக்கையில் நாங்கள் இவ்விரண்டையுஞ் சரியென்று சொல்லமுடியுமா? அப்படி நாங்கள் சொன்னால் இதிலும் பெரிய பாவமும் பழியும் வேறுண்டோ?

ஆத்துமா எல்லாவற்றுக்கு மாதியாயுள்ளது. யாவையும் ஆள்கின்றது.

சரீரமோ தொடக்கமுடையது. ஆளப்படுந் தன்மையுடையது.

இப்படி யிருக்கையில் நாங்களிவ் விரண்டையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்க முடியமா? அப்படி யொப்பிட்டால் இதிலும் வேறு பழி கிடையாது.

இயற்கையிலே ஆத்துமா அறிவுடையது; தூய்மையானது. சரீரமோ அறியாமையுடையது; தூய்மையற்றது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் இதிலும் அஞ்ஞானம் பிறிதுண்டோ?

ஆத்துமா பிரகாசமுடையது. அதாவது சுயம்பிரகாசமுடையது. சரீரமோ இயற்கையிலே இருள் மயமானது. இவ்விரண்டையு மொப்பிடலாமா?

யாரொருவன் தன்னைச் சரீரியென்று நினைக்கிறானோ ஐயோ, அவனிலுங் கீழ்மகன் யார்?

யார் ஒருவன் தன்னுடைய சரீரமென்று சொல்லுகிறானோ அவன் மட்பிண்டத்தைத் தன்னுடையது என்று சொன்னது போலிருக்கும்.

யார் ஒருவன் தன்னைப் பூரணனென்றும் நித்தியன் என்றும் இயற்கை அறிவுடையவனென்றும் நினைக்கிறானோ அவன் உண்மை யறிவாளி. அவனுக்கிணையாக ஒரு தெய்வமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் ஒருவன் தன்னை ஓர் அழுக்கும் பற்றமாட்டா தென்றும் மாறுபாடில்லாதவனென்றும் தூய்மையிலுந் தூய்மை யென்றும் நினைக்கிறானோ அவனை அறிவாளிகள் ஞானி யென்று சொல்லுவார்கள்.

வேதம் ஆகமம் யாவும் இந்த உலகம் முழுவதுந் தெய்வமே நிறைந்திருக்கிற தென்றும் அதைவிட வேறு யாதுமில்லை யென்றும் முறையிட, நாங்கள் எப்படி உலகமிருக்கிறது, சரீரமிருக்கிறதென்று நினைக்கலாகும்? அப்படி உலகஞ் சரீரம் வேறாயிருக்கிறதென்றால் இதைவிடப் பழி பிறிதுண்டோ? ஆன்றோரும் 'நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னோரன்ன பல காரணங்களாலுங் கடவுளைத் தவிர வேறொன்றுமில்லை, யாவு மவன் செயல்.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன்மோன நிறைவே.

## சிவபக்தி

சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கியவானாக்கும். மற்றையவனைத்தும் பிரயோசனமற்றவை. ஆகையால் இடைவிடாமற் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே. வெற்றியுன் சொந்தம். எத்தனைமுறை தவறினாலுந் தைரியத்தைக் கைவிடாதே. தவறுதல் சட சம்பந்தமானது. நீயோ சித்துப்பொருள் (அதாவது அறிவுப் பொருள்). நீ யொரு நாளும் அழியமாட்டாய். எழுந்திரு! விழித்துக் கொள்! காரியங் கைகூடுமட்டும் வழியிலே தங்கிவிடாதே! உற்சாகத்தோடு முன்னேறிச் செல். உனக்குச் சகல சத்தியுங் கட்டுப்படுவதைக் காண். வீண்வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே. நீ எங்கே போகிறாயோ அங்கே உன்னுடன் பகவான் வருவார்.

வெளிமாதிரி யொன்றுஞ் செய்யாதே. உனக்குள் நீ பெலத்துக்கொள். சமயமென்பது ஒரு மாதிரியுமற்ற தனித்த நிலை, உடல் பொருள் ஆவி மூன்றையும் பகவானுக்கு ஒப்படை. அதன்பின் உன்னைப் பற்றிய காரியங்களைக் கைவிட்டுவிடு. அனைத்தும் அவனே பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம்

தவத்திலே மேம்பட்டவர்களைக்கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்குச் சிவத்தியானஞ் செய்க. அதனால் மாத்திரந்தான் புலன்களைத் தன்வசப்படுத்தத்தக்கது. ஆகவே இடைவிடாமற் சிவத்தியானஞ் செய். மனிதன் விடயங்களைக் கருதும் போதெல்லாம் பற்றுண்டாகிறது. பற்றுதலால் விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தாற் சினம் பிறக்கிறது. சினத்தால் மயக்கம். அம்மயக்கத்தால் தவறுதல் உண்டாகும். ஆதலால் உன்னைச் சிவத்தியானத்தால் காத்துக்கொள்.

நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பழிந்து தரும வழியினின்று தவறுகிறோம். தவறுதல் நீங்கித் திட முண்டாகச் சிவத்தியானமே சிறந்த கருவியாகும். இந்த உலகத்தில் மிகுந்த செல்வமிருப்பினும், வானோரை ஏவல் கொள்ளக்கூடிய வல்லமையிருப்பினும் நாங்கள் புலன்களை அடக்கியாளுதல் முடியாது. ஆதலால் திருவருளை முன்னிட்டு மனத்தைப் புலன்வழிச் செல்லாமல் அடக்கியாள். இது தான் தவமென்று பெரியோர் சொல்வர். இதைவிடுத்து இடம்பமான வேள்வி முதலியவை செய்வதால் திடமுண்டாக மாட்டாது.

# நானே நீ

என்னுடைய இராச்சியத்தில் இராப்பகலில்லை; நன்மை தீமையில்லை; நீ நானில்லை; இன்றைக்கு நாளைக்கு இல்லை; பெரிது சிறிது இல்லை. நீயுமிந்த இன்பத்தை அநுபவிக்க வேண்டுமாகில், அங்கு முழுமனத்தோடு வெளியேறக் கடவை; புகையிரதம் வேண்டியதில்லை; மாட்டுவண்டி தேவையில்லை பின் என்ன வேண்டுமாகில் வைராக்கிய மென்னும் புதுக்காத வண்டிலும், சாந்தம் என்னும் இரண்டு வெள்ளை எருதுகளும், மனப்பாக்கிய மென்னுஞ் சமையாத சாதமும், யாசகமென்னும் அங்கவஸ்திரமும், ஞானமென்னும் மூக்குக்கண்ணாடியும் எடுத்துக்கொண்டு பின்முன் நாடாமல் வரக்கடவை. அப்பொழுது நீ காண விருக்கும் காட்சிகளை என்னாற் சொல்ல முடியாது. கடவுளே சாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவோகம் பாவனை

## I

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும்போதும் நிற்கும்போதும் நடக்கும்போதும் கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

## II

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். ஆகையால் 'நான் அவனே' என்று தியானஞ் செய். அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கையே யாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை அவனே அனைத்தும். அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிறான்.

அவனுக்குப் பிறப்பிறப்பில்லை. ஆதியந்தமில்லை. ஒரு மாறுதலுமில்லை. முழுதுமுண்மை.

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனடியார்

நாங்கள் சிவனடியார்

ஆதியுமந்தமும், இறப்பும் பிறப்பும், இரவும் பகலும், சுகமுந் துக்கமும் எங்களுக் கில்லை யென்னும் திருமந்திரத்தை எவனொருவன் மறவாமல் தியானஞ் செய்கிறானோ அவனுக்கு ஒரு குறையும் வராது.

எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீ யாவாய்.

இதற்கெல்லாம் விடாமுயற்சி, அதாவது சலியாமை வேண்டும்.

பாடுபட அஞ்சுபவனுக்கு ஒரு பிரயோசனமு முண்டாகாது. பாடின்றிப் பட்டங் கிடையா தென்பது உலக வழக்கு.

காரியசித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் ஓயாமல் கெட்ட காரியங்களைச் சிந்திக்கிறாய்? அச் சிந்தனையை விட்டு முழுமனத்தோடு தெய்வத்தை வணங்கு. உனக்கு விதிவசத்தாற் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நடத்து. இறுதியில் யாவும் ஜெயமாகும்.

அது அப்படியுள்ள காரியம் என்பதைச் சதா நெஞ்சிற் பதித்துக் கொண்டு இயல்பாய் உனக்கு வரும் வேலைகளையுங் கடமைகளையுஞ் செய்து கொண்டிரு. அல்லது அவற்றை விட்டிரு. எதுவுஞ் சரியே.

செய்தலிலுஞ் செய்யாமையிலும் அது தங்கியிருக்கவில்லை. கருமம் இல்லாமையை விரும்பாதே. கருமத்தைப் பற்றாதே. செய்தல் செய்யாமை இவற்றுள் இயல்பாய் எது உனக்கு அமைகின்றதோ அதையே பற்றி நில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பவிறையே !

ஒரு பிதா தனது குழந்தையினது மழலைமொழியைக் கேட்டு மகிழ்வானன்றிச் சிறிதுமிகழமாட்டான்.

அவ்வண்ணமே, தேவரீர் அடியேனுடைய விண்ணப்பத்தைக் கேட்டருள்வீராக. இவ்வுலகத்திலே எத்தனையோ சாதிகளுண்டு. அவைகளின் பழக்கவழக்கங்கள் ஒன்றோடொன்றொவ்வாது முரண்படுகின்றன. ஒவ்வொரு சாதியுந் தத்தம் பழக்க வழக்கங்களே மேம்பாடுடைத்ததெனக் கூக்குரலிடுகின்றது. சமயங்களுமப்படியே. இவைகள் யாவும் உலகத்தின் சிறப்புக்களேயன்றி வேறல்ல. இந்த வித்தியாசமான போராட்டங்களெல்லாம் முன்னு முள்ளன. நூதனமான காரியங்களல்ல. இவைதாம் இந்தப் பிரகிருதியின் தோற்றங்கள். இவை வேறு, தான் வேறு என்றறிந்த அறிவாளி இவைகளுடன் கூடியுங் கூடாது மிருப்பன். எத்தனையோ முறைகளில் பெரிய பெரிய அவதாரங்கள் வந்து எவ்வளவோ வேலைகளைச் செய்தும் மீட்டும் இந்த உலகம் அப்படியே யிருக்கின்றது. இது ஒரு பெரிய இரகசியம்.

தேவரீர் இவைகள் எல்லாம் நன்கறிவீர். நானொன்று மறியேன். என்னை மன்னித்துக் கொள்ளும்.

# வேறு

ஆண்டவனை யன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன்செயல். உனது சுமைமுழுவதையுந் திருவடிக் கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு. கவலைக்கிடங்கொடாதே. நான் செய்தேன், அவன் செய்தானென்று நலியாதே; விழித்திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகவாழ்வு

